# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 15, தாது - திருவள்ளுவர் ஆண்டு 2028

## 1997, சனவரி 28, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*" எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு ".*

*வெளித்தோற்றத்தைப் பார்த்து ஏமாந்து விடாமல் அது பற்றிய உண்மையை உணர்வதுதான் அறிவுடைமை ஆகும்.*

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *41,* திரு. *அ.* மாரிமுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**41--**

**காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்**

**1790--*திரு. அ. மாரிமுத்து:

*மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ)* வானூர் தொகுதி, வானூர், ஆரோவில் மற்றும் கிளியனூர் காவல் நிலையங்களிலுள்ள காவலர்களுக்குக் குடியிருப்புகள் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், குடியிருப்புகளை இந்நிதியாண்டில் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வானூர் தொகுதி, வானூர், ஆரோவில் மற்றும் கிளியனூர் காவல் நிலையங்களிலுள்ள காவலர்களுக்கு குடியிருப்பு கட்டித் தருவது குறித்த கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் கருத்துரு பரிசீலனையில் உள்ளது என்று சொன்னதற்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். ஆரோவில் காவல் நிலையக் கட்டிடம் தற்சமயம் தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. அதுவும் சமீபத்தில் பெய்த மழையால் பழுதடைந்த நிலையில் திருச்சிற்றம்பலம் ஊராட்சி மன்றக் கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது. எனவே ஆரோவில் காவல் நிலையக் கட்டிடம் கட்டுவதற்கு 2 ஏக்கர் அரசு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்டுள்ள அந்த இடத்தில் காவல் நிலையம் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிற்றம்பலம் கிராமத்தில், அதாவது விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் மாவட்டம், திருச்சிற்றம்பலம் கிராமத்தில் சுமார் 3/4 எக்டேர் பரப்பளவுள்ள நிலம் வருவாய்த் துறையிடமிருந்து காவலர் குடியிருப்பு மற்றும் காவல் நிலையம் கட்டுவதற்காக காவல் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், அந்த நிலத்தில் காவல் நிலையம் மற்றும் காவலர் குடியிருப்பு கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் காவல் துறை துணைத் தலைவர் தெரிவித்துள்ளார். எனவே, அந்த முயற்சிகள் தொடரும் என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே காவலர்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள குடியிருப்புகளில்--13,000 குடியிருப்புகளில்--மின்சாரம் வழங்கியதில் ஒரு பிரச்சினை இருக்கிறது. அதாவது, அந்தந்தக் காலனிகளுக்கு



மொத்தமாக மின் இணைப்பு கொடுத்திருப்பதால், அங்கே வாழக்கூடிய காவலர்களில் குறைந்த அளவு மின்சாரத்தை உபயோகிப்பவர்கள், தனித்தனியாக உபயோகித்து, சலுகைக் கட்டணத்தைப் பெற முடியாத நிலையில் இருக்கின்றனர். ஆகவே, அந்த 13,000 குடியிருப்புகளுக்கும் மின் இணைப்பை தனித்தனியாக வழங்க வேண்டுமென்ற கோரிக்கை நெடுநாட்களாக இருக்கின்றது. இதற்கு சுமார் 3½ கோடி ரூபாய் வரையிலும் செலவாகலாம். இது எப்போது செய்து கொடுக்கப்படும்? இதுவரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா? செய்யப்படவில்லையென்றால் வருகின்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலாவது அதற்கென்று நிதி ஒதுக்கீடு செய்து இந்த வேலை முடித்துக்கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3½ கோடி ரூபாய் செலவாகும் என்கின்ற வரையில் அரசாங்கத்தின் ரகசியங்களை நம்முடைய சொக்கர் அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இது குறித்து நான் ஏற்கெனவே இந்த அவையிலேயே, அவர்களுக்கு தனித்தனியே மீட்டர் வைத்துக் கொடுக்கப்படும், அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று உறுப்பினர்கள் கோரியபோது தெரிவித்திருக்கிறேன். அதற்கேற்ப காவல் துறையிடமிருந்து, அவர்கள் பரிசீலனை செய்த பிறகு, அதற்கான முடிவுகள் எல்லாம் வந்திருக்கின்றன. அவைகளை நிதித்துறை இப்போது கவனித்துக் கொண்டிருக்கின்றது. நிதித் துறையிடமிருந்து அந்தக் கோப்பு விரைவில் வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. வந்தவுடன் அது நடைமுறைக்கு வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் உள்ள பல்வேறு காவலர் குடியிருப்புகள் பழுதடைந்த நிலையில் உள்ளதை சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதடைந்த தமிழகத்தையே சீர்செய்து கொண்டிருக்கிறோம்.

[1997 சனவரி 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காவலர் குடியிருப்புகளுக்கு மின்சாரக் கட்டணம் என்பதை மாதந்தோறும் பிடித்தால்கூடப் பரவாயில்லை. ஆனால் அவர்கள் ஓய்வு பெறுகின்றபோது மொத்தமாக ரூ.2,500/–என்று சொல்லி பிடித்து விடுகிறார்கள். காவல் துறையினரைப் பொறுத்தமட்டில், டி.வி., கிரைண்டர் மற்றும் மிக்ஸி போன்றவைகளை சிலரது வீட்டில் பயன்படுத்துகிறார்கள். அதனால் தனித்தனியாக மீட்டர் இருந்தால்தான் அவர்கள் எவ்வளவு மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கணக்கெடுப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமையும். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக வழங்கி ஆவன செய்ய வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9–35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சொக்கர் அவர்கள் கேட்ட கேள்வியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பங்குண்டு என்பது இந்தக் கேள்வியின் மூலமாக வலியுறுத்தப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் காவலர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர், டி.எஸ்.பி., போன்றவர்கள் வாடகை வீடுகளில்தான் தங்கியிருக்கிறார்கள். ஆகவே, வரும் நிதியாண்டில் அதிக நிதி ஒதுக்கி இவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டமேதும் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காவல் துறையிலே பணிபுரிகின்ற காவலர்கள், ஆய்வாளர்கள் என்று கணக்கெடுத்துக் கொண்டால், 76,447 பேர் இருக்கிறார்கள். இவர்களில், இதுவரை குடியிருப்பு வசதிகள் 25,791 பேருக்குத்தான் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் குடியிருப்பு வசதி பெறவேண்டியவர்கள் 50,656 பேர் இருக்கிறார்கள். ஆனால் ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்ற வீடுகளின் எண்ணிக்கை 1500 என்ற அளவிலேதான் இருந்து வருகிறது. இந்தக் கணக்கின்படி



1997 சனவரி 28]

பார்த்தால் எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுக்க இன்னும் 32 ஆண்டுகள் ஆகும். எனவே, விரைவான ஒரு திட்டத்தைச் செயல்படுத்த முடியுமா என்பதைப் பற்றி அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை. தமிழரசன்.

**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகங்கள் பெரும்பாலானவை வாடகைக் கட்டிடங்களிலே இயங்கி வருகின்றன. ஆகவே, அடிக்கடி இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் பிரச்சினை ஏற்படுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகங்களை அரசின் சார்பில் கட்டித்தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர்அவர்களே, பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. மாரிமுத்து.

**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் மரக்காணம், பிரம்மதேசம் காவலர் குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. அவற்றைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்கின்றபோது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழகமே பழுதடைந்து இருக்கிறது என்று சொன்னார்கள். அதைச் சீர்செய்கின்ற நிலையில், வானூருக்கு மட்டும் தனியாக என்ன என்று நினைத்து, நான் அதையே ஏற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 42, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**42--**

### சீர்காழி தொகுதியில் சர்க்கரை ஆலை

*2589-**திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[1997 சனவரி 28

*(அ) சீர்காழி தொகுதி, திருமயிலாடி கிராமத்தில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான 96 ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளதால், அங்கு சர்க்கரை ஆலை ஒன்றை துவங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சீர்காழி தொகுதி, திருமயிலாடி கிராமத்தில் அறநிலையத் துறைக்கு சொந்தமான 96 ஏக்கர் புஞ்சை நிலத்தில் சர்க்கரை ஆலை துவங்க தற்சமயம் சாத்தியக் கூறு ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி கடைகோடிக் கடைமடைப் பகுதி என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். ஆண்டுக்காண்டு பெய்யும் மழையின் காரணமாக விவசாய நெற்பயிர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறது என்பதும் அனைவருக்கும் தெரியும். விவசாய நெற்பயிருக்கு மாற்றாக கரும்பு உற்பத்தியைப் பெருக்கும் எண்ணத்தோடு, அறநிலையத் துறைக்குச் சொந்தமான 96 ஏக்கர் நிலத்தில் திருமயிலாடியில் சர்க்கரை ஆலையை அமைக்க, சீர்காழியில் பசித்து, பாலுக்காக அழுத திருஞானசம்பந்தருக்குப் பார்வதி அம்மையார் பால் வார்த்தது போல், தொகுதி மக்களைக் காப்பாற்ற மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தப் பகுதிக்கு மிக அருகில் நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ஆர். கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்று இயங்கி வருகிறது. அதற்குக் கரும்பு தரவேண்டிய பொறுப்பு அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு இருக்கின்றது. ஒரு சர்க்கரை ஆலைக்குத் தினமும் 2,500 டன் அரைவை செய்யக்கூடிய அளவிற்கு, ஒரு ஆலைக்குச் சுமார் 4.30 இலட்சம் டன் தேவைப்படுகிறது. ஆனால், சீர்காழிப் பகுதியிலே விளைகின்ற கரும்பு 1.30 லட்சம் டன்தான். இதை வைத்து ஒரு சர்க்கரை ஆலை நிறுவ சாத்தியக்கூறுகள் இல்லை. திருஞானசம்பந்தருக்கு பார்வதி அம்மையார் பால் கொடுத்ததைப்போல் கொடுக்கக்கூடாதா என்று கேட்கிறார். அது அந்தக்காலம். இந்தக்காலத்தில் அது இயலாது.



1997 சனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, திருவிடைமருதூர் வட்டத்தில் ஒரு பகுதி, மயிலாடுதுறை வட்டத்தில் ஒரு பகுதி, தரங்கம்பாடி வட்டத்தில் ஒரு பகுதி, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி ஆகிய இவை முழுவதையும் உள்ளடக்கிய ஆப்பரேஷனல் ஏரியாவை, விவகார எல்லையைக் கொண்ட ஒரு ஆலை. அந்த ஆலைக்கு நியமிக்கப்படாமல் இருந்த ஒரு நிர்வாக இயக்குநர், இரண்டு தினங்களுக்கு முன்புதான் நியமிக்கப்பட்டிருக்கிறார். இன்னும், அதையொட்டி நிரப்பப்பட வேண்டிய அலுவலர்கள் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படுமா என்பதையும், அந்த ஆலையின் விரிவாக்கப் பிரிவு, இரண்டாவது யூனிட், இந்த ஆண்டு செயல்பட ஆவன செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நிர்வாகம் சம்பந்தப்பட்ட கேள்வி. தனிக் கேள்வி போட்டால், பதிலளிக்க வசதியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே விவசாயிகள், சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பிய கரும்பிற்கே இன்னும் பணம் வராமல் இருக்கிறது. அந்தப் பணத்தை உடனடியாக பட்டுவாடா செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அதே போல், போளூர் சர்க்கரை ஆலைக்கு, விவசாயிகள் கரும்பு சப்ளை செய்து 1½ ஆண்டுகள் ஆகியும், பணமே கொடுக்கப்படாமல், அங்கே பெரிய சட்டம் ஒழுங்குப் பிரச்சினையே வந்திருக்கிறது. ஆகவே, அதையும் 'செட்டில்' செய்வதற்கோ, அல்லது அந்த மில்லை அரசே எடுத்து நடத்துவதற்கோ, அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து, ஆளுங்கட்சி உறுப்பினர்

திரு. திருவேங்கடம் அவர்கள் இங்கே வினா எழுப்பி, அதற்கு விரிவாக, வேளாண்மைத் துறை அமைச்சர், பதில் அளித்திருக்கிறார். அந்தப் பதிலிலேயே, திரு. ஞானசேகரன் அவர்களுடைய கேள்விக்கான பதிலும் அடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்.

**திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில், சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்குக் கொடுக்கப்பட்ட அனுமதிகள் எல்லாம், தனியார் முதலாளிகளுக்கே கொடுக்கப்பட்டு, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தொடங்கப்படுவது குறைந்திருக்கிறது. அதன் காரணமாக, இன்றைக்கு தனியார் ஆலைகளினுடைய ஆதிக்கம் அதிகரித்து இருக்கிறது. எனவே, இனிவரும் ஆண்டுகளிலாவது, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இல்லாத மாவட்டங்களில், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மிக அதிகமாக கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், அரசின் சார்பாக, அரசின் உதவியோடு நடத்தப்பட்டு வருகின்றன. பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் இருக்கின்றன. இப்போது, இந்த அரசினுடைய கொள்கையாக, தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி வழங்குவது என்பதுதான் இருந்து வருகிறது. அம்மையார் அவர்கள் சொன்னதை பிறகுதான் யோசிக்க வேண்டும்; இப்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது, ஒரு சர்க்கரை ஆலையை ஆரம்பிக்க வேண்டுமென்றால், 2,500 டன் கரும்புக்கான கெபாசிடி வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், 5,000 டன் கெபாசிடி உள்ள காமராஜர் மாவட்டத்தில், கரும்பு உற்பத்தி அதிகமாக இருக்கிற காரணத்தினால், விவசாயிகளின் நலன்கருதி, தமிழக அரசு, காமராஜர் மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, அங்கே சர்க்கரை ஆலையை அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு முன்வருமா என்பதற்கு முன்பு, சர்க்கரை ஆலையினை அங்கே அமைக்க யாராவது தனியார் முன்வருவார்களா என்பதை உறுப்பினர் அவர்கள் சொன்னால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 43, திரு. கு. மனோகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**43--**

**உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப்பள்ளியாக்குதல்**

*1211--**திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தருமபுரி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்தக் கல்வி ஆண்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்போது அப்படிப்பட்ட ஒரு கருத்துரு பெறப்படவில்லை. இப்பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்த அப்படிப்பட்ட ஒரு கருத்துரு, அடுத்த ஆண்டில் பெறப்படுமானால், உயர்மட்டக் குழுவின் பரிந்துரைக்கேற்ப, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் ஏறத்தாழ 1,000 மாணவர்கள் படித்து வருகிறார்கள். இவ்வாண்டு, சுமார் 100 மாணவர்கள், பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதியுள்ளார்கள். படித்து முடித்ததும், 12 கிலோ மீட்டருக்கு அப்பால் சென்றுதான், அவர்கள் எல்லோரும் கல்வியைத் தொடர வாய்ப்பு உள்ளது. ஆகவே, இந்தக் கல்வி ஆண்டிலேயே அதைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருத்துரு பெறப்படாததோடு, விவரமான விண்ணப்பம் இல்லாத காரணத்தோடு, அதற்குத் தேவையான நிலம், கட்டிடம், ஒரு இலட்சம் ரூபாய் முன்கூட்டியே கட்டவேண்டிய நிதி இவையெல்லாம் நிறைவு செய்யப்பட்டதாக விவரம் இல்லை. மேலும், தர்மபுரி மாவட்டத்தில், இந்த ஆண்டு, ஐமுனஹள்ளி, பாலக்கோடு, பைய்யர்நத்தம், போ. துறிஞ்சிப்பட்டி, பண்டஹள்ளி, பாப்பாரப்பட்டி, தீர்த்தமடை ஆகிய இடங்களிலுள்ள இத்தனை உயர்நிலைப் பள்ளிக் கூடங்கள், மேல்நிலைப்பள்ளிக் கூடங்களாக, கடந்த ஆண்டு முறைப்படி அவர்களுடைய முன்னுரிமை கண்டு, உயர்த்தப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த ஆண்டு, இதுபற்றிய கருத்துரு, கல்வித் துறையின் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு அனுப்பப்படுமேயானால், அதனைத் தொடங்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

*முற்பகல் 9-45*

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணாபுரம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திட கருத்துருக்கள் 27-12-1996ல் அனுப்பப்பட்டுள்ளன. பொது மக்கள் பங்காக ஒரு இலட்சம் ரூபாய் பணம் செலுத்தப்பட்டு போதிய கட்டிடம், இடவசதிக்கு வகை செய்து மாவட்ட கல்வி அலுவலரின் முன்மொழிவும் அனுப்பப்பட்டுள்ளது. நான் படித்த பள்ளி அது. இந்த ஆண்டு அவசியம் அதை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திட அமைச்சர் அவர்கள் ஆவன செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவரங்கள் கிடைத்திருப்பதை வைத்து இந்த ஆண்டு அதற்காக உள்ள கல்வித் துறை சார்ந்த குழு ஆய்வு நடத்தி அரசுக்குத் தெரிவிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.



**44--**

## பள்ளூர் துணை மின்நிலையம்

*3719--**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரக்கோணம் வட்டம், பள்ளூர் கிராம 33 K.V. துணை மின்நிலையத்தை 110 K.V. துணை மின்நிலையமாக மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். போதிய நிதி வசதி கிடைக்கும் பட்சத்தில் இத்திட்டம் 1997-98 ஆம் ஆண்டு செயல் திட்டத்தில் சேர்த்து நிறைவேற்றப்படும்.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு ஆம் என்று பதில் அளித்த என்னுடைய மாவட்ட அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மின் உற்பத்தி செய்வதற்காக அரசு 20, 25 தனியாருக்கு வழிவகைகளைச் செய்து வந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் சென்னையில் 33 கே.வி. துணை மின் நிலையங்கள் நிரம்ப இருக்கின்றன. இதை மாற்றி 110 கே.வி. துணை நிலையங்கள் அமைக்க வேண்டும். குறிப்பாக, சென்னையிலே அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது. இப்போதுள்ள மக்கள்தொகைப் பெருக்கத்தின் அடிப்படையிலும், நுகர்வோருடைய தேவையின் அடிப்படையிலும் இந்த நிதியாண்டிலோ அல்லது அடுத்த நிதியாண்டிலோ 33 கே.வி.யை 110 கே.வி. துணை மின் நிலையமாக மாற்றி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இப்போது எந்தப் பகுதியிலும்

[1997 சனவரி 28

மின்சாரத் தட்டுப்பாடு கிடையாது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு மனதில் கொண்டு இந்த ஆண்டு சென்னை நகரத்திலே மூன்று 110 கிலோ வாட் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே போன்ற ஒரு கேள்வியை பலமுறை இங்கே கேட்டு, எடுத்துச் சொல்லி, 19 தடவை பேசி, நிலக்கோட்டையிலே சித்தநத்தத்திலே ஒரு துணை மின் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு, அந்த வேலை முடிந்தது. அதற்கு நிலம் மிகவும் சிரமப்பட்டு வாங்கிக் கொடுக்கப்பட்டது. இப்போது அந்தத் துணை மின் நிலையத்தை, அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கே தெரியாமல் அதன் திறப்பு விழாவை நடத்தி இருக்கிறார்கள் என்றால் அதனுடைய மர்மம் என்ன? அதற்கு அமைச்சர் ஏதாவது ஆணையிட்டாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல தொகுதிகளில் இப்படிப்பட்ட புகார்கள் வந்தன. மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் கூட அவருடைய தொகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அவருக்குத் தெரியாமலேயே திறக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே மின்சார வாரியம் இழப்பிலே நடந்து கொண்டிருக்கிற காரணத்தினால் செலவைச் சிக்கனப்படுத்த வேண்டுமென்றும், ஆடம்பர விழா வேண்டாமென்றும் குறைந்த செலவிலே அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்து விழா எடுக்க நான் ஆணை பிறப்பித்திருக்கிறேன். இதற்கு முன்னால் இரண்டு மூன்று இடங்களிலே அப்படி தவறு ஏற்பட்டுவிட்டது. இருந்தாலும் அதற்காக நான் வருத்தம் தெரிவிக்கிறேன். வாரியத்தின் சார்பிலே எங்கே விழா நடந்தாலும் அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து சிக்கனமாக விழா நடத்தும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலே நான்கு துணை மின் நிலையங்கள் துவங்குவதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு வேலை ஆரம்பிக்காத நிலையிலே பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. அங்கே இருக்கக்கூடியவர்கள் எல்லாம் சிறு விவசாயிகள், குறு விவசாயிகள். ஆகவே, இந்த அடிப்படையிலும், பலமுறை வற்புறுத்தியும்கூட அங்கே வேலை துவங்காத நிலை இருந்து கொண்டிருப்பதாலும், கூடிய விரைவிலே அந்த துணை மின் நிலையங்களுடைய பணி முடிக்கப்பட, விவசாயிகளுக்கு ஆவன செய்ய, பணி நடைபெறுமா என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.



1997 சனவரி 28]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இன்றைய செய்தித் தாளிலே 200-க்கும் அதிகமான மின் டிரான்ஸ்பார்மர்கள் வாங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஆட்சி காலத்தின் இறுதி காலத்திலே மிக மிக அவசரமாக பல டிரான்ஸ்பார்மர்கள் வாங்கப்பட்டதாகவும் அதன் காரணமாக இருக்கின்ற டிரான்ஸ்பார்மர்கள் எல்லாம் பழுதுபடுவதாகவும் சொல்கிறார்கள். வாரியம் இப்போது கடைப்பிடிக்கிற முறை என்ன? முந்தைய ஆட்சிக் காலத்திலே அவசர அவசரமாக வாங்கப்பட்ட டிரான்ஸ்பார்மர்கள் யாரிடம் வாங்கப்பட்டன? தனியார் துறையிலே வாங்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். அதிலே இருக்கின்ற மர்ம முடிச்சுகளை அவிழ்க்குமாறு மாண்புமிகு மின்சாரத் துறை அமைசர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிரான்ஸ்பார்மர்கள் தனியாரிடத்திலிருந்து தான் வாங்க வேண்டும். பல நிறுவனங்கள் இந்தியாவிலே டிரான்ஸ்பார்மர்களைத் தயாரிக்கின்றன. கடந்த கால ஆட்சியில் டெண்டர்கள் கோரப்பட்டு அது எல்.1-ஆக இருந்தாலும் அதை விட்டு விட்டு, எல்.2, எல்.3 போன்றிருந்த நிறுவனங்களை அவர்கள்

தேர்ந்தெடுத்து உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இப்போது எந்த நிறுவனத்திடமிருந்து டெண்டர்கள் கோரப்பட்டாலும் கட்டாயமாக எல்.1 யாரோ, அவர் தகுதி படைத்தவராக இருந்தால் அவரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**45--**

### மன்னார்குடி நகராட்சியில் மின்மாற்றி பொருத்துதல்

*4097-**திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மன்னார்குடி நகராட்சி, மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதால் துணை மின்நிலையமான மூவாநல்லூரில் 10 மெகாவாட் திறனுள்ள மின்மாற்றி பொருத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி நகராட்சி மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் மக்களுடைய பெருக்கத்தின் காரணமாக பல்வேறு புதிய குடியிருப்புகள் எல்லாம் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கின்றன. அதனால் மன்னார்குடியின் புறநகர் பகுதியிலே இருக்கக்கூடிய மின் அழுத்தம் என்பது மிகக் குறைவாக இருக்கிறது. மின் அழுத்தம் குறைவாக இருப்பதால் மூவாநல்லூர் பகுதியில் மண்ணெண்ணெய் சிம்னி விளக்குகளைப் போல அங்கே மின் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. எனவே அந்த நிலையை மாற்றுகிற வகையில் அங்கே ஒரு 10 எம்.வி.ஏ. திறன்கொண்ட துணைமின் நிலையம் அமைக்க அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூவாநல்லூரில் அமைந்துள்ள மன்னார்குடி துணைமின் நிலையத்தில் ஏற்கெனவே உள்ள ஒரு 10 எம்.வி.ஏ. மின்மாற்றியுடன் கூடுதலாக ஒரு புதிய 4 எம்.வி.ஏ. மின்மாற்றி இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு நிறுவப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட கூடுதல் மின்மாற்றி நிறுவப்பட்ட பிறகு மன்னார்குடி மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் மின் அழுத்தம் இப்போது சீரான முறையில் இருந்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, திரு.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**46--**

### தேங்காய் கொள்முதல் நிலையம் அமைத்தல்

*2766--**திரு. வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) தேங்காய் கொள்முதல் நிலையம் தற்போது இந்த மாநிலத்தில் எங்கும் இல்லை. அத்தகைய நிலையம் அமைத்திடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1997 சனவரி 28

**திரு. வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணித் தொகுதி மற்றும் பட்டுக்கோட்டை பகுதிகளில் தென்னை அதிக அளவிலே பயிரிடப்பட்டு தென்னை உற்பத்தி அதிகமாக உள்ளது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் தேங்காய்களை அரசு நேரடியாக ஒரு கொள்முதல் நிலையம் அமைத்து, அதற்கு ஒரு சரியான விலையை நிர்ணயிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாரியம் தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மை விற்பனைக் குழு மூலமாக பேராவூரணியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கொப்பரைத் தேங்காய்களை விற்பதற்கு வசதிகள் தற்போது செய்து கொடுக்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டம், பேராவூரணியில் சுமார் 9 கோடி தேங்காய்கள் விளைகின்றன. அவ்வூருக்கு அருகிலுள்ள பட்டுக்கோட்டையில் தேங்காய்க்கென தனியாக வணிக வாரியம் அமைப்பதற்கான கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, திரு. டி.சி. விஜயன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**47--**

### இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு

*4040--**திரு. டி.சி. விஜயன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு வேளாண்மைக் கல்லூரியில் படிக்க இட ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1996-97 ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழ் அகதி மாணவர்களுக்கு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் இளநிலை வேளாண்மைப் பட்டப் படிப்பில் சேர்ந்து படிப்பதற்கு 10 இடங்கள் ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது. அந்த ஆணை இலங்கைத்



1997 சனவரி 28]

தமிழ் அகதி மாணவர்களுக்கு மட்டும்தான் பொருந்தும். இலங்கைத் தமிழ் மாணவர்களுக்குப் பொருந்தாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, திரு. ஏ.எம். ராமசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**48--**

### கல்லாறு திட்ட ஆய்வுப் பணிகள்

*293--**திரு. ஏ.எம். இராமசாமி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் கல்லாறு திட்ட ஆய்வுப் பணிகள் எந்நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டம் எப்பொழுது முடிவுறும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் இராமநாயக்கன் பாளையம் அருகே, கல்லாறு என்றழைக்கப்படும் மலையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.420.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு இத்திட்டம் தல அலுவலர்களின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மதிப்பீடு பரிசீலனைக்குப்பின் சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ந்து முடிவு செய்யப்படும்.

முற்பகல் 9-55

**திரு. ஏ.எம். ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் கல்லாறு திட்டம் 1990-91ஆம் ஆண்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டும், இதுவரையில் ஒரு வேலையும் செய்யப்படாமல் இருக்கின்றது. அந்தப் பணி எப்போது முடியும் என்பதை அரசு அறிவிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஆரம்பக்கட்ட நிலையிலேதான் இருக்கிறது. அரசுக்கு வருவதற்கு முன்னால் பல கட்டங்களை அது தாண்ட வேண்டும். ஸ்தல அதிகாரிகள் அதற்கு அப்ரூவல் தரவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கு சிபாரிசு செய்ய வேண்டும். நில வருவாய்த் துறை ஆணையர் அதற்கு அனுமதி அளிக்க வேண்டும். பிறகுதான் அரசுக்கு வரும். அரசுக்கு வரும்போது இதுகுறித்து ஆராயப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 49, திரு. வி.கே. லட்சுமணன் மற்றும் திரு. சி.இரா. இராமச்சந்திரன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**49--**

**முண்டந்துறை நீர்ப்பாசனத் திட்டம்**

*875-**திரு. வி.கே. லட்சுமணன்:**

**திரு. சி. இரா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கோயம்புத்தூர் ஆலந்துறையில் உள்ள முண்டந்துறை நீர்ப்பாசனத் திட்டம் இன்னும் துவங்கப்படாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வட்டம் முண்டந்துறைப் பள்ளம் ஆற்றின் குறுக்கே ஆலந்துறை கிராமத்தில் குட்டை மற்றும் குளமும், மாதவராயபுரம் அருகே அணைக்கட்டு கட்டுவதற்கு புதிய திருத்த மதிப்பீடு ரூ.77.00 இலட்சத்திற்கு (1996-97 விலை விகிதப்படி) தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களால் தயாரிக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு வருகிறது. சாத்தியக்கூறுகள் இருப்பின் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.



**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே நிறைவேற்றப்படக்கூடிய சாத்தியக்கூறுள்ள ஒரே நீர்ப்பாசனத் திட்டம் இந்த முண்டந்துறை திட்டம்தான். கடந்த 20 ஆண்டுகளாக சட்டமன்றத்திலே இதுபற்றி அந்தத் தொகுதியின் எம்.எல்.ஏ.-க்கள் பேசி வந்திருக்கிறார்கள். எனவே அந்தத் திட்டத்தை நிறைவேற்றி, அங்கு 2 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு பாசனம் அளித்திடும் முறையிலே அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 1985-86ஆம் ஆண்டில் 12 லட்ச ரூபாயில் ஒரு திட்டம் தீட்டப்பட்டது. அந்தத் திட்டத்தை அமுலாக்குவதற்காக அதை மைனர் இரிகேஷன் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொண்டிருந்தோம். அப்போது திடீரென்று Rural Landless Employment Guarantee Programme என்கின்ற ஒரு பிரிவில் நாங்கள் அந்தத் திட்டத்தைச் செய்கிறோம் என்று சொன்னார்கள். எனவே சிறு பாசனத் திட்டத்தின் கீழ் இருந்த அந்தத் திட்டம் இந்தத் தலைப்பின்கீழ் மாற்றப்பட்டது. ஆனால் நில ஆர்ஜிதம் செய்வதிலே காலதாமதம் ஏற்பட்டுவிட்ட காரணத்தால் திட்டம் கைவிடப்பட்டது. பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த திட்டம் மீண்டும் தேவை என்று அறிவுறுத்திய காரணத்தால் அதை மீண்டும் எடுத்துக்கொண்டு அதை மாற்றி அமைத்து அனுப்பினோம். ஆனால் Commissioner of Land Administration அவர்கள் அதற்கு போதிய Benefit Cost Ratio இல்லை என்று மறுத்து விட்டார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததற்கு இணங்க, 1996-97 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் 77 லட்ச ரூபாய்க்கு ஒரு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை கிடைத்த பிறகு இந்த அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.இரா. இராமச்சந்திரன்.

**திரு. சி.இரா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் கிட்டத்தட்ட 170 அடிக்குக் கீழே இருக்கக்கூடிய நிலத்தடி நீர் உயரும். இங்கே ஆண்டுதோறும் நீர் வரத்து இருக்கிறது. சிறு அளவிலே பாசனம் செய்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது. எனவே விரைவில் இந்தத்

திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்படி நம்முடைய அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 50...

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பதில் சொல்லவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் 'கேட்டுக் கொள்கிறேன்' என்றுதான் சொன்னார். நீங்கள் சும்மா இருங்கள். வினா எண் 50, திரு. ப. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**50--**

**பழைய நகரப் பேருந்துகளை மாற்றுதல்**

*445--**திரு. ப. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை கிளையில் உள்ள சோழன் போக்குவரத்துக்கழக நகரப் பேருந்துகளில் பழுதான நிலையில் உள்ள பேருந்துகளை மாற்றி புதிய நகரப் பேருந்துகள் இயக்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பட்டுக்கோட்டை கிளையில் உள்ள அதிக பழுதடைந்த பேருந்துகளை சோழன் போக்குவரத்துக் கழகத்தின் நிதிநிலைமையினைக் கருத்தில் கொண்டு மாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை கிளையில் உள்ள சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் அனைத்தும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. பழுதடைந்த பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்:





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 51, திரு. சு. சிவராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**51--**

**தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்தல்**

*512--**திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே தந்தைப் பெரியார் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பெயரைத் தாங்கிய புதிய போக்குவரத்துக் கழகம் வரும் என்று அறிவிப்பு வெளியிட்டார்கள். அது அதோடு நின்றுவிட்டது. இந்த அரசு மீண்டும் அதைப் பரிசீலனை செய்து கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு, பெருந்தலைவர் காமராஜர் பெயரிலே போக்குவரத்துக் கழகம் அமைக்க முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில், தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் காலத்திலேதான் விமான நிலையத்திற்குக் கூட பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில் 21 போக்குவரத்துக் கழகங்கள் இயங்கிக்

கொண்டிருக்கின்றன. இவைகளைக் கூட இணைத்து 7 போக்குவரத்துக் கழகங்களாக மாற்றி அவைகளைச் சீர்திருத்தியமைக்க இந்த அரசு முயன்று கொண்டிருக்கிறது. ஆகவே, இப்போது போக்குவரத்துக் கழகங்களை விரிவுபடுத்தும் எண்ணம் இந்த அரசுக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களை விரிவுபடுத்தும் கருத்துரு இல்லாவிட்டாலும் கூட அமையக்கூடிய அந்த 7 பிரிவுகளில் ஒன்றைக் கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு, அந்தப் போக்குவரத்து அமைப்பினை நிறுவ அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தலைமையிடங்கள் எதுவும் உருவாக்கப்படமாட்டாது. இருக்கிற 21க்கு கீழேதான் 7 இடங்களும் அமையப்பெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்தில் இருக்கிற தந்தை பெரியார் போக்குவரத்தினுடைய பணிமனையில் 40 சதவிகிதப் பேருந்துகள் இயங்காமல் இருக்கின்றன. ஒருநாள் நான் அங்கு சென்று பார்த்தபோது ஏன் இயங்கவில்லை என்று கேட்டால், டயர் இல்லை, கியர் பாக்ஸ் இல்லை, இன்ஜின் இல்லை என்பன போன்ற குறைபாடுகளைச் சொன்னார்கள். இது மட்டுமல்லாமல் சில நேரங்களில் தொழிலாளர்களும் வேலைக்கு வருவதில்லை. எனவே, 40 சதவிகிதப் பேருந்துகள் கிராமப்புறங்களில் ஓடாமல் இருந்தால் மீதம் ஓடுகிற 60 சதவிகிதப் பேருந்துகளில்--இதற்கு முன்பு அமைச்சர்கள் வேன்களில் தொங்கிக் கொண்டு போனார்கள்--இப்போது பொது மக்கள் தொங்கிக் கொண்டு போகக்கூடிய ஒரு சூழ்நிலையிருக்கிறது. பேருந்துகளின் மேலே அமர்ந்து செல்கிறார்கள். பெண்கள் மத்தியிலே இதற்கு ஒரு பெரிய வரவேற்பு இல்லை. மிகவும் வருத்தப்படுகிறார்கள். எனவே, எல்லாப் பேருந்துகளையும் ஓட்டக்கூடிய சூழ்நிலை சிதம்பரம், பெரியார் போக்குவரத்துப் பணிமனையில் எப்போது வரும் என்பதை அமைச்சர் அவர்களின் மூலமாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளைப் புதியதாக மாற்றுகிறபோது புறநகரில் ஓடுகிற பேருந்துகளை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால், கடந்த கால ஆட்சியில் அதிகப் பேருந்துகள் புதிதாக மாற்றப்படாத சூழ்நிலையில் இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகுதான் புதிய பேருந்துகளுக்கு, அதாவது 2170 பேருந்துகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி அவைகளுடைய கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், பெரியார் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கருத்து சரியாக இருக்காது. 40 சதவிகித வண்டிகள் ஓடவில்லையென்பது தவறான கருத்து. ஏனென்றால், 21 போக்குவரத்துக் கழகங்களிலேயே, ஓரளவு இலாபம் ஈட்டிக்கொண்டிருக்கிற ஒரே போக்குவரத்துக் கழகம், பெரியார் போக்குவரத்துக் கழகம்தான். அவைகள் முழுவதுமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. பேருந்துகளும் இப்போது விடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்போது, ஏறத்தாழ மாதத்திற்கு 500 புதிய பேருந்துகள் போக்குவரத்துக் கழகங்கள் மூலமாகவே கட்டப்பட்டு வருகின்றன. கடந்த காலத்தில் வெளியிலே கட்டப்பட்டன. அதனால் ஏற்படுகின்ற ஊழலைத் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் போக்குவரத்துக் கழகங்களின் மூலமாகவே, இப்போது கட்டிக் கொண்டு வருகிற காரணத்தினால், பேருந்திற்குக் குறைந்தபட்சம் ரூபாய் ஒரு லட்சமாவது, மற்றவைகளிலிருந்து குறைவாகத்தான் செலவாகிறது. இன்னும் மூன்று நான்கு மாதங்களில் நிச்சயமாக அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் புதிய பேருந்துகள் வழங்கப்பட்டு, குறையில்லாத அளவிற்கு இந்த அரசு கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. எம். விஜயகுமார்.

**திரு. கே. எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டம், விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்டு வீரன் சுந்தரலிங்கனார் போக்குவரத்துக் கழகம் என்று அறிவிக்கப்பட்டு, அதற்குத் தனி அதிகாரி ஒருவர் விருதுநகரிலிருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். எனவே, வீரன் சுந்தரலிங்கனார் போக்குவரத்துக் கழகம் விரைவில் ஆரம்பிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். 21 போக்குவரத்துக் கழகங்களை 7-ஆக மாற்ற முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால், வீரன் சுந்தரலிங்கனார் பெயரிலுள்ள அந்தப் போக்குவரத்துப் பேருந்துகள் இயங்கும். அதற்காக இந்த 21-ல் அந்தப் பெயர்களில் எந்த மாற்றமும் இருக்காது. 21 போக்குவரத்துக் கழகங்களுமே அந்தப் பெயரிலேயே இயங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபோது, புதிய பேருந்துகளுக்குப் போக்குவரத்துக் கழகங்களே 'பாடிகளை'க் கட்டிக்கொள்வதாகச் சொன்னார்கள். ஆனால், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் புதிய 'பாடிகளைக்' கட்டுவதற்கு டெண்டர் வெளியார்களிடமிருந்து கோரியிருக்கிறார்களே, இதனைத் தடுத்து, அங்கே இருக்கின்ற வேலையாட்களை வைத்தே அந்தப் பேருந்துகளுடைய 'பாடிகளைக்' கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்கள் மூலமாகக் கட்டப்படுகிற பேருந்துகளின் எண்ணிக்கை மிக விரைவில் தேவைகளை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில் தனியார்கள் கட்ட முடியுமா என்று போக்குவரத்துத் துறை மூலமாக டெண்டர்கள் கோரப்பட்டன. ஆனால் அப்படி விண்ணப்பித்தவர்கள் சரியாக இல்லாத காரணத்தினால் அவைகள் எல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன. எனவே, போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக மட்டும்தான் கட்டுமானப் பணிகள் நடைபெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பால. ஆனந்தன்.

*முற்பகல் 10-05*

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள போக்குவரத்துக் கழகங்கள் அனைத்தும் ஆரம்ப காலத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை என்று செயல்பட்டு வந்தது. பொது மக்களுக்கு விரிவான முறையிலே பயன்படும் வகையில் பிற்பாடு 21 கழகங்களாக வளர்ந்துள்ளது. இப்போது அதைச் சுருக்கி 7 கழகங்களாக ஆக்குகின்றபோது பொதுமக்களுக்கு



அது உசிதமான முறையிலே எந்த வகையிலே பயன்படும் என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அனைத்துத் தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்து நான் பேசியிருக்கிறேன். இதனால் பொதுமக்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது. நிர்வாகச் செலவுகள் குறைக்கப்படும். உதாரணமாக, திருத்தணியிலே ஒரே டெப்போவிலே ஒரே காம்பவுண்டிலே, எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகமும், பட்டுக் கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகமும், நடைபெற்று வருகின்றன. ஆனால், இரண்டு மேலாளர்கள் அங்கே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுபோன்ற நிலைமைகள் எல்லாம் மாற்றியமைக்கப்படுவதன் மூலம் நிர்வாகச் செலவுகள் குறையும், சீர்திருத்தம் ஏற்படுமே தவிர, போக்குவரத்துத் துறையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கோ, பொதுமக்களுக்கோ எந்தவித பாதிப்பும் இருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓடுகின்ற நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் நிலை மோசமாக இருக்கிறது. அந்தக் கழகத்தின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, புதிதாகப் பஸ்கள் வாங்கித் தருகிறோம், வாங்கித் தருகிறோம் என்று சொல்லுகின்றார் என்றால், அது மக்கள் மத்தியிலே தவறான கருத்தாகப் போய் அமைந்து விடுகிறது. மக்கள் எப்படி நினைக்கிறார்கள் என்றால், புதிதாக பஸ்கள் வரும், புதிதாக ரூட்கள் வந்துவிடப் போகிறது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இருக்கக்கூடிய பழைய வண்டிகளை அப்புறப்படுத்தி, அந்த இடங்களிலே 'ரீப்ளேஸ்மெண்ட்'க்குத் தான் புதிய பஸ்கள் வருகின்றன. புதிய வழித்தடங்கள் வருவது இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆண்டொன்றுக்கு எல்லாப் பகுதிகளிலேயும் புதிதாக இரண்டு வழித்தடங்களையாவது ஏற்படுத்துகின்ற முகத்தான் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் ஒன்பது ஆண்டுகளைக் கடந்த பேருந்துகள் 100-க்கும் அதிகமாக இருக்கின்றன. உங்கள் போக்குவரத்துக் கழகங்களிலேயே மிகவும் மோசமான நிலையிலே இருப்பது நேசமணி

போக்குவரத்துக் கழகம். அருமைச் சகோதரர் திரு. அழகிரி அவர்கள் பேசுகின்றபோது 40 சதவிகிதத்திற்கும் மேல் மோசமான பஸ்கள் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலே இருப்பதாகச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ், கேள்வியைக் கேளுங்கள். நீங்கள் ஸ்பீச் கொடுக்கிறீர்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவரவர்களே, பேச வாய்ப்பு இல்லாததால், கேள்வி நேரத்திலாவது அதைப் பயன்படுத்தப் பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சட்டமன்றத்திற்கு வந்தால்தானே வாய்ப்புக் கிடைக்கும்

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவரவர்களே, நான் ஒழுங்காக வந்து கொண்டுதான் இருக்கிறேன். ஒன்பது ஆண்டு காலத்திற்கு மேல் பழுதடைந்த நிலையிலே ஓடுகின்ற பஸ்கள் 50 சதவிகிதத்திற்கும் மேல் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பேருந்துகளை மாற்றி, புதிய வழித்தடங்களையும் அங்கே ஏற்படுத்தி, அதற்கான ஆணைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிறப்பிப்பார்களா என்று உங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** தலைவரவர்களே, புதிய பேருந்துகள் விடுவது என்பது வேறு, புதிய வழித்தடங்களைக் கொடுப்பது என்பது வேறு. அரசு சொல்லியிருப்பது, புதிய பேருந்துகள் 2170 கொடுக்கிறோம் என்று. புதிய வழித்தடங்கள் 2170 கொடுக்கிறோம் என்று சொல்லவில்லை. ஆனால், அதேநேரத்தில் புதிய வழித்தடங்களுக்காக மக்களிடமிருந்து அவ்வப்போது கோரிக்கைகள் வருகின்றபோது ஆய்வுகள்கூட நடத்தப்பட்டு, அவைகள் எல்லாம் வழங்கப்பட்டு வருகின்றன. அதேபோல மாண்புமிகு உறுப்பினருடைய இடங்களிலே 'அன்சொர்வ்டு ஏரியாஸ்'-பேருந்துகளே செல்லாத இடங்கள்--இருந்து அதை அவர் சுட்டிக்காட்டுவாரேயானால் உடனடியாகப் பேருந்துகளை விடுவதற்கு போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ஆண்டி அம்பலம்.

**திரு. எம். ஆண்டி அம்பலம்:** பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டத்தில் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் நடைபெற்று வருகிறது. அங்கே குறிப்பாக ஒரு வண்டிகூட புதிது என்று சொல்லமுடியாது. எங்கே பார்த்தாலும் பிரேக் டவுன், பிரேக் டவுன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் போகின்றபோது பார்த்தால் 50 பேர்கள் பஸ்ஸை விட்டு இறங்கி நிற்கின்ற நிலைமையைப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஏன் நிற்கிறீர்கள் என்று கேட்டால், பிரேக் டவுன் என்று சொல்லிவிட்டார்கள் என்று சொல்லும் நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்வது புதிய வண்டிகளை சீக்கிரத்திலே விடுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதுதான்.





**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** தலைவரவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை 450 பேருந்துகள் ஏறத்தாழ ஒரு மாதத்திலே மட்டும் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுககும் வழங்கப்பட்டிருக்கின்றன. நான் முதலிலேயே சொன்னேன். போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக ஒரு மாதத்திற்குப் புதிய கட்டுமானப் பணிகளைச் செய்து, 400 அல்லது 450 வண்டிகளைத்தான் விடமுடியும். ஏனென்றால், கடந்த கால அரசில் கட்டுமானக் கூடங்கள்-ஒர்க் ஷாப் இவைகள் எல்லாம் கூட மூடப்பட்டு விட்டன. உதாரணமாக, கலைஞர் அவர்களால் குரோம்பேட்டையில் துவக்கப்பட்ட கட்டுமானக் கூடத்தில் 1500 பேர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். ஆனால் கடந்த கால ஆட்சியில் 150 பேர்களாகக் குறைக்கப்பட்டு, அந்த குரோம்பேட்டை பணி மனையையே மூடுகிற அளவுக்கு வந்தது. இந்த மாதிரி வந்ததற்குப் பிறகுதான், அதிலே 400, 500 பேர்கள் புதிதாக நியமிக்கப்பட்டு இன்று ஏறத்தாழ மாதத்திற்கு 50 புதிய பேருந்துகளைக் கட்டுகின்ற அளவுக்கு குரோம்பேட்டை ஒர்க்ஷாப் வந்திருக்கிறது. ஆக, வெகு விரைவில் நிச்சயமாக எல்லாக் குறைகளும் களையப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா.

**திரு. எல். மூக்கையா:** பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் போன்ற மலைவாசஸ்தலங்களில் ஓடுகின்ற பஸ்களுக்கு பதிலாக அரசு புதிதாக பஸ்கள் விடுகின்றபோது, புதிய பஸ்களை விட அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பாக அங்கே புதிய பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன என்று அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் இங்கே தெரிவிக்கின்றார். புதிய பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன.

[1997 சனவரி 28

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண். 52, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.*

**52--**

**தொழிற்சாலைகளில் ஆய்வு நடத்துதல்**

*722--**திரு. கே. சுப்பராயன்:**

*மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) கடந்த 1994-95-ஆம் ஆண்டுகளில் எத்தனை தொழிற்சாலைகளில் தொழிற்சாலை ஆய்வாளர்கள் ஆய்வு நடத்தினர்?*

*(ஆ) அவற்றில் கிடைத்த விவரங்கள் என்ன?*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) கடந்த 1994-95ம் ஆண்டுகளில் மொத்தம் 23,053 தொழிற்சாலைகளில், தொழிற்சாலை ஆய்வாளர்கள் ஆய்வு நடத்தினர்.*

*(ஆ) அவற்றில் கிடைத்த விவரங்கள் :-*

*1994-95ம் ஆண்டுகளில் தொழிற்சாலைகளில் மொத்தம் அறுபத்தைந்தாயிரத்து இருநூற்று தொண்ணூற்று மூன்று ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் ஐயாயிரத்து ஐநூற்று அறுபத்து நான்கு வழக்குகள் தொடரப்பட்டு சுமார் இருப்த்தொன்பது இலட்சத்து எழுபத்தி நான்காயிரத்து நூற்று ஐந்து ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.*

**திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட உரிமைகளை தொழிலாளர்கள் அனுபவிக்க பொறுப்பாக்கப்பட்டுள்ள இந்தத் துறை நடைமுறையில் பொருத்தமற்ற ஒன்றாக இயங்கி வருவதாக தொழிற்சங்க இயக்கங்கள் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றன. எனவே 'என்ஃபோர்ஸ்மென்ட் விங்'*



1997 சனவரி 28]

*ஆன இந்தத் துறை, அதனுடைய நோக்கத்திற்குப் பொருத்தமற்றதாக இயங்கி வருகின்ற காரணத்தால் இவற்றை எப்படி பொருத்தமுள்ளதாக மாற்றியமைப்பது என்கிற கருத்தை அறிவதற்காக தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து, ஒத்த கருத்துநிலை உருவாக்குகிற முயற்சியை மேற்கொண்டு, அவற்றை அமல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** *பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல இந்தத் துறை முழுமையாகச் செயல்படவில்லை, பயனற்றதாக இருக்கிறது என்ற கருத்துக்கள் சரியாகாது. 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலை இதர தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ், அதிகாரிகள் வழக்குகள் தொடர்ந்து, நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இருந்தாலும் பல்வேறு குறைகள் இருக்கலாம். எனவே தொழிற்சங்கத் தலைவர்கள் சொல்கிற மேலான ஆலோசனைகள் பரிசீலிக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. டி. மணி.*

**திரு. டி. மணி.** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிலாளர் நலத் துறை மூலமாக ஆய்வுகளை மேற்கொள்கின்றபோது, ஏற்கெனவே சட்டங்களை அமல்படுத்தாத நிர்வாகத்தின் மீது ஃபைன் போடுகிறார்கள். இந்தச் சிறிய தொகை அவர்களுக்கு ஒரு பெரிய பிரச்சினை அல்ல. சட்டங்களை அமல் நடத்துவதற்கு ஃபைன் போடுவதற்குமேல், அடுத்து என்ன மேல் நடவடிக்கை எடுக்கப்படும்? குறிப்பாக இந்த மாமன்றத்திலே, 1982-ஆம் ஆண்டில், முந்திரி ஆலைத் தொழிலாளர்கள் சம்பந்தமாக சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்குப் பாதுகாப்பு, சட்டப்படியான பாதுகாப்பு, என்ற முறையில் தெரிவிக்கப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட அந்த ஆலைத் தொழிலாளர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லாது இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருந்து கொண்டே இருக்கிறது. எனவே இந்த ஆய்வுகளை வைத்து, சட்டங்களை அமல் நடத்துவதிலே, என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைமுறை சட்டத்திலுள்ள ஷரத்துக்களுக்குட்பட்டு நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சட்டத்திற்குட்பட்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து*

வருகிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல, இது பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட சட்டம். இந்தச் சட்டத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன என்று அறிந்து, மத்திய அரசு, இது குறித்து ஒரு ஆய்வு நடத்தி, இந்தச் சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டு வந்து, இன்னும் சிறப்பாக எப்படி அமல் நடத்தலாம் என்று கருத்து தெரிவித்துள்ளது. நம்முடைய துறையின் சார்பாக அதுபற்றி ஆராய்ந்து வரப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 53, திரு. அ.லெ. சுப்பிரமணியன், மற்றும் திரு. மா. இராமச்சந்திரன்; மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**53--**

**தனி குற்றவியல் நீதிமன்றம் அமைத்தல்**

*1372-**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

**திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:-

தமிழகத்தில் பல்வேறு குற்றவியல் நீதிமன்றங்களில் (Criminal Courts) தேங்கியிருக்கும் வழக்குகளை விரைவில் முடித்திட தனி குற்றவியல் நீதிமன்றக் காவல் துறை பிரிவு (Criminal Court-Police Wing) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாநில அளவில் 'டைரக்டர் ஆஃப் புராசிகியூஷன்' என்ற பதவியில் ஐ.ஜி. தகுதியில் காவல் துறை அதிகாரி ஒருவர் பதவி ஏற்று இருக்கிறார்கள். இங்கே மாவட்ட அளவில் குற்றவியல் வழக்குகள் மிக அதிகமாகத் தேங்கிக் கிடக்கின்றன. சம்மன்களை சர்வ் செய்யவும், வழக்குகளை அக்கறையோடு நடத்திடவும், அரசு வழக்கறிஞர்களுக்கு வழக்குகள்



நடத்திட உதவிடவும் 'கிரிமினல் கோர்ட்-போலீஸ் விங்' ஒன்று அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவியல் வழக்குகளை விரைவில் விசாரித்துத் தீர்வு காண்பதற்கு 4 விதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. ஒன்று எல்லா வட்டங்களிலுமே அனேகமாக குற்றவியல் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. உரிமையியல் நீதிமன்றம் மட்டுமே இருந்த இடத்தில் முன்சீப்-கம்-ஜுடிஷியல் மேஜிஸ்டிரேட் கோர்ட் என்ற அந்த நீதிமன்றங்களை எல்லாம் மாற்றி, குற்றவியல் வழக்குகளையும் விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டது. எனவே, இந்த வாய்ப்புகள் அதிகரித்துவிட்டன.

முற்பகல் 10-15

இரண்டாவது ஏற்பாடு எது என்றால், தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. உதாரணமாக, போதைப் பொருள்களை கடத்துதல், பயன்படுத்துதல், ஆதிதிராவிட மக்களைக் கொடுமைப்படுத்துதல், அவமதித்தல், அதேபோன்று சந்தனமரக் கட்டைகளை எல்லாம் கடத்துதல், இதுபோன்றவைகளுக்கு எல்லாம் தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. அதுவன்றி, மொபைல் கோர்ட், இரயில்வே கோர்ட், ஃபேமிலி கோர்ட் என்றெல்லாம் அமைக்கப்பட்டு இருக்கின்றன. இந்த வழக்குகள் எல்லாம் ஒழுங்காக நடைபெறுகிறதா எனபதைக் கண்காணிக்க டைரக்டர் ஆஃப் பிராசிகியூஷன் என்ற இயக்குநரும் நியமிக்கப்பட்டு இருக்கிறார். இத்தனைக்கும் மேலாக, காவல் துறையில் இந்த வழக்குகள் சரியாக நடக்கிறதா, புலனாய்வு செய்யப்படுகிறதா என்பதைப் பரிசீலிக்கின்ற நல்ல நோக்கத்தோடும், நல்லமுறையில் புலனாய்வு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடும் டைரக்டர் ஆஃப் விஜிலன்ஸ் அண்டு ஆன்டி-கரப்ஷன் என்ற அமைப்பு இருக்கிறது. இது எவ்வளவு முனைப்பாகச் செயல்பட்டு, இப்போது தமிழகத்தில் ஒரு பெரிய வரலாற்றை உருவாக்கிக் கொண்டு இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவு, தனிப் பிரிவு-அதாவது ஸ்பெஷல் பிரான்ச், வனப் பிரிவு-ஃபாரஸ்ட் செல், உணவுப் பொருள்கள் பிரிவு-ஃபுட் செல், குடியுரிமைப் பாதுகாப்புப் பிரிவு, க்யூ பிரான்ச், சிலைத் திருட்டு தடுப்புப் பிரிவு, வணிகக் குற்றவியல் புலனாய்வுப் பிரிவு-கமர்ஷியல்

கிரைம் அண்டு இன்வெஸ்டிகேட்டிங் விங்--இப்படி 10 அமைப்புகள் இருக்கின்றன. இந்த அமைப்புகளைத் துரிதப்படுத்துவதன் மூலம், ஒழுங்காகச் செயல்படுத்துவதன் மூலமும் நாம் குற்றவியல் வழக்குகளை நல்ல முறையில் நடத்த முடியும். ஒவ்வொரு காவல் நிலையத்திலும் அதற்காகத் தனி அமைப்பு, பிரிவு தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமைப்புகள் எல்லாம் முன்னமேயே இயங்கிக் கொண்டு இருக்கின்றன. ஆனால், கோர்ட்டுகளில் சாட்சிகளைக் கொண்டு வருவது என்பது காவல் துறையினர்தான். சாட்சிகளைக் கொண்டுவர முடியாத காரணத்தால், கஷ்டமாக இருக்கிற காரணத்தாலே, பெரிய வழக்குகளைக்கூடச் சிறிதாக்கி, அன்றைக்கே முடித்துக்கொள்கிற அளவுக்கு அந்த வழக்குகளை மாற்ற அந்தக் காவல் நிலையத்தில் இருக்கிற அதிகாரி முயலுகிறார். ஆகையினாலேதான், குற்றங்கள் அதிகமாகிவிட்டன. ஆகவே குற்றங்களை--பெரிதானவைகளை சிறிதாக்குகிறபோது, குற்றவாளிகளைச் சிறிதானவர்களாக ஆக்கி முடித்துக்கொள்கிறபோது மறுபடியும் அவன் குற்றங்களைச் செய்கிறான். ஆகவேதான் வழக்குகளை நடத்துகிறபோது, சாட்சியங்களை வழக்குமன்றங்களுக்குக் கொண்டுவருகிறபோது, அதற்கு முறையாகச் செயல்படுவதற்கு அலுவலர்கள் தேவை. அதற்காகத்தான் ஒரு தனிப்பட்ட விங் இருந்தால் சௌகரியமாக இருக்கும். சில சமயங்களிலே காவல் துறையிலே பந்தோபஸ்துக்கு போக வேண்டியிருந்தால் அல்லது வேறு வேலைகள் இருக்கின்றன என்றால், அவர்கள் கோர்ட்டுக்கு வர முடியவில்லை. ஆக தனியாக ஒரு 'விங்' இருக்குமேயானால், சாட்சிகளைக் கொண்டுவருவதற்கு ஏதுவாக இருக்கும். அதனால் இதை ஏற்படுத்தினால் நல்லது என்று கருதுகிறோம். ஆகவே அப்படிப்பட்ட காரியங்களை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் குறித்த காலத்தில் விசாரணைகள் நடக்காமல் இருப்பதற்கு காவல் துறையினர் மட்டுமே பொறுப்பு என்று உறுப்பினர் அவர்கள் கருதுவது தவறான கருத்து ஆகும். காவல் துறை நல்ல முறையிலே விசாரித்து, தன் கருத்துக்களை, தன்னுடைய சாட்சிகளைக் கொடுக்கிறது. ஆனால், காவல் துறையினருடைய நல்ல முயற்சிகளால் மட்டுமே விரைவிலே தீர்வு கிடைத்துவிடும்





என்று எண்ணிவிடக்கூடாது. மாண்புமிகு வழக்கறிஞர்களுடைய ஒத்துழைப்பும் தேவை; அவர்கள் வாய்தா கேட்பதை கொஞ்சம் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற நிலைப்படி, காவல் துறை அதிகாரிகள் நீதிமன்றத்தில் சாட்சிகளை ஒப்படைக்காத நிலையில், 10 ஆண்டுகளுக்கு மேலாக சிறிய வழக்குகளில்கூட, அந்த வழக்குகளில் சம்பந்தப்பட்ட எதிரிகள் நீதிமன்றத்திற்கு அலைந்து கொண்டு இருப்பதைக் காண முடிகின்றது. இதைத் தடுத்து நிறுத்துகின்ற வகையில், அதேபோன்று பல குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்ட நிரபராதிகள் எதிரிகளாகச் சேர்க்கப்பட்டு நீதிமன்றத்திற்கு அலைந்து பல கஷ்டங்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இதைத் தடுத்து நிறுத்துகின்ற வகையில்--முதல் தகவல் அறிக்கை தயார் செய்வது அந்த சம்பந்தப்பட்ட போலீஸ் என்றாலும், அதேபோன்று--அந்த வழக்கைப் புலன் விசாரணை செய்கின்ற காவல் துறை அதிகாரிகள் தனியாகச் செயல்படக்கூடிய நிலையில், அதேபோன்று நீதிமன்றத்தில் வழக்குகளை நடத்துகின்ற காவல்துறை அதிகாரிகள் தனியாக இயங்குகின்ற வகையில் இந்த அரசு தனித் தனியாக அந்த காவல்துறை அமைப்பில் பிரிவு ஏற்படுத்திக் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறையின் அடிமட்டத்தில் இரண்டு வகையான பிரிவுகள் இருக்கின்றன. ஒன்று கிரைம், இரண்டாவதாக லா அண்ட் ஆர்டர். அங்கே அந்த அதிகாரிகள் இவற்றை டீல் பண்ணுகிறார்கள். அதன் அடிப்படையில் விசாரணை நடத்தி, வழக்குகளைத் தாக்கல் செய்கிறார்கள். காவல்துறையால் மட்டுமே பொய் வழக்குகள் அல்லது தவறான வழக்குகள் போடப்படுகின்றன என்று நாம் குற்றம் சாட்டிவிடமுடியாது. அதுபொய் வழக்கா, தவறான வழக்கா என்பதை நீதிமன்றங்கள்தான் முடிவு செய்ய வேண்டுமே தவிர, காவல் துறையே அதை நிர்ணயித்துவிடமுடியாது. அது நீதிமன்றத்தில்தான் முடிவு செய்யப்படவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 54. டாக்டர் மு. தேவராஜன். மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்.

**54--**

**பெரம்பலூர் பகுதியில் நூற்பாலை**

*3360-**டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:-

(அ) பெரம்பலூர் பகுதியில் விளையும் பருத்தியைக் கொண்டு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பெரம்பலூர் பகுதியில் விளையும் பருத்தியைக் கொண்டு நூற்பாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் பகுதி பொருளாதாரத்தில் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற பகுதி. வறுமையின் கொடுமையை அதிகமாக சுவாசித்துக் கொண்டிருக்கிற பகுதி. ஒரு லட்சம் ஏக்கருக்கு மேலாக அங்கே பருத்தி விளைந்தாலும், வெளிமாவட்டங்களிலிருந்து அதைக் கொள்முதல் செய்வதால், இடைத் தரகர்கள் அதிகமான லாபமும், விவசாயிகள் குறைவான லாபத்தையுமே பெற்றுவருகிறார்கள். ஆகவே பருத்தியும் அதனைச் சார்ந்த தொழிற்சாலைகளையும் அங்கே அமைப்பதோடு, பருத்தி கொள்முதல் நிலையத்தையும் அமைத்து, அங்கே வாடிக் கொண்டிருக்கிற மக்களின் வறுமைப் பிணியை அகற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே. கே. பெரியசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி கொள்முதல் செய்வதற்கு, ஏற்கெனவே வேளாண்மைத் துறையின் மூலமாக ரெகுலேடட் மார்க்கெட்டிங் கமிட்டி செயல்பட்டு வருகிறது. ஒரு பகுதியில் விளையும் பருத்தியை மட்டுமே வைத்துக்கொண்டு நாம் நம்முடைய நூல் தேவையைப் பூர்த்தி செய்துவிடமுடியாது. பலதரப்பட்ட நூல்களை உற்பத்தி செய்வதற்கு, பலதரப்பட்ட பருத்திவகைகளை வாங்க வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது. ஆகவே, பெரம்பலூர் பகுதியைப் பொறுத்த வரையில், கரூரில் ஏற்கெனவே 25,000 ஸ்பிண்டில் உள்ள ஆலை ஒன்று இயங்கிவருகிறது. நம்மைப் பொறுத்தவரையிலே நூல் உற்பத்தியிலே உபரியாக இருக்கிறோம். ஆனால் பருத்தி உற்பத்தியிலே நாம் குறைவாகத்தான் இருக்கிறோம். வெளிமாநிலங்களில் பருத்தி உற்பத்தியும் அதிகம். தற்சமயம் நூற்பாலைகளும் அதிகம். ஆகவே, நூற்பாலைகளில் இருக்கின்ற நூலை வெளிமாநிலங்களில் இன்றைக்கு விற்கக்கூடிய வாய்ப்புக்கூட இல்லாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. நமது கூட்டுறவு நூற்பாலைகளின் ஒட்டுமொத்த உற்பத்தி நமது கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான அளவுக்கு இருக்கிறது. ஆகவே மேற்கொண்டு புதிதாக ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்கிற தேவை இல்லையென்று நான் கருதுகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆர். ஜி. தனபாலன்.

**திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, கூட்டுறவு நூற்பாலைகளின் தேவைக்குமேல் பருத்தி உற்பத்தியாகின்றது. அதனால் புதிய ஆலை தேவையில்லை என்று சொல்கிறார்கள். தனியார் நூற்பாலைகள் எல்லாம் வெளிநாடுகளுக்கு நூலை ஏற்றுமதி செய்கின்றன. நமது 18 கூட்டுறவு நூற்பாலைகளும் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் அரசு கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூல்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்ற ஒரு கருத்துரு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மிடம் உற்பத்தியாகும் நூல், மாதம் ஒன்றுக்கு, கூட்டுறவு நூற்பாலைகளில் மட்டும் 27 லட்சம் கிலோ ஆகும். இந்த நூல் நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போதுமானதாகவே இருக்கிறது. எதிர்காலத்தில் வேண்டுமானால் ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் தரமான புதிய இயந்திரங்களை நிறுவி, அப்படிப்பட்ட நூலை தயாரித்து ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்புகள் இருந்தால் செய்யலாம் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1997 சனவரி 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நூற்பாலை கேட்கின்ற இந்த நேரத்தில் எனது தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால், சாரம் கூட்டுறவு நூற்பாலை கடந்த ஆட்சிக் காலத்தில் அமைச்சர்கள் எல்லாம் அங்கே வந்து தங்கி, அதைக் கொள்ளையடித்து, அந்தக் கூட்டுறவு நூற்பாலையைத் தனியார் ஆலையாக மாற்றவேண்டுமென்று எண்ணி, அதை அபகரிக்க நினைத்தார்கள். அதன்படி, பல மாதங்களாக சாரம் கூட்டுறவு நூற்பாலை மூடிக்கிடப்பதால், தொழிலாளர்கள் 2 மாதங்களாக சம்பளம் இல்லாமல் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது அதற்கு பணத்தை ஒதுக்கியிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. அது மகிழ்ச்சி அளிக்கிறது. எப்போது அந்த ஆலை தடைபடாமல் தொடர்ந்து ஓடும் என்பதை அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாரம் போன்ற 6 நூற்பாலைகள் குறித்து மாநில அளவில் இருக்கிற தொழிலாளர்கள் சங்கத்தினுடைய தலைவர்களிடம் முதல் கட்ட பேச்சு வார்த்தை நடைபெற்று முடிந்திருக்கிறது. இதிலே அவர்களுடைய ஓர்க்-லோடு, அதே நேரத்தில் வேஜ் ப்ரீஸ்--வேஜ்ப்-ரிஸ் என்று சொல்லவில்லை--எதிர்காலத்தில் இலாபம் கிடைத்தவுடன் ரெட்ராஸ்பெக்ட்டிவ் எபக்ட்டிலே கொடுப்பதற்குரிய வாய்ப்போடு இந்த ஆலைகளுடைய நலனைக் கருதி மற்ற அணுகுமுறைகள் எல்லாம் முறைப்படுத்தப்பட்டு நிச்சயம் ஆலையை விரைவில் திறப்பதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய நூற்பாலைகளுக்குத் தேவையான அளவு பஞ்சு தமிழ் நாட்டில் கிடைக்கவில்லை என்று நான் கருதுகிறேன். அதன் காரணமாக வெளி மாநிலங்களில் பஞ்சு வாங்குவதற்கான ஏற்பாடுகளைக் கடந்த ஆட்சியில் செய்து, அதிலே கொள்ளை இலாபம் ஏற்பட்டது



1997 சனவரி 28]

என்பதும் தெரிந்த உண்மை. எனவே, தமிழ் நாட்டுக்குத் தேவையான பஞ்சு எவ்வளவு? அது தமிழ்நாட்டிலே முழுவதும் கிடைக்கிறதா? இல்லையென்றால் வெளி மாநிலங்களிலிருந்து வாங்கக்கூடிய பஞ்சின் அளவு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக எவ்வளவு பஞ்சு வேண்டுமென்ற விவரம் என்னிடம் இல்லையென்றாலும் நமக்குத் தேவையான பஞ்சுகளை வாங்குவதற்கு வெளி மாநிலங்களை நம்பி இருக்கிறோம். கடந்த ஆட்சியில் இழைக்கப்பட்ட ஒரே ஒரு தவறின் காரணமாக இன்று காட்டன் கார்ப்பரேஷன் ஆப் இந்தியாவுக்கு மட்டும் 20 கோடி ரூபாய் நாம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் அவர்கள் ஓராண்டுக்கு போடப்பட்ட ஒரே ஒப்பந்தத்தின் மூலம், 70 கோடி ரூபாய் அளவில் பஞ்சு நாங்கள் பெற்றுக் கொள்கிறோம் என்று ஒப்பந்தத்தைப் போட்டு பல தவறுகளை அதிலே செய்த காரணத்தால், ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய்க்கு வாங்கப்பட்ட பஞ்சு 7 கோடி ரூபாயாக கேரி-ஓவர் சார்ஜ் அதற்கு போடப்பட்டு, அந்த 7 கோடி ரூபாய் அதற்கு பிரின்சிபிளாக 7 கோடி ரூபாய் மாற்றப்பட்டு, அதற்கு வட்டி 12 கோடி ரூபாய் போடப்பட்டு, ஆக ஒரு கோடியே 15 இலட்சம் பஞ்சின் கிரயம் இன்று 20 கோடியாக கடனாக காட்டன் கார்ப்பரேஷன் ஆப் இந்தியாவுக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, தற்சமயம் போடுகிற ஒப்பந்தங்கள் எல்லாம் அன்றாட நிலைமைக்கு, அன்றாட மார்க்கெட் நிலவரத்திற்கு, குறைந்த விலையிலே Cash and Carry என்ற அடிப்படையிலே, பஞ்சியினுடைய கொள்முதல் விலை ஆலையினுடைய உற்பத்தி செலவில் 55 சதவீதத்திற்கு மேல் செல்லாமல் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில், இப்போது செயலாற்றி வருகிறோம். கடந்த ஆட்சியில் அது 80 சதவீதம் பஞ்சு கொள்முதலே இருந்தது என்பதையும், அதனால்தான் இப்படிப்பட்ட நட்டங்கள் ஏற்பட்டன என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 55, திரு. பா. வேல்துரை, மாண்புமிகு வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

[1997 சனவரி 28

55--

### காட்டு யானைகள் பயிர்களை நாசம் செய்வதைத் தடுத்தல்

*2745--**திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, நெட்டல், சீராக்குளம், உலுப்படிப்பாறை ஆகிய விவசாயப் பகுதிகளில் அடிக்கடி காட்டு யானைகள் மற்றும் மலைப்பன்றிகள் புகுந்து பயிர்களை நாசம் செய்வதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சேரன் மகாதேவி தொகுதி நெட்டல் மற்றும் உலுப்படிப்பாறை, பகுதிகளில் விவசாய நிலங்களில் புகுந்து நாசம் செய்யும் காட்டு யானைகள் மற்றும் மலைப்பன்றிகள் பட்டாசு வெடித்து விரட்டப்படுவதுடன், அவற்றின் நடமாட்டம் பற்றி வனத்துறை அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டு அதன்மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி ஒன்றியத்திற்கு' உட்பட்ட பொட்டல், சீராக்குளம், உலுப்படிப்பாறை, பட்டாங்காடு, புலவன் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் கடந்த 5, 6 ஆண்டுகளாக அதிகமாக யானைகள் வந்து பனை மரம், தென்னை மரம், வாழை, நெல் பயிர்களை எல்லாம் சேதப்படுத்தி வருகின்றன. குறிப்பாக 1995 ஆம் ஆண்டு இதிலே அதிக அளவில் நெல் பயிரும், வாழைப் பயிரும், தென்னை மரங்களும் சேதப்படுத்தப்பட்டன. அந்த நேரத்தில் இருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்தச் சேதங்களை எல்லாம் சரியானபடி கணக்கிடாமல், அதற்கான நட்டஈட்டை வழங்காமல் விவசாயிகளை அப்படியே தெருவில் விட்டு விட்டார்கள். மேலும் காட்டுப் பன்றிகளால் அந்தப் பகுதியில் கடலை, நெல் பயிர்கள் அதிகமாக சேதமாகி



1997 சனவரி 28]

வருகின்றன. அந்தச் சேதங்களை எல்லாம் கணக்கிட்டு அந்த விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும் கடந்த 8-1-1997 அன்று இரவு மீண்டும் யானைக் கூட்டம் அங்கே வந்து வேல்சாமி என்பவருடைய 38 தென்னை மரங்களை சேதப்படுத்தி, சண்முகம், காசி மணி, மாடக்கண்ணு என்பவர்களுடைய வயல்களை எல்லாம் அழித்துள்ளது. அதற்கு பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர், சார் ஆட்சியருடன் இணைந்து பார்வையிட்டு அரசுக்குத் தெரிவித்ததன் காரணமாக தற்போது 10 நபர்களைப் பாதுகாப்பு கருதி அங்கே போட்டிருக்கிறார்கள். அதையும் மீறி 16-1-1997 அன்று மீண்டும் நெல் பயிர்களை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. பா. வேல்துரை:** உண்மையாக ரொம்பவும் கஷ்டமான நிலையில் அந்த ஊர் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லுங்கள் போதும்.

பேரவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

முற்பகல் 10-30

**திரு. பா. வேல்துரை:** பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் 16-1-97 அன்று யானைகள் வந்து அதிக அளவில் அட்டகாசம் செய்து நெற்பயிர்களை எல்லாம் அழித்து சேதப்படுத்தியிருக்கிறது. நாங்கள் எல்லாம் சென்று அவைகளைப் பார்த்தோம். அந்த வயல்களில் உள்ள பயிர்கள் எல்லாம் 1 மாதம், 1 ½ மாதப் பயிர்களாக இருக்கின்றன. இன்னும் ஒரு மாதம் ஆனபிறகு அந்தப் பயிர்கள் எல்லாம் முழு அளவில் பலன் கொடுக்கின்ற நிலை வருகின்றசமயத்தில், அதிகமான அளவில் நெற்பயிர்கள் எல்லாம் சேதப்படுகின்றபோது-- விவசாயிகளுக்கு எல்லாம் பெரும் நஷ்டம் ஏற்படும். எனவே, அதற்கு உடனடியாக மின்வேலி அமைக்கின்ற ஒரு திட்டத்தைச் சொன்னார்கள். அந்த மின்வேலி அமைக்கின்ற திட்டத்தை உடனடியாக அரசு செய்யுமா? அப்படி அந்த மின்வேலி திட்டத்தை உடனடியாகச் செய்ய இயலவில்லை என்றால்,

வாகனங்களை வைத்து, அந்தப் பகுதியிலே இரவு முழுவதும் ரோந்துப் பணிகளைச் செய்தால், யானைகளினால் விளையும் சேதத்தைத் தடுக்கலாம். மேலும் கடந்த காலத்தில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை உடனடியாகக் கணக்கிட்டு, அந்தத் தொகையை விவசாயிகளுக்குக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெட்டல், சீராக்குளம், உலுப்படிப்பாறை, சேரன்மகாதேவி போன்ற இடங்களில் உள்ள விவசாயிகளின் நிலங்களில் காட்டுப் பன்றிகள் மற்றும் யானைகளால் ஏற்பட்டுவரும் சேதம் தொடர்பாக 27 மற்றும் 14 மனுக்கள் முறையே பெறப்பட்டுள்ளன. இந்தச் சேதத்தின் விளைவு பற்றி, காட்டுப் பன்றிகள் மற்றும் யானைகளால் ஏற்பட்ட சேதத்தின் அளவு பற்றி கிராம நிர்வாக அலுவலர் அவர்களால் தெரிவித்த தொகை 74,200 மற்றும் 4,200 ரூபாய் ஆகும். இந்தத் தொகைகள் விரைவில் வழங்கப்படும். மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, யானைகள் அதிகமாக வந்து தொந்தரவு செய்வதைத் தடுப்பதற்காக இப்போது மூன்றுவிதமான முறைகள் இந்த அரசால் கையாளப்படுகின்றன. ஒன்று, தடுப்புக் குழி வெட்டுதல்; இரண்டாவது, குறைந்த அளவு அழுத்த மின்வேலி அமைத்தல்; மூன்றாவதாக, பட்டாசு, தீப்பந்தம் மற்றும் தப்பட்டை அடித்து யானைகளை விரட்டுதல் போன்ற செயல்களை நாங்கள் செய்ய உள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்:

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் எத்தனை யானைகள் இருப்பதாகப் பட்டியல் எடுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, 1993-லே எடுத்த கணக்கின்படி, தமிழ்நாட்டில் 2200 யானைகள் இருப்பதாகக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. தற்போது, 1996-லே எடுத்த கணக்கின்படி, 2350 யானைகள் இருப்பதாகத் தெரிய வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 56, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**56--**

### பரமக்குடியில் வீட்டுவசதித் துறை வீடுகள்

*2119--**திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடியில் வீட்டுவசதித்துறையின் கீழ் நடப்பு நிதியாண்டில் வீடுகள் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகரம் வளர்ந்து வருகிற நகரம். நகராட்சி அந்தஸ்து பெற்றது. ஏற்கெனவே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டப்படும் என்று நாளிதழ்களில் விளம்பரம் செய்து, மறைந்த ஆட்சிக் காலத்திலே மனுக்கள் எல்லாம் பெறப்பட்டு, பணம் எல்லாம் வசூலிக்கப்பட்டுள்ளது. பரமக்குடியைப் பொறுத்த வரையில், அரசின் பல்வேறு அலுவலகங்கள் அங்கே உள்ளன. குறிப்பாக உதவி ஆட்சியர் அலுவலகம், நெடுஞ்சாலைத்துறையின் கோட்ட அலுவலகம், பொதுப்பணித் துறை அலுவலகம், வேளாண்மைப் பொறியியல் அலுவலகம், போன்ற பல்வேறுதரப்பட்ட அலுவலகங்கள் இருக்கின்றன. அங்கே பணிபுரிகின்ற அரசு ஊழியர்கள் அங்கு தங்குவதற்கு இடம் இல்லாத காரணத்தால், பரமக்குடியைத் தண்டனைப் பகுதியாகக் கருதி, மிக வெறுப்போடு பணியாற்றுகின்றனர். எனவே, இதை எல்லாம் கருத்தில் கொண்டு, மீண்டும் அரசு பரிசீலனை செய்து, அங்கே அரசுக் குடியிருப்புகளைக் கட்டித் தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1997 சனவரி 28

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பரமக்குடியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டுவதற்குத் தேவையான நிலம் கிடைக்கப்பெறாத காரணத்தால், எவ்விதத் திட்டத்தையும் செயல்படுத்த இயலவில்லை. 1989-90-ஆம் ஆண்டிலே தமிழ்நாடு அரசு அலுவலர் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 120 அடுக்குமாடி வீடுகள் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட போதிலும், அரசின் மூலம் நிலம் கிடைக்கப்பெறாத காரணத்தால்தான், அந்தத் திட்டத்தைக்கூட செயல்படுத்த இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 57, திரு. கே.சி. கணேசன், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**57--**

**சத்துணவு திட்டத்தில் பருப்பு வழங்குதல்**

*2074--**திரு. கே.சி. கணேசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சத்துணவுத் திட்டத்தில் சாம்பார் தயாரிக்க, தற்போது உபயோகிக்கும் சோயாமாவிற்குப் பதிலாக ஒரு குழந்தைக்கு 15 கிராம் பருப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சத்துணவுத் திட்டத்தில் சாம்பார் தயாரிக்க தற்போது உபயோகிக்கும் சோயாமாவிற்குப் பதில் ஒரு குழந்தைக்கு 15 கிராம் பருப்பு வழங்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-35

**திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் தலைவர், கலைஞர் ஆட்சியில், பிள்ளைகளுக்கு சத்துணவுத் திட்டத்தில் சாம்பார் தயாரிப்பதற்காகத் துவரம்பருப்பு



1997 சனவரி 28]

கொடுக்கப்பட்டது. இடையிலே ஏற்பட்ட ஆட்சியில், சிலருடைய நலனைக் கருதி, பேர்பாதி அளவிற்குத் துவரம்பருப்பும், பாதி அளவு சோயா மொச்சையும் சாம்பார் தயாரிக்கக் கொடுக்க ஆரம்பித்தார்கள். சத்துணவில் அந்த சாம்பார் தயாரிப்பதற்காக சோயா மொச்சையை யாரும் பயனபடுத்துவதில்லை. பிள்ளைகளும் அதைச் சாப்பிடுவதில்லை. ஆகவே, இந்த அரசாவது, திரும்பவும் முன்பு இருந்ததைப் போல, துவரம் பருப்பு கொடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியதைப் போல, பல்வேறு புகார்கள் வந்ததன் அடிப்படையில் சமூகநலத் துறை இயக்குநர் அவர்களை இதுசம்பந்தமாக ஒரு அறிக்கையை கேட்டதன் அடிப்படையிலே, சோயா மாவிற்குப் பதிலாக பருப்பு வழங்குகின்ற திட்டத்தை அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். தற்சமயம், அரசு, அதற்கு ஆகின்ற செலவு என்ன என்பதை ஆய்வு செய்ய உத்தரவிட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 58, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

**58--**

**இலவச காலணி வழங்குதல்**

*4376--**திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச காலணி வழங்கும் திட்டம் செயல்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மீண்டும் அத்திட்டம் செயல்படுத்தப்படும்?

**திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1997 சனவரி 28

(அ) ஆம். 1993-94-ஆம் ஆண்டிற்குப் பிறகு அந்தத் திட்டம் தொடரப்படவில்லை.

(ஆ) மீண்டும் இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் கருத்துரு பரிசிலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் குழந்தைகளுக்காக, 1-ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்பு வரை படிக்கக்கூடிய மாணவர்களுக்கு இலவச காலணி வழங்குகின்ற திட்டத்தை அரசு கொண்டுவந்து, 1992-ஆம் ஆண்டு கிட்டத்தட்ட ரூ. 177.50 இலட்சத்திற்கு தமிழ்நாடு காதி அண்டு வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் போர்டினுடைய உத்தரவின்படி, 9 கூட்டுறவு சொசைட்டிகளுக்கு பணத்தைக் கொடுத்திருக்கிறார்கள். பிறகு, 1993-ஆம் ஆண்டு ரூ. 159.75 இலட்சம், அதாவது 90 சதவீதம் அட்வான்சை அவர்கள் 9 சொசைட்டிகளுக்குக் கொடுத்து, அவர்களிடமிருந்து 80,000 செருப்புகள் மட்டும் வந்திருக்கின்றன. 10 லட்சம் செருப்புகளுக்கு 80,000 செருப்புகள் மட்டுமே வந்திருக்கின்றன. அந்த செருப்புகள் வழங்கும் திட்டமும் 1992-93-ஆம் ஆண்டிலிருந்தே செயல்படவில்லை என்று சி.ஏ.ஜி. ரிப்போர்ட் கூறுகிறது. அப்படியிருக்க, இப்படி பணத்தைச் செலவு செய்த, 'டால்கோ சேர்மன்' போன்றவர்கள் எல்லாம் இதிலே ஊழல் செய்தவர்கள் எல்லாம், இன்னும் வெளியிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது இன்னும் கையைக் கூட வைக்கவில்லை. இதிலே ஊழல் செய்த பணத்தைக் கைப்பற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? ஏற்கெனவே இலவசச் சீருடைகளை இந்த ஆண்டுகூட பிள்ளைகளுக்கு வழங்கவில்லை. எனவே, இந்தக் காலணித் திட்டத்தை அரசு பரிசீலித்து, மீண்டும் இந்தத் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச காலணிகள் வழங்கும் திட்டம் 1987-ஆம் ஆண்டு முதல் 1993-94-ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டு வந்தது. 1993-94-ஆம் ஆண்டு 32..5 லட்சம் காலணி இணைகள் தயாரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. சமூகநலத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 3 லட்சம் இணைகளும், தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனத்தின் சார்பாக 10 லட்சம் இணைகளும், கதர் கிராமத் தொழில் வாரிய கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 19.50 லட்சம் இணைகளும் தயாரித்து வழங்குவதற்காக அனுமதி வழங்கப்பட்டது. இவற்றில் சமூகநலத் துறையும், தோல் வளர்ச்சி நிறுவனமும் காலணிகளை முழுவதுமாகத் தயாரித்து வழங்கி விட்டார்கள். 19.50 லட்சம் இணைகள் காலணிகளைத் தயாரிப்பதற்காக முன்பணமாக 14 கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 1,73,06,250 வழங்கப்பட்டது. ஆனால், இவர்கள் 5,68,551 இணைகள் மட்டுமே தயாரித்து வழங்கியுள்ளார்கள். தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்ற முன் பணத்திற்கு ஈடாக, இன்னும் 4,05,903 இணைகள் தயாரித்து வழங்கவேண்டும். அவைகள் போலியான சங்கங்களாக இருக்கின்ற காரணத்தால், அவைகள் வழங்கப்படாமல் இருப்பதை அரசு உணர்ந்து, நடைபெற்ற முறைகேடுகள் குறித்து, விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்புத் துறையின் மூலமாக விசாரணை நடத்தி வருகிறார்கள். 1993-94-ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்பதை மீண்டும் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.



1997 சனவரி 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 59, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**59--**

## CULTIVATION OF ROSE FLOWERS

***223—Thiru B. Venkatasamy :**

Will the Hon. Minister for Adi Dravider and Tribal Welfare be pleased to state—

Whether there is any proposal to start an export veriety of Rose flowers cultivation through the Harijan Welfare Co-Operative Society in Hosur Taluk?

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓசூர் வட்டத்தில் ஆதிதிராவிடர் நல கூட்டுறவுச் சங்கம் என்று ஏதும் இல்லை. எனவே, இத்தகைய கருத்துரு ஏதும் இல்லை.

**Thiru B. Venkatasamy :** In Kamataka State, Adi-Dravida Societies have started producing roses to export to other Nations. There is lot of potential available in Hosur Taluk. Lot of private individuals have started growing roses in the Green Houses. I came to know that there is lot of money with the TAHDCO without being spent properly.

May I know from the Hon. Minister whether there is any proposal in the Adi-Dravida Welfare Department to start some Societies, so that, they can produce roses in Green Houses, so as to export them to other Nations?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கருத்து பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 60, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**60--**

### இறால் மீன் பதப்படுத்தும் நிலையம்

*1785--**திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினத்தில் இறால் மீன் பதப்படுத்தும் நிலையமும், குளிர் வைப்பறையும் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினத்தில் இறால் மீன் பதப்படுத்தும் நிலையமும், குளிர் வைப்பு நிலையமும் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் இல்லை.





**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகையில் நாகூர், பட்டினச்சேரி, சாத்தான்பேட்டை, கீச்சாங்குப்பம், அக்கரைப்பேட்டை, நம்பியார்நகர், செந்தூர் போன்ற பல மீனவக் குப்பங்கள் உள்ளன. இங்கே சுமார் 900 மீன் பிடி விசைப் படகுகள் உள்ளன. கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு 30 கோடி ரூபாய் அளவிற்கு இறால் மீன்கள் பிடிக்கப்பட்டு, அவை கேரள வியாபாரிகளால் வாங்கப்பட்டு, பதப்படுத்துவதற்கு அங்கே எடுத்துச் செல்லப்படுகின்றன. இங்கே குளிர் சாதன நிலையமும், இறால் மீன் பதப்படுத்தும் நிலையமும் நாம் அமைப்போமேயானால், இந்தத் திட்டம் லாபகரமாகவும், அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்புத் தரக்கூடிய அம்சமாகவும் இருக்கும் என்பதால், அரசு அதை அங்கே அமைக்க மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1992-ஆம் வருடம் அங்கே அரசால் ஏற்படுத்தப்பட்ட நிலையம் நஷ்டத்தில் நடைபெற்று வந்ததால், அதை எடுத்துவிட்டார்கள். ஆனால், தனியார், சிறப்பான முறையில் 15 நிலையங்களை நடத்தி வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மதிவாணன்.

**திரு. இரா. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுடைய சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்திற்கான நிதி, இந்த மாதம் முதல் மீனவர்களிடமிருந்து வசூலிக்கப்படும். ஆனால், இதுவரை அந்தத் திட்டம் துவங்கவில்லை. எனவே, உடனே துவங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத கேள்வி. இருந்தாலும், இதைக் கருணையுடன் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைத்தியலிங்கம்.

**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எத்தனை இடங்களில் இறால் மீன்

[1997 சனவரி 28

பதப்படுத்தும் நிலையமும், குளிர் வைப்பு நிலையமும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழும், மொத்தத்தில் 41 நிலையங்கள் இடம் பெற்றிருந்தன. அதில் 31 நிலையங்கள் கடற்கரைப் பகுதியில் இருந்தன. ஆனால், எல்லா நிலையங்களுமே நஷ்டத்தில் நடந்து கொண்டு இருந்ததால், தற்போது 11 நிலையங்கள் மட்டுமே இயங்கிக் கொண்டு வருகின்றன. அதிலும், இரண்டு நிலையங்கள் நஷ்டத்தில், பெரு நஷ்டத்தில் இயங்குவதால், அதையும் மூடுவதற்கு அரசு ஆவன செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர், தங்களுடைய பதிலிலே அரசால் நடத்தப்படும் பதப்படுத்தும் நிலையங்கள் நஷ்டத்தில் இயங்குவதாகவும், நாகைப் பகுதியிலே சுமார் 15 தனியார் நடத்தும் மீன் பதப்படுத்தும் நிலையங்கள் லாபத்தில் இயங்குவதாகவும் கூறினார்கள். அது ஏன்? அரசு நடத்தினால் மட்டும் அது ஏன் நஷ்டத்தில் இயங்குகிறது என்பதை அறிய விரும்புகிறேன்:

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

*(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)*



1997 சனவரி 28]

முற்பகல் 10-45

## 2. ஒழுங்குப் பிரச்சினை

### சட்ட அமைச்சர் அளித்த பதிலில் குறிப்பிட்ட வாசகங்களை மாற்றக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பக்கூடாது என்ற மரபுக்கு ஒப்ப, நான் அப்போது எழுப்பவில்லை. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் குற்றவியல் நீதி நிர்வாகத்தைக் குறித்து ஒரு பதில் சொல்லும்போது, வழக்கறிஞர்கள் வாய்தா கேட்பதனால் அந்த நீதி நிர்வாகம் பாதிக்கப்படுகிறது என்று பொருள்கொள்ளும் வகையில் பதிலுரைத்தார்கள். அவர்களே ஒரு சிறந்த வழக்கறிஞர். எனவே, இது தவறான கருத்தை உருவாக்கிவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் இந்த ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன். தயவுசெய்து இப்படி 'ஸ்வீப்பிங் ரிமார்க்ஸ்' செய்யக்கூடாது. அது வெளியிலே ஒரு மாதிரியான எண்ணத்தை உருவாக்கும். இங்கே இருக்கக்கூடிய வழக்கறிஞர் உறுப்பினர்கள்கூட கொஞ்சம் வருத்தத்தோடுதான் அமர்ந்திருக்கிறார்கள். எனவே, இதுகுறித்து ஒரு திருத்தத்தை அவர்களே தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் துறை அமைச்சர் சொன்னது வழக்குகள் தாமதமாவதற்கு, சில நேரங்களில் வழக்கறிஞர்கள் வாய்தா கேட்பதும் ஒரு காரணம் என்று சொன்னார்கள். இது எந்த வழக்கறிஞரையும் புண்படுத்துவதாக இல்லை. ஏனென்றால், சொன்னவரே ஒரு வழக்கறிஞர். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்துவிட்டார்கள்.

[1997 சனவரி 28

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தனியார் பண்டுவமனை நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பண்டுவமனை நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*



1997 சனவரி 28]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பண்டுவமனை நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

[1997 சனவரி 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஈ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



1997 சனவரி 28] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(உ) நகராட்சியல் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியல் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியல் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஊ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்த சட்டமுன்வடிவு, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 10-50

**(எ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. தகவல் கோரல்

**உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து**

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சிறப்புக்கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதைப்பற்றி கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத் தாங்கள் என்னுடைய அறையில் வந்து கேட்க வேண்டும். இங்கே கேட்கக் கூடாது. நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும். உட்காருங்கள்.

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம், திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக எனது கருத்துக்களைத் தெரிவிப்பதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

நன்றி தெரிவித்து விவாத உரையைத் துவக்குவதற்கு முன்பாக நம்மிடம் இருந்து மறைந்து சென்றிருக்கின்ற முன்னாள் ஆளுநர் மேதகு சென்னா ரெட்டி அவர்களுக்கு எங்களுடைய அஞ்சலியை இந்த இடத்தில் நான் நினைவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், திரு. சென்னா ரெட்டி அவர்கள் ஒரு வித்தியாசமான ஆளுநராக தமிழகத்தில் இருந்தார். அதிகாரத்தில் இருக்கின்றவர்கள் அதிகார மீறல்களைச் செய்கிற போது, அவர்களுக்கு எதிராக யாரும் வாய் திறப்பது கிடையாது. நாம் மகாபாரதக் காலத்திலே பார்த்தால்கூட, பாஞ்சாலி துகிலுரியப்பட்டபோது, பீஷ்மரிலிருந்து துரோணர் வரை எல்லோருமே அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தார்களே ஒழிய, அதற்கு நீதி வழங்க அவர்கள் தயாராக இல்லை. துரியோதனன் அதிகாரத்தில் இருந்ததுதான் அதற்குக் காரணம். ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையிலே கடந்த 5 ஆண்டு காலமாக நடைபெற்ற ஒரு இருண்ட ஆட்சியிலே நடைபெற்ற ஏராளமான முறைகேடுகளைக் கண்டித்து, பரமாத்மாவைப் போல அன்றைய ஆளுநர் சென்னா ரெட்டி அவர்கள் தமிழக மக்களுக்கு வழிகாட்டுவதற்குத் தயாராக இருந்தார்கள் என்பதை நான் இந்த இடத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே, அந்த வகையில் தமிழகத்தினுடைய ஒளி விளக்காகத் திகழ்ந்து, மறைந்த ஆளுநருக்கு தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாக எங்களுடைய அஞ்சலியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்வதிலே நான் அக்கறை காட்டுகிறேன்.

ஆளுநர் உரை என்பது அரசினுடைய கொள்கைகளை பிரதிபலிக்கின்ற ஒன்று. பல்வேறு சிறந்த அம்சங்களை ஆளுநர் உரை கொண்டிருக்கிறது. இருப்பினும் கூட, இலங்கைப்





பிரச்சினையிலே நமது அரசினுடைய தெளிவான நிலை என்ன என்பதை ஆளுநர் உரையில் என்னால் காண இயலவில்லை. மீனவர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பது எப்படி என்று ஆளுநர் உரையில் இருக்கிறதே ஒழிய, இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினையிலும், அது சம்பந்தமாக சமீபகாலங்களில் தமிழகத்தில் ஏற்பட்டு இருக்கின்ற சில பிரச்சாரங்கள் பற்றியும், தமிழக அரசினுடைய நிலை என்ன என்பது பற்றியும் ஆளுநர் உரையில் இடம் பெறவில்லை.

ஒருமுறை இந்தச் சட்டப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தில் இருக்கிற ஒரு சமுதாய சீர்திருத்தக் கட்சி, பிராமணர்களுடைய பூனூலை அறுக்கின்ற இயக்கத்தை ஆரம்பிக்கிறது. ஆனால், பிராமணர்கள் ஆட்சிக்கு வந்தால் அவர்களோடு கைகோர்த்துச் சென்று பிரச்சாரம் செய்கிறார்கள்' என்று ஒருமுறை சொன்னார்கள். அப்படி இருக்கிறவர்களுக்கு சமஸ்கிருதத்திலே பெயர் அஜாத சத்துரு என்று சொல்வார்கள். கூடவே இருந்து கொண்டு குழிபறிப்பவர்கள் என்று அதற்கு நாம் தமிழிலே பொருள் சொல்லலாம். இன்றைக்குகூட அப்படித்தான் ஒரு நிலை இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக வந்த பிறகு ஈழத் தமிழர்களுக்கு உதவி செய்வதாகக் கூறிக்கொண்டு சில அரசியல் இயக்கங்கள், வேறு சில சங்கங்கள் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக ஒரு பிரச்சாரத்தை தமிழக மண்ணிலே இன்றைக்கு ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள் என்பதை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இது அரசாங்கத்தினுடைய கவனத்தை எந்த அளவிற்கு ஈர்த்திருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. சமீபத்திலே ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான மாநாடு என்று ஒன்று சொல்லி, ஈழ அகதிகள் பிரச்சினையைப் பேசுவதைக் காட்டிலும், போராளிகளுக்கு எப்படி ஆதரவு கொடுக்கலாம் என்பதைப் பற்றிய ஒரு பெரிய பிரச்சாரம் அந்த மாநாட்டிலே நடைபெற்றது. அந்த மாநாடு துவங்குவதற்கு முன்பாக காவல் துறைத் தலைவரவர்கள் ஒரு அறிக்கை விட்டார். போராளிகளுக்கு ஆதரவாக யார் பேசினாலும், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார். ஆனால், அப்படிப் பேசியவர்கள் மிகமிக, நாம் எதிர்பார்த்ததைவிட (குறுக்கீடு)--நான் முடித்து விடுகிறேன். முடித்து விட்ட பிறகு சொல்லலாம். அப்படிப் பேசியவர்கள் நாம் எதிர்பார்த்ததைவிட--மிகக் கடுமையாகப் பேசி,

தனி ஈழத்தைப் பெற்றே தீர வேண்டுமென்று அவர்கள் சொல்லி ஒரு பிரிவினைவாதத்திற்கு அவர்கள் மாபெரும் ஆதரவு கொடுத்து, இராஜீவ் காந்தியைப் பற்றி மிகவும் கொடூரமாகப் பேசி, பல்வேறு விதமான தீர்மானங்களை இயற்றியும்கூட தமிழக அரசாங்கம் அப்படிப் பேசியவர்கள் யாரையும் உடனடியாகக் கைது செய்யவில்லை.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நம்முடைய நண்பர் திரு. அழகிரி அவர்கள் பேசுவது மாத்திரம் பத்திரிகையிலே வந்தால் அதுவே உண்மையாகிவிடும். அதனால் நான் குறுக்கிட்டு அவர்களுடைய பேச்சை வழிமறிப்பதற்கு மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அப்படி நடைபெற்ற ஒரு மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய இரண்டு பேர், குறிப்பாக ஈழத்திலே இருக்கிற தமிழர்களைப் பற்றி மாத்திரம் பேசப் போகிறோம் என்று சொல்லிவிட்டு, எல்.டி.டி.இ.-க்கு ஆதரவாகவும், இந்த அரசைக் கண்டித்தும், மத்திய அரசைக் கண்டித்தும் பேசிய இரண்டு பேரும், ஏற்கெனவே இருக்கின்ற எல்.டி.டி.இ.க்கான தடையை மீறிய அளவிற்குச் செயல்பட்டார்கள் என்ற சூழ்நிலையில், இரண்டு பேரும் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் நீதிமன்றத்தால் ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெயர் வேண்டுமானாலும் சொல்லத் தயாராக இருக்கிறேன்; சொல்லத் தேவையில்லை என்று கருதி, விடுகிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அவர்கள் கைது செய்யப்பட்டது கூட எப்படி நடைபெற்றது என்றால், ஒரு தவணை முறையிலே நடைபெற்றது. தமிழகத்திலே இருக்கின்ற பத்திரிகைகள் எல்லாம் தலையங்கம் எழுதி, பெரிய பிரச்சாரமாக அதை ஆக்கி, அரசாங்கத்தினுடைய நடவடிக்கை போதுமானதாக அதிலே இல்லை என்று சொன்னபிறகு, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்லிய இரண்டு பேர் கைது



செய்யப்பட்டார்கள். அது காலந்தாழ்ந்த ஒரு நடவடிக்கை என்பதுதான் பொதுவான கருத்து.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் விவரத்தைச் சொல்ல வேண்டும். மகாநாடு நடைபெற்ற தேதி எது, அவர்கள் கைது செய்யப்பட்ட தேதி எது என்பதைச் சொன்னால், அது காலந்தாழ்ந்த நடவடிக்கையா அல்லாவா என்பது தெரியும்.

இன்னொன்றுகூடச் சொல்ல விரும்புகிறேன். இன்னொரு மாநாடு, நண்பர் நெடுமாறன் அவர்கள் முன்னின்று நடத்துகின்ற மாநாடு, பெங்களூரில் நடைபெற்றிருக்கின்றது. கர்நாடக மாநில அரசு அதற்கு அனுமதி கொடுத்துவிட்டது. ஆனால், அனுமதி பெற்று ஒரு ஹாலில் நடைபெற்ற அந்த மாநாட்டில் மிகத் தீவிரமான பேச்செல்லாம் அவர்கள் பேசி, எல்.டி.டி.இ.க்கு ஆதரவாகப் பேசி, மத்திய அரசு, மாநில அரசைப் பற்றி, தமிழ்நாட்டு அரசைப் பற்றியும், குறிப்பாக என்னைப் பற்றியும்கூட கடுமையான விமர்சனங்களெல்லாம் அவர்கள் செய்திருக்கிறார்கள். அவைகளெல்லாம் பத்திரிகையிலே வந்த அந்தச் சூழ்நிலையில், அதே நண்பர்கள் மதுரையிலே ஒரு மாநாடு நடத்தத் தேதி கேட்டிருந்தார்கள். ஏற்கெனவே தேதி கொடுக்கப்பட்டிருந்தது. பெங்களூரிலே நடைபெற்ற மாநாட்டிலே பேசிய பேச்சுக்கள் பத்திரிக்கையிலே வந்த பிறகு இந்த அனுமதியும் ரத்து செய்யப்பட்டு விட்டது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்தில் இலங்கையிலே இருக்கிற தீவிரவாதிகளுக்கு தமிழகத்திலும் சரி, இந்தியாவிலும் சரி, இருக்கின்ற எல்லா அரசியல் கட்சிகளும், ஆதரவு அளித்து வந்தார்கள். உதாரணமாக, இந்திராகாந்தி அவர்கள் பிரதமராக இருந்தபொழுது சில முகாம்கள்கூட அவர்களுக்காக நடத்தப்பட்டது.

அப்பொழுது ஏன் அந்த உதவி செய்யப்பட்டது என்றால், இலங்கையிலே இருக்கிற ஈழத் தமிழர்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்கின்ற தாயுள்ளத்தோடு அந்த நிகழ்ச்சியை நாம் நடத்தினோம். இன்றைக்கிருக்கிற மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதிலே தீவிரமான பங்கெடுத்துக்

கொண்டார்கள்; இந்திராகாந்தி பங்கெடுத்துக் கொண்டார்கள்; அன்றைக்கிருந்த எம்.ஜி.ஆர். பங்கெடுத்துக் கொண்டார்கள்.

ஆனால் அவர்களுடைய நடவடிக்கைகள், நம்முடைய சொந்த தேசத்திற்கே எதிரானதாகத் திரும்பியபிறகு, நம்முடைய ஐக்கியத்திற்கும், ஒற்றுமைக்கும் அது பாதுகாப்பு அளிக்க இயலாத ஒரு சூழ்நிலைக்குப் போன பிறகு, அந்தத் தீவிரவாதம் என்பது எந்தவொரு இலட்சியத்தின் அடிப்படையிலும் இல்லாத ஒரு நிலைக்கு வந்த பிறகு, ஈழத் தமிழர்களுடைய பிரச்சினையைக் காட்டிலும், அங்கிருக்கிற போராளிகளில், யாருடைய தலைக்கு முடி சூடிக் கொள்வது என்கின்ற பிரச்சினை அங்கே எழுந்த பிறகு, சகோதர யுத்தம் என்கின்ற ஒரு அழகான பெயரிலே நல்ல இளைஞர்களையெல்லாம் அவர்கள் கொன்று குவித்த பிறகு, ஜனநாயக நாடான இந்தியா எந்த ஒரு போராளிக் குழுவிற்கும் முடி சூட்ட இயலாத சூழ்நிலை ஏற்பட்ட பிறகுதான் இந்தியாவில் இருக்கின்ற அரசியல் கட்சிகள் எல்லாம் தங்களுடைய நிலையை மாற்றிக் கொண்டன. அப்படி மாற்றிக் கொண்ட பிறகு இலங்கையினுடைய அயல்நாட்டுப் பிரச்சினையில் மத்திய அரசாங்கத்தினுடைய நிலை என்னவோ அதுதான் தமிழக அரசினுடைய நிலையும். ஆனால், இன்றைக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அவர்கள் பத்திரிகையாளர்களிடையே பேசியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கையோடு மாநில அரசாங்கம் இலங்கைப் பிரச்சினையிலே இணங்கிப் போகிறதா என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். எனவே, இந்த மன்றத்தின் மூலமாக முதலமைச்சர் அவர்கள் தெளிவாக ஒரு விளக்கம் அளிக்க வேண்டும். இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசாங்கத்தினுடைய நிலை என்னவோ அதுதான் மாநில அரசாங்கத்தினுடைய கொள்கையும். நாம் அதிலே மாறுபட்டுவிட முடியாது. இதுவரை மாறுபடவுமில்லை.

முற்பகல் 11-00

எனவே, அந்த வகையிலே ஈழப் பிரச்சினை என்று வருகிறபோது, ஈழத் தமிழர்களுக்கு நாம் கொடுக்கின்ற ஆதரவு வேறு, அதற்காக அங்கே இருக்கின்ற போராளிக் குழுக்களை நாம் அங்கீகரிக்கவும் முடியாது. ஆதரிக்கவும் முடியாது என்பதனை தமிழக அரசாங்கம் தன்னுடைய கொள்கையாக இங்கே விளக்க வேண்டும். மேலும் விளக்க வேண்டும், அழுத்தமாக விளக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நண்பர் அழகிரிக்காக வேண்டுமானால் இன்னொரு முறை விளக்குகிறேன். அதை உறுதிப்படுத்துகிறேன். அண்மையில், டெல்லியில் நடந்து கொண்டிருக்கின்ற ஜெயின் கமிஷனில், விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அழகிரி என்ன கருத்தைச் சொன்னாரோ அதே கருத்து அங்கே கூறப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல, அண்மையில் நிருபர்கள் என்னைக் கேள்வி கேட்டபோதுகூட இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் மத்திய அரசு நிலைதான் மாநில அரசு நிலை என்று நான் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினை வேறு, அங்கே இருக்கக்கூடிய விடுதலைப் புலிகள் பிரச்சினை வேறு. இதை இந்த அவையிலே நான் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தீரன்.

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ ஈழப் போராளிகளுக்கு ஆதரவாக ஒரு மாநாடு நடைபெறுவதாக குறிப்பிட்டுச் சொன்னது எங்களுடைய இயக்கத்தை மனதில் வைத்துத்தான் அவர் சொல்கிறார் என்று நான் கருதுகிறேன். ஏற்கெனவே நடந்த அரங்க மாநாடும் ஈழத் தமிழர்களுக்குப் பாதுகாப்பு வேண்டி நடைபெற்று இருக்கிற ஒரு மாநாடே தவிர எந்த ஒரு போராளிக் குழுவிற்கும் ஆதரவாக நடத்தப்பட்ட ஒரு மாநாடல்ல என்பதைத் தீர்மானத்தின் வாயிலாகவும், எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே கலந்து கொண்டவர்களுடைய உரைகளின் வாயிலாகவும் நாங்கள் ஒலி, ஒளி நாடாக்களின் வாயிலாக ஆதாரத்தோடு எடுத்து வைத்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால் அவர்களுக்கு அதைப் போட்டுக் காட்டவும் அல்லது தரவும் தயாராக இருக்கிறோம். எனவே, தவறான தகவலை, ஏதோ ஒரு போராளிக் குழுவிற்கு ஆதரவாக நடத்தப்பட்ட மாநாடாக அதை தயவுசெய்து கருத வேண்டாமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். பலதரப்பட்டவர்களையும் நாங்கள் அழைத்தோம். அதிலே, ஆதரவாளர்களிலே சில பேர் கொஞ்சம் வரம்பு மீறிப் பேசினார்கள். அந்த வரம்பு மீறிப் பேசியவர்களையும் அந்த மாநாட்டிலே கண்டித்தோம்.

எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் அவர்கள் இறுதியாக உரையாற்றுகிறபோது அதற்கு மறுப்புத் தெரிவித்து விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல, இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே நடைபெறுகின்ற இந்த ஆட்சியும் தயவுதாட்சண்யம் இல்லாமல், பாரபட்சம் இல்லாமல் முறையாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்றையும் நான் பணிவன்புடன் சொல்லிக் கொள்கிறேன். படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோவிலாக இருக்கக் கூடாது என்பதற்காக, தமிழ் மாநில காங்கிரசாக நீங்கள் இன்றைக்கு உருமாறியிருக்கிற இந்த நேரத்தில் உங்களைப் பணிவன்போடு, பாதம் தொட்டு வேண்டிக் கேட்டுக் கொள்வதெல்லாம், 7 இலட்சம் தமிழர்கள் இன்றைக்கு அந்தக் காடுகளில் உண்ண உணவு இன்றி, மருந்து இன்றி, தொற்று நோய்களாலும் குளிராலும் வாடிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எந்தப் போர்வையிலும் மாநாடு நடத்த விரும்பவில்லை. எந்தப் போர்வையாக இருந்தாலும் அந்த ஈழத் தமிழர்களுக்கு நீங்கள் அனுப்பி வைத்தால் கடும் குளிரிலே வாழக்கூடிய அந்த மக்களுக்கு ஒரு பாதுகாப்பாக, ஒரு உதவியாக இருக்கும் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே, இனி 1-ஆம் தேதி நடத்த இருக்கக்கூடிய அந்த மாநாடுகூட முழுக்க முழுக்க உலக அளவிலேயிருந்தும், அகில இந்திய அளவிலேயிருந்தும் வந்து கலந்து கொள்ள இருக்கின்ற தலைவர்களிடம் கூட நாங்கள் இதைத்தான் சொல்லியிருக்கிறோம். ஈழத் தமிழர்களுடைய பிரச்சினைக்காக மட்டும்தான் நாங்கள் மாநாடு நடத்துகிறோம். எந்தப் போராளிக் குழுக்களுக்கும் ஆதரவாக நாங்கள் நடத்தவில்லை, அந்த அவசியமும் இல்லை. அதே நேரத்திலே இந்தப்போராளிகளுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று சொல்லி யாராவது கருத்து சொல்வார்களேயானால் அதற்கு நாங்கள் பொறுப்பேற்க முடியாது என்பதையும் நாங்கள் தெளிவுபடுத்தி இருக்கிறோம். எனவே, மெத்தப் பணிவோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்வதெல்லாம் நாங்கள் சட்ட வரம்பிற்குட்பட்டுத்தான் இந்த மாநாட்டை நடத்த இருக்கிறோம். எந்தப் போராளிக் குழுக்களுக்கும், மீண்டும் மீண்டும் சொல்கின்றேன், ஆதரவாக இந்த மாநாடு நடத்தப்படவில்லை. அனாதைகள் ஆகிக்



கொண்டிருக்கின்ற ஈழத் தமிழர்களுக்காகத்தான் இந்த மாநாடு நடத்தப்படுகின்றது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசுகிறார், அவர் பதில் சொல்லிக் கொள்வார். (குறுக்கீடு) இல்லை. அவர் உங்கள் கட்சி உறுப்பினர், அவரே பதில் சொல்லட்டும். திரு. ச. அழகிரி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) விவாதம் நீண்டு கொண்டே போகும். திரு. ச. அழகிரி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் திரு. அழகிரியைத்தான் அழைத்தேன். திரு. இரா. தாமரைக்கனி, நீங்கள் உட்காருங்கள்.

***திரு. இரா. தாமரைக்கனி:** எனக்கு ஏன் பேச வாய்ப்புக் கொடுக்கமாட்டேன் என்கிறீர்கள்? ஆதரவாகப் பேசினால்தான் சான்ஸ் கொடுப்பீர்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மாதிரியெல்லாம் உள்நோக்கம் கற்பித்துப் பேசக்கூடாது. (குறுக்கீடு) சரி, திரு. இரா. தாமரைக்கனி, பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழு இலட்சம் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக மகாநாடு நடத்துகிறோம் என்று சொல்லி, அது விடுதலைப் புலிகளின் ஊடுருவலுக்கு ஏதுவாக அமையும். ஆகவே, அந்த மாநாட்டைத் தடை செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழிலே ஒரு பழமொழி சொல்வார்கள், "பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது" என்று. அந்தப் பழமொழிக்கு ஏற்ப, என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு தீரன் அவர்கள் வெளியே வந்து தன்னுடைய கருத்தைச் சொல்கிறார். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏழு இலட்சம் ஈழத் தமிழர்களுக்காக, தமிழகத்திலே, பாட்டாளி மக்கள் கட்சி மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து ஆரம்பித்து, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியிலேயிருந்து ஆரம்பித்து, தமிழகத்திலே இருக்கிற எல்லா அரசியல் கட்சிகளும் எதையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக அனுப்பப்பட்ட போர்வைகள் ஈழத் தமிழர்களுக்குச் செல்லவிடாமல், இடையிலேயே போராளிகள் அவற்றைப் பறித்துக்கொண்டுப் போகிறார்கள் என்கிற காரணத்தினால்தான், செஞ்சிலுவைச் சங்கமே அவற்றை அனுப்பவில்லையேயொழிய (குறுக்கீடு) நான் பேசி முடித்து விடுகிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தீரன், அவர்கள் பேசி முடித்துவிடட்டும் (குறுக்கீடு) திரு. தீரன், பேசுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகள் வாயிலாகத் தெளிவாகச் செய்திகள் வந்திருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம், இன்னொரு இயக்கம், பாட்டாளி மக்கள் கட்சி போன்ற இயக்கங்கள் எல்லாம் மருந்துகளைச் சேகரித்து அனுப்பியிருக்கின்றன; நிதியுதவி செய்திருக்கின்றன; இரத்தம்கூட அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் அவைகள் எல்லாம் எங்கேயோ போய் இருக்கின்றன என்பதைப் பத்திரிகைகள் தெளிவுபடுத்தியிருக்கின்றன. அவற்றை உரியவர்களுக்கு, அதாவது அகதிகளாக உள்ள மக்களுக்கோ அலலது வேறு எந்தத் தமிழ் மக்களுக்கோ செல்லாமல் அவை முழுவதையும் அரசாங்கமும், இராணுவமும் பயன்படுத்தியிருப்பதாகத்தான் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டிருக்கின்றன. அதை ஆதாரப்பூர்வமாக உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரத் தயாராக இருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டுவிதமான செய்திகள் அதிலே வந்திருக்கின்றன. நாம் அனுப்புகின்ற பொருட்களில் ஒரு பகுதியை இராணுவம் அபகரித்துக்கொள்கிறது; இன்னொரு பகுதியை விடுதலைப் புலிகள் அபகரித்துக் கொள்கிறார்கள். அவை ஈழத் தமிழர்களுக்குச் சென்று சேர்வதில்லை. எனவேதான், ஜெனிவாவிலே இருக்கிற செஞ்சிலுவைச் சங்கம் அவற்றை யாருக்கு அனுப்புவது என்று தெரியாமல், யாரிடம் அவற்றை விநியோகிப்பது என்று தெரியாமல் அவர்களுடைய கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்கிறார்கள்.

இரண்டாவதாக, இன்றைக்குப் பாட்டாளி மக்கள் கட்சி ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான ஒரு மாநாட்டைக் கூட்டுவதாகச் சொல்லி, பாரதீய ஜனதா கட்சியை அழைத்திருக்கிறார்கள். நான் அதனை வரவேற்கிறேன். ஒரு அகில இந்தியக் கண்ணோட்டம் ஏற்பட்டிருப்பதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், உங்களை நான் வேறு ஒன்றும் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். நீங்கள் டெல்லியிலே இருக்கிற திரு. அத்வானியை அழைத்திருக்கிறீர்களே? ஏன், தமிழகத்திலே இருக்கிற கலைஞர், ஈழத் தமிழ் அகதிகளுக்கு ஆதரவாக இல்லையா? தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி ஈழத் தமிழ் அகதிகளுக்கு ஆதரவாக இல்லையா? தமிழகத்திலே இருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி ஈழத் தமிழ் அகதிகளுக்கு ஆதரவாக இல்லையா? இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஈழத் தமிழ் அகதிகளுக்கு ஆதரவாக இல்லையா? அல்லது இங்கேயிருக்கிற வேறு அரசியல் இயங்கங்கள் எதுவும் ஈழத் தமிழ் அகதிகளுக்கு ஆதரவாக இல்லையா? அருமை அண்ணன் திரு. லத்தீப் அவர்களுடைய கட்சி ஈழத் தமிழ் அகதிகளுக்கு ஆதரவாக இல்லையா? தமிழகத்திலே எந்த அரசியல் கட்சி ஈழத் தமிழர்களுடைய பிரச்சினையிலே பின்னோக்கிச் சென்றிருக்கிறது? (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். எல்லோரும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகத்தான் இருக்கிறார்கள். ஆனால், தமிழகத்திலேயிருக்கிற ஈழத் தமிழ் ஆதரவாளர்களை எல்லாம் கைவிட்டுவிட்டு, டெல்லியிலேயிருக்கிற பாரதீய ஜனதாக் கட்சியைக் கொண்டு வந்து ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நாங்கள் ஒரு மாநாடு நடத்துகிறோம் என்று சொன்னால், அதுவும் ஒரு மதவாதக் கட்சியைக் கொண்டு வந்து நீங்கள் ஒரு மாநாட்டை நடத்துவதாகச் சொன்னால், உங்களைப்

பார்த்துச் சொல்கிறேன், இது ஈழத் தமிழர்களுக்காக நடத்தப்படுகின்ற மாநாடும் அல்ல, ஈழத் தமிழ் அகதிகளுக்காக நடத்தப்படுகின்ற மாநாடும் அல்ல, மாறாக விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு திரட்டுவதற்காக நீங்கள் செய்கின்ற ஒரு முயற்சி என்கின்ற ஒரு குற்றச்சாட்டை நான் உங்கள் மீது சுமத்த விரும்புகிறேன். ஏனென்றால், இந்தப் பிரச்சினையைப் பற்றி நானும் பேராசிரியர் தீரன் அவர்களும் கன்னியாகுமரியிலேயிருந்து சென்னை வரை பேசி வந்திருக்கிறோம். அதன்பிறகு, சென்னையிலேயிருந்து கல்கத்தா வரை பேசியிருக்கிறோம். அதன் பிறகு, கல்கத்தாவிலிருந்து மணிப்பூர் வரை பேசியிருக்கிறோம். இது அவைக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் நாம் பேசுகிறோம்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஆக, எங்கே பேசினாலும் முடிவு ஏற்படாது என்று தெரிகிறது. ஆகவே, ஒருவர் மாத்திரம் பேசினால் போதுமானது என்று கருதுகிறேன். (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேலாயுதன், உட்காருங்கள். அடுத்து பேச வாய்ப்பு கிடைக்கும்போது நீங்கள் பேசலாம். உட்காருங்கள். திரு. அழகிரி, பேசுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அழகிரி இருங்கள். திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. அழகிரி அவர்கள் பாரதீய ஜனதா கட்சியைப் பார்த்து மதவாதக் கட்சி என்று பேசினார்கள். பாரதீய ஜனதா கட்சி மட்டும்தான் இந்த நாட்டில் ஒரே சிவில் சட்டம் இருக்க வேண்டுமென்று கேட்கிறது. மதத்திற்கு ஒரு சட்டம் கூடாது என்று பேசக்கூடிய பாரதீய ஜனதாக் கட்சி, மதவாதக் கட்சி அல்ல. இந்த நாட்டில் மதத்தின் அடிப்படையில் சட்டங்கள் இருக்கின்றன. இது தவறு என்று பி.ஜே.பி. சொல்கின்றது. ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே சட்டம் என்ற அடிப்படையில் இந்த



நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றாகக் காணக்கூடிய ஒரே கட்சி, பாரதீய ஜனதாக் கட்சி. எனவே, பாரதீய ஜனதாக் கட்சி மட்டும்தான் மதவாதக் கட்சி அல்ல என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே எங்கள் இயக்கத்தின்மீது ஒரு குற்றச்சாட்டை சுமத்தியிருக்கிறார்கள். ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டுக்கு இங்குள்ள அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு அனுப்பவில்லை என்றதொரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் 52 அமைப்புகளுக்கு, இயக்கங்களுக்கு அழைப்புகளை அனுப்பியிருக்கிறோம். அதிலே, நீங்கள் வந்து கலந்துகொள்ள வேண்டும்; ஈழத் தமிழர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வாக உங்களுடைய கருத்துக்களை முன்வைக்க வேண்டும் என்று சொல்லி, 52 அமைப்புகளுக்கு நாங்கள் அழைப்புகளை அனுப்பி வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர், நம்முடைய தேசீய லீக் தலைவர் திரு. லத்தீப் அவர்களிடமும் நாங்கள் பேசியிருக்கிறோம். அவர்கள்கூட கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, எல்லா இயக்கங்களுக்கும் நாங்கள் அழைப்பு அனுப்பியிருக்கிறோம். இதிலே விருப்பம் தெரிவித்து, கலந்துகொள்கிறவர்கள் மட்டும் அந்த நிகழ்ச்சியிலே பங்கேற்பதாக இருக்கிறார்கள். இங்கே பி.ஜே.பி.-ஐ. அழைத்து நாங்கள் ஏதோ புதிய திறவுகோலுக்கு வழிவகுப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். 'இந்து' பத்திரிகையில் வந்த செய்தியை நான் அவர்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

'although the party is politically opposed to B.J.P., claims to have secular credentials, invitations for the Conference circulated to various political parties make a mention of the killings of a large number of Hindu Tamils in Sri Lanka' என்ற செய்தியைப் போட்டிருக்கிறார்கள். ஆக, நாங்கள் பாரதீய ஜனதாக் கட்சியினுடைய கொள்கைக்கு நேர்

எதிரானவர்கள். இது அந்த இயக்கத்தவருக்கும் தெரியும், அகில உலகத்திற்கும் தெரியும். எனவே, நாங்கள் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்ததன் நோக்கம் என்னவென்று சொன்னால், இந்தப் பிரச்சினைக்கு ஒட்டுமொத்தமாகத் தீர்வு காணவேண்டும். ஏனென்றால், இந்தியாவினுடைய ஒற்றுமைக்கு இதிலே பாதிப்பு வருகிறது என்பதை நாங்கள் மேலை நாடுகளுக்குச் சென்றபோது, அங்குள்ள பலரும் இந்தக் கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். இதை நான் என்னுடைய உரையிலே சொல்ல இருக்கிறேன். எனவே, அந்தமாதிரி ஒரு அச்சுறுத்தல் இருக்கிற காரணத்தால்தான் மற்ற நாடுகள் இந்தப் பிரச்சினையில் தலையிடுவதைவிட, உடனடியாக இந்தியா தலையிட வேண்டும் என்பதை வலியுறுத்தத்தான் இந்த மாநாட்டை நடத்துகின்றோம். எந்தவொரு இயக்கத்திற்கும் ஆதரவாக, எந்தவொரு போராளிக் குழுவுக்கும் ஆதரவாக இந்த மாநாடு நடத்தப்படவில்லை என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈழ அணி அகதிகளுக்கு அல்லது ஈழத் தமிழருக்கு ஆதரவாக மாநாட்டை நடத்துவதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து கிடையாது. இந்திய அரசாங்கம் இதிலே நேரடியாகத்தலையிட வேண்டுமென்றால், அங்கே யாருக்கும் முடி சூட்டுகின்ற காவலராக இந்திய அரசாங்கம் செல்ல முடியாது. எப்படி இந்தியாவினுடைய இறையாண்மையை ஏற்றுக்கொண்டு, தமிழகத்திலே தமிழர்கள் தலைமை தாங்குகிற கட்சிகள் தேர்தலில் போட்டுயிட்டு வெற்றி பெற்று இன்றைக்கு முதலமைச்சராக வந்து அமர்ந்திருக்கிறார்களோ அதுபோல, இலங்கையிலும் அங்கிருக்கிற தமிழர்கள் அந்த தேசத்தினுடைய இறையாண்மையை ஏற்றுக்கொண்டு அந்தத் தேர்தலில் போட்டியிட்டு ஈழத் தமிழ் மாநிலத்தினுடைய தலைவர்களாக வந்து அமர்வதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஒரு காலத்திலே வட நாட்டிலிருந்துதான் இந்திய நாட்டுக்கு பிரதமராக வர முடியும் என்ற சூழ்நிலை இருந்தது. ஆனால், இன்றைக்கு வேட்டி கட்டிய தமிழர்கள் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட முடியும் என்ற அளவிற்கு அரசியல் சூழ்நிலை மாறி இருப்பதை மனதிலே வைத்து (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. தீரன் அவர்கள் இயக்கத்திலே இருக்கின்ற தன்னுடைய தீவிரவாத, போராளி நண்பர்களுக்கும் இந்த ஆலோசனையை வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், இரண்டாயிரம் ஆண்டு



காலமாக இஸ்ரேலிலே நடைபெற்ற இஸ்ரேலியர்-பாலஸ்தீனியர்கள் சண்டைகூட இப்போது பேச்சு வார்த்தை மூலமாகத்தான் தீர்க்கப்பட்டிருக்கிறது; துப்பாக்கி முனை மூலமாகத் தீர்க்கப்படவில்லை என்பதை நான் உங்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். 96 அமைப்புகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். தமிழகத்திலே இருக்கிற அமைப்புகளிலே பெரிய அமைப்புகள் 4. திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள், தமிழ் மாநிலக் காஙகிரஸ். என்னை அழைத்தால் நான் வந்து பேசுகிறேன். நீங்கள் பாதுகாப்பு தர வேண்டும். அடிக்க மாட்டேன் என்ற உத்தரவாதம் கொடுப்பீர்களேயானால் (சிரிப்பு) நானே வந்து பேசுகிறேன். எனக்கு ஒன்றும் அதிலே மாற்றுக் கருத்து கிடையாது. எனவே அந்தப் பிரச்சினையை அதோடு விட்டு விட்டு காவிரிப் பிரச்சினையிலே (குறுக்கீடு) இல்லை, நான் பேசி முடித்து விடுகிறேன். (குறுக்கீடு) தயவு செய்து இருங்கள், நான் பேசி முடித்து விடுகிறேன்.

முற்பகல் 11-15

காவிரிப் பிரச்சினையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தீர்க்கமான முடிவெடுத்து நல்ல திசையிலே சென்று கொண்டிருந்தார்கள். சில பத்திரிகைகள், சில அரசியல் கட்சிகள் கூடச் சொன்னார்கள்; கர்நாடகத்திற்கும், தமிழகத்திற்கும் பேச்சு வார்த்தை என்ன நடைபெற்றிருக்கிறது; ஏன் இரகசியமாக வைத்திருக்கிறார்கள்; ஏன் வெளியே சொல்லவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். சிலவற்றை வெளியிலே சொன்னால் பேச்சு வார்த்தைக்கு அது பாதகமாக போய் விடுமென்ற காரணத்தால், பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற காரணத்தால், நல்ல நோக்கத்தோடு நம்முடைய முதலமைச்சர் பேச்சு வார்த்தையிலே இறங்கினார்கள். உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கூறியிருந்தது, பிரதமரே தலையிட்டு இரண்டு மாநிலங்களுடன் பேசி, பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொல்லி இருந்தார்கள். அதற்கேற்ப நாம் பேசினோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட ஒரு பத்திரிகையாளர் பேட்டியிலே சொல்கிறபோது சொன்னார்கள். நானும், கர்நாடக முதலமைச்சரும் ரயில் பாதையைப் போல, ரயில்வே டிராக் போல இரண்டுபேரும் இணைந்து சென்று கொண்டிருக்கிறோம். ரயில்வே

பாதை ரயில் டிராக்கில் இரண்டு பாதைகள் சரியாக இருந்தால்தான் ரயில் வண்டி அதிலே ஓடும் என்று அழகாகச் சொன்னார்கள். ஆனால், எனக்கு ஒரு சந்தேகம். இந்த அளவுக்கு இணக்கமாகச் சென்று கொண்டிருந்த இரண்டு முதலமைச்சர்களுடைய பேச்சு முடிவிலே தோல்வியடையக் காரணம் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன். எனக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், எனக்கு இருக்கிற சந்தேகத்தின் பிரகாரம், இந்த பேச்சு வார்த்தை தோல்வி அடைந்ததற்குக் காரணமே நம்முடைய பிரதமர் தான் என்று நான் கேள்விப்படுகிறேன்.

ஒரு தேசத்தினுடைய பிரதமர் இரண்டு மாநிலத்திற்கிடையே பிரச்சினை எழுகிறபோது அதைத் தீர்த்து வைக்க அவர்களால் இயலவில்லையென்றாலும் கூட, குறைந்தபட்சம் அவர் ஒதுங்கியாவது இருக்கலாம். இன்றைக்கு அரசியல் அதிகாரம் நம்முடைய கையிலே இருக்கிறது. எனவே, அரசியல் அதிகாரத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் பிரயோகித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு நாம் ஆதரவு அளிக்கவில்லையென்றால் டெல்லியிலே ஆட்சி இருக்காது. ஆனால், நம்முடைய நியாயமான கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுகின்றன.

காவிரியைப் பொறுத்தவரை, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தமும் சரி, முந்தைய ஆண்டு ஒப்பந்தமும் சரி, நமக்குப் பாதுகாப்பாக இருந்தன. அன்றைக்கிருந்த பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள், 1974-ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரைக் கூப்பிட்டு, நீதிமன்றத்திலே நீங்கள் தொடுத்திருக்கிற வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ளுங்கள், நான் தேவராஜ் அர்ஸ் அவர்களோடு பேசி ஒரு சமாதானம் செய்து வைக்கிறேன் என்று சொன்ன ஒரு நல்ல நோக்கத்தை நம்பி--உண்மையிலேயே நல்ல நோக்கம்தான், இந்திரா காந்தி அம்மையார் நல்ல நோக்கத்தோடுதான் சொன்னார்கள்--அன்றைக்கு இருந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நல்ல நோக்கத்தோடு அதனை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், அதற்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் சதுரங்கத்திலே நாம் ஏமாற்றப்பட்டோம், அல்லது தோற்கடிக்கப்பட்டோம். நம்முடைய உரிமைகள் மீறப்பட்டுவிட்டன, இதுவரை நம்முடைய உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை. நடுவர் மன்றம் சொன்னார்கள், ஏற்றுக்கொண்டோம். ஆனால், நடுவர்



மன்றம் சொன்ன தீர்ப்பை கர்நாடகம் ஏற்க மறுக்கிறது. உச்ச நீதிமன்றம் பிரதமருக்கு கட்டளையிட்டது, ஆலோசனை சொன்னது. இரண்டு முதலமைச்சர்களுடன் பேசி சமாதானம் செய்யுங்கள் எனறு உச்ச நீதிமன்றம் சொன்னது. நாம் ஏற்றுக்கொண்டோம். பேச்சுவார்த்தைக்கு போனோம். ஆனால், அதிலும் நமக்குத் தோல்விதான். ஆகவே, எந்த வழியின் மூலமாக, எந்த அரங்கத்தின் மூலமாக இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது என்பதுதான் இன்றைக்கு தமிழர்கள் முன் உள்ள மிகப் பெரிய சவால். ஆனால், நமக்குக் கிடைத்திருக்கிற தகவலின்படி, இந்த தேசத்தினுடைய பிரதம அமைச்சரே ஒரு மாநிலத்திற்கு ஆதரவாக இருக்கிறாரேயொழிய, ஒரு தேசத்திற்கு ஆதரவாக இல்லை. ஒரு தேசத்திற்குப் பிரதமராக இல்லை என்றே நமக்குத் தெரிகிறது. எனவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்களும், தலைவர் மூப்பனார் அவர்களும் சேர்ந்து தேசிய முன்னணிக்கு அளிக்கின்ற ஆதரவை வாபஸ் பெற்றுக்கொள்ளவில்லையென்றாலும் கூட குறைந்தபட்சம் இந்த பிரதமருக்கு அளித்துக் கொண்டிருக்கின்ற ஆதரவையாவது நீங்கள் திரும்பப் பெறுகிற ஒரு முயற்சியை மேற்கொள்வீர்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் அப்போதுதான் காவிரிப் பிரச்சினையிலே ஒரு தீர்க்கமான முடிவு வரும் என்று நான் நினைக்கிறேன். இந்தக் கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்ததாக, விலைவாசி உயர்வு. ஆளுநர் உரையிலே விலைவாசி விஷம் போல் ஏறியிருப்பதனை...

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவா:** எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள்? இப்பொழுதே அரைமணி நேரம் ஆகிவிட்டது. சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

***Thiru B. Venkatasamy:** Sir, On a point of information, may I know from the Hon. Member, whether Thiru Moopanar is going to withdraw his support to the prime Minister?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பேரவையிலே ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலே, தமிழகத்தினுடைய நலனிலே அக்கறையுடையவன் என்ற

வகையிலே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தலைவர் மூப்பனார் அவர்களும் சேர்ந்து இந்த முடிவை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். எனவே, சேர்ந்து முடிவெடுக்க வேண்டியது அவர்களுடைய பொறுப்பு. அவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து ஒரு ஆலோசனை வழங்க வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறேனேயொழிய வேறு மாற்றுக் கருத்தை நான் சொல்லவில்லை.

அடுத்ததாக, விலைவாசி உயர்வு.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பிரச்சினையில், சில நேரங்களில் எவ்வளவு எச்சரிக்கையோடும், ஜாக்கிரதையோடும் அணுக வேண்டும் என்பது பொறுப்புள்ள ஒரு அரசின் கடமையாக இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. ஏனோதானோவென்று எந்த முடிவுகளையும் மேற்கொள்ள இயலாது. பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்கிற அளவிற்கு, கடந்த காலத்திலே, 1968-ஆம் ஆண்டு முதல், பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்கே முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலம் தொட்டு, பேச்சுவார்த்தை, 27 முறை, 28 முறை என்று நடத்தப்பட்டு, அங்கேயும் பல முதலமைச்சர்கள் மாறிமாறி வந்து, இங்கேயும் பல முதலமைச்சர்கள் மாறிமாறி வந்து, ஆட்சிகள் மாறிய சூழ்நிலையிலேயும்கூட, அங்கேயும் சரி, இங்கேயும் சரி, ஒரே கோட்டில் நின்று, என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் இதே அவையில் சொன்னதைப்போல, திராவிட முன்னேற்றக் கழக அரசு காவிரி நீர்ப் பிரச்சினையில் எந்த நிலையை எடுத்ததோ, அதே நிலைதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் நிலை என்று கூறியதற்கு ஒப்ப, ஒரே நிலையில், தமிழக அரசின் சார்பில் நாம் பேச்சுவார்த்தை நடத்தி, அது வெற்றி பெறாமல் போன சூழ்நிலையிலேதான், நடுவர் மன்றத்தைத் தவிர வேறு வழியில்லை என்ற தீர்மானத்தை இதே அவையில் நிறைவேற்றி, பிரதமராக இருந்த திரு. வி.பி. சிங் அவர்களுக்கு அனுப்பி வைத்து, அதுவும் 'ஃபேக்ஸ்'-லே அனுப்பி வைத்து, உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வழக்கின் அடிப்படையில், நடுவர் மன்றம் அமைக்கலாம் என்று உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பித்து, திரு. வி.பி. சிங் அவர்களை நாம் வலியுறுத்தி, அவர்களும் உடனடியாக நடுவர் மன்றத்திற்கான உத்தரவைப் பிறப்பித்து, நீதிபதி நியமிக்கப்பட்டு, நடுவர் மன்றம் நடைபெற்றுக்



கொண்டிருந்த சூழ்நிலையில், ஒரு இடைக்காலத் தீர்ப்பு அளிக்கப்படுகின்ற ஒரு காலகட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு, அந்த இடைக்காலத் தீர்ப்பைக் கர்நாடக அரசு நடைமுறைப்படுத்த முடியாது என்று கூறியது. அதன் காரணமாக, முன்பிருந்த அரசும், இன்றைக்கு இருக்கின்ற இந்த அரசும் சட்டத்தின் உதவியை நாட வேண்டிய நெருக்கடிக்கு ஆளாயின என்பதையும் அவை உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.

இப்போதுகூட, கர்நாடக முதலமைச்சரோடு அமர்ந்து பேச வேண்டும் என்பதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, உச்சநீதிமன்றத்தின் ஒரு யோசனைக்கு ஏற்ப, நம்முடைய சம்பாப் பயிர், குறுவைப்பயிர் ஆகியவற்றிற்குத் தண்ணீர் தேவை என்ற நெருக்கடியின் காரணமாக, உச்சநீதிமன்றத்திற்கு நாம் சென்றபோது, 'நீங்கள் அதைப்பற்றி ஒருமுறை பேசுங்கள்' என்று தமிழக அரசுக்கும், கர்நாடக அரசுக்கும் அவர்கள் தந்த அறிவுரையின் காரணமாக, பேசலாமா, வேண்டாமா என்ற அந்த விவாதத்திற்கு இடம் தராமல், உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கும்போது, நாம் பேச முற்படாவிட்டால் உச்சநீதிமன்றத்தை அவமதித்ததாகும் என்ற காரணத்தால், அந்த அடிப்படையிலே பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டது. பேச்சுவார்த்தை தொடங்கப்பட்ட அந்த நிலையில், அப்பொழுது நமக்குத் தேவைப்பட்ட தண்ணீரை முழு அளவிற்குக் கர்நாடக அரசு தராவிட்டாலும்கூட, ஓரளவு தண்ணீரை அவர்கள் வழங்க முன்வந்தார்கள். அதோடு சேர்ந்து மழையும் வந்துவிட்ட காரணத்தால் அதற்கு மேல் அவர்களிடத்திலே தண்ணீர் கேட்கவேண்டிய அவசியமில்லாமல் போயிற்று. அப்போது கர்நாடக மாநில முதல்வர் அவர்கள், நடுவர் மன்றத்திற்கு நாம் ஏன் செல்ல வேண்டும், பேசியே தீர்க்கலாம் என்று சொன்னபோதுகூட, அதற்காக நாம் நடுவர் மன்றத்தை வேண்டாம் என்று எந்தக் காலத்திலேயும் சொல்லவில்லை. நடுவர் மன்றம் இருந்துகொண்டே இருக்கிறது. அதற்கிடையில் நாம் பேசித் தீர்த்தால், நடுவர் மன்றத்திலே சொல்லி, 'நாங்களே பேசித் தீர்த்து விட்டோம், அதையே தீர்ப்பாக அளியுங்கள்' என்று சொல்ல அதிக நேரம் ஆகாது. எனவே, நடுவர் மன்றம் வேண்டாம் என்று சொல்லவில்லை. அதற்கிடையில் நடுவர் மன்றத்தினுடைய தலைவர் பதவி விலகிவிட்டார்.

முற்பகல் 11-25

அப்போதுங்கூட, அந்தத் தலைவருக்கு, பதவி விலகிய தலைவருக்குப் பதிலாக இன்னொருவரை நியமிக்க வேண்டும், அல்லது, அவரையே நியமிக்க வேண்டும் என்றுதான் தமிழக அரசின் சார்பாக, பிரதமருக்குச் சொல்லப்பட்டது. பிரதமரும் ஒருமாத காலம், இரண்டுமாத காலம் தாமதத்திற்குப் பிறகு, அவர் உச்சநீதிமன்றத்திற்கு எழுதியும்கூட, உச்சநீதிமன்றத்திலேயிருந்து, அவருக்கு, யாரை நியமித்து இருக்கிறோம் என்ற பதில் வர நேரமாயிற்று; நாள் ஆயிற்று. பிறகு, உச்சநீதிமன்றம் ஒருவரை அறிவித்தது. அறிவித்த பிறகு, அரசு அதை ஏற்றுக் கொண்டது. மத்திய அரசு அதை ஏற்றுக் கொண்டு, பேச்சுவார்த்தை, நடுவர்மன்றத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 7-ஆம் தேதி நடுவர்மன்றம் கூடுகிறது என்று சொன்னால், கடைசி பேச்சுவார்த்தை, நமக்கும், கர்நாடகத்திற்கும் 5-ஆம் தேதி இங்கே நடைபெற்றிருக்கிறது. ஏன் 5-ஆம் தேதி நடைபெறுகிறது? பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடியாவிட்டால், 7-ஆம் தேதி நடுவர்மன்றம் இருக்கவே இருக்கிறது என்ற நம்பிக்கையுடன் நடைபெற்றது. ஆகவே, நடுவர்மன்றத்தைத் தூக்கிப் போட்டுவிட்டு, பேச்சுவார்த்தை நடைபெறவில்லை. பேச்சுவார்த்தையில் பலவீனம் ஏற்பட்டால், அதை நடுவர் மன்றத்திற்குச் சொல்லலாம் என்ற அந்த கருத்தோடு அது நடைபெற்றது. அதிலே என்னென்ன பேசினீர்கள் என்பதைப் பலரும் கேட்டார்கள். பேச்சுவார்த்தையின்போது, பேசப்பட்ட விஷயங்களை வெளியிலே சொன்னால்--அது இரகசியமாக பாதுகாக்கப்பட வேண்டும் என்பதல்ல--அதைப்பற்றிய கருத்துக்கள் வெளியே வருமானால் ஏற்படக்கூடிய விளைவுகளை எண்ணிப் பார்க்கவேண்டும். ஏற்கெனவே ஒருமுறை, நடுவர்மன்றத்தினுடைய இடைக்கால ஆணையை நிறைவேற்ற கர்நாடக அரசு தவறியபோது, உணர்ச்சிமயமாக அந்தப் பிரச்சினையை அணுகிய காரணத்தினால், கர்நாடகத்திலே உள்ள தமிழர்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டார்கள் என்பதை நாம் யாரும் மறந்துவிடக் கூடாது. எத்தனை வீடுகள் கொளுத்தப்பட்டன; எத்தனை தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதையெல்லாம் நாம் மறந்துவிடக் கூடாது. நம்முடைய எண்ணமெல்லாம், காவிரிப் பிரச்சினையை வைத்து, கர்நாடகம், தமிழகம் ஆகிய இரண்டு மாநிலங்களுக்கும் இடையே ரகளை, அமளி, இரண்டு மாநில மக்களுக்கிடையே வேற்றுமை என்ற சூழ்நிலை உருவாகக் கூடாது என்பதுதான் நம்முடைய



எண்ணம். எனவேதான், அகில இந்திய அளவிலே உள்ள, தமிழ்நாட்டிலேயுள்ள கட்சிகள் எல்லாம்கூட, அது இந்திய கம்யூனிஸ்ட் ஆனாலும், சி.பி.எம். ஆனாலும், வேறு பல கட்சிகள் ஆனாலும்கூட, தொடர்ந்து பேச்சுவார்த்தைதான் வேண்டும் என்பதை எடுத்துக் கூறி வந்திருக்கின்றன. இப்போதும் கூறுகிறார்கள். இருந்தாலும், பேச்சுவார்த்தைகளிலே வெற்றிபெற முடியவில்லை என்பதை நாம் மீண்டும் ஒருமுறை உணர்ந்திருக்கிறோம். அது ஒன்றும் தவறல்ல. 'பேச கூப்பிட்டார்கள், போகவில்லை' என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாகாமல், பேச்சுவார்த்தையிலே கலந்துகொள்வதால் எந்தத் தவறும் இல்லை. இதிலே பிரதமர் தலையிட்டார் என்று நம்முடைய நண்பர் திரு. அழகிரி அவர்கள் கூறுவது, என்னால் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. அவர் இன்னும் தலையிடவில்லை. தலையிட்டிருந்தால், இந்தப் பிரச்சினை அவரால் தீர்த்து வைக்கப்பட்டிருக்க முடியுமா என்பது வேறு விஷயம். அவரே தலையிட்டிருந்தால்கூட, கர்நாடக மாநில மக்கள், அதை எப்படி ஏற்றுக் கொள்வார்கள் என்பதும் எனக்குத் தெரியாது. எனவே, அவருடைய கட்சிக் கூட்டத்திலே பேசவேண்டிய ஒரு விஷயத்தை, எங்களுடைய கட்சிக் கூட்டத்திலே பேசவேண்டிய ஒரு விஷயத்தை, பொதுவாக, அவர் இங்கே, கருணாநிதிக்கும், மூப்பனாருக்கும் சேர்த்துத்தான் பேசுகிறேன் என்று அவர் இங்கே பேசியிருப்பது, என்னைப் பொறுத்தவரையில், தனிப்பட்ட முறையிலே, அவ்வளவு விரும்பத்தக்கதல்ல. இருந்தாலும்கூட, நான் அவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்; நாம் நீதியை நம்பியிருக்கிறோம்; நடுவர்மன்றத்தை நம்பியிருக்கிறோம்; கடைசியாக வேறு வழியே இல்லை என்ற ஒரு நிலைமை ஏற்படுமேயானால், தமிழகத்தை நிச்சயமாக இந்த அரசு காட்டிக் கொடுக்காது என்பதை மாத்திரம் நான் உறுதிபட இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒன்பது மாதகாலமாக, ஒரு வெளிப்படையான அரசாங்கத்தை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடத்தி வந்திருக்கிறார் என்பது இன்றைக்குப் பரவலாகப் பேசப்படுகிறது. இயல்பாகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏற்றுக்கொள்ள முடியாத சில அரசியல் விமர்சகர்கள்கூட, ஒன்பது மாதகால ஆட்சியைப் பற்றிப் பரவலாக பாராட்டியிருக்கிறார்கள்; பலமாகப் பாராட்டியிருக்கிறார்கள். இது ஒரு அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிற

ஒரு பெரிய வெற்றி என்பதனை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய முதலமைச்சரைப் பொறுத்தவரை, அரசாங்கத்தினுடைய மேல்மட்டத்திலே எப்படி சரியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை முறையாக அவர்கள் வழிநடத்தி, ஒரு தெளிவான அரசாங்கத்தை நடத்துகிற ஒரு பாங்கிற்காக மீண்டும் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொண்டு, ஆனால், எதிலுமே ஏமாற்றம் அடையாத நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஒரு விஷயத்தில் கொஞ்சம் தவறி விட்டார்களோ என்று எனக்கு எண்ணத் தோன்றுகிறது. உதாரணமாக, வியாபாரிகளை நம்பி விற்பனை வரியையெல்லாம் குறைத்தார்கள். நான்கூட நண்பர் சொக்கர் அவர்களிடம் சொன்னேன்; அவர் சொல்லியிருப்பார் என்று நம்புகிறேன். வியாபாரிகள், வியாபாரிகள்தான். எப்போதும் வியாபாரிகள் இலாபத்தை விட்டுக் கொடுத்துவிட மாட்டார்கள். ஒன்றை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பெரிய மனது பண்ணி, நீங்கள் எவ்வளவோ செய்து கொடுத்தீர்கள்; நம்பினீர்கள்.

முற்பகல் 11-30

கொத்தமல்லி ஒரு குவிண்டால் அதாவது 100 கிலோ அன்றைக்கு ரூ.3200 என்று விற்றது இன்றைக்கு ரூ.4500; மிளகாய் ஒரு குவிண்டால் 3500 ரூபாய்க்கு அன்றைக்கு விற்றது இன்றைக்கு 4000 ரூபாய். புளி 100 கிலோ 1200 ரூபாய்க்கு விற்றது இன்றைக்கு 2000 ரூபாய். இன்னும் ஏராளமாக இருக்கிறது. இதற்கெல்லாம் என்ன காரணம்? வியாபாரிகளைக் கேட்டால், பெட்ரோல் விலை உயர்ந்து விட்டது, டீசல் விலை உயர்ந்துவிட்டது அதனால் விலைவாசி ஏறிவிட்டது என்று சொல்வார்கள். ஆனால் பெட்ரோலியம் டிபார்ட்மெண்டில் கேட்டால் அவர்கள் பெட்ரோல் விலை உயர்வினால் ஏற்படக்கூடிய விலைவாசி விகிதம் 1.5 சதவீதம்தான், அதாவது 100 ரூபாய் விற்ற பொருள் 101.50 பைசாதான் பெட்ரோல் விலையால் ஏறியிருக்க வேண்டுமே ஒழிய இவ்வளவு அபரிமிதமான விலைவாசி ஏற்றத்திற்கு பெட்ரோல் காரணமில்லை என்று சொல்கிறார்கள். எனவே நாம் எப்படிப் பார்த்தாலும் நமக்குத் தெரிகிற ஒன்று, வியாபாரிகள் திட்டமிட்டு இந்த அரசாங்கத்தை ஏமாற்றிவிட்டார்கள் என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே தான் நீங்கள் உங்களுடைய இலாகாவை மாற்றிக் கொடுத்துவிட்டீர்களோ என்ற சந்தேகம்கூட எங்களுக்கு இருக்கிறது. எனவே, இந்த விலைவாசி ஏற்றத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு முடிவு கட்ட வேண்டும். இந்தப் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. குறிப்பாக தாய்மார்கள்,



ஏழ்மை நிலையிலே இருக்கிறவர்கள் எல்லாம் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி இருக்கிறார்கள் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரைவில் பேசி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியில் நெய்வேலி நிலக்கரி நிறுவனம், கையகப்படுத்திய ஏழை விவசாயிகளுடைய நிலங்களுக்கெல்லாம் இதுவரை அவர்கள் கையகப்படுத்தியதற்கான தொகையை வழங்கவில்லை. சென்ற கூட்டத் தொடரிலேகூட இதுபற்றி முதலமைச்சர் அவர்களிடம் நான் சொன்னேன். உடனே அவர்கள் ஒரு கமிட்டியைப் போட்டார்கள். ஒரு பழமொழி சொல்வார்கள். ஒரு பிரச்சினை நடைபெறாமல் இருக்க வேண்டுமென்றால் ஒன்று அதன்மீது கல்லைத் தூக்கிப் போட வேண்டும்; அல்லது ஒரு கமிட்டியைப் போட வேண்டுமென்று சொல்வார்கள். முதலமைச்சர் அவர்கள் ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். இதுநாள் வரை எந்தவிதமான முன்னேற்றமும் கிடையாது. உயர்நீதிமன்றமே ஒரு ஏக்கருக்கு 80,000 ரூபாய் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டும்கூட ஒரு பொதுத் துறை நிறுவனம் அந்த விவசாயிகளை எல்லாம் தனித்தனியாக அழைத்து அவர்களை மிரட்டி, '40,000 ரூபாய் கொடுக்கின்றோம், வாங்கிக் கொண்டுபோய்விடு, மறுத்தால் நாங்கள் உச்சநீதிமன்றம் செல்வோம், உனக்கு அந்தப் பணம் கிடைக்க இன்னும் 20 ஆண்டுக் காலம் ஆகும், என்ன சொல்கிறாய்' என்று சொல்லி ஒரு 500 விவசாயிகளுக்கு 40,000 ரூபாய் வீதம் கொடுத்து செட்டில் செய்திருக்கிறார்கள். நான் கேட்கிறேன், ஒரு பொதுத் துறை நிறுவனம் இங்கே பழுப்பு நிலக்கரியை எடுக்கின்றது. ஏழை, எளிய விவசாயிகள் அந்த நிலத்தை நம்பித்தான் பிழைத்துக் கொண்டிருந்தார்கள். நிலத்தை அரசாங்கம் தன்னிச்சையாக கையகப்படுத்தியபோது, அவர்களால் அரசை மீறி எதையும் செய்ய முடியவில்லை. அதனால் நிலத்தைக் கொடுத்துவிட்டார்கள். 10 ஆண்டுக் காலம், 15 ஆண்டுக் காலம் ஆகியும்கூட, அந்த விவசாயிகளுக்கு உரிய பணம் போய்ச் சேரவில்லை என்றால், அதற்கு என்ன பொருள் என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். எப்படி யார் சுற்றி வந்தாலும் ஏமாற்றப்படுகிறவர்கள் விவசாயிகளாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினால்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு தகவல். இது மத்திய அரசு நிறுவனம். செல்வாக்கு படைத்த நிதியமைச்சர் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்தான். அவரிடம் அணுகி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமே தவிர, மாநில அரசு எப்படி பணத்தை உடனே கொடுக்க முடியும்?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம்தான் கையகப்படுத்திக் கொடுத்தோம். மாநில அரசுதான் கையகப்படுத்திக் கொடுத்தது. நாம்தான் அதிலே பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். நான் அதிலே கட்சியைப் பார்க்கவில்லை. அப்படியென்றால் மாண்புமிகு தொழில் அமைச்சர்கூட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதி கொடுக்க வேண்டியது மத்திய அரசு. நானும் கட்சிக்காகச் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிந்துரைதான் செய்யலாம். அந்த நிறுவனத்தின்மீது முதலமைச்சர் அவர்கள் எப்படி நடவடிக்கை எடுக்கமுடியும்? அதைச் சொல்லுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி இதைச் செய்ய வேண்டும். ஏனென்றால் கையகப்படுத்தியது நாம்தான். எனவே, தமிழர்களுடைய நலன் கருதி அதைச் செய்ய வேண்டிய நிலையிலே நாம் இருக்கிறோம். அவர்கள் நிலத்தைக் கொடுத்து 10, 15 ஆண்டுகள் ஆகின்றன. இன்றைக்கு அந்த நிலத்தினுடைய மார்க்கெட் மதிப்பு 2 இலட்ச ரூபாய். 2 இலட்ச ரூபாய் பெறுமானமுள்ள நிலத்திற்கு 40,000 ரூபாயைக்கூட அவர்களால் பெறமுடியவில்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நம்முடைய ஆளுநர் உரை மிக அருமையாக அமைந்திருந்தது. 5 ஆண்டுக் காலம் நடைபெற்ற ஒரு இருண்ட ஆட்சிக்குப் பிறகு, ஒரு தெளிவான ஒளிவிளக்காய்த் திகழக்கூடிய ஒரு ஆட்சி இன்றைக்கு ஏற்பட்டு, பல்வேறு பிரச்சினைகளிலே நாம் தீர்வு கண்டிருக்கிறோம். ஆனால், நாம் இன்னும் தீர்வு காணக்கூடிய பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. வருங்காலங்களிலே அவற்றிற்கும் நாம் வெற்றிகரமான தீர்வு காணவேண்டும் என்று சொல்லி, என்னுடைய உரைக்கு அனுமதி அளித்த அவைக்கு



என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி. வணக்கம்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

***திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தை வரவேற்றுப் பேசுவதற்கு எனக்கு அனுமதி அளித்த உங்களுக்கு முதற்கண் நன்றி தெரிவித்து என்னுடைய உரையைத் துவங்குகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கடந்த ஆண்டு நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றவுடன், நிகழ்த்தப்பட்ட ஆளுநர் உரையில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்படும், கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டதற்கு இணங்க, இந்த ஆண்டு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தக் காலக்கட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களையும், உள்ளாட்சித் தேர்தல்களையும் நடத்தி, தமிழக வரலாற்றில் பல அரசியல் கட்சிகளால் சாதிக்க முடியாததை, 18 ஆண்டுகள் ஆட்சி நடத்தி தேர்தலை நடத்த அஞ்சி நடுங்கிய அ.இ.அ.தி.மு.க. கட்சியால் சாதிக்க முடியாததை, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சாதித்துக் காட்டியிருக்கிறார்கள் என்று நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தலை நடத்தியதோடு அல்லாமல் அதில் பெரும்பான்மையான வெற்றியையும் தி.மு.கழகம் பெற்றிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசு மீது மக்கள் நம்பிக்கை வைத்து இரண்டாவது முறையாக வெற்றியைத் தேடித் தந்திருக்கிறார்கள் என்று நான் மனமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்தில் பெய்த மழை வெள்ளத்தால், பெரிதும் பாதிக்கப்பட்ட வட மாவட்டங்கள் குறித்து, ஆளுநர் உரையிலே தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சென்னையைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ 231 பேருந்து சாலைகளும், 1,229 உட்புற சாலைகளும், 90 குடிசைப்பகுதிகளும் என்று ஏறத்தாழ 250 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு

சென்னையிலே சாலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இங்கே மத்திய விவசாயத் துறை அமைச்சர் அவர்களும்கூட வந்து பார்வையிட்டார்கள். அந்தச் சாலைகளைச் செப்பனிடுவதற்கு ரூ.68.04 கோடி செலவாகும் என்று சென்னை மாநகராட்சி மதிப்பீடு செய்து, தமிழக அரசுக்கு அதற்கான கோரிக்கையை வைத்திருக்கிறது. ஆந்திர மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டபோது, பல்லாயிரக் கணக்கானவர்கள் இறந்து போனார்கள். ஆனால், சென்னையிலே மழை வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டபோது, சமீபத்தில் சென்னை மேயராகப் பொறுப்பேற்ற வணக்கத்திற்குரிய மேயர் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள், போர்க்கால அடிப்படையில் உடனடியாக நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாக பெருமளவு உயிர் சேதம் ஏற்படாமல் மக்களைக் காப்பாற்றியதோடு அல்லாமல், அவர்களுக்குத் தேவையான உதவிகளை அளித்து, தாழ்வான பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களை அப்புறப்படுத்தி, ஒரு கோடியே 47 லட்ச ரூபாய்க்கு உணவுப் பொட்டலங்களை வழங்கி அந்த மக்களின் துயர் துடைக்கும் பணியில் ஒரு நாளைக்கு 18 மணி நேரம் உழைக்கின்ற அளவுக்கு நமது வணக்கத்திற்குரிய மேயர், தனது பணிகளைச் சிறப்பாக ஆற்றி வருகின்றார். அதற்காக சென்னை மக்கள் அவரைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, சென்னை மாநகராட்சியின் கோரிக்கையான அந்த 68 கோடி ரூபாயை தமிழக அரசு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 15 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். மகன்தானே மேயர் என்று **பிரச்சினையைத் தட்டிக் கழித்துவிடாமல்,** சென்னை மக்களின் ஒட்டுமொத்த கோரிக்கை இது என்ற காரணத்தால் உடனடியாக அந்த 68 கோடி ரூபாயை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், சென்னையில் சமீபத்தில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட 2,54,815 குடும்பங்களுக்கு, அரசு ஏறத்தாழ 9 கோடியே 61 லட்சம் ரூபாயை வெள்ள நிவாரண நிதியாக வழங்கியதோடு அல்லாமல், வேட்டி சேலைகளையும், 5 கிலோ அரிசி என்ற அளவிலும் வழங்கி சென்னை மக்களுக்குப் பெருமளவிற்கு நிவாரண உதவி செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 11-40

கிருஷ்ணா நதி நீர் சென்னை மாநகருக்கு வரப்பெற்றது, மக்களுக்குத் தித்திக்கின்ற செய்தி. சென்னை மக்களின் நிரந்தரத் தேவையைப் பெரும் அளவிற்கு பூர்த்தி செய்திருப்பது கண்டு, சென்னை மக்கள் மகிழ்ச்சியுறுகிறார்கள். ஏறத்தாழ நாள் ஒன்றுக்கு 440 மில்லியன் லிட்டர் தண்ணீர் சென்னை மக்களுக்குக் கிடைப்பதால், அவர்கள் பெரிதும் மகிழ்கின்ற இந்தக் கால கட்டத்திலே, அடுத்த நடவடிக்கையாக, பூண்டி நீர்த் தேக்கத்தின் மேலே இருக்கிற இராமன்சேரி, திருகண்டலம் ஆகியவைகளில் கிருஷ்ணா நதி நீரைத் தேக்கி வைத்து, அதுபோல சோழவரம், ரெட்ஹில்ஸ் போன்ற பகுதிகளில் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்து, அதன்மூலமாகத் தொலைதூரத் திட்டத்தின் அடிப்படையில், நாள் ஒன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்க இந்த அரசு முனைந்திருப்பது உண்மையிலேயே பாராட்டக்கூடியதாகும்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓர் உறுப்பினர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது, அவருக்கும் பேரவைத் தலைவருக்குமிடையில் இப்படியெல்லாம் போகக்கூடாது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே ஒன்றுமேயில்லையே என்று கூறுகின்றவர்களுக்கு, சென்னை மக்களுக்கு இப்போது குடிநீர் தட்டுப்பாடு இன்றி வழங்கப்படுகிறது என்பது தித்திக்கின்ற செய்தியாக இருக்கின்றது. அது மட்டுமல்லாமல், இன்னமும் அதிகமான மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை அமைத்து பழுதுபட்டுள்ள பழைய நிலையில் இருக்கின்ற குழாய்களை மாற்றி அமைத்து, குடிநீர்க் குழாய்களே இல்லாத குடிசைப்பகுதிகளுக்கும் தண்ணீர் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தமிழகத்திலே மூன்று நிறங்களில் ரேஷன் அட்டைகளை வழங்குவதற்கான ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குச் சிவப்பு நிற அட்டையும், மற்றவர்களுக்குப் பச்சை நிற அட்டையும், அரிசித் தேவையில்லாதவர்களுக்கு மஞ்சள் நிற அட்டையும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கான விண்ணப்பங்களை வழங்குவது குறித்து, தொலைக்காட்சியின் மூலமும்,

பத்திரிகையின் வாயிலாகவும் தெரிவித்தும்கூட, பொது மக்கள் இன்னமும் சரியாகப் புரிந்துக்கொள்ளாத நிலையில் இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் புதிய ரேஷன் கார்டு வேண்டி விண்ணப்பத்தினைப் பெற அலைகிற நிலை இன்றும் இருக்கிறது. இதிலே ஒரு பிரச்சினை இருக்கிறது. போலியான கார்டுகள் பல்லாயிரக்கணக்கில் இருக்கின்றன. இப்போதும் ஆயிரக்கணக்கான மக்கள் ரேஷன் கார்டுகள் இல்லையென்று கேட்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், ஏற்கெனவே கார்டுகளிலே குறிப்பிட்டுள்ள குடும்பத் தலைவரின்கீழ் உள்ள உறுப்பினர்கள் திருமணம் முடிந்து தனிக் குடித்தனம் போகும்போது, அவர்களுடைய பெயர் ஏற்கெனவே பழைய கார்டிலேயே இருந்தும்கூட, தனியாகக் குடிபுகுந்தவர்கள் தங்களுக்கென்று தனியாக கார்டு வேண்டுமென்று இன்றைக்கு விண்ணப்பிக்கிறார்கள். அதனாலேதான் இப்படிப்பட்ட கார்டுகள் எண்ணிக்கை அதிகமாகின்றன. எனவே, அதனையும் நீங்கள் சரிசெய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, பொது விநியோக முறையில், ஏற்கெனவே பட்ஜெட்டில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததைப் போல, இன்றைக்கு சென்னையிலே, கோபாலபுரம் மற்றும் அண்ணா நகர் போன்ற பகுதிகளில் மண்ணெண்ணெய் 'பங்க்'கள் அமைத்திருக்கிறீர்கள். இதனால் அளவுகள் சீராக இருக்கும். மேலும், இதன் மூலமாக மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லாமல், இன்றைக்கு நல்லவிதமாக அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இதுபோல் சென்னையில் மேலும் பல பகுதிகளுக்கு, பெட்ரோல் 'பங்க்'களைப் போல மண்ணெண்ணெய் 'பங்க்'களை அமைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். 800 கார்டுகளுக்கு ஒரு ரேஷன் கடை என்ற முறையிலே கடந்த 1996 செப்டம்பர் திங்களில் 52 புதிய ரேஷன் கடைகள் சென்னையில் திறக்கப்பட்டன. இதுபோன்று அனைத்து இடங்களிலும் திறக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒரு குடும்ப அட்டைக்கு 12 கிலோ அரிசிதான் வழங்கினார்கள். ஆனால் தேர்தல் நேரத்திலே, அதாவது தேர்தலுக்கு ஒரு மாதகாலத்திற்கு முன்னால் 20 கிலோ அரிசி வழங்கப்பட்டது. ஆனால், அதனை மாற்றி அமைத்து இன்றைக்கு நம்முடைய கழக ஆட்சிக் காலத்தில் 20 கிலோ அரிசி வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் தேதியில் இன்னார் ரேஷன் பெற வேண்டுமென்ற அந்த



'ஸ்டாக்னேஷன்' முறையை மாற்றி, எல்லா நாட்களிலும் எந்த கார்டுதாரரும் அரிசியும் மற்ற பொருட்களும் வாங்கிக் கொள்ளலாம் என்ற முறையைக் கொண்டு வந்ததற்கு நான் இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

அதுமட்டுமல்ல, தனியார் மின் உற்பத்தித் திட்டம் பற்றி கடந்த பட்ஜெட்டிலேகூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 20 இடங்களில் அமைப்பது பற்றித் தெரிவித்திருந்தார்கள். நெடுஞ்சாலை ஓரங்களில் நல்ல தொழிற்சாலை அமைப்பது என்றால், தண்ணீர் வேண்டும். அதையடுத்து, மின்சாரம் தேவைப்படுகிறது. ஆகவே, அந்தவகையில் இன்றைக்கு 20 இடங்களில் மின்சாரத்தை வழங்குவதற்கு ஒரு திட்டத்தைத் தமிழக அரசு கொண்டு வந்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே நான்கு இடங்களில் மின் உற்பத்தி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, ஜி.எம்.ஆர். பார்சன் பவர் கார்ப்பரேஷன், சென்னை பேசின் பிரிட்ஜ்--அது என்னுடைய தொகுதியிலே வருகிறது--எஸ்.டி.எம்.எஸ். நெய்வேலி, வீடியோகான், எண்ணூர் போன்ற இடங்களில் 200 மெகாவாட் மின் உற்பத்தி செய்வதற்காக அனுமதி அளிக்கப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, மேலும் 20 மின் உற்பத்தி செய்கின்ற நிலையங்களை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளமைக்கு நான் இந்த நேரத்திலே பாராட்டைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், ஹூண்டாய் கார் தொழிற்சாலை, கண்ணாடித் தொழிற்சாலை போன்றவற்றை அமைப்பதற்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கிய நேரத்திற்கும் மேல் அதிகமாகப் பேசிவிட்டீர்கள். எனவே, பேச்சை சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. செங்கை சிவம்:** துணைத் தலைவர் அவர்களே, என்.ஜி.ஓக்கள் பற்றிய ஒரு சில கருத்தை மட்டும் கூற விரும்புகிறேன். ஆளுநர் உரையில் என்.ஜி.ஓ.க்களுடைய நிலை குறித்து கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பில்

இருந்தபோதுதான், சரண்டர்டு ஈ.எல்.-க்கு ஊதியம் அளிக்கின்ற திட்டத்தை முதன் முதலில் கொண்டுவந்தார்கள். கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் சி.ஆர். முறை ஒழிக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, ஊழியர்களுடைய நலன் கருதி முதன்முதலில் நம்முடைய கலைஞர் அவர்கள் 1974-இல் ஊழியர் இறந்த பிறகு வழங்கப்படும் ரூ.10 ஆயிரம் என்பதை, 1996-97-இல் ஒரு இலட்சமாக மாற்றினார்கள். அதுமட்டுமல்லாது, 1989-90-ல் அவர்களுக்கு போனஸ் திட்டம் கொண்டுவரப்பட்டது. மேலும், 1947-லிருந்து தொடர்ந்து அந்த ஊழியர்களுடைய கோரிக்கையான மத்திய அரசுப் பணியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு, அவர்களுக்கு மத்திய அரசின் பணியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்லாமல், 1988-லே--புரஃபஷனல் டேக்ஸ்--தொழில் வரி என்ற ஒரு நிலையை கவர்னர் அவர்களிடத்திலே பேச்சுவார்த்தை நடத்தி, அரசே அதை ஏற்க வேண்டும் என்ற ஒரு நிலை, ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், இதுவரையிலே அது நிறைவேற்றப்படவில்லை. உடனடியாக, அதையும் நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல, ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அமைச்சுப் பணியாளர்களை 20 ஆயிரம் பேர்களுக்கு புரமோஷன் கொடுத்தாரானால் வேலைவாய்ப்புகளை உருவாக்கிட . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம், பேசியது போதும். அடுத்து, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரை என்பது அரசாங்கத்தினுடைய கொள்கை அறிவிப்புப் பிரகடனமாகக் கருதப்படக் கூடியது. அதிலே, பட்ஜெட்டுக்கு முன்னோடியாக ஒருசில திட்டங்களையாவது இந்த அரசு அறிவிக்கும் என்று கவர்னர் உரையை நானும் பக்கம் பக்கமாகப் புரட்டிப் பார்த்தேன். ஆனால், அதிலே எந்தவிதமான புதிய அறிவிப்புகளும் காணப்படவில்லை.

நேற்றுப் பேசிய தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச்



சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்களாக இருந்தாலும் சரி, நேற்றுப்பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்களாக இருந்தாலும் சரி, இவர்கள் எல்லோருமே விலைவாசிகளைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். இந்த விலைவாசியைப் பற்றி நான் ஒருசில கருத்துக்களைச் சொல்லலாம் என்று இருக்கிறேன்.

*முற்பகல் 11-50*

சென்ற ஆட்சிக் காலத்தில் எங்களுடைய முதல்வர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, தற்போதைய முதல்வர் அவர்கள், தேர்தல் கூட்டப் பிரச்சாரங்களில் பேசினார்கள். அவர்கள் மளிகைக் கடைப் பட்டியலைத் தன்னுடைய கையிலே வைத்துக்கொண்டார்கள். பொதுக் கூட்டத்தில் பேசும்போது, மளிகைக் கடைப் பட்டியலைக் கூட்டத்திலே காட்டி, 'தாய்மார்களே, தாய்மார்களே, பார்த்தீர்களா, பார்த்தீர்களா, இந்தப் புண்ணியவதி ஜெயலலிதா ஆட்சியிலே விலைவாசிகளை' என்றெல்லாம் கேட்டார்கள். 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால், அந்த நிலைகளையெல்லாம் முற்றிலும் மாற்றிவிடுவோம்' என்று கூறினார்கள். கடந்த எட்டு மாத காலத்திலே என்ன நடக்கின்றது? விலைவாசிகள் எல்லாம் இரண்டு மடங்கு ஏறியிருக்கிறது. இதை நான் மட்டும் சொல்லவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கூறியிருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் கைக்கு மளிகைக் கடைப் பட்டியல் இன்னும் கிடைக்கவில்லையா? அவர் தப்பித்துக்கொள்வதற்காக மத்திய அரசைக் காரணம் காட்டியிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன். மத்திய அரசும் உங்கள் அரசுதானே; அந்த அரசையும் நீங்கள்தானே வழி நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் இதற்கு ஏதாவது அவர்களைக் கேட்டீர்களா? விலைவாசிப் போராட்டத்திலே சிறை சென்றவர்தான் எங்களுடைய முதல்வர் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏறிக்கொண்டிருக்கிற இந்த விலைவாசிகளைப் பார்த்து, தாய்மார்கள் காய்கறிகளை வாங்கும்போது இந்த ஆட்சியைச் சபித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக காவிரி நீர்ப் பிரச்சினை. காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நம்முடைய உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் மிகத் தெளிவாகக் கூறினார்கள். நானும் இந்த

அவையிலே சென்ற சட்டமன்றக் கூட்டத்தொடரின்போது கூறினேன். 1995-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்ட அவர்கள் பேச்சு வார்த்தைக்கு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று உரத்த குரலிலே அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அவர்களும் தீர்மானத்திலே கையெழுத்து இட்டிருக்கிறார்கள், பேச்சு வார்த்தை தேவையில்லையென்று. நானும் இந்த அவையிலே குறிப்பிட்டேன். நீங்கள் எல்லாம் என்னை அனைவரும் சேர்ந்து, உட்கார வைத்துவிட்டீர்கள். சரி நானும் நினைத்தேன், மத்தியிலும் அவர்கள்; மாநிலத்திலும் இவர்கள்; பிரதமரும் இவர்களுடையவர்கள்; இவர்கள் செய்து விடுவார்கள் என்று நான் நினைத்தேன். ஆனால் நடந்தது என்ன? இதுவரை ஐந்து முறை பேச்சு வார்த்தை நடத்தியாகிவிட்டது. ஐந்துமுறை பேச்சு வார்த்தையில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இறுதியாக நடுவர் மன்றத்தின் மூலமாக நாம் தீர்த்துக்கொள்ளலாம் என்று முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பின்பும் கர்நாடக நீர்பாசனத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய பேச்சிலே மாற்றம் வரும், பேச்சு வார்த்தைக்கு அவர் உடன்படுவார், பேச்சுவார்த்தைதான் எங்கள் இறுதியான முடிவாக இருக்கும் என்று கூறியிருக்கிறார்கள். நம்முடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள்கூட, நீரைப் பகிர்ந்து கொள்வது என்பதிலேதான் ஒரு சிக்கல் என்று கூறியிருக்கிறார்கள். எந்த வெற்றியும் அடையாததற்குப் பின்பு இனிமேல் நடுவர் மன்றத்தின் மூலமாகத் தீர்த்துக்கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார்கள். புதுக்கோட்டை தேர்தலில் உங்களை ஆதரிக்கிறேன் என்று கூறியிருக்கிற டாக்டர் இராமதாஸ் அவர்கள்கூட கூறியிருக்கிறார்கள். பேச்சுவார்த்தைகள் ஒன்றுமே நடைபெறவில்லை; இரண்டு முதல்வர்களும் தலைப்பாகைகளை மாற்றிக்கொண்டதுதான் மீதி என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே நம்முடைய திரு. அழகிரி அவர்கள் கூறியதைப்போல, திரு. தேவகவுடா அவர்கள் அரசுக்கு கொடுக்கும் ஆதரவை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்றாலும்--தமிழ் மாநில காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரண்டு கட்சிகளைச் சேர்ந்த 8 அமைச்சர்கள் இருக்கிறார்கள் உங்கள் உணர்வுகளைத் தெரிவிக்கும் விதத்திலே கட்சிக்கு ஒருவர் அமைச்சர்



பதவியிலிருந்து விலகி, உங்களுடைய கண்டனத்தை அந்த அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக கிருஷ்ணா நதிநீர்த் திட்டம். இந்த கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தினைப் பொறுத்தவரையில் பக்கம் 16-லே இந்த அரசு மேற்கொண்ட சீரிய தொடர் முயற்சியின் பயனாக சென்னைக்கு 1996-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தண்ணீர் வந்துவிட்டது என்று கூறியிருக்கிறீர்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த முயற்சியின் பலனாக சென்னை மாநகரத்தில், தினசரி குடிநீர் விநியோகம், முன் எப்போதும் இல்லாமல் 440 மில்லியன் கன அடி தண்ணீர் அளவுக்கு வந்து கொண்டிருக்கிறது. அதன் பயனாக சென்னையிலே குடிநீர்த் தட்டுப்பாடு குறைந்துவிட்டது என்று கூறியிருக்கிறீர்கள். நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள். இந்தக் கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் வந்ததா? சென்னை மேயர் தேர்தலிலே நீங்கள் வாக்குகள் வாங்கவேண்டுமென்ற காரணத்திற்காக அவசரம் அவசரமாகத்தான் இந்தத் திட்டத்தைச் செயலபடுத்தினீர்கள். தண்ணீர் வழங்கும் விழா என்று ஒரு விழாவையும் நடத்தினீர்கள். தண்ணீரைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று, விழாவிற்கு திரு. சந்திரபாபு நாயுடு அவர்களும் வந்தார்கள். அதற்குப் பின்பு நடந்தது என்ன? இரண்டு நாட்களுக்குள் குழாய்கள் எல்லாம் உடைந்துவிட்டன. தண்ணீர் வருகின்றதா? அதன் பயனாகத்தான் அதிகப்படியாக தண்ணீர் கொடுக்கிறோம் என்ற *உண்மைக்கு மாறான செய்தியை இந்த கவர்னரது உரையிலே நீங்கள் கூறியிருக்கிறீர்கள். தற்போது அந்தக் குழாய்களைக் கட்டி முடிப்பதற்குக் கிட்டத்தட்ட 4 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று கூறியிருக்கிறார்கள்.

இந்தச் செலவை ஆந்திர அரசு ஏற்றுக்கொள்ளப் போகிறதா; அல்லது தமிழக அரசு ஏற்றுக்கொள்ளப் போகிறதா என்ற கேள்வியை உங்கள் முன்னால் வைக்கின்றேன்.

முற்பகல் 11-55

அடுத்து, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை. சட்ட ஒழுங்குப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இன்று, பகலிலே கொள்ளைகள் நடக்கின்றன, கொலைகள் நடக்கின்றன....

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதித் தண்ணீர் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சில கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அதற்குப் பதில் சொல்வது என்னுடைய கடமையாகும். கிருஷ்ணா நதித் தண்ணீரை சென்னை மாநகரத்திற்குக் கொண்டுவரவேண்டும்; அதை செப்டம்பருக்குள் அல்லது 1996 ஆம் ஆண்டு இறுதிக்குள் தர வேண்டும் என்பதை நாங்கள் ஆட்சிக்கு வந்தபோதே சொல்லி இருக்கிறோம். ஏதோ, மேயர் தேர்தலுக்காக அதை நாங்கள் சொல்லவில்லை. நாங்கள் தேர்தல் காலத்திலேயே, 'ஆட்சிக்கு வந்தால் உடனடியாக கிருஷ்ணா நீரைத் தருவோம்' என்று சொல்லி இருக்கிறோம். சொன்னபடி அதைக் கொண்டுவந்து கொடுத்து இருக்கிறோம்.

நியாயமாகப் பார்த்தால் அ.இ.அ.தி.மு.க.-காரர்களுக்கு இந்தத் திட்டத்தைப் பற்றிப் பேசுவதற்கு எந்தவிதமான ஒரு தார்மீக ஆதரவும் கிடையாது. ஏனென்று கேட்டால், இந்த அவையிலேயே 1995-ஆம் ஆண்டே கிருஷ்ணா நதித் தண்ணீர் வரும் என்று போட்டி போட்டுக்கொண்டு அன்று முதலமைச்சர் அவர்களே சொன்னார்கள். சென்னைக்கு 1995ஆம் ஆண்டு கிருஷ்ணா நதித் தண்ணீர் வரும் என்று ஆந்திரா முதலமைச்சரும் நம்முடைய முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவும இந்த அவையிலேயும் தெரிவித்தார்கள். இந்த சபையிலே, முன்னாள் நீர்ப்பாசனத் துறை அமைச்சராக இருந்தவரும் தெரிவித்து இருக்கிறார். முதலமைச்சராக இருந்தவர்கள் அறிக்கை விட்டு இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், ஓராண்டுக்கு முன்னாலே தண்ணீர் வந்துவிடும் என்று நீங்கள் சொன்னதை நம்பிக்கொண்டு, எக்ஸ்பிரஸ் பத்திரிகை 18-5-1993 அன்று, கிருஷ்ணா நதித் தண்ணீரை ஒரு வருடத்திற்கு முன்னாலே வாங்குவதற்கு தமிழகம் தயார் ஆகிவிட்டது என்று எழுதியது.

ஆனால், நாங்கள் சொன்னபடி கிருஷ்ணா நதித் தண்ணீரைக் கொண்டுவந்து கொடுத்து இருக்கிறோம். ஆனால், அந்தத் தண்ணீரைக் கொண்டுவருகிறபோது, ஏற்கெனவே கால்வாயிலே ஒரு மலைப் பகுதியிலே இருந்த பாறைகளை உடைத்து எடுக்கிறபோது, தரைமட்டத்திற்கு அந்த பாறைகளை உடைத்து எடுக்கிறபோது,





அந்தப் பாறையின் வெடிப்பிலே இருந்த உள் துவாரத்தின் வழியாக ஒரு கசிவு ஏற்பட்டது. பிறகு, அந்த கசிவை அடைப்பதற்குள்ளாக, பெருமழை பொழிந்து, சில இடங்களிலே கால்வாய்களிலே உடைப்பு ஏற்பட்டு, கடந்த டிசம்பர் மாதத்திலே பெருத்த வெள்ளத்தால கால்வாய்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. புதிய கால்வாயிலே கசிவு ஏற்படுவது என்பது தவிர்க்க முடியாதது. பக்ராநங்கலிலேகூட அதைக் கட்டியபிறகு உடைப்பு வழியே கசிவு ஏற்பட்டு இருக்கிறது. இதுகுறித்து நீர்ப்பாசனத் துறையைச் சேர்ந்தவர்களுக்குத் தெரியும். ஆனாலும, இன்றைக்கு அதைப் புதுப்பிக்கிற பணியிலே நம்முடைய மாநில அரசினுடைய என்ஜினியர்களும் ஆந்திர மாநில அரசினுடைய என்ஜினியர்களும் சேர்ந்து ஒரு ஜாயின்ட் கமிட்டி போட்டு, அங்கே துரிதமான வேலைகள் ஆரம்பிப்பதற்காக, இன்றைக்கு ஆந்திர அரசு பணத்தை ஒதுக்கி இருக்கிறது. 400 கோடி ரூபாய் என்றெல்லாம் சொன்னார்கள்; (குறுக்கீடு) 4 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) 5 கோடி ரூபாயில் அவர்கள் திட்டத்தைப் போட்டு இருக்கிறார்கள். அவர்கள் எங்களிடத்திலே கொடுத்திருக்கிற கணக்குப் பிரகாரம், வருகிற ஜூலை மாதம் முதல் தேதி சென்னை மாநகரத்திற்கு தண்ணீர் திறந்துவிடுகிற அளவிற்கு நாங்கள் பணிகளை வேகமாக ஆற்றித் தருகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். இப்போது போதிய அளவுக்கு நம்மிடத்திலே தண்ணீர் இருக்கிறது. சுமார் 7½ டி.எம்.சி. தண்ணீர், பூண்டி, புழல், சோழவரம் ஆகியவற்றில் இருக்க வேண்டும். ஆனால், ஆறே முக்கால் டி.எம்.சி.-க்கு மேலே தண்ணீர் இருக்கிறது. ஜூன் மாதம் 30ஆம் தேதி வரையிலே இத்தண்ணீர் போதிய அளவுக்கு-இப்போது நாம் எடுக்கிற அளவுக்கு எடுத்தால்கூட--ஜூலை மாதம் 1ஆம் தேதி 3½ டி.எம்.சி-க்கு மேலே தண்ணீர் பாக்கி இருக்கும். எனவே, அந்த வகையில் நமக்கு எடுப்பதற்காக 7½ டி.எம்.சி. தண்ணீர், கண்டலேறு ரிவர் அணைக்கட்டிலே தேக்கி வைத்து இருக்கிறார்கள். எனவே, எந்தப் பிரச்சினையைக் கொண்டும், மக்களுக்கு குடிநீர்ப் பிரச்சினை இனி வராது. தண்ணீர் கொண்டு வந்து இருக்கிறோம்; கொண்டு வந்த பிறகு ஏற்பட்ட சில நடைமுறைகளிலே உள்ள பாதகங்களை நிவர்த்தி செய்கிற பணியிலே ஈடுபட்டு இருக்கிறோமே தவிர, மக்களை ஏமாற்ற வேண்டும் என்றோ, *<u>உண்மைக்கு மாறான தகவலையோ இந்த அரசு தரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) மன்னிக்க</u>

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

வேண்டும். 4 கோடி ரூபாய் அல்ல; 5 கோடி ரூபாயை ஆந்திர அரசு தான் செலவு செய்கிறது. அதற்குப் பணத்தை ஒதுக்கிவிட்டார்கள்; டெண்டரையும் விட்டுவிட்டார்கள்; ஒர்க் ஆர்டரையும் கான்ட்ராக்டிலே கொடுத்து விட்டார்கள்; வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அரசு கிருஷ்ணா நதித் திட்டத்திற்காக எதுவுமே செய்யவில்லை என்று அமைச்சர் கூறுவது தவறு. 1995-ஆம் ஆண்டு இறுதியில் ஹைதராபாத்திலே நடைபெற்ற கூட்டத்தில் என்.டி. ராமராவ் அவர்களும் எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களும் பேசி, இறுதியாக 300 கன அடி தண்ணீர் சனவரி மாதம் வருவதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று அவர்கள் கூறி இருக்கின்றார்கள். அதற்காக கிட்டத்தட்ட 177 கோடி ரூபாய்கூட செலவு செய்து இருக்கிறார்கள் என்பதை நம்முடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

நீங்கள் கவர்னர் உரையிலே கூறி இருப்பது 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் வந்து சேர்ந்துவிட்டது. சரி, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த முயற்சியின் பலனாக, சென்னை மாநகரத்தில் தினசரி குடிநீர் விநியோகம் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு 440 மில்லியன் லிட்டர் அளவுக்கு உயர்த்தப்பட்டு உள்ளது என்று குறிப்பிட்டு இருக்கிறீர்கள். அந்த தண்ணீர் வந்ததன் பயனாகத்தான் 440 மில்லியன் லிட்டர் வந்ததா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். தற்போது அந்தத் தண்ணீர் வந்திருக்கிறதா?

நண்பகல் 12-00

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதி தண்ணீர் வந்திருக்கிறது. ஆனால் இப்போது ரிப்பேர் செய்யப்படுகிற காரணத்தால், தண்ணீர் நிறுத்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும் போதிய அளவுக்கு நம்மிடத்திலும் தண்ணீர் இருக்கிற காரணத்தால், இப்போது குறிப்பிட்ட அளவுக்கும், தேவையான அளவுக்கும் மக்களுக்குத் தண்ணீரைத் தந்து கொண்டிருக்கிறோம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்த தண்ணீர் வந்ததன் பயனாகத்தான் 440 மில்லியன் லிட்டர் அதிகமாக வந்திருக்கிறது என்று நீங்கள் குறிப்பிட்டிருப்பதைத்தான் நான் மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறேன்.



அடுத்ததாக, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை. சென்னை நகரில், ரவுடிகளின் சாம்ராஜ்யம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. பட்டப்பகலிலே மைலாப்பூரிலே பெருமாள் கோயிலில் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் வந்த எட்டு மாத காலத்தில், 6 வெடிகுண்டு சம்பவங்கள் நடந்திருக்கின்றன. நேற்றுக்கூட தூத்துக்குடியில் ஒரு வெடிகுண்டு வெடித்ததாகச் செய்திகள் வந்திருக்கின்றன. வெடிகுண்டு கலாச்சாரம் இருக்கிறதா என்று பேசியவர்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள் என்றே எனக்குத் தெரியவில்லை. அதுவும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால், இந்து முன்னணியினர் திட்டமிடப்பட்டு கொலை செய்யப்படுகிறார்கள். சென்னை நகரில் ரங்கநாதன் என்ற இந்து முன்னணியைச் சேர்நதவர் படுகொலை செய்யப்பட்டார். திண்டுக்கல்லில் எஸ்.டி.மாணிக்கம், செல்வராஜ் என்ற இரண்டு பாரதீய ஜனதா கட்சித் தொண்டர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். உத்தமபாளையம் ஆறுமுகம் என்ற இந்து முன்னணியைச் சேர்ந்தவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். ராமநாதபுரத்திலே ஆர்.எஸ்.எஸ். அமைப்பாளர் குப்புராஜ் அவர்களைக் கொல்வதற்காக முயற்சி நடந்திருக்கிறது. இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஒரு தீவிரவாத இயக்கம் வெளி மாநிலத்திலேயிருந்து வந்து, நம்முடைய தமிழகத்திலே....(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருமை நண்பர் சுந்தரம் அவர்கள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பதை எங்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இவருக்கும் அந்தத் தீவிரவாத இயக்கத்திற்கும் தொடர்பு இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** வெளிமாநிலத்திலிருந்து ஒரு தீவிரவாத இயக்கம் வந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதை நீங்கள் இரும்புக்கரம் கொண்டு தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

வெள்ள நிவாரணத்தைப் பொறுத்தவரையில் வெள்ள நிவாரணத்தின் அளவு 1000 கோடி ரூபாய் என்று நமது முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். 625 கோடி ரூபாய் மத்திய அரசைக்

கேட்டிருக்கிறோம் என்று கூறினார்கள். ஆனால் அவர்கள் கொடுத்ததோ 25 கோடி ரூபாய். இது முதல் தவணை என்று நினைக்கிறேன். இரண்டாவது தவணை வந்ததா இல்லையா என்று எனக்குத் தெரியாது. எப்படி ஆந்திராவில் வெள்ளம் ஏற்பட்டபோது, திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் மத்திய அரசைத் தட்டிக்கேட்டு 2, 3 முறை அதிக நிதியைக் கேட்டுப் பெற்றார்களோ, அதைப்போல நம்முடைய முதல்வர் அவர்களும் மத்திய அரசிடம் அதிக நிதி உதவுமாறு கேட்டு வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்று சொன்னீர்கள். உறவுக்குத்தான் நீங்கள் கை கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், உரிமைககு நீங்கள் ஏன் குரல் கொடுக்கவில்லை என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அதேபோல், வெள்ள நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரையில் சரியாகச் செயல்படவில்லை என்று நான் கூறுகிறேன். எங்களுடைய கட்சி உறுப்பினர் அவர்கள் பேசியபோது, பட்டியல் இருக்கிறதா என்றுகூட நம்முடைய முதல்வர் அவர்கள் கேட்டார்கள். நான் வைத்திருக்கிறேன். அதைப் பொறுத்தவரையில், நிறைய பட்டியல்கள் எங்களிடம் இருக்கின்றன. கிராம மக்கள் அனைவரும் சாலை மறியலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதேபோல், நேற்றுகூட விவசாய சங்கத்தினர் ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். வேப்பந்தட்டை யூனியனில் நிவாரண உதவிக்காக எதுவுமே தராமல், விவசாயிகளிடம் இவ்வளவு ரூபாய்க்கு செக் பெற்றுக் கொண்டேன் என்று கையெழுத்து வாங்குகிறார்கள் என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் நான் பேசவேண்டுமானால், ஒரு மணி நேரம் ஆகும். இதை வேண்டுமானால் உங்களுடைய பார்வைக்குக் கொண்டுவருவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

என்னுடைய ராசிபுரம் ஒன்றியத்தில் கடந்த 23ந் தேதி வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்று வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பத்திரிகையில் செய்தி அளித்தார்கள். ஆனால் 22,23 தேதிகளில் நான் தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்ட போது, வெள்ள நிவாரண உதவி தருவதற்காக எந்த அதிகாரியும் அங்கே வரவில்லை என்று டெலிபோனில் கூறியிருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மீனவர்களைப் பொறுத்தவரையில், ராமேஸ்வரத்திலிருந்து கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது, மீனவர்கள் சுட்டுக்



கொல்லப்படுகிறார்கள் என்ற செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இதைப் பொறுத்தவரை நம்முடைய முதல்வர் அவர்கள் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஐ.கே. குஜ்ரால் அவர்களிடத்தில் பேசியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். குஜ்ரால் அவர்கள் இலங்கையில் போய்ப் பேசும்போது, இந்தப் பிரச்சினையைப் பற்றி பேசவில்லை. விடுதலைப் புலிகள் பிரச்சினை வேண்டுமானால் அவர்களுக்கு உள்நாட்டுப் பிரச்சினையாக இருந்திருக்கலாம். ஆனால் மீனவர்கள் சுடப்படுவது உள்நாட்டு பிரச்சினையா? நீங்கள்......

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள், திரு. குஜ்ரால் அவர்களிடம் பேசிய செய்திகள் எல்லாம் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. அதற்குப் பிறகும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசவில்லை என்று இந்த அவையில் பேசுவது ஒரு தவறான கருத்தை ஏற்படுத்தும். அது இலங்கைத் தமிழர்களுக்கு நல்லதல்ல.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** முதல்வர் அவர்கள், குஜ்ரால் அவர்களிடம் பேசவில்லை என்று நான் சொல்லவில்லை. முதல்வர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஆனால் குஜ்ரால் அவர்கள் அங்கே இலங்கைக்குப் போய் அதைப் பற்றிப் பேசவில்லை என்றுதான் நான் கூறுகிறேன். அதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குஜ்ரால் அவர்கள் பேசவில்லையென்று எதை வைத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள்? அவர் பேசவில்லை என்று மாண்புமிகு உறுப்பினருக்கு எப்படி தெரியும்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்குப் பதில் உறுப்பினரே சொல்லட்டும். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளில் வந்த செய்திகள், அவர் வெளிநாட்டுக்கு, இலங்கைக்குச் சென்று திரும்பிய பின்னாலே, பத்திரிகை பேட்டியிலே அவர் சொல்கிறபோது, இது வெளிநாட்டினுடைய பிரச்சினை, இதிலே இந்தியா தலையிடாது

என்று மட்டும்தான் சொல்லியிருக்கிறார். இதுபற்றி பேசினோம் என்றோ, பேசிய விவரங்களையோ குஜ்ரால் அவர்கள் பத்திரிகையில் தரவில்லை. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குஜ்ரால் அவர்களிடத்தில் பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது, இலங்கையிலே இருக்கிற உள்நாட்டு பிரச்சினையிலே நான் தலையிட விரும்பவில்லை என்றுதான் சொல்லிச் சென்றிருக்கிறார்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் கேட்கிறேன். இராமேசுவரம் மீனவர்கள் மீது அவர்கள் சுடுவதில் நம்முடைய பிரச்சினையும் இருக்கிறது. இதிலே மத்திய அரசை நீங்கள வலியுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, கள்ளச் சாராயம் பொறுத்தவரையில் நம்முடைய ஞானசேகரன் அவர்கள் விளக்கமாக நேற்றைக்குக் கூறினார்கள். சென்றக் கூட்டத் தொடரில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது கள்ளச் சாராயப் பானைகள் மீது துப்பாக்கி பாயும் என்று கூறி இருக்கிறார்கள். கள்ளச்சாராயத்தைப் பொறுத்தவரையில் சேலத்தில்தான் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு பின்னால்தான் மற்றவை. சேலம், கருங்குளம், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் எல்லாம் கள்ளச் சாராய சாவுகள் நடந்திருக்கின்றன. ஆகவே, இதிலே முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பாராட்டி இருக்கிறார்கள். இந்த கவர்னர் உரையிலே ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அதிகமாக கட்டிடங்கள் கட்டப்பட இருக்கின்றன என்று கூறினார்கள். வேறு எதையும் பாராட்ட முடியாத காரணத்தால்தான் அவர்கள் இதைப் பாராட்டியிருக்கிறார்கள என்று நினைக்கிறேன். இருந்தபோதிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டடங்களைப் பொறுத்தவரையில் அங்கு செல்வதற்கு எந்த டாக்டரும் தயாராக இல்லை. 'எங்களுக்கு எந்த வசதியும் இல்லை; எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தால் தான் நாங்கள் செல்வோம்' என்று அவர்கள் போர்க்கொடி தூக்கி இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.



சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பொறுத்தவரையில் இந்த அரசு அவனைப் பிடிப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவன் செய்திகளைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறான்; டேப்பை அனுப்பிக் கொண்டே இருக்கிறான். இந்த அரசு இதுவரையில் என்ன செய்து கொண்டிருக்கிறது என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சந்தனக் கடத்தல் வீரப்பனுக்கு பொது மன்னிப்பு கொடுக்கலாம் என்று நீங்கள் (மணியடிக்கப்பெற்றது) அரசு நினைத்தால் அந்தச் சந்தனக் கடத்தல் வீரப்பன் மூலமாக இறந்த அரசு அதிகாரிகள், உயர் போலீஸ் அதிகாரிகள் மற்றும் அப்பாவி மக்களுடைய ஆத்மா உங்களையெல்லாம் சும்மா விடாது என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி அடுக்கடுக்கான பிரச்சினைகள்....(குறுக்கீடு)

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஐந்தாண்டு காலம் ஆண்டது. அப்போது சந்தனக் கடத்தல் வீரப்பன் எங்கே போனான்? அவனைப் பிடிப்பதற்கு தனி போலீஸ் படை அமைத்தார்களே, அவனைப் பிடிக்க முடிந்ததா? இதையெல்லாம் விட்டுவிட்டு எதையோ இங்கே பேசுவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஐந்தாண்டு காலம் நடைபெற்றபோது தான் போலீசார் பலர் இறந்திருக்கிறார்கள்; சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள்; அதைப்போல பொது மக்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆத்மாதான் உங்களை வீட்டுக்கு அனுப்பியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி. ஆர். சுந்தரம்.** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆட்சியில் போலீஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்றால் சந்தனக் கடத்தல் வீரப்பனை பிடிப்பதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளின்

பயனாகத்தான் அவர்கள் சென்றார்கள்; அதனால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றுதான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரிடத்திலே நெருங்கிய தொடர்பு சந்தனக் கட்டை வீரப்பனுக்கு உண்டு என்பதை நாடு அறியும்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி அடுக்கடுக்கான பிரச்சினைகள். இன்னும் எவ்வளவோ கூறிக்கொண்டே போகலாம். பஞ்சாயத்து தேர்தல், கூட்டுறவு தேர்தல் இவற்றையெல்லாம் நான் பட்ஜெட் விவாதத்தில் பேசிக் கொள்ள இருக்கிறேன். இப்படி பல பிரச்சினைகள் இருக்கும்போது இந்த அரசுக்கு ஒரே ஒரு பிரச்சினைதான் இருக்கிறது. புரட்சித்தலைவர், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எப்படியாவது ஒழிக்க வேண்டும், அழிக்க வேண்டும் என்றுதான் நீங்கள் தினமும் சிந்தனை செய்து கொண்டிருப்பதால்தான் இந்த 7, 8 மாதங்களில் எந்தவிதமான வளர்ச்சிப் பணிகளும் நடக்கவில்லை என்று சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்...(குறுக்கீடு)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை தீவிரமாக ஒழித்துக் கொண்டிருப்பது ஜெயலலிதா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி).

*பிற்பகல் 12-10*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் மீது பொது மக்களுக்கு, குறிப்பாக தாய்மார்களுக்கு அனுதாபம் ஏற்பட்டதைப் பார்த்து இந்த அரசுக்கு ஒரு கிளி பிடித்துவிட்டது....(சிரிப்பு) (குறுக்கீடு) அதனால்தான்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதாவது கிளியா கிலியா என்று....



**திரு. பி. ஆர். சுந்தரம்:** கிலி, பயம். இந்த அரசுக்கு ஒரு பயம் ஏற்பட்டுவிட்டது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதற்காகத்தான் அவருடைய புகழுக்குக் களங்கம் விளைவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் நீங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். எங்களுடைய தலைவர்கள் மீது *உண்மைக்கு மாறான வழக்கு போடுகிறீர்கள். ஒரு குற்றத்தையே திரும்பத் திரும்பச் சொல்லி கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, களங்கத்தை மட்டுமே புகழாகக் கொண்டவர்தான் ஜெயலலிதா.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதம் வேறு ஏதோ திசையில் போகிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர் இங்கே உரையாற்றுகிறபோது சொன்ன கருத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொல்வது சரியல்ல. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை, சி.பி.ஐ.யை, திரு. நல்லகண்ணு, பொதுச் செயலாளர்தான் அழித்துக் கொண்டிருக்கிறார் என்று நாங்கள் சொன்னால் அதை எப்படி இங்கே இருக்கிற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்களோ, அதைப்போல, எங்கள் கழகத்தினுடைய பொதுச் செயலாளராக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் அந்தக் கட்சியை அழிக்கிறார்கள் என்று சொல்வது எந்தவிதத்திலேயும் நியாயமான வாதம் அல்ல. அவர் அப்படிச் சொல்வது தவறு. அதைச் சபைக்குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டும். அது சரியில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு என்னுடைய வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களுடைய கூற்றைத்தான் இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் தெரிவித்தார்கள். அனைத்திந்திய அண்ணா

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

திராவிட முன்னேற்றக் கழகத்தை அந்த அம்மையார் அழித்துக் கொண்டிருக்கிறார் என்று சென்ற பத்தாவது சட்டமன்றத்திலே நம்முடைய நண்பர் கூறியதை இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆனால், ஒரு அரசாங்கமே சிறைக் கூண்டிலே இருந்தது. இப்போது மீண்டும் எப்படியாவது, தத்தளித்து பிழைத்துக் கொள்ளலாம் என்று எண்ணுவது, அது நாட்டுக்கு நல்லதல்ல.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், தன்னுடைய பாதுகாப்பிற்காகச் சொன்ன விஷயத்தை நான் பெரியதாக எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக அவர் சொன்னதற்காக நான் சொல்கிறேன். என்னுடைய பாதுகாப்பைப் பற்றி நான் எப்போதுமே கவலைப்பட்டதில்லை. அதாவது இயக்கத்தின் சார்பாக சொல்கிற போது, அந்தக் கருத்துக்கள் நியாயமானதாக இருக்க வேண்டும் என்பதற்காக நான் மறுப்பு சொன்னேன்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** ஊழலை ஒழிப்பதற்காக ஓட்டு மொத்தமாக அவதாரம் எடுத்ததாக பேசிக் கொண்டிருக்கிற நீங்கள், சர்க்காரியா கமிஷன் முன்பு குற்றவாளியாக நிறுத்தப்பட்டதை இந்த நாடு இன்னும் மறந்துவிடவில்லை. சி.பி.ஐ. முன்பு, இரண்டு வழக்குகளில், கோதுமை பேர ஊழல், பூச்சி மருந்து ஊழல் ஆகிய இரண்டு வழக்குகளை சி.பி.ஐ. தொடுத்தபோது, நீங்கள் எல்லாம் இந்திரா காந்தி அவர்களிடம் மன்றாடி அந்த வழக்கை வாபஸ் பெற்றதையும் இந்த நாடு மறந்துவிடவில்லை என்பதை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) நான் ஏன் பேசக் கூடாதா? (குறுக்கீடு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, அவையில் உண்மைக்கு மாறான ஒன்றை இட்டுக்கட்டி, வேண்டுமென்றே யாரோ சொல்லிக் கொடுத்ததை இங்கே சொல்லி அங்கே போய் பாராட்டைப் பெறுவதற்காக உறுப்பினர் அவர்கள் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். சர்க்காரியா கமிஷனிலே போடப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்கவேண்டும் என்று இந்திரா காந்தி இடத்திலே போய் யாரும் முறையிடவும் இல்லை; மன்றாடிக் கேட்டுக் கொள்ளவும் இல்லை. அவர்களுக்கே சாட்சிகள்,



ஆதாரங்கள் இல்லாத காரணத்தால், அவர்கள் அதை வாபஸ் வாங்கினார்கள். அதுமாத்திரமல்ல, எங்கள் மீது புகார் கொடுத்த எம்.ஜி.ஆர். அவர்களே, 'அதைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது' என்று சொல்லிவிட்டார். 'I have no knowledge about this' என்று அப்பட்டமாக அருமை எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தப் புகார்களைப் பற்றி சர்க்காரியா கமிஷனுக்கு எழுதிக் கொடுத்து விட்டார். இதையெல்லாம் நம்முடைய நண்பர் அவர்களுக்குத் தெரியாது என்று கருதுகிறேன். அல்லது தெரிந்ததை மறைத்துக் கொண்டு பேசுகிறார் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். நிறைய நேரம் ஆகிவிட்டது.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இன்று எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்திருக்கிற நீங்கள், உங்களுடைய சொத்து.....(குறுக்கீடு) ஜாமீனில் வந்திருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள். அவர் பேசட்டும், பதில் சொல்வதற்கு அமைச்சர்கள் இருக்கிறார்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்கள் உங்களுடைய சொத்துக் கணக்குகளைக் காட்ட வேண்டும் என்று இந்த நாடே எதிர்பார்க்கிறது. அதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே 1972 ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், இப்படி ஒரு சட்டமே கொண்டுவரப்பட்டு, உத்தரவே போடப்பட்டு, எல்லோரும் சொத்துக் கணக்கை அவையிலே வைக்க வேண்டும் என்று சொல்லி, எல்லோரும் சொத்துக் கணக்கை அவையிலே வைத்திருக்கிறார்கள். அப்போது யார் யார் வைக்கவில்லை என்பது எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். அசெம்பிளியினுடைய செக்ரட்டேரியட்டிலிருந்து யார் யாருக்கு 13 முறை, 14 முறை நோட்டீஸ் எல்லாம் சென்றது, யார் யார் சொத்துக் கணக்கை வைக்கவில்லை என்பதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் உணர்ந்துகொள்வது நல்லது.

பிற்பகல் 12-15

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஆகவே, எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அழித்துவிடலாம், ஒழித்து விடலாம் என்று நீங்கள் நினைக்காமல் நீங்கள் ஆக்கபூர்வமான பணிகளைச் செய்து மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டுமென்று கூறி, வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் உரையாற்றுகின்றபோது *என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார். அவற்றையெல்லாம் உண்மைக்கு மாறான என்று மாற்றிக்கொள்ளவும். திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அவையில் ஆற்றிய உரையின்மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே, கடந்த மே மாதம் நடைபெற்ற ஆளுநர் உரையில் காட்டப்பட்ட, சொல்லப்பட்ட அவ்வளவு வேலைகளும் மிகச் சிறப்பாக நடைபெற்றிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, 10 ஆண்டுகாலம் முடக்கப்பட்டிருந்த உள்ளாட்சி ஜனநாயகம் என்பது மக்களுக்கு மீண்டும் வழங்கப்பட்டிருப்பது அனைத்துத் தரப்பினராலும் வரவேற்கப்பட்டிருக்கிறது. அடிப்படை வேலைகளைத் துவக்கியிருக்கின்ற ஒரு நல்ல சூழ்நிலையை நானும் மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல கூட்டுறவுத் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டிருப்பதும் வரவேற்கத் தகுந்த நடவடிக்கை. இந்தத் தேர்தலில் ஒன்றை பரவலாக விவசாயப் பெருமக்களிடத்திலிருந்து வந்திருக்கிற கருத்தை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக, பால் கூட்டுறவுச் சங்கங்களில் 120 நாட்களுக்கு பால்

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

222606.
D
V.211, 31 NOV



ஊற்றியிருந்தாலோ, அல்லது 300 லிட்டர் பால் ஊற்றியிருந்தாலோ அவர்களுக்குத்தான் வாக்குரிமை இருக்கிறது என்கிற ஒரு விதியை திருத்தியிருப்பதாக மிகவும் கவலைப்படுகிறார்கள் விவசாயப் பெருமக்கள். அதிலே உண்மையிலே பால் உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்தியாளர்களுடைய கூட்டுறவுச் சங்கங்களுடைய ஜனநாயகத்தைப் பாதுகாப்பதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று அவர்களின் சார்பாக வந்திருக்கிற கருத்தை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதுபோன்று சென்றக் கூட்டத் தொடரின்போது அறிவிக்கப்பட்டபடி இலக்கியப்பேராசான் ப. ஜீவானந்தம் அவர்களுடைய பிறந்த பூமியில் அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டது. அதேபோல் தென்னகத்தின் முதல் கம்யூனிஸ்டும் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தினுடைய முதல் அமைப்பு மாநாட்டிற்குத் தலைமை தாங்கியவருமான சிந்தனைச் சிற்பி சிங்காரவேலருடைய பெயரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு வைத்திருப்பதற்கும் எங்களுடைய கட்சியின் சார்பாக மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோல் தொழில் முதலீட்டாளர்களுடைய நன்மையைக் கருதி தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சி குறித்து நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையிலே மிகவும் கவனம் செலுத்தி, அதிலே முதலீட்டாளர்களிடமிருந்த அச்சத்தையெல்லாம் போக்கி, தமிழகம் மீண்டும் தொழில் வளர்ச்சியிலே முதலிடம் பெறும் என்கிற நம்பிக்கையை உருவாக்கியிருக்கிறார்கள். அதற்கு உண்மையிலேயே நான் மிகுந்த மகிழ்ச்சியை அவருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த முதலீட்டாளர்கள் அரசினுடைய பல்வேறு சலுகைகளைப் பெறுவதற்கு, அரசினுடைய பல்வேறு உதவிகளைப் பெறுவதற்கு முயற்சி எடுக்கின்ற அதேநேரத்தில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படக் கூடிய குறைந்தபட்ச தேவைகளைக் கூட வழங்காத பல சூழ்நிலைகள் இருப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நீங்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கை, தொழிலாள வர்க்கத்திற்கு மிகுந்த நம்பிக்கையை ஊட்டியிருக்கிறது. பின்னி நூற்பாலை விஷயத்திலே நீங்கள் எடுத்த முடிவும், அறிவித்த அறிவிப்பும், தொழிலாளர்களுக்கு மிகப் பெரிய நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது. அதுமாத்திரமல்ல, நேற்றைக்குக்கூட

தொழிலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடனேயே அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் எல்லாம் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தார். அவையெல்லாவற்றின் மூலம் தொழிலாளர் நலனில் திராவிட முன்னேற்றக் கழக அரசு, நமது அரசு வைத்திருக்கின்ற க்ஷேமநல அக்கறை குறித்து வெளிப்படுத்தியது மிகுந்த நம்பிக்கை கொடுத்திருக்கிறது. அடுத்து ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தொழிலாளர்களுடைய போராட்டம் நடைபெறுகிறபோது, காவல் துறையினர், ஒருவேளை தொழிலாளர் இயக்கத்தில் தவறு நடக்குமானால், அதற்குரிய வழக்குகளைப் பதிவு செய்யாமல், வேண்டுமென்றே 506, பார்ட் 1, பார்ட் 2 என்ற பிரிவுகளில் வழக்குகளைப் பதிவு செயது, மிகுந்த பணச் செலவிற்கும், மன உளைச்சலுக்கும் அவர்களை ஆளாக்குகிறார்கள். சமீபத்தில், பெரியார் மாவட்டத்தில், தனியார் போக்குவரத்துத் துறை தொழிலாளர்கள் போராடுகிறபோது, இப்படிப்பட்ட வழக்குகளை சத்தியமங்கலத்திலே பதிவு செய்திருக்கிறார்கள்; திருப்பூரிலே பதிவு செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-20*

அதேபோல, நம்முடைய அரசு அமைந்ததற்குப் பிறகு, ஊழல் தொடர்பான நடவடிக்கைகளை, மிக உறுதியோடு எடுத்து வருவது, தமிழகத்தினுடைய அனைத்து மக்களிடையே குறிப்பாக பெண்கள் மத்தியிலே மிகுந்த வரவேற்பு அதற்குக் கிடைத்திருக்கிறது என்பதை நான் அனுபவபூர்வமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நடமாடும் நகைக் கடைகளாக அவர்கள் எல்லாம் காட்சியளித்த புகைப்படங்கள் பத்திரிகையிலே வந்தபோது, ஒவ்வொருவரும் கையை நெட்டித்து, இவர்கள் எல்லாம் ஒழிந்து போகட்டும் என்று சாபம் கொடுத்த காட்சியினை பல்வேறு இடங்களில் நான் பார்த்திருக்கின்றேன். அப்படி உறுதிமிக்க ஊழல் நடவடிக்கைகளை எடுத்தது மாத்திரம் அல்ல, எதிர்காலத்திலே ஊழலே நடைபெறாமல், எள் முனை அளவுக்கும் ஊழலே நடைபெறாமல் ஒரு தூய்மையான நிர்வாகத்தை அமைப்பதற்கான ஒரு நிர்வாக நடவடிக்கைக்கு உத்தரவாதம் இந்த ஆளுநர் உரையிலே இருப்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கின்றேன்.



ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையில், சென்ற ஆளுநர் அறிக்கையிலே குறிப்பிட்டதைப்போல, இந்த ஆளுநர் அறிக்கையிலேயும் 300 சுகாதார நிலையங்கள் உடனடியாக அமைக்கப்படும் என்று தெரிவித்திருப்பது, கிராமப்புற மக்களுக்கு, அதுவும் குறிப்பாக வறுமையிலே வாழ்ந்து கொண்டிருக்கிற சாதாரண மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில், மருத்துவர்களும், அவர்கள் பணியாற்றும் விதமும் இன்னும் போதுமான அளவிற்கு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பெருந்துறை, வட்டத் தலைநகராக இருக்கிறது என்பதைக் கருத்திலே கொண்டு, அங்கேயுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தினுடைய நிலையை உயர்த்தி, ஒரு வட்டத் தலைமை மருத்துவமனையாக அறிவித்து, அதிலே அபிவிருத்தி வேலைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஆளுநர் அறிக்கையிலே முத்திரைக் கட்டணம், பத்திரப் பதிவு குறித்து கவனம் செலுத்துவதாக, அதிலே சீர்திருத்தம் செய்யப்போவதாகச் சொல்லியிருப்பது ரொம்ப சரியான நடவடிக்கை. அதிலே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்தில், ‘கைட்லைன்ஸ் வால்யூ’-- ‘வழிகாட்டு நிலமதிப்பு’-- தயாரிக்கிற முறை இருந்து, அதற்கென்று ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி, அவ்வப்போது அவர்கள் களப் பணிக்குச் சென்று, இருக்கக்கூடிய நிலைமைகளையெல்லாம் கவனித்து, ஆவன செய்து வருவார்கள். ஆனால், இப்போது அப்படிப்பட்ட நடைமுறை இல்லாத காரணத்தினாலே, அதிலே பெரிய தவறுகள் நடைபெறுவதற்கும், பெரிய மோசடிகள் நடைபெறுவதற்கும் வாய்ப்பிருக்கிறது. இதையெல்லாம் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுத்துறை நிறுவனங்களை வலுப்படுத்துவதற்காக சிறந்த நிபுணர் குழுவை அமைப்பது என்ற நிலை பாராட்டுக்குரியது. அதுபோல், ஆதிதிராவிட மக்கள் மற்றும் பழங்குடியினர் நலன் குறித்தும் அக்கறை செலுத்தப்பட்டிருப்பது வரவேற்புக்குரியது. ஆனால், அதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரசினுடைய அனைத்துத் துறைகளையும் கொஞ்சம் கவனப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. மனைப் பட்டா இல்லாமல் அதாவது குடியிருக்கும் மனைக்குச் சொந்தப் பட்டா இல்லாமல், குடிமனை

இருந்தும் அந்த வீட்டுக்கு, குடியிருப்புக்குச் செல்ல பாதையில்லாமல் கஷ்டப்படுகிற ஏழை மக்கள், குறிப்பாக ஆதிதிராவிட மக்கள் அனுபவிக்கக்கூடிய கொடுமைகளை அதுவும் எடுத்துச் சொன்னால்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் தொகுப்பிலிருந்து ஒரு இணைப்புச் சாலை வரவில்லை என்று இதுவரையிலும் இருந்தது இல்லை. புதிதாக சென்றக் கூட்டத் தொடரில் நாம் முடிவு எடுத்து, அதேபோல் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆங்காங்கே அதிகாரிகளைக் கேட்டிருக்கிறோம். தகவல்கள் சில வந்தும், வராததுமாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பேற்று, அதுபோன்ற இடங்கள் எவை எவை என்று எனக்கு எழுதிக் கொடுத்தால் உடனடி நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

**திரு. நா. பெரியசாமி:** உரிய முறையிலே,உரிய அதிகாரிகள் வழியாக கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அதிலே, சமூகக் கொடுமைகள் அதிகமாக நடைபெறுகின்றன. குறைந்த கூலிக்கு வேலை செய்ய வேண்டுமென்ற நிர்பந்தம் அதிலே வருகின்றது. பாதை இல்லாத காரணத்தினால், அந்த சமூக நிர்பந்தத்திற்கு அவன் ஆளாக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதிலே ஒரு தீர்வு ஏற்படுத்துவது என்பது, சாதாரண ஆதி சூத்திரர்கள் என்று சொல்லக்கூடிய அந்த மக்களுக்கு, நீதி வழங்கப்படுவதாக அமையும் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

பெருந்துறைத் தொகுதியைப் பொறுத்த வரையில், மிகவும் வறட்சி பாதிப்பு இருக்கக்கூடிய ஒரு தொகுதி. அதிலே நிலத்தடி நீர் என்பது மிகக் கடுமையான அளவுக்கு, எண்ணிப் பார்க்கவே அச்சப்படுகிற அளவுக்கு 600 அடி, 900 அடி வரைக்கும் நிலத்தடி நீர் கீழே சென்றுவிட்டது. அந்த நிலத்தடி நீரை உயர்த்துவதற்கு, எந்த நடவடிக்கை எடுத்தால் பொருத்தமாக இருக்கும் என்று ஆய்வு செய்ய வேண்டும். அதிலே குறிப்பாக இப்போது 134 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக பொறியாளர்கள் சொல்கிறார்கள். மூத்த குடிமக்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் மூலமாக பவானிசாகர்



அணைக்கு வரக்கூடிய தண்ணீரில் மிக உபரியாக தண்ணீர் கிடைக்கக்கூடிய காலத்தில், கடந்த 12 ஆண்டுக் காலத்தில், 7 ஆண்டுகளில் உபரித் தண்ணீர் கிடைத்து இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த உபரித் தண்ணீரை குளம், குட்டைகளுக்குக் கொண்டு வந்து அதன் மூலம் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. அது பெருந்துறையிலே மாத்திரம் அல்ல; பக்கத்திலே இருக்கக்கூடிய 6 தொகுதிகளுக்கும் பயன்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே அரசு கவனம் செலுத்த வேண்டும். நிச்சயமாக இந்த நிதிநிலை அறிக்கையிலே, 50ஆவது ஆண்டு விடுதலை நாள் விழாவைக் கொண்டாடக்கூடிய நேரத்தில், அது ஒரு நல்ல அறிவிப்பாக அந்த 6 தொகுதி மக்களுக்கும் கிடைக்கும் என்கிற பெரு நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறோம்.

*பிற்பகல் 12-25*

அதுபோல பெருந்துறையை மையப்படுத்தி 2,800 ஏக்கர் நிலத்தில் தொழில் வளாகம் அமைக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக்கூட நான் விண்ணப்பித்திருக்கிறேன். மத்திய தொழில் அமைச்சர் அவர்களுக்கும் விண்ணப்பித்திருக்கிறேன். மாநில அரசின் சார்பாக, மத்திய அரசின் சார்பாக, ஒரு பெரிய அளவிலான முதலீட்டில் ஒரு தொழிற்சாலையைத் துவங்குவதற்கு முன் முயற்சி எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதிலே தொடக்க விஷயமாக ஈரோட்டிலே ஜன நெருக்கடிகளுக்கு மத்தியில் இருக்கக்கூடிய மஞ்சள் வளாகத்தை, அந்த தேசிய நெடுஞ்சாலையும் இரயில் போக்குவரத்தும் இருக்கக்கூடிய அந்த தொழில் வளாகம் அமையக்கூடிய இடத்திற்கு அனைத்துக் கட்டிடங்களையும் அங்கு மாற்றி, மஞ்சள் வளாகத்தை பெருந்துறையில் அமைத்தீர்களானால் அதைத் தொடர்ந்து வளர்வதற்கு உதவியாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன். புறம்போக்கு நிலத்திலே பட்டா இல்லாமல் குடியிருப்பவர்களுக்கு மின் இணைப்பு தருவதிலே பல சங்கடங்கள் இருக்கினறன. அதிலே நோ அப்ஜக்ஷன் ஆர்டர் கொடுப்பதற்குப் பொருத்தமான இடம் என்று நேரிலே போய் பார்த்து, பொருத்தமான இடம் என்று சொல்ல வேண்டும். நிர்வாக சீர்திருத்தத்தைக் குறித்துக்கூட ஜஸ்டிஸ் இராமானுஜம் தலைமையிலே கமிட்டி போட்டிருக்கிறீர்கள். அதிலே நல்ல கேள்விகள் எல்லாம் அனுப்பியிருக்கிறார்கள். அதிலேயும்

இந்தக் கருத்தைச் சொல்ல முடியும். என்றாலும் நீங்கள் அதுகுறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகத் தெரிவித்து நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். தமிழ்ச்செல்வன்.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பை உருவாக்கித் தந்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் முதல்வர் அவர்களுக்கும், இனமான தலைவர் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆற்காட்டார் அவர்களுக்கும், பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கும், இளைஞர் அணி எழுச்சி நாயகன் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அண்ணன் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் என் நன்றியைச் சமர்ப்பித்து இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என் உரையைத் துவக்குகிறேன்.

மாநிலத்தில் எல்லா மக்களுக்கும் தேவையான குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை அளித்தல், வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்குதல், வறுமையை ஒழித்தல், மாநிலத்தை விரைவாகத் தொழில் மயமாக்குதல், அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் ஆகியவற்றிற்கு ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும் என ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளதை வரவேற்பதோடு அதற்கு நன்றி கூறிக் கொள்கிறேன். அனைத்து கிராமங்களுக்கும் சாலை வசதி, பேருந்து வசதி, குடிநீர் போன்ற மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கித்தர கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தை விரைவர்கத் தொழில் மயமாக்குவதற்குத் தேவையான அறிவுரை நல்கவும் தொழிலதிபர்களுடன் சீரான கருத்துப் பரிமாற்றத்துக்கு வழி வகுக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழுவை அரசு அமைத்துள்ளது. தொழில்மயப்பகுதிகளில் தொழிற்சாலைகள் விரைவில் வருவதை ஊக்குவிப்பதற்காக தொழில் மயப்பகுதி வளர்ச்சி உயர்மட்டக் குழுக்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். எங்கள் அரக்கோணம் பகுதியில், அரசுக்குச் சொந்தமான இரும்பு எஃகு உருக்காலைக்கு



சொந்தமாக கிட்டத்தட்ட 400 ஏக்கருக்கு மேல் அரசுக்குச் சொந்தமாக நிலம் இருப்பதால் அங்கே ஒரு தொழிற்பேட்டையை, அதாவது சிட்கோ மூலம் உருவாக்கவும் வேலையில்லா இளைஞர்களுக்கு அன்று வேலைவாய்ப்பை உருவாக்கவும் கேட்டுக் கொள்கிறேன். 14-4-1972 அன்று எங்கள் முதல்வர் அவர்களால் அன்று தொடங்கப்பட்டு 14-4-1997 அன்று வெள்ளிவிழா கொண்டாட உள்ள அரக்கோணம் இரும்பு எஃகு உருக்காலையை, எங்கள் வேண்டுகோளை ஏற்று கடந்த கூட்டத்தொடரிலே எந்தக் காலகட்டத்திலும் தனியாருக்கு தாரை வார்த்துக் கொடுக்க மாட்டோம் என இந்த மாமன்றத்திலேயே அறிவித்த முதல்வர் அவர்களுக்குத் தொழிலாளர்கள் சார்பாகவும், அரக்கோணம் தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயம் உங்களால் உருவாக்கப்பட்ட அந்தத் தொழிற்சாலை கடந்த இரண்டாண்டுக் காலங்களாக நட்டத்தில் இயங்குவதால் அதை இலாபத்தில் இயக்க தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். தொழிலாளிகள் நல்ல உழைப்பாளிகள். ஆனால் அதற்குண்டான ரா-மெட்டீரியல்ஸ், ஸ்க்ராப்ஸ், தேவையான மின்சாரம் போன்றவற்றை உடனுக்குடன் கிடைக்கச் செய்தால் நிச்சயமாக அந்தத் தொழிற்சாலையை லாபத்தில் இயக்க முடியும் என்று உங்கள் பாதம் பணிந்து வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

அண்மையில் புயல், வெள்ளச் சீற்றத்தினால் தமிழகத்தில் வரலாறு காணாத பாதிப்பு ஏற்பட்டபோது பல மாவட்டங்களுக்கு அமைச்சர் பெருமக்களை அனுப்பி பாதிப்புகளைக் கண்டு அதற்குரிய நிவாரண நடவடிக்கைகளைப் போர்க்கால நடவடிக்கையாக எடுத்து செயல்படுத்திய எங்கள் முதல்வரை இந்த நேரத்தில் மிகவும் பாராட்டுகின்றோம். நன்றி கூறிக்கொள்கின்றோம்.

அதேசமயம் என் தொகுதியில் புயல், வெள்ளச் சீற்றத்தினால் பல சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்தே இல்லாமல் உள்ளது. எனவே, அவைகளை செப்பனிட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். மழையின் அளவு எங்கள் அரக்கோணத்தில் அதிக அளவு இருந்தும் அரக்கோணம் நகருக்கு ரூ. 3 லட்சம் மட்டுமே நிவாரணத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. காரணம் மாவட்டத்திற்கே 30 லட்சம் ரூபாய் மட்டுமே

ஒதுக்கப்பட்டுள்ளது. அருகில் உள்ள செங்கை-எம்.ஜி.ஆர்., செங்கை-அண்ணா, திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய மாவட்டங்களுக்கு கோடிக்கணக்கில் நிவாரணத் தொகை ஒதுக்கி விட்டு எங்கள் வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்திற்கு மட்டும் 30 லட்சம் ரூபாய் மட்டும் ஒதுக்கியது மிகவும் வேதனையளிப்பதாக இருக்கிறது. எனவே, எங்கள் மாவட்டத்திற்கு, பற்றாக் குறையாக உள்ளதால், எங்கள் முதல்வர் அவர்களே, எங்கள் வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் 10 கோடி ரூபாயாவது ஒதுக்கித்தரும்படி இந்த நேரத்தில் உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தால் சென்னை மாநகரம் என்ன ஆகுமோ என அஞ்சி நடுங்கிய நேரத்தில் நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அண்ணன் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் இரவு, பகல் என்று பாராமல் சுறுசுறுப்பாக ஆற்றிய பணி அனைவராலும் போற்றுவதற்குரியதும், பாராட்டப்படக்கூடியதும் ஆகும்.

நீதித்துறையில் பல முன்னேற்றங்களைச் செய்து வரும் எங்கள் முதல்வர் அவர்களே, அரக்கோணம் நகரில் நூறு ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிவந்த இரண்டாம் எண்ணுள்ள (ஜெ.எம்.2) நடுவர் நீதிமன்றம் தற்சமயம் சோளிங்கபுரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. சோளிங்கரில் புதிய நீதிமன்றம் அமைப்பதை நான் வேண்டாம் என்று கூறவில்லை. அதேசமயம் அரக்கோணத்திலுள்ள நீதிமன்றத்தை மாற்ற வேண்டிய அவசியம்தான் தெரியவில்லை. எனவே, தொடர்ந்து ஜெ.எம். 2 நீதிமன்றம் அரக்கோணத்தில் இயங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அரக்கோணம் நகரத்திற்கான கிளைச் சிறைச் சாலை வாலாசாவில் தற்சமயம் இயங்குகிறது. அந்த மீண்டும் அரக்கோணத்திலேயே இயங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் ஒரு குற்றவாளியைப் பார்க்க வாலாசா செல்ல ஒரு நபருக்குக் குறைந்தபட்சம் 50 ரூபாய் செலவாகிறது. எனவே, தயவு செய்து அந்த கிளைச் சிறைச்சாலையை அரக்கோணத்திலேயே இயங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் நல் வாழ்விற்கு குறிப்பாக கல்வி, பொருளாதார முன்னேற்றம், அடிப்படை வசதிகள் அளித்தல் போன்றவைகளுக்கு நிதி ஒதுக்கீட்டை நம்முடைய அரசு கணிசமாக ஒதுக்கியுள்ளது வரவேற்கத்தக்கதாகும். ஆதிதிராவிட மக்களுக்கு தாட்கோ மூலம் கட்டித் தரப்படும் வீடுகளை தளம் அமைக்கும் போது கூம்பு வடிவில் அமைக்காமல் சமதளமாக அமைத்துக் கொடுத்தால் அவர்களுக்கு சிறிது வசதி ஏற்பட்டால் மேலே இன்னொரு அறை கட்டிக்கொள்ள வாய்ப்பாக இருக்கும். அதேசமயம் அந்தப் பகுதிகள் ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற பகுதி என்று குறிப்பாக தெரிகின்ற காரணத்தால் அதை மாற்றி சமதளமாக அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் இனத்தவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை ஆதிதிராவிட கிறிஸ்தவர்களுக்கும் வழங்கவேண்டுமென்று வலியுறுத்துவது என் தலையாய கடமையாகும்.

நீர்ப்பிடிப்புள்ள பகுதிகளில் குடிசை கட்டி வாழ்ந்து வரும் ஆதி திராவிட மக்களுக்கு, நீர்ப்பிடிப்புள்ள இடங்களில் வீடு கட்டி வருபவர்களுக்கு பட்டா கொடுக்க தடை செய்யும் சட்டத்தை, 1979ஆம் ஆண்டு போடப்பட்ட அந்த தடைச் சட்டத்தை, ரத்து செய்து ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரக்கோணம் தொகுதியிலுள்ள வளர்புரம்-கிருஷ்ணாபுரம் ஆற்றின் குறுக்கேயும், தக்கோலம்-அனந்தாபுரம் இடையிலேயும் அணைகட்டாபுத்தூர்-உரியூர் இடையிலேயும் ஆற்றின் குறுக்கே தரைப்பாலமும், பனப்பாக்கம்-உளியநல்லூர்-துறையூர் இடையே பனப்பாக்கம்-பெரும்புலிபாக்கம் இடையே மக்ளின் கால்வாய் குறுக்கே அவசியம் மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் கடந்த மழையில் ஒரு மாணவனும் மற்றும் இரண்டு பேரும் அடித்துச் செல்லப்பட்டு 2, 3 நாட்கள் பொறுத்துதான் அவர்களுடைய சடலங்கள் கிடைத்தன என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

மாநிலத்தின் தீவிர தொழில் வளர்ச்சிக்கு மின் உற்பத்தி மிகவும் முக்கியம் என்பதை உணர்ந்து 20 இடங்களில் குறுகிய கால மின் உற்பத்தித் திட்டங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி பெற்றுள்ளதை நான் பாராட்டுகிறேன். அதற்காக அரசுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் கல்வி மேம்பாட்டுக்கு இந்த அரசு மிக முக்கியமான இடத்தை அளித்துள்ளது வரவேற்கத்தக்கதாகும். அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிக்கப்படும் என அறிவித்துள்ளதை பாராட்டவும், நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளேன். அதேசமயம் எங்கள் அரக்கோணம் தொகுதியில் பல தொடக்க கல்விக் கூடங்களில் இன்னும் மரத்தடியில் பாடம் போதிக்கப்படுகிறது. எனவே, தொடக்கப்பள்ளிகளுக்கு கட்டட வசதியும் பழுதடைந்துள்ள பள்ளிக் கட்டடங்களைப் பழுதுபார்க்கவும்--நாகவேடு அரசு உயர் நிலைப்பள்ளி இன்னும் கூறைக் கட்டிடத்தில்தான் இயங்கி வருகிறது--அதற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். மிகப் பெரிய நகரமான எங்கள் அரக்கோணம் நகரத்திலுள்ள பலதரப்பட்ட, லட்சக்கணக்கான தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான ஒரு கலைக்கல்லூரியை அங்கே அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாயத்தில் நலிவடைந்த மக்களின் முன்னேற்றத்திற்கான வழி பெண்கள் முன்னேற்றமே. அவர்கள் சக்தி மிக்கவர்களாக விளங்க மாபெரும் திட்டத்தை செயல்படுத்த உள்ளதாகவும், திறன் மிக்க ஒற்றுமை நிறைந்த தன்னிறைவு குழுக்களாக பெண்களை ஒருங்கிணைத்து, அவர்களே வருவாய் ஈட்டி அவர்கள் வாழ்க்கை நிலையை உயர்த்த திட்டம் தீட்டியுள்ளதை நான் வரவேற்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது).

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திலே "பேசுகின்ற" பயிற்சிகளைப் பெற வேண்டும் என்கின்ற அக்கறையோடு ஒரு கருத்தைத் தங்கள் மூலமாகப் பேரவையினுடைய தலைவரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகின்றேன். வேறு உறுப்பினர்கள் பேசும்பொழுது குறுக்கிட்டால் நாகரீகமாக இருக்காது என்பதற்காக, ஆளுங்கட்சி உறுப்பினர் திரு. தமிழ்ச்செல்வன் பேசும்பொழுதே நான் குறுக்கிட்டு இருக்கிறேன்.

"பேசினார்" என்று சொல்ல இயலாமல், அவருடைய பேச்சு முழுவதையும் படித்திருக்கிறார்; படித்துக் கொண்டும் இருக்கிறார்.



நேற்றைக்கு எதிர்த்தரப்பிலே சிலபேர் இப்படிப் படித்தபொழுது, சொல்ல வேண்டுமென்று கருதினேன். ஒருவேளை அவர்களுடைய மனம் புண்படக் கூடும் என்பதற்காக நான் எழுந்து, குறுக்கிட்டு அதைச் சொல்ல விரும்பாமலே, அமர்ந்து இருந்தேன். இன்று ஆளுங்கட்சி உறுப்பினர்கள், "பேசாமல்" எழுதி வந்ததைப் படித்துக் கொண்டிருக்கிற காரணத்தால் சொல்ல நேரிட்டது. அவர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார்கள்; மனம் புண்பட மாட்டார்கள், உரிமையோடு எடுத்துக் கொள்வார்கள் என்ற காரணத்தால் சொல்கிறேன்.

பேசுகிற நேரத்தில் குறிப்புகளை வைத்துக்கொண்டு, அதைப் பார்த்துக் கொண்டு பேசலாம். சில விஷயங்களை, பத்திரிகைகளிலே வந்தது அல்லது மற்ற தலைவர்கள் சொன்னது, கொட்டேஷன், வேறே யாராவது சொன்னது, அவைகளைப் படித்துக் காட்டலாம். அப்பொழுது படிக்கலாம்.

பேச்சு முழுவதுமே, "தலைவரவர்களே" என்று ஆரம்பித்து, "இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன், நன்றி, வணக்கம்" என்கிற வரையில் எழுதி வைத்துக் கொண்டு படித்தால் அது அவைக்கு உகந்தது அல்ல என்பது மாத்திரம் அல்ல; சட்டமன்ற உறுப்பினர்கள் நல்ல சட்டமன்ற உறுப்பினர்களாக, நல்ல பார்லிமெண்டேரியன்களாக வருவதற்கான ஒரு சூழ்நிலை இல்லாத ஒரு தடையைத் தானாகவே உருவாக்கி விடும். எனவே, இதை ஒரு நல்லெண்ணத்திலே சொல்லப்படுகின்ற அறிவுரையாகச் சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

முதலிலே, ஆரம்பத்திலே பேசும்பொழுது கொஞ்சம் தடை ஏற்படலாம்; தங்கு தடை ஏற்படலாம்; தயக்கம் ஏற்படலாம். இருந்தாலும் குறிப்புக்களின் உதவியால் "பேச" முயல வேண்டும் என்பதையும், அதற்கேற்ப தாங்களும் உறுப்பினர்களுக்கு அறிவுரை வழங்கவேண்டும் என்பதையும், துணைத் தலைவர் மூலமாகப் பேரவைத் தலைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்; துணைத் தலைவரவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** அனைவருக்கும் அடிப்படைச் சுகாதாரம் அளித்தல். கிராமப்புறங்களில் 24 மணி நேரமும் சுகாதார நிலையங்கள் இயங்கும் என்று அறிவித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதேசமயம் இரவு நேரங்களிலே செவிலியர்கள்

மட்டுமல்லாமல், கண்டிப்பாக ஒரு மருத்துவர் அங்கே தங்கியிருக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த ஆளுநர் உரை அரசின் சார்பில் அளிக்கப்படுகின்ற நல்ல திட்டங்கள் என்பதால் இதைவிட ஒரு சிறப்பானத் திட்டம் இருக்கமுடியாது என்று கூறி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

**Mr. Deputy Speaker :** Hon. Member Mrs. Anne D'Monte. (Interruption).

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழ்ச்செல்வன் பேசுகின்ற நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எழுந்து எல்லா உறுப்பினர்களும் எப்படிப் பேச வேண்டும்; குறிப்புகளை வைத்துத்தான் பேச வேண்டுமென்ற ஒரு பொதுவான கருத்தை இங்கே சொன்னார்கள். கடந்த ஐந்தாண்டுகளும் முதலமைச்சரே எழுதி வைத்துத்தான் படித்தார்கள் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நல்லவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்; அல்லாதவைகளை ஒதுக்கி விட வேண்டும்.

Mr. Deputy Speaker : Hon. Member Mrs. Anne D' Monte.

***Tmt. ANNE D'MONTE** : Hon. Deputy Speaker, Sir, Could you kindly excuse me for using these papers this time ? I promise you that I will do a better job next time.

The Address speaks well about the achievements of the eight months old Government. Reference is made to some of the issues facing the Government and the desire for transparency and corruption-free administration. This certainly fulfills the mandate given by the people and is of historic importance. I see open support of the people and a tacit approval of the functioning of the Government. The credit for free and fair elections to all the levels of local bodies, primary co-operative socieites and the setting up of small district units is due in full measure to the effective and efficient administration. A decentralised democratic set-up is now in full operation in the State.



பிற்பகல் 12-40

There are, of course, some hurdles to be tackled. The extensive damage caused to the crops and property by the floods is a case in point. Although relief measures have been taken on a priority basis, there are still some Herculean tasks facing the Government.

First is cleaning the waterways. From resettling slum dwellers to tackling slum problems, there are any number of bottlenecks. Desilting and removal of encroachments of over 20,000 huts should be done. Another problem which we find is the garbage the dumping and disposal of it. Then, there is the matter of storm water drains which carry enormous quantum of sewage. The ugly side of Chennai is that out of its five million population, only 7 lakhs live in the 1300 plus slums in the city, while another 2.5 lakh dwell in the 400 plus slums in the city suburbs. Squatters are to be relocated and with World Bank Aid being sought, its stipulations have to be complied with.

My second point is that village panchayats should become vibrant institutions, planning and executing projects for the well being of the local people. For panchayats and municipal bodies to be effective, two things are very necessary. Citizens should be aware of their rights and alert to local bodies shirking duties or swindling funds. Local authorities should be responsive to local needs and problems. Unless Panchayats are allowed to raise funds for their developement projects, they will be like a toothless and clawless lion.

Just as Central and State Governments have powers to levy taxes and Collect customs and excise duties, Local self-Governments must be assigned specific areas like wealth from forest produce to raise revenue.

Regarding industrialisation, thanks to the special efforts made by the Government, Tamil Nadu stands in the forefront of Industrialisation, especially in the automotive sector. Our State continues to be the 'Detroit' of India, despite the keen rivalry between the States of the Union and some States announcing undesirable and excessive concessions only to attract investment.

As long as we are able to provide electricity, water, transport and telecommunications, we can attract the best of multinationals and NRIs. Let us also pay attention to good roads and the maintenance of such roads, so that our transport infrastructure does not suffer. Our greatest advantage is our skilled labour with their understanding of complex technologies.

Let us also improve facilities for small scale industries, which provide the feeder units for large industries. The main problems are lack of power and financial credit.

In this connection, I welcome the steps taken by our Chief Minister for the formation of the Apex Level Standing Committee for Industrial development. We need a free flow of exchange of ideas between industrialists and the Government. We should remove hurdles and establish a friendly and co-operative administration. (The gong was sounded).

With regard to the island of Kachativu, I support the stand of the Government to press for fishing rights and rights of pilgrimage to the island. In this barren island, St. Antony's Chapel set up some 90 years ago, is a place of worship for thousands of pilgrims in March every year. Certainly the sentiments of the Christian community have been outraged when this was discontinued. This clause of the agreement signed in 1974, was not enforced after the Government was removed in 1976. It is for the Centre to find a solution to the problems faced by Tamil Nadu fishermen and the Christian pilgrims.

One more point, which is of considerable importance is that I would like to make a special plea on behalf of my community, the Anglo-Indian Community. While the Government has been providing free education and this is indeed a boon, I request that the concessions applicable to Backward Classes be extended to the Anglo-Indian Community. A survey made by our leaders, some time ago, reveals some startling facts. Over fifty per cent earn even less than a living wage, while about 20 per cent earn a living wage. That the community is backward economically is an incontrovertible fact. About 25% are aged, unemployed or unemployable. They are practically dependent



on charity. They can be found in places like Tondiarpet, Washermenpet, Otteri, Perambur and Chintadripet, etc. A large percentage of these are old age pensioners and dropouts. It is a common knowledge that for a family of 4 to 6 persons to exist on a salary of less than Rs.800/-per month is a grim struggle for survival. It is only a very small minority, who are living comfortably. Even in this.........

*பிற்பகல் 12-45*

**Mr. Deputy Speaker** : Please make it short.

**Tmt. Anne D'MONTE :** It is okey, Sir, just one minute. Even in this category, there are many on the verge of retirement. The farmers of our Constitution visualised such a situation, especially when jobs in the Customs, Telegraph and Railways became time barred. Article 338 was then formulated which provides for the appointment of a Special Officer to look after and protect the interests of Scheduled Castes and Tribes, but also Anglo-Indians as provided in Clause 10 of Article 338. The economic position of the Anglo-Indian Community has been bracketed with Schedule Castes and Tribes. I would like to appeal to our benevolent Chief Minister and the Government of Tamil Nadu to consider the plight of this Community. Food, clothing and shelter is the need of the hour. Why not a colony for this community and even a percentage of the number of houses being constructed by the Slum Board ? It is the opportune time to come to the aid of my suffering community.

Sir, I have done. Thank you.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். நம்முடைய மாநிலத்தில் ஏற்பட்ட மிகபெரிய வெள்ளம் மற்றும் புயல் ஆகியவற்றின் காரணத்தினால் பெருவாரியான மாவட்டங்கள் மிகப் பெரிய அழிவினைச் சந்தித்திருக்கிற இந்த நேரத்தில், இவற்றிற்கான நிவாரண நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கின்றபோது, இவற்றிற்கு வேண்டிய*

நிதியாதாரங்களைத் தந்து உதவ வேண்டியது மைய அரசினுடைய கடமையாகும். ஏற்கெனவே நம்முடைய மாநில அரசு அதற்குப் போதுமான நிதியாதாரங்களைத் தருவதற்கான வாய்ப்பு இல்லை. இருந்தாலும்கூட, ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, விவசாயக் கடன்களை இரத்து செய்தது அதே போன்று குத்தகைப் பாக்கிகளை இரத்து செய்தது, அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற கண்மாய்கள், வீடுகள், சாலைகள், பாலங்கள் போன்ற இவைகளை எல்லாம் இன்றைக்குப் பழுது பார்ப்பது, அழிந்துபோய் இருக்கின்ற வடிகால்களைக் கட்டிக் கொடுப்பது, ஆகிய இப்படிப்பட்ட வேலைகளை எல்லாம் செய்து தருகின்ற இந்த நேரத்தில், அதற்கு ரூபாய் ஆயிரம் கோடி செலவு ஆகுமேயானால், மத்திய அரசை அந்தத் தொகையைக் கொடுக்கக் கோரியிருக்கின்ற ஒரு காரணத்தால் அவ்வளவிற்குண்டான பணத்தினைத் தருவதற்கு சில சட்டத் திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்ற ஒரு கருத்தைச் சொல்லுகின்றார்கள். மேலும், நம்முடைய மாநில அரசு இது சம்பந்தமாகக் கூடுதல் நிதியாதாரத்தைப் பெறுவதற்காகச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்காக, இங்கே இந்த மாமன்றத்திலேயும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி நம்முடைய மைய அரசை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அது போன்று, அந்த வடிகால்கள் அல்லது ஓடைகள் இன்று சரி செய்யப்படாமல் நீண்ட பல வருடங்களாகக் கிடந்ததன் விளைவுகூட இந்த அழிவிற்கு ஒரு காரணமாக இருக்கின்றது. ஆகவே, இந்த வடிகால்களைக் கட்டுவதற்கும், சாலைகளைப் பராமரிப்பதற்கும் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த நேரத்திலே நம்முடைய சாலைகளின் நிலையைச் சொல்கின்றபோது, சமீபத்திலே, பால்பண்ணைக்கு அருகாமையிலே, மாதவரம் பகுதியிலே செல்கின்றபோது, அது என்ன சாலையா அல்லது வாய்க்காலா என்று சொல்கின்ற அளவிற்கு ஒரு துரதிருஷ்டமான நிலை இருக்கிறது. இதேபோன்று, நம்முடைய மாநிலம் பூராவிலும் இருக்கின்ற ஒரு நிலையைப் பார்க்கின்றோம். எனவேதான், இந்தப் பணிகளைத் துரிதமாகச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதோடு, நமக்குத் தேவையான, போதுமான நிதியாதாரத்தை ஒதுக்குவதற்கும் நாம் முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, விலைவாசி ஏற்றம். கடுமையான விலைவாசி ஏற்றம் என்று சொல்கின்றபோது, சாதாரண தொழிலாளி வர்க்கத்திற்கு மட்டுமல்லமால் நடுத்தரவர்க்க மக்களும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்ற நேரம். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டைப் பார்க்கின்றபோது பல்வேறு உணவு தானியங்களானாலும் சரி, நாம் அன்றாடம் பயன்படுத்துகின்ற சோப்பு, பற்பசை போன்ற பொருட்களானாலும் சரி, அவற்றின் விலைகள்கூட ஒருபக்கத்திலே ஏறி, இன்னொரு பக்கத்திலே அவற்றின் அளவு குறைந்திருக்கின்ற ஒரு நிலையை நாம் பார்க்கின்றோம். ஆகவே, விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை என்ற முறையில் அத்தியாவசியப் பண்டங்கள் என்று சொல்லப்படுகின்ற 14 பொருட்களை நம்முடைய நியாய விலைக் கடைகளின் மூலமாக பாதி விலைக்கு வழங்குவதற்கு ஒரு ஏற்பாட்டை மாநில அரசு செய்வதன் மூலமாகத்தான் இன்று வெளியிலே இருக்கின்ற மற்ற பொருட்களின் விலையை கட்டுப்படுத்த முடியும். அந்த வகையிலே விலைவாசியை கட்டுப்படுத்துவதற்கு, 14 அத்தியாவசியப் பொருட்களை நம்முடைய நியாய விலைக் கடைகள் மூலமாக விநியோகம் செய்வதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

*பிற்பகல் 12-50*

அடுத்து, அரிசியின் வெளி மார்க்கெட் விலையானது கடந்த ஆண்டில் 12 ரூபாய்க்கு இருந்தது. தற்போது 18 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையை நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும். இதைத் தவிர வேறு வழி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

அடுத்து. உணவு தானிய விநியோகத்தில் கார்டுகள் விஷயத்தில் நம்முடைய அரசு நல்ல முடிவை எடுத்திருக்கிறது. குறிப்பாக, 3 விதமான கார்டுகளைத் தரவிருக்கிறார்கள். இதிலே என்னுடைய வேண்டுகோளெல்லாம், மத்தியதர வர்க்கத்தினருக்குக்கூட, அரிசி கிடைக்கக் கூடிய வகையிலே வழிவகை செய்யவேண்டும். அடித்தளத்தில் இருக்கின்ற வறுமைக் கோட்டின்கீழ் வாழ்கின்ற மக்களுக்கு குறைந்த விலையில் உணவு தானியத்தைத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் அதே நேரத்தில், இந்த மத்திய தர வர்க்கத்தினருக்குக்கூட, பாதுகாப்பு என்ற வகையிலே வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, கார்டுகள்

விஷயத்தில் முறைகேடுகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒரு சாதாரணக் கிராமத்தில் இருக்கின்ற சின்னக் குடிசையை எடுத்துக்கொண்டால், அந்தக் குடிசையில் வாழ்கின்றவர்கள் 3 குடும்பங்களைச் சார்ந்தவர்களாக இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு தனியாக கார்டு இல்லாத காரணத்தால், பல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆக, அதைப் போக்குகின்ற வகையிலே குடும்பத்தை 3-ஆகப் பிரித்துத் தனிக்கார்டு கொடுக்கவேண்டிய நிலை இருக்கிறது. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து, உள்ளாட்சி மன்றங்களுக்கு பல வருடங்களாக தேர்தல் நடைபெறாமல் இருந்து, இந்த அரசு வந்தவுடன் அந்தத் தேர்தல்கள் நடத்தப்பட்டதற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் உள்ளாட்சிமன்றத் தேர்தலுக்கு பின்னால், அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, உள்ளாட்சிமன்றத் தலைவருடைய கைகளுக்குப் போயிருக்கிறதா என்று கேட்டால், இல்லை என்றுதான் சொல்ல முடியும். இன்னமும் அதிகாரிகள் கையில்தான் அதிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில், மேல்புரம் ஊராட்சி ஒன்றியத்தை எடுத்துக்கொண்டால், அதற்கென்று கடந்த மாதத்திலே 21 இலட்ச ரூபாய் கொடுத்தும், 10 இலட்சம் ரூபாய்தான் தர முடியும் என்று ஒரு கணக்கு சொல்கிறார்கள்.

அடுத்து பேரூராட்சியைப் பற்றி சொல்லவேண்டுமானால் எங்கள் மாவட்டத்தில் 67 பேரூராட்சிகள் இருக்கின்றன. பேரூராட்சிக்கும் சிற்றூராட்சிக்கும் ஒன்றும் பெரிய வித்தியாசம் கிடையாது. நான் மாண்புமிகு முதல்வர் அவர்களையும, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்த பேரூராட்சிகளை சிற்றூராட்சிகளாக மாற்றினால்தான், ஜனநாயக முறைப்படி நாம் மக்களுக்கு ஆற்றவேண்டிய பணியை முழுமையாகச் செய்ய முடியும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நகராட்சிகளைப் பொறுத்தமட்டில் அதிகாரிகளுடைய ஆட்சிதான் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக குழித்துறை நகராட்சியிலிருந்து, தேர்தலுக்கு முன்பு ஜே.வி.வி.டி. திட்டத்திற்கு என்று 3 இலட்சத்திற்கு அதிகமான ரூபாயை 3 திட்டங்களுக்கு



நம்முடைய ஆர்.டி.எம்.ஏ. பாளையங்கோட்டைக்கு அனுப்பி, அது கடந்த 3 மாதங்களாக கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பேரூராட்சி சம்பந்தமாகவும், மாநகராட்சி சம்பந்தமாகவும் எந்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து இந்தத் தவறு நடந்திருக்கிறது; எப்படி நடந்திருக்கிறது என்பதை முடிந்த அளவுக்கு எழுதி அனுப்பினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதன் அடிப்படையில் அந்த விவரங்களை நான் தர இருக்கிறேன். பாளையங்கோட்டை ஆர்.டி.எம்.ஏ.வில் ஒரு ஆர்.ஐ. என்ற அதிகாரி இருக்கிறார். அவருடைய ஒப்புதலோடுதான் ஜே.வி.வி.டி.யினுடைய வேலையை செய்ய முடியும். ஆனால் அங்கே அந்தப் பணி 3 மாத காலமாக படுத்துத் தூங்குகின்ற நிலை இருக்கிறது. இங்கே ஆட்சி மாற்றம் வந்தபிறகு நம்முடைய அமைச்சர் பெருமக்களை இன்று எந்த அளவுக்கு பாராட்டுகிறார்கள். ஊழல் இல்லாத ஆட்சி என்று பாராட்டும்போது, அதிகாரிகள் மட்டத்தில் அந்த ஊழல் மாற்றப்படவில்லை. இது அன்றாட நிகழ்ச்சியாக தினந்தோறும் நாம் சந்திக்கின்ற பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. அதனுடைய விளைவாகத்தான் கான்ட்ராக்டர் சென்று ஆர்.ஐ.-யைப் பார்த்தால்தான் அனுமதி தருவார்கள் என்று சொல்கின்ற நிலையிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சமயம் கூறினார்கள். கோப்பு கிடப்பிலே இரண்டு மாதம், மூன்று மாதம் போடப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் அதில் ஊழல் உள்ளது என்று சொன்னார்கள்.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊழல் இல்லாத ஒரு நல்ல ஆட்சியை, ஒரு நல்ல நிர்வாகத்தினை தமிழகத்திற்கு வழங்க வேண்டுமென்ற

அடிப்படையிலேதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை அறிவித்து, அமைச்சர்களும் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாடு அறிந்து, பாராட்டுகின்றது. அதே நேரத்தில் சில அலுவலர்கள் தவறு செய்கிறார்கள்; ஊழல் அப்படியே நடைபெறுகிறது என்று பொதுவிலே பேசாமல், எந்த அலுவலகத்திலே ஊழல் நடைபெறுகிறது, எந்த அதிகாரி தவறு செய்கிறார் என்று நீங்கள் எழுதிக் கொடுத்தால், அது யாராக இருந்தாலும், தயவுதாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் குறை சொல்கிறபோதும் சரி, பொது மக்கள் பிரதிநிதிகள் குறை சொல்கிறபோதும் சரி, நாங்கள் அதைக் கேட்கிறோம். எழுதிக் கொடுங்கள் என்றால் எழுதிக் கொடுக்க மறுக்கிறார்கள். இதுதான் எங்களுக்குச் சங்கடமாக இருக்கிறது. அப்படி தவறு செய்பவர்களைப் பற்றி நீங்கள் எழுதிக் கொடுப்பீர்களேயானால் நாங்கள் தயவுதாட்சண்யம் காட்டாமல், யாராக இருந்தாலும் இந்த ஆட்சியிலே கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கின்றார். நான் எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை. இந்த ஆட்சியையும் சொல்லவில்லை. அதிகாரிகள் முழுமையாக மாறி விட்டார்கள் என்று கருத்து எனக்கு இல்லை. ஆகவே, இந்தத் தகவல்களை சொல்வதற்கோ, எழுதிக் கொடுப்பதற்கோ நான் தயாராகவே இருக்கிறேன். எந்த அதிகாரியாக இருந்தாலும் சரி, அவர்கள் தவறு செய்திருந்தால் எழுதிக் கொடுப்பேன். இந்த நேரத்திலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்குப் பின்னால் இந்த அதிகாரிகள் மட்டத்திலே ஒரு சீரான நிலை இன்னும் உருவாக்கப்படவில்லை. அதற்குப் பல காரணங்கள் உள்ளன.

ஏற்கெனவே இருந்த ஆட்சியாளர்கள் மீது, முன்னாள் அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுத்து வருகிறோம். அன்றைக்கு இருந்த சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பெரிய அதிகாரிகள் எந்த அளவுக்கு ஊழல் செய்திருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து அந்த அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும. முன்னாள் சட்டமன்ற



உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றபோதுதான், சாதாரண மக்களுக்கு ஒரு நல்ல எண்ணத்தை, நல்ல கருத்தை நாம் உருவாக்க முடியும். அந்த வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து.

அடுத்து நிலப்பிரச்சினை. நிலப் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயிகள் வாழ்விலே, வளர்ச்சியிலே ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி விட முடியாது. எனவே நிலப் பிரச்சினையில் தீர்வு காண வேண்டும். இதற்கு முன்னோடியாக, ஏற்கெனவே இந்த ஆட்சிக் காலத்தில்தான்--1967-ஆம் ஆண்டு--நம்முடைய மாநிலத்திலே விவசாயிகள் கைவசம் இருந்த 1 ஏக்கர், 2 ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் வரையிலும் இலவச பட்டா வழங்கினார்கள். ஆனால் இன்றைய நாளிலே 5 சென்ட், 10 சென்ட் நிலங்களுக்குக் கூட பட்டா வழங்குவதில் பிரச்சினை தீராத நிலையிருக்கிறது. நம்முடைய கார்ப்பரேஷன் எல்லைக்குள்ளேயே புறம்போக்கு நிலங்கள், அரசினுடைய நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. அந்தப் புறம்போக்கு நிலங்களையெல்லாம் மிகப் பெரிய தனவான்கள் கையகப்படுத்தி வைத்துக்கொண்டு விற்பனை செய்து கொண்டிருக்கின்ற ஒரு நிலையை பார்க்கிறோம். திருவொற்றியூர் பகுதியிலே 44-வது வட்டத்திலே அமைக்கப்பட்டிருந்த குடிசைகளை, வீடுகளையெல்லாம் இடித்திருக்கின்றார்கள். அதையும் பரிசீலனை செய்யவேண்டும். நம்முடைய கிராமப்புற ஏழை விவசாயிகளுக்கு இலவச பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து (மணியடிக்கப்பெற்றது) கூட்டுறவுத் தேர்தல் சம்பந்தமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடத்தில் பேசி முடியுங்கள். இன்னும் 3 பேர் பேச வேண்டும். நீங்கள் 1-00 மணிக்குள் பேசி முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. டி. மணி:** 5 நிமிடத்திற்குள் பேசி முடித்து விடுகிறேன். கூட்டுறவுத் தேர்தல் நல்ல முறையில் நடந்தாலும்கூட தேர்தலுக்குப் பின்னால் கூட்டுறவு அமைப்புகளிலே இன்னொரு அதிகாரியை நியமனம் செய்திருக்கிறார்கள. அது தேவையில்லாத ஒன்று என்பது என்னுடைய கருத்து. அந்த வகையான நியமனங்களை ரத்து செய்ய வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

அடுத்தபடியாக காவல்துறை. காவல் துறையிலே காவலர்களும், ஆய்வாளர்களும் பற்றாக்குறை என்று கூறி தேவையானவர்களை நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் கடந்த கூட்டத் தொடரில் கூறப்பட்டது. இந்த ஆய்வாளர்கள், காவலர்கள் பற்றாக்குறை என்பது இன்றும் இருந்து வருகிறது. எங்களுடைய பகுதியிலே மூன்று காவல் நிலையங்களுக்கு ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இருக்கின்றார். அருமனையிலும், குழித்துறையிலும், ஆறுகாலிலும் இருக்கின்ற மூன்று காவல் நிலையங்களுக்கு ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அந்தக் குறைபாட்டைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, கூடுதலான ஆய்வாளர்களைப் பணியில் அமர்த்துவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

அதேபோன்றுதான், காவல் துறையிலே நடக்கின்ற சில பிரச்சினைகள். ரீட்டாபுரத்திலே இருக்கின்ற பேரூராட்சித் தலைவர் மீது ஒரு கொலை வழக்கை ஜோடித்திருக்கிறார்கள். இதற்கு முந்தைய ஆட்சிக் காலத்தில் நடந்த ஒரு கொலை வழக்கில் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து இந்தப் பேரூராட்சித் தலைவர் காவல்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்ததன் காரணத்தினால், சில காவல் துறை அதிகாரிகளுடன் ஏற்பட்ட முரண்பாடுகளின் காரணமாக, எங்கோ நடந்த ஒரு கொலை வழக்கில் ரீட்டாபுரம் பேரூராட்சியின் தலைவரைச் சேர்த்திருக்கிறார்கள். அதேபோன்றுதான், மொரம்பூர் ஊராட்சி ஒன்றியத்திலே நடந்த நிகழ்ச்சி பத்திரிகையிலே வந்தது. அந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர் மர்மமாகக் கொலை செய்யப்பட்டார் என்று ஒரு பத்திரிகையிலே செய்தி வந்தது. அடுத்த நாள், விபத்திலே இறந்ததாகச் செய்தி வந்தது. ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இல்லாமல் காவல்துறையை நடத்துவதற்கான ஒரு நிலை ஏற்பட வேண்டும்.

அதேபோன்று, கடுவந்தட்டைக்குப் பக்கத்திலே, அதாவது குழித்துறை நகராட்சிக்குப் பக்கத்திலே இருக்கின்ற கடுவந்தட்டைக்குப் பக்கத்திலே 3-10-96 அன்று கே.எல்.கே. என்ற எண்ணுள்ள ஒரு அம்பாசிடர் காரை வாடகைக்கு அமர்த்தியிருக்கின்றார்கள். ஆனால், இன்று வரையும் அந்தக் காரையும் காணோம். அதை ஓட்டிச்



சென்ற ஓட்டுநரையும் காணோம். கடத்தப்பட்டிருக்கிறார்கள், கொலை செய்யப்பட்டிருப்பார்கள் என்றே கருதப்படுகிறது. ஆனால், ஒரு முறையான வழக்கு இன்றுவரை போடப்படவில்லை.

அதேபோன்றுதான் 23-10-96 அன்று குழித்துறை சந்திப்பில் ஒரு முக்கியமான பஜார் பகுதியில் 4 கடைகள் உடைக்கப்பட்டு, நிர்மூலமாக்கப்பட்டு, அதிலேயிருந்த பொருட்களெல்லாம் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. அதற்குக் களியக்காவிளை காவல்நிலையத்திலேயுள்ள ஒரு ஆய்வாளர் உதவியாகச் செயல்பட்டிருக்கின்றார். ஆனால், கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் மீட்டுத் தரப்படவில்லை. அதற்கு உறுதியான ஒரு வழக்கும் போடப்படவில்லை. எனவே, இந்தத் துறை இன்னும் அதனுடைய வேலையைத் திறம்படச் செய்ய வேண்டும். ஒரு ஜனநாயக நாட்டில் சம்பிரதாயப்படி செய்யப்படவேண்டிய கடமைகளை முறையாகச் செயல்படுத்துவதற்கு அது தேவையாக இருக்கிறது.

இதோடு இணைந்தது கள்ளச்சாராயம். நான் ஒரேயொரு செய்தியை மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தக் கள்ளச் சாராயம் என்பது, இப்பொழுது சாராயம் அல்ல. எங்களுடைய பகுதி முழுவதிலும் இது எரிசாராயம். சமீபத்திலே கேரளா பார்டரிலே ஒரு கொலை வழக்கு நடந்தது. அந்த அதிகாரிகள், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் கொலைசெய்து விட்டார்கள் என்று சொல்லி, இங்கே விசாரணைக்கு வந்தார்கள். அப்படி வருகிறபோது--அதில் நம்முடைய காவல் துறைக்கு சம்மதம் இல்லை--ஒரு வீட்டைச் சோதனையிட்டார்கள். அங்கே பார்த்தபோது, 200-க்கும் அதிகமான கேன்களில் எரிசாராயம் இருந்தது. அந்த அதிகாரிகள் அந்த கேன்களையெல்லாம் போட்டு எரித்துவிட்டுச் சென்றார்கள். அந்த வீடும் எரிந்து விட்டது. நம்முடைய அரசினுடைய பகுதியான குன்னத்தூர் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் ஒரு அறை இருக்கின்றது. சமீபத்தில், ஒரு நாள் அந்த அறையை அதிகாரிகள் திறந்து பார்த்தார்கள். ஒரு வீச்சம் அடித்தது. அங்கே பார்த்தால் 300 கேன்களில் எரிசாராயம் இருந்தது. அந்த எரிசாராயத்தை பத்தமடை போலீஸார் எடுத்துச் சென்றார்கள். அந்த எரிசாராயத்திலே தண்ணீரை விட்டு, ஒரு பொடியையும் சேர்த்து சாராயமாகக்

கொடுக்கின்ற ஒரு சூழ்நிலை அந்தப் பகுதியிலே இருக்கின்றது. பல பகுதிகளிலும் சாராயத்தை விட்டுவிட்டு, எரிசாராயத்தைப் பயன்படுத்துகின்ற ஒரு நிலை இருந்து வருகின்றது.

அதேபோன்றுதான், நம்முடைய கல்வித் துறை. கல்வித் துறையைப் பொறுத்தவரையில் தனியார் ஆதிக்கம் என்பது இன்று வளர்ந்து வருகின்ற ஒரு காலம். இது நம்முடைய நாட்டின் எதிர்காலத்தை ஒரு நல்ல ரீதியில் கொண்டு வருமா என்பதில் சந்தேகம் இருக்கிறது. எனவே, இந்தக் கல்வித் துறையிலே தனியார் துறையினுடைய பாதிப்பு சமீபத்திலே கோவையிலே நடந்திருக்கிறது. அங்குள்ள நர்சிங் கல்லூரிக்கு நம்முடைய அரசு 42 மாணவர்களை அனுப்பியிருக்கின்றது. அவர்களுக்கு ரூ.6000/-கட்டணமாக நிர்ணயித்திருந்தோம். ஆனால், அந்த மாணவர்கள் தற்போது தேர்வு எழுத வேண்டுமென்று சொன்னால், ரூ.25,000/- கேட்டு, அதனைக் கட்டாததன் காரணமாக இன்று அந்த மாணவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இப்படி ஒரு கல்லூரியிலே மட்டுமல்ல, இன்னொரு கல்லூரியிலேயும் இதேபோன்ற நிலைதான்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எத்தனை தடவை ஒரு நிமிடம் என்று சொல்கிறீர்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு கல்லூரியிலும் இந்த நிலையே நீடித்திருக்கின்றது. அதேபோன்று, எஸ்.ஸி./பி.சி. மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற மானியம் போதுமானதாக இல்லை. ஆதிதிராவிடர்கள் மீது கடையநல்லூரிலே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கொடியன்குளத்திலே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஆகவே, இவைகளைத் தவிர்க்கின்ற வகையிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நம்முடைய மாநிலத்தில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளையெல்லாம், இந்த ஆளுநர் உரையின் மீது பேசுகின்ற நேரத்தில், இவைகளையும் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்து, தீர்க்கப்படவேண்டும் என்ற வகையிலே இதனைச் செய்யவேண்டுமென்று கேட்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன்.



பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று, 'சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்து' இருக்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியிலே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்திலே, ஆளுநர் அவர்கள் உரையைப் படித்துப் பார்த்து, இது தமிழக மக்களுடைய முன்னோடித் திட்டமாக இருக்கக்கூடிய இந்த உரைக்கு, என்னுடைய பென்னாகரம் சட்டப் பேரவை தொகுதியின் பொதுமக்கள் சார்பிலேயும், நான் சார்ந்திருக்கக்கூடிய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேயும், அதனுடைய நிறுவனத் தலைவர், மக்கள் காவலர் டாக்டர் இராமதாஸ் ஐயா அவர்கள் சார்பிலேயும் மனமார வரவேற்றுப் பாராட்டுவதிலே நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த உரையின்மீது பேசுகிற நேரத்திலே, இந்த உரையிலே ஒரு திருத்தம் கொண்டு வரவேண்டுமென என்னுடைய பணிவான கருத்தை இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த உரையிலே, நம்முடைய அண்டை நாடான இலங்கையிலே, அப்பாவித் தமிழ் மக்கள் கொடுமைப்படுத்தப்படுவது, மானபங்கப்படுத்தப்படுவது, கொலைப்படுத்தப்படுவது போன்ற காட்சிகளெல்லாம் குறிப்பிடப்பட்டு, அதற்காக ஏதும் சொல்லப்படவில்லை என்பது வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சியாக இருக்கிற இந்த நேரத்திலே, ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமென நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இலங்கை அரசு, தன் நாட்டு குடிமக்களான, ஈழத் தமிழ் மக்கள்மீது நடத்திவரும் முப்படைத் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டுமென்றும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளிலே இருந்து இலங்கை இராணுவம் திரும்ப செல்ல வேண்டுமென்றும், இலங்கை அரசை இந்தியா வற்புறுத்திட வேண்டுமென நம்முடைய மாமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற

வேண்டும் என நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இதைப் பற்றிப் பேசுகிற நேரத்திலே, எனக்கு முன்னாலே மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சொல்கிறபோது, ஒரு கருத்தை இங்கே தெளிவாகச் சொன்னார்கள். அதாவது, ஈழத் தமிழ் மக்கள் தாக்கப்படுகின்ற அந்த இனப் படுகொலையை எதிர்ப்பதிலே எங்களுக்கு எந்தவித கருத்து மாறுபாடும் இல்லை என்று சொன்னார்கள். உள்ளபடியே அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தவரையில், மாநாடு என்று சொல்கிறபோதும் அல்லது எங்களுடைய பேச்சு என்று சொல்கிறபோதும், ஏதோ இராஜீவ்காந்தி படுகொலைக்கு ஆதரவாளர்கள் என்ற நிலையோ அல்லது ஈழத் தமிழர்கள் என்ற போர்வையில், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு என்று சொல்கிற நிலையிலோ நாங்கள் நிச்சயமாக இல்லை. அந்தக் கண்ணோட்டத்தோடு எங்களைப் பார்க்க வேண்டாம் என்பதையும் நான் அவருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், இராஜீவ் காந்தி படுகொலையிலே சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதிலே, தண்டனை கொடுப்பதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து எதுவுமே கிடையாது. ஆனால், இராஜீவ் காந்தி படுகொலையைப் பற்றியும் பேசாமல், விடுதலைப் புலிகளைப் பற்றியும் பேசாமல், இலங்கையிலே நடைபெறக்கூடிய, ஈழத் தமிழ் மக்கள்மீது நடத்தக்கூடிய அந்தத் தாக்குதல்களைக் கண்டிக்கக்கூடிய வகையிலே பேசுகிறபோது, அதிலே உங்களுக்குக் கருத்து உடன்பாடு இருந்தாலும்கூட, அதை வெளிப்படையாக மறுக்கிறீர்கள் என்பதைத்தான் நான் இங்கே உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும்கூட அவர் இங்கே சொன்னார். இந்த மாநாட்டிற்கு எங்களுக்கு அழைப்பு இல்லை என்று சொன்னபோது, எங்களுடைய தலைவர், பேராசிரியர் அவர்கள் கூட இங்கே சொன்னார்.. நாங்கள் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கக்கூடிய எல்லா அமைப்புகளுக்கும் அழைப்பு விடுத்திருக்கிறோம். அதேபோல், உலக நாடுகளிலே இருக்கக்கூடிய 'ஃபாரின் டெலிகேட்ஸ்' என்று சொல்லக்கூடிய தமிழினத் தலைவர்கள், ஆங்கில இனத் தலைவர்கள் ஆகியோர் எல்லோருக்கும்கூட அழைப்பு விடுத்திருக்கிறோம். இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கிற அந்த மாநாட்டிற்கு--ஒரு கட்சியினுடைய அல்லது பிரதிநிதியினுடைய நிலைப்பாடு இதுகுறித்து



என்ன என்பதை தெளிவுபடுத்துவதற்காக நடைபெறக்கூடிய இந்த மாநாட்டிற்கு--நீங்களும் வரவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களும் அதிலே கலந்துகொண்டு, உங்களுடைய கருத்துக்களைக் கூறவேண்டும் என்று இந்த நேரத்திலே அவருக்கு வேண்டுகோளாக விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய, மக்கள் தொகை எண்ணிக்கையின் அடிப்படையில் அதிகமாக இருக்கக்கூடிய மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சலுகைகளைப் பற்றி அறிவிக்காதது மிகுந்த குறையாக, வருத்தமாக இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மண்ணிலே வாழ்ந்த பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் வழியிலே இருக்கக்கூடிய இந்த அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்த ஆட்சிக் காலத்திலேயே, இந்த சமூக நீதிக் கொள்கை இங்கே காக்கப்படவில்லை என்று சொன்னால், வேறு எந்த நேரத்திலேயும் அமலாக்கப்படாத ஒரு நிலை ஏற்பட்டுவிடும். இடஒதுக்கீட்டுக் கொள்கை, சமூக நீதிக் கொள்கை என்று கூறுகிற நேரத்திலே, ஏதோ வேலைவாய்ப்பு, கல்வி என்ற நிலையிலே மட்டுமல்லாமல்--இவற்றிலேகூட நாம் முழுமையாக இங்கே அமலாக்குவது இல்லை--எல்லா நிலைகளிலும் அமலாக்கப்பட வேண்டும். வீட்டுமனைப் பட்டா வழங்கக்கூடிய நிலை, வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம், பொதுப்பணித் துறை போன்ற எல்லா நிலைகளிலும், அரசினுடைய அனைத்து நிலைகளிலும் இட ஒதுக்கீடு இங்கே முழுமையாக அமல்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று மெத்தப் பணிவோடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-10

அதேபோல கல்வியைப் பொறுத்தவரையிலே இங்கே கல்வித் துறையை கல்லூரிக் கல்வி என்றும் பள்ளிக் கல்வி என்றும் இரண்டாகப் பிரித்தது வரவேற்கக்கூடிய ஒன்று. கல்வியைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டிலே கல்விக்காக பல கோடி ரூபாய் செலவிட்டாலும்கூட தனியார் கல்வி நிறுவனங்கள் வளர்ந்துகொண்டே வருகின்றன. மக்களுடைய மோகமெல்லாம் தனியார் கல்வி நிலையங்களின் மீதே இருக்கிறது. ஆகவே தனியார்

கல்வி நிலையங்களை நோக்கி மக்கள் செல்கின்ற இந்தக் காலக் கட்டத்திலே, அரசு கல்வி நிலையங்களுக்கு வரவேற்பு குறையக்கூடிய இந்தக் கால கட்டத்திலே நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், நமது அரசும் இலவசமாகச் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஆரம்பக் கல்வித் திட்டத்திலே அந்த ஆரம்பக் கல்வியை கட்டாயக் கல்வியாகவும், தரமான கல்வியாகவும் கொண்டு வருவதற்கு முன்வர வேண்டும். இங்கே தரமான கல்வி என்று சொல்கிறபோது பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர் இல்லாமல் இருக்கின்ற அந்த நிலையைப் போக்கி ஆரம்பக் கல்வி நிலையங்களுக்கு ஆசிரியர்கள், கட்டட வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை எல்லாம் செய்து கொடுத்து அங்கே தரமான கல்வியை உருவாக்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே வெள்ளத்தினால் சேதம் ஏற்பட்டபோது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் விரைந்து பணியாற்றியது உள்ளபடியே நாம் எல்லாம் பாராட்டி, வரவேற்கக்கூடிய ஒரு நிகழ்ச்சி. இந்த வெள்ளச் சேதத்தின்போது தமிழக அரசு எடுத்த நடவடிக்கையைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பாராட்டி, அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மிகுந்த பாராட்டையும், நன்றியையும் நாங்கள் காணிக்கையாக்குகிறோம்.

அதேநேரத்திலே விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடனை மத்திய காலக் கடனாக மாற்றியும், மத்திய காலக் கடனை கட்ட சற்று காலம் நீட்டித்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு இந்தக் கடன்களைக் கட்டுவதற்குரிய காலத்தை நீட்டித்துக் கொடுப்பதைவிட அந்தக் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு அளிக்கப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அரசு ஊழியர்கள் எல்லாம் நீண்டகாலமாக எதிர்பார்த்து, வைத்த கோரிக்கை, தமிழக அரசு ஊழியர்களுடைய நீண்ட காலக் கோரிக்கை, அவர்களுடைய கனவு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்



அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றப்படவிருப்பது உள்ளபடியே வரவேற்கக்கூடிய பெருமைப்படக்கூடிய ஒரு விஷயமாக இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல ஆதிதிராவிடர்களைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசு இதுவரை அவர்களுக்கு அளித்து வந்த சலுகைகளைவிட அதிகமாக வழங்குவதாகவும், அவர்களுக்கென ஒதுக்கியிருக்கக்கூடியத் தொகையை உயர்த்தி வழங்கப்போவதாகவும் நம்முடைய ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருப்பது வரவேற்கக்கூடியதாக இருந்தாலும்கூட, அந்த ஆதிதிராவிட, ஷெட்யூல்டு இன மக்களுக்கு முறையாக அந்தச் சலுகைகள் சென்று அடைவதேயில்லை என்பது நீண்ட நாளைய குறையாக இருக்கிறது. ஆகவே அந்த ஆதிதிராவிட மக்களுக்குச் செல்லக்கூடிய அந்தச் சலுகைகள் முறையாக அவர்களைச் சென்றடைகின்றதா என்பதைக் கண்காணிப்பதற்கு ஒரு குழு அமைத்து, அந்தச் சலுகைகள் அவர்களைச் சென்றடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக மக்களுடைய நீண்ட நாளைய கோரிக்கையான சாதி வாரி கணக்கெடுப்பு என்பது ஒவ்வொரு அரசாலும் அந்தந்த காலக் கட்டங்களிலே அறிவிக்கப்படுகிறதே ஒழிய, அந்த வகுப்புவாரி கணக்கெடுப்பு இதுவரை நடக்கவில்லை. ஆகவே இந்த ஆண்டு நம்முடைய தமிழக அரசு இந்த நாட்டிலே இருக்கக்கூடிய தமிழ் மக்களுடைய வகுப்புவாரிக் கணக்கை எடுத்து முடிக்க வேண்டுமென்று நான் இங்கே பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக எங்களுடைய தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே குடிநீர்ப் பற்றாக்குறை நீண்டகாலமாக இருந்துவருகிறது. ஆகவே தருமபுரி மாவட்ட குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு, நிரந்தரமாக பாதுகாக்கப்பட்ட குடிநீரை அவர்கள் பெறுவதற்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே உருவாக்கப்பட்டு, இன்றைய வரையிலே நிலுவையிலேயே இருந்து கொண்டிருக்கிறது. அந்த ஒரு திட்டத்தை நிறைவேற்றினாலே எங்கள் மாவட்டத்தினுடைய முக்கால்

பகுதி மக்கள் நிரந்தரமான, பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். அந்த வகையிலே எங்கள் மாவட்ட மக்களுடைய மிகப்பெரிய எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில், அந்த மக்களுடைய கோரிக்கையை ஏற்று இந்த நடப்பு ஆண்டில் தமிழக அரசு அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பகுதியிலே மத்தளப்பள்ளம் அணைக்கட்டு என்று ஒரு அணைக்கட்டு இருக்கிறது. அதுவும் நீண்டகாலமாக நிலுவையில் இருந்து கொண்டிருக்கிறது. எனவே மத்தளப்பள்ளம் அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றி அந்தப் பகுதி மக்களுக்குப் பாசன வசதியைப் பெருக்கித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-15*

அடுத்து, பஞ்சப்பள்ளி அணையிலிருந்து பாப்பாரப்பட்டி நகரைச் சுற்றியிருக்கின்ற 16 ஏரிகளுக்குக் கால்வாயை நீட்டித்துக் கொடுத்தால், அந்த 16 ஏரிகளிலும் நீர் நிறைந்து அங்கே பாசனத்திற்கு வசதி ஏற்படும். பாசனத்திற்கு மட்டுமன்றி கிணற்று நீர் ஊற்று கிடைப்பதற்கு அது உதவியாக இருக்கும். எனவே, நம்முடைய அரசு 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு வாய்க்காலை நீட்டித்துக் கொடுத்து பாசனம் செய்வதற்கும், கிணற்று நீர் ஊற்று பெறுவதற்கும் அந்தப் பகுதி மக்களுக்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்ததாக, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் நம் நாட்டுக்கு மிகவும் அத்தியாவசியமானதாகும். சுற்றுப்புறங்கள் அதிகம் பாதிக்கப்படுவதால் நாம் மிகவும் தொல்லைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறோம் என்பது நாடறிந்த உண்மை. கெமிக்கல் தொழிற்சாலைகள் நாட்டில் அதிகம் இருக்கின்றன, தோல் தொழிற்சாலைகள் அதிகம் இருக்கின்றன, சாயப் பட்டறைகள் அதிகம் இருக்கின்றன மற்றும் பிளீச்சிங் பட்டறைகள் அதிகம் இருக்கின்றன. இவற்றினால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதோடு குடிநீரும் பாதிக்கப்படுகிறது. இவற்றை எல்லாம் சீர் செய்வது குறித்து நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் முன்பு ஒரு வேண்டுகோள் வைத்தேன். இதை எப்படியாவது நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். தொழிற்சாலைகள் உருவாக்குகின்ற நேரத்திலே ஆலை அதிபர்கள் மாசுக்கட்டுப்பாட்டு விதிக்கு உட்பட்டு முன்வருகிறார்கள். ஆனால் ஆலையை தொடங்கிய பிறகு அதை மறந்து விடுகிறார்கள். இதை நான் பேசுகின்ற காரணத்தால் தொழிற்சாலைகளுக்கு விரோதமாக, தொழிலாளர் நலன் பாதிக்கின்ற வகையில் நான் பேசவில்லை, கேட்கவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆலை முதலாளிகள் முதலில் எப்படி ஒத்துக்கொண்டார்களோ அந்த நிலையிலிருந்து மாறாமல் அவர்களை கட்டுப்படுத்துவதற்கு அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது ஆட்சியிலே, நம்முடைய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்த நேரத்தில், மீண்டும் மீண்டும் ஆளுநர் உரையை என் சார்பிலும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும் வரவேற்று பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு மிக்க ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வாய்ப்பை எனக்கு அளித்ததற்காக நான் உங்களுக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன். இந்த ஆளுநர் உரையிலே பல முக்கியமான அம்சங்கள் நிறைந்திருக்கின்றன. குறிப்பாக உணவுப் பங்கீட்டு அட்டை என்பது இன்றைக்கு பாஸ்போர்ட் வாங்குவதற்குக்கூட மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது. உணவுப் பங்கீட்டு அட்டையைப் பயன்படுத்தி வசதியானவர்கள் அரிசியை வாங்கலாம் என்றாலும் அதனைப் பயன்படுத்துவதில்லை. அரிசி வெளி மாநிலங்களுக்குக் கடத்தப்படுகின்ற நிலைமைகளை எல்லாம் நாம் அறிந்திருக்கிறோம். அதையெல்லாம் தவிர்க்கின்ற முறையிலே 3 வண்ணங்கள் கொண்ட உணவு பங்கீட்டு அட்டைகளை வழங்க அரசு முன்வந்திருப்பது மிகமிகப் பாராட்டுக்குரிய ஒரு செயலாக நான் கருதுகிறேன். அதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, தமிழகத்தில் 300 ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் தொடங்க அரசு திட்டமிட்டிருப்பது பாராட்டுக்குரிய ஒரு செயலாகும். கிராமப்புறங்களிலே சுகாதார வசதியை மேம்படுத்த இது மிகவும் இன்றியமையாத ஒரு செயலாகும். இதற்காக நான் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே முதல் வரியிலே ஆளுநர் சொல்லியிருப்பது 'நாடு விடுதலை பெற்ற பொன்விழா ஆண்டு' என்ற வாசகமாகும். இந்த நாடு விடுதலை பெறுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் தியாகிகள் ஆவர். அவர்கள் இன்றைக்கு அருகி வருகின்ற பரம்பரையாக இருந்து வருகிறார்கள். அன்றைக்கு பட்ட அடி அவர்களுக்கு இன்றைக்குத்தான் வலிக்கிறது. ஆகவே தியாகிகளுக்கு நாம் பல உதவிகளைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். மைய அரசு தியாகிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 1,500 ரூபாய் கொடுக்கிறது. நம்முடைய மாநில அரசு 250 ரூபாயை தன்னுடைய பங்காக அளிக்கிறது. பாண்டிச்சேரி அரசாங்கம் மைய அரசு அளிக்கும் 1,500 ரூபாயோடு தன்னுடைய பங்காக ரூ. 500-ஐ கூடுதலாக தியாகிகளுக்கு அளித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் கேரள மாநிலத்தில் மைய அரசு அளிக்கும் 1,500 ரூபாயோடு மாநில அரசு கூடுதலாக 1,000 ரூபாயை சேர்த்து கொடுக்கிறார்கள். நாமும் தியாகிகளுக்கு உதவி செய்கின்ற முறையிலே மாநில அரசின் பங்காக ரூ.1,000 கொடுக்க வேண்டுமென்று இந்த அரசை மிகவும் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-20

அடுத்ததாகக் கல்வி. தலைமைச் செயலகத்திலே கல்வித் துறையானது இரண்டு துறையாக, பள்ளிக் கல்வி என்றும், உயர் கல்வி என்றும் பிரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இன்றைக்கு கல்லூரிக் கல்வி என்பது, உயர் கல்வி என்பது, பெரும்பாலும் தனியார் வசம் இருக்கிற ஒரு நிலைமையிலே உயர் கல்விக்குத் தனியாக ஒரு துறை இருப்பது மிக மிக இன்றியமையாதது. அப்படி தனியார் கல்லூரிகள் வருகிறபோது, அங்கே சில பிரச்சினைகள் இருக்கின்றன. உதவி பெறும் கல்லூரிகளிலே, அதாவது 'எய்டட் காலேஜஸ்' புதிய நல்ல பாடத் திட்டங்களைத் தொடங்க வேண்டுமென்று சொன்னால், அது மாலை நேர வகுப்பாகத்தான் இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. மாலை நேர வகுப்புக்கு மாணவிகள் வருவது எளிதல்ல. ஆகையினாலே அரசு உதவி பெறும் கல்லூரிகளிலேகூட புதிய வகுப்புகளைத் தொடங்குவதற்கு அனுமதி கொடுக்கிற ஒரு முறையினை பல்கலைக் கழகங்களுக்கு கல்வி அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு உதவி பெறாத கல்லூரிகளிலே அவர்கள் புதிய பாடத்திட்டத்திற்கு அனுமதி அளிக்கின்றபோது, பல்கலைக் கழகம் மாணவர்கள் எண்ணிக்கையைக் குறைத்துக் கொடுக்கிறது. அரசுக் கல்லூரி என்று சொன்னால் அல்லது உதவி பெறும் கல்லூரி என்று சொன்னால், சான்றாக, 40 மாணவர்கள் என்று சொன்னால், உதவி பெறாத கல்லூரி--வழக்கமாக சுய நிதிக் கல்லூரி என்று சொல்கிறோம், அந்த உதவி பெறாத கல்லூரிகளிலே--ஒரு 20 பேர், 14 பேர்தான் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்த நிலையானது......

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே பாடத் திட்டத்திற்கோ, ஒரே வகுப்புக்கோ அந்த எண்ணிக்கை வேறுபாடு இருக்காது. அந்த வகுப்பும் பாடத் திட்டமும் வேறு வேறு வகையாக அமைந்தவையாக இருந்தால்தான், அதில் தாங்கள் சொல்வது போல வேறுபாடு இருக்கும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக, இன்றைக்கு உதவி பெறாத கல்லூரிகள் அதிகமாக வளர்ந்து வந்திருக்கின்றன. அதே சமயத்தில் அந்தக் கல்லூரிகளின் மீது பொது மக்களுக்கும் சரி, மற்றவர்களுக்கும் சரி, அரசியல்வாதிகளுக்கும் ரொம்ப கோபம் இருக்கிறது. ஆனால், இன்றைக்கு அரசாங்கம் உயர் கல்வியை அளிப்பதற்கு வருவாய் இடம் தராத போது இந்தத் தனியாருடைய கல்லூரிகள் முன் வருவதை நாம் தவறு என்று சொல்ல முடியாது. தடுக்க முடியாது. அதே சமயத்திலே தடுக்கப்பட வேண்டுமென்று சொன்னால், நாம் செய்யவேண்டிய ஒரே காரியம் அரசுக் கல்லூரிகளிலே 'ஷிப்ட்' முறையிலே நாம் வகுப்புகளை நடத்துவோம் என்று சொன்னால், ஒரு வேளை இந்தப் புதிய தனியார்க் கல்லூரிகள் வருவது தவிர்க்கப்படலாம். அல்லது உதவி பெறும் கல்லூரிகளிலே கூட இந்த 'ஷிப்ட்' முறையானது அமலுக்கு கொண்டு வரப்படும் என்று சொன்னால், ஒரு வேளை, இந்தத் தனியார் கல்லூரிக்கு அளிக்கப்படுகிற இந்தச் சலுகையானது தவிர்க்கப்படலாம். அதே சமயத்திலே இந்த ஆளுநர் உரையிலே ஒரு முக்கியமான அம்சம் விடுபட்டு இருப்பதாகப் பார்க்கிறேன்.

குறிப்பாக நீர்ப்பாசனம். காவிரி பற்றிச் சொன்னாலும் கூட, மேற்கு நோக்கி ஓடுகிற பாண்டியாறு-புன்னம்புழா பற்றியோ அல்லது

அச்சன்கோவில், பம்பா பற்றியோ எதுவுமில்லாமல் இருப்பது மிக மிக வருத்தத்தை உண்டாக்குவதாக இருக்கிறது. என்னைப் பொறுத்தமட்டிலே கோவை மாவட்டத்திற்கு அந்தப் பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைப் பொறுத்தவரை குளம் குட்டைகளுக்கு அருகில் இருப்பவர்களுக்குத் தண்ணீர் எடுத்தால் கூட போதுமானதாக இருக்கும். கேரள அரசு பாண்டியாறு தண்ணீரை குடிநீருக்காகப் பயன்படுத்திக் கொள்வதில் ஆட்சேபனை இல்லை என்று எனக்கு எழுதிய கடிதத்தினுடைய நகலை நான் முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன். அதே போல தியாகிகள் மானியத்திலேகூட, பாண்டிச்சேரி, கேரளா போன்ற அரசுகள் எடுத்திருக்கிற முடிவைக் கூட நகலெடுத்து, நான் முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். நீர்ப்பாசனத்தைப் பொறுத்தமட்டிலே இதனை உடனடியாக நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னால்....

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் குறித்து சமீபத்திலே இங்கு வந்து எங்களோடு உரையாற்றிய கேரள அரசின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. பேபி ஜான் அவர்களோடு பேசியிருக்கிறோம். அவர்களும் இந்தப் பாண்டியாறு--புன்னம்புழா திட்டத்தை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அது குறித்து தமிழக சர்க்காரிடமிருந்து ஒரு 'புராஜெக்ட் ரிப்போர்ட்' அனுப்ப வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, கேரள அரசு கொள்கை அளவில் இந்தத் திட்டத்தை ஒத்துக்கொண்டிருக்கிறது. மீண்டும் அடுத்தடுத்துப் பேசப்படுகிற போது மற்றப் பிரச்சினைகள் பற்றிப் பேசி முடிக்கப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-25*

**திரு. வி.கே. லட்சுமணன்:** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு நன்றி.

அடுத்தபடியாக, கைத்தறி. கைத்தறித் துணிகளுக்கு நாம் தள்ளுபடி கொடுத்து வருகிறோம். அன்னமையிலே இந்தத் தள்ளுபடியானது



1992-93 ஆம் ஆண்டில் எவ்வளவு கொடுக்கப்பட்டதோ அதிலே 75 சதவீதம்தான் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இதனால் இந்தத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, வழக்கம்போல் ஆண்டுதோறும் அளிக்கப்படுகின்ற 20 சதவீதம் தள்ளுபடியைக் கைத்தறிக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, பால் கூட்டுறவுச் சங்கங்கள், பால் கூட்டுறவுச் சங்கங்களிலே ஒருவர் போட்டியிட வேண்டுமென்றால், ஒன்று, 300 லிட்டர் பால் கொடுத்திருக்க வேண்டும், அல்லது 120 நாட்கள் தொடர்ந்து பால் வழங்கியிருக்க வேண்டும். அப்படி வழங்கியிருந்தால்தான் அவர்கள் அங்கே போட்டியிடத் தகுதியுள்ளவர்கள். இன்றைக்கு அந்தத் தகுதி தேவையில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தகுதியை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்திலே பேசுகிறபோது, நாங்கள் எல்லாம் கோரிக்கை எதுவும் வைக்காமலேயே மேட்டுப்பாளையத்தையும், சாம்ராஜ்நகரையும் ரயில் பாதை மூலம் இணைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஆளுநர் உரையிலே அதைப்பற்றிய விவரம் எதுவும் இல்லாவிட்டாலும்கூட, அந்தக் கோரிக்கையை முதல்வர் அவர்கள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, போலி நிதி நிறுவனங்கள். இந்தப் போலி நிதி நிறுவனங்களில் மக்கள் ஏமாந்து முதலீடு செய்து அதனால் அவர்களுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 123 கோடி ரூபாய் மக்கள் பணத்தை ஏமாற்றி மோசம் செய்திருக்கிறது இந்தப் போலி நிதி நிறுவனங்கள். அவைகளில் முதலீடு செய்தவர்களில் விதவைகள், வயோதிகர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். இவர்களுக்கு ஒரு சிறப்பு நீதிமன்றத்தை அமைத்து, அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு, உடனடியாகத் தீர்வுகாண வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இதிலிருந்து பலபேர் தங்களுடைய பெண்களுக்கு திருமணம் செய்யவேண்டும், பலபேர் தங்களுடைய குழந்தைகளுக்கு கல்விக்கான ஏற்பாடு செய்யவேண்டும். இவையெல்லாம் தடைப்பட்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக இதற்கு ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேலைநாட்கள். நம்முடைய அரசாங்கத்திலே அரசு அலுவலர்கள் ஆண்டு ஒன்றுக்கு உரிமையோடு எல்லா விடுமுறை நாட்களையும் பயன்படுத்தினால் 183 நாட்கள் வேலை செய்தால் போதும். அரை ஆண்டு வேலை செய்தால் போதும். இதை என்னுடைய கட்சியின் கருத்தாக நான் சொல்லமாட்டேன். என்னுடைய சொந்தக் கருத்தாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 183 நாட்கள் என்பது மிகமிகக் குறைவானது. எனவே, அந்த விடுமுறை நாட்களைக் கொஞ்சம் குறைப்பதற்கு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முதல்வர் அவர்கள் சென்றமுறை இந்த மாமன்றத்திலே உரையாற்றும்போது, 1976 ஆம் ஆண்டு காவல் துறையிலே, அமைச்சுப் பணியிலே இளநிலைப் பணியாளர்களாகச் சேர்ந்தவர்களுக்கு, அவர்களுக்கு 'சென்ஷீர்' இருந்தாலும், சிறு தண்டனை இருந்தாலும்கூட, பதவி உயர்வு கொடுப்பதாகச் சொல்லியிருந்தார்கள். அதிலே பல பேருக்கு இன்னும் பதவி உயர்வு கிடைக்கவில்லை. எனவே, அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, கோவையிலே அறிஞர் அண்ணா ஹட்கோ காலனி சர்வீஸ் சொசைட்டியினுடைய உறுப்பினர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்கள் விவரமாக ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் முதல்வர் அவர்களிடத்திலே கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முதல்வர் அவர்கள், அவர்களுடைய கோரிக்கையினை ஏற்று, அதைப் பரிசீலித்து, அதற்குத் தீர்வுகாண வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளைக் (29-1-1997) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

61. 1995-96 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (1948-ஆம் ஆண்டு மின்சாரம் (வினியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

62. 1995-96 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேர்வைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

63. 1994-95 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

64. 1995-96 ஆம் ஆண்டிற்கான ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

65. 1995-96 ஆம் ஆண்டிற்கான மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

66. 1995-96-ஆம் ஆண்டிற்கான மகாகவி பாரதியார் போக்குவரத்துக் கழகத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-

# 29-1-1997

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 139-169 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (இரண்டாம், மூன்றாம் பட்டியல்கள் | 169-264 |
| 2. ஒழுங்குப் பிரச்சினை— | |
| (அ) வினாக்கள்-விடைகள் நேரம் குறித்து. | 264-265 |
| (ஆ) அரசு விழாவிற்கு சட்டமன்ற உறுப்பினரை அழைத்தல் குறித்து | 265-267 |
| 3. சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி கயத்தாறு ஒன்றியத்தில் மக்கள் குறைக் கேட்பதைத் தடுக்க முற்பட்டதாகக் கூறப்படுதல். | 267-278 |
| 4. அறிவிப்பு— | |
| 30-1-1997 அன்று இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துதல் குறித்து | 279 |
| 5. அறிக்கைகள் அளித்தல்— | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 279 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 279 |


53-547—1

பக்கங்கள்

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு கேலிவதை செய்தலைத் தடுத்தல் சட்டமுன்வடிவு, 1997 — 280

(ஆ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1997 — 280-281

(இ) தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 — 281-282

7. அரசினர் தீர்மானம்—

விதி 32-ஐத் தளர்த்தல். — 282

8. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. ஜி.கே. மணி | 283 |
| திரு. பி. வெங்கடசாமி | 283 |
| திரு. ப. ரங்கநாதன் | 284-294 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 294-311 |
| திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் | 311-320 |
| திரு. பி.என். வல்லரசு | 320-325 |
| திரு. கே. சுப்பராயன் | 325-334 |
| திரு. இரா. பெர்னார்டு | 334-338 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 338-342 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 343-360 |

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 361-362

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**தை 16, தாது, திருவள்ளுவர் ஆண்டு - 2028**

**1997 சனவரி 29, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தகுதி எனஒன்று நன்றே பகுதியான்
பாற்பட்டு ஒழுகப் பெறின்."

பகைவர், அயலோர், நண்பர் எனப்பகுத்துப் பார்த்து ஒருதலைச் சார்பாக நிற்காமல் இருத்தலே நன்மை தரக்கூடிய நடுவுநிலைமை எனும் தகுதியாகும்.

## 1. வினாக்கள் - விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் - விடைகள், வினா எண் 61, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**61—**

**சுவாமிமலையில் தீயணைப்பு நிலையம் அமைத்தல்.**

***3095—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுவாமிமலையில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்பதைக் கொடுக்கின்ற வகையில் நமது தமிழக முதலமைச்சர் இருக்கின்றார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் எனது கிள்ளியூர் தொகுதியில் குடிசைகள் நிறைந்த பகுதிகள் இருக்கின்ற காரணத்தாலும், பல்வேறு சந்தர்ப்பங்களில் அங்கே தீ விபத்துகள் ஏற்படுகின்ற காரணத்தாலும், அந்தத் தொகுதியிலேயே எந்த இடத்திலும் தீயணைப்பு நிலையம் இல்லை என்ற காரணத்தாலும், கிள்ளியூர் தொகுதிக்கு ஒரு தீயணைப்பு நிலையத்தை வழங்க அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவரது தொகுதியிலேயே தீயணைப்பு நிலையம் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். தீயணைப்பு நிலையம் அமைப்பதற்குச் சில முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. 25 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு ஒரு தீயணைப்பு நிலையம் நிறுவுவதுதான் அரசின் தற்போதைய கொள்கையாக இருந்து வருகிறது. ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்டதாகவும் அந்த ஊர் இருக்க வேண்டுமென்றும் ஒரு முறை வகுக்கப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் அடிப்படையாக வைத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன அந்தக் குறைபாட்டையும் எண்ணிப்பார்த்து, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆர். இராமசாமி.

**திரு. கே. ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுவாமிமலை பகுதியிலே கரும்பு விவசாயம் அதிகமாகச் செய்கிறார்கள். அதனால் அங்கே தீ விபத்து அடிக்கடி ஏற்படுகிறது. எனவே இதை





மறுபரிசீலனை செய்து, அங்கே ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, சுவாமிமலை நகரத்தின் மக்கள் தொகையே 8,500 தான். சுவாமிமலைக்குக் கிழக்கே ஏழு கிலோ மீட்டர் தொலைவிலே கும்பகோணத்தில் தீயணைப்பு நிலையம் இருக்கிறது. மேற்கே ஒன்பது கிலோ மீட்டர் தொலைவிலே பாபநாசம் தீயணைப்பு நிலையம் இருக்கிறது. இப்படி, சுற்றிலும் தீயணைப்பு நிலையங்கள் இருக்கும்போது, மக்கள் தொகையும் குறைவாகக் கொண்ட, 25 கிலோ மீட்டர் சுற்றளவு என்ற விதிமுறைக்கும் உட்படாமல் இருக்கின்ற ஒரு இடத்தில், தீயணைப்பு நிலையம் அமைப்பது இப்போது இயலாத ஒன்றாக இருக்கின்றது. அங்கே கரும்பு பயிரிடுகின்ற காரணத்தால் அடிக்கடி தீவிபத்து ஏற்படுவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அவைகளெல் லாம் ஆராய்ந்து பார்க்கப்பட்டு, சரி என்று பட்டால் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கூட்டத் தொடரில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு, தற்போது அவை வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றுக்குச் சொந்தக் கட்டிடம் கட்டித்தர ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, முதலில் தீயணைப்பு நிலையம் இருந்தால் போதும் என்ற ஒரு கோரிக்கை; நிலையங்கள் வந்ததும் வாடகைக் கட்டிடங்களை மாற்றவேண்டும் என்பது அடுத்த கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம் கூத்தாநல்லூர் நகராட்சிப் பகுதி 50,000 மக்கள் தொகையைக் கொண்டிருக்கின்ற பகுதியாகும். சுற்றுப்புறத்தில் 50 கிராமங்களுக்கு மேல் இருக்கின்றன. அந்தக் கிராமங்கள் பயன்படுகின்ற வகையில், அந்த நகராட்சிப் பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

[1997 சனவரி 29

முற்பகல் 9-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற அந்த நிலை இருக்குமானால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கூட்டத் தொடரின்போதுகூட என்னுடைய தொகுதியில் இரண்டு இடங்களில் தீப்பற்றி எரிந்து அந்தக் கிராமங்கள் முழுவதும் சாம்பலானது. அப்போது தீயணைக்கும் நிலையம் சென்று அதிகாரிகளைக் கேட்டபோது அங்கேயிருக்கிற வாகனங்களுக்கு டயர் இல்லை, தேவையான பணியாளர்கள் இல்லை, வாகனங்களை இயக்கும் நிலை இல்லையென்று சொல்லி இப்படி குறைபாடுகள் இருக்கின்ற காரணத்தால் எங்களால் உடனடியாகச் சென்று தீயை அணைக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். எனவே விபத்து ஏற்பட்டு அணைக்க முடியாத நிலை இருக்கிற காரணத்தால், இப்படிப்பட்ட குறைகளை உடனடியாக நடப்பாண்டிலேயே களைவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பற்றுவது ஒரு விபத்து, தீயணைக்கும் வண்டி உடனே செல்ல முடியாமல் பழுதாகி இருப்பது இன்னொரு விபத்து. இந்த இரண்டாவது விபத்தை அரசு பரிசீலித்து அகற்றிட முன் வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 62, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**62—**

**தோல் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் துவங்குதல்**

***2015—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 சனவரி 29]

(அ) திண்டுக்கல் தொகுதியில், நூற்றுக்கணக்கான தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இயங்கி வருவதால் திண்டுக்கல்லில் தோல் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் துவங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) புதியதாக அரசு தோல் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் துவங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் தொகுதியில் ஏறத்தாழ நூறுக்கு மேற்பட்ட தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அங்கே ஆணும் பெண்ணும் சுமார் 20,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைப் பார்க்கிறார்கள். தோல் தொழிற்சாலைகள் நிறைந்த அந்தப் பகுதியில் தோல் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் ஏற்படுத்தித் தந்தால் அந்தப் பகுதியில் வாழக்கூடிய இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதை செய்து தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள அரசினுடைய பொருளாதார நிலை காரணமாகவும், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருக்கிற முடிவு அடிப்படையிலும் புதியதாகத் தொடங்குவதற்கு பெரிய நிதியொதுக்க வாய்ப்பு இல்லை. எவரேனும் தனிப்பட்ட முறையில் அப்படிப்பட்ட நிலையம் தொடங்க முன்வருவாரானால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும். அல்லது சிறிய அளவில் ஐ.டி.ஐ. என்ற முறையில் அந்தத் தொழில் தொடங்கி நடத்தக்கூடிய வாய்ப்பிருக்குமானால் அதைத் தொழிலாளர் நலத் துறை சார்பாக எண்ணிப் பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

[1997 சனவரி 29

63—

### நீடாமங்கலத்தில் உயர்நிலைப்பள்ளி தொடங்குதல்

***2060—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலத்தில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லாத காரணத்தால் கேள்வி எழவில்லை.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், ஒரத்தநாடு சட்டப் பேரவை தொகுதியில் நீடாமங்கலம் மிகவும் பின்தங்கிய தாலுக்காவாகும். கிட்டத்தட்ட 60 விழுக்காடு தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற அந்தப் பகுதியில் ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி அமைத்துத் தந்தால் அந்த மக்களுடைய நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதாகும். எனவே, அரசு முன்வருமா, மறுபரிசீலனைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஏதேனும் செய்வதாக இருந்தாலும் கூட பாத்திரத்தில் இருந்தால்தான் வழங்க முடியும். எனவே அதற்கு அடிப்படையாக ஒரு பள்ளிக்கூடம். அமைப்பதற்குத் தேவையான நிலம், ஓரளவுக்கு நிதி, இவைகளை அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் வழங்குவதற்கு முன்வருவார்களானால், அல்லது ஒரு அமைப்பு வழங்குவதற்கு முன் வருமேயானால், மாணவிகளுடைய எண்ணிக்கை கருதி எந்த அளவுக்குச் சேர்க்கப்பட முடியும் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்து, வருகிற ஆண்டில் ஏற்க ஆய்வு செய்யலாம்; தகுந்ததாக இருக்குமானால் ஏற்கலாம்.



1997 சனவரி 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 64, டாக்டர் காஞ்சனா கமலநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

64—

### கிருஷ்ணகிரியில் துணை மின்நிலையம் அமைத்தல்

***2576—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரியில் ஒரு 230 கி.வோ. துணை மின்நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : கிருஷ்ணகிரியில் ஒரு 230 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியம் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால், இதற்குப் பின்னால் ஒப்புதல் அளிக்கப்பட்ட புதிய 110 கி.வோ. துணை மின் நிலையங்களைக் கருத்தில் கொண்டு, கிருஷ்ணகிரிக்குப் பதிலாக காரிமங்கலம் பகுதியில் ஒரு 230 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க மறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

பிற்பகல் 9-40

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி, மாவட்டத்தின் தலைநகராக இருக்கக்கூடிய தகுதியைப் பெற்ற ஒரு ஊர் என்பதை இம்மாமன்றத்தில் பலமுறை நான் குறிப்பிட்டு இருக்கிறேன். 1989-90 ஆம் ஆண்டுகளில் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் 110 கே.வி. துணை மின் நிலையம் கிருஷ்ணகிரியில் அமைந்தது. தொழிற்துறையில் கிருஷ்ணகிரி நிலையம் கிருஷ்ணகிரியில் அமைந்தது. தொழிற்துறையில் கிருஷ்ணகிரி அடையவேண்டிய வளர்ச்சி இன்னும் நிறைய இருக்கிறது. மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள், ஏற்கனவே அனைத்துத் தகுதியும் இருந்தும் ஆய்வு செய்யப்பட்டும் சேங்ஷன் ஆன 230 கிலோவோட் துணை மின் நிலையத்தை காரிமங்கலத்திற்கு எடுத்துக் கொண்டு செல்வதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். தொழிற்துறையில் கிருஷ்ணகிரி

அடைய வேண்டிய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, எங்கள் மின்சாரக் கனவுகளை, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் நிறைவேற்றி, கிருஷ்ணகிரியிலே 230 கே.வி. துணை மின் நிலையத்தை கொடுத்து, நிறைவேற்றி வைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கிருஷ்ணகிரியில் 110/33/11 கே.வி. துணை மின்நிலையம் இருந்து வருகிறது. அதை 230/110/33/11 கே.வி. துணை மின் நிலையமாக மேம்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதற்கிடையில் கிருஷ்ணகிரியை விட காரிமங்கலம் பகுதிதான் மையப்பகுதி என்றும், அங்கு அமைத்தால் அதன் சுற்றுவட்டாரத்திலே இருக்கக்கூடிய எல்லாக் கிராமங்களுக்கும் பயன்படும் என்றும் வாரியம் பரிந்துரை செய்திருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியான கிருஷ்ணகிரிக்கு, குறிப்பாகத் தலைநகராக இருக்கக்கூடிய கிருஷ்ணகிரிக்குக் கேட்கிறார்கள். அதுபற்றி, மறு ஆய்வு செய்வதற்கு முடிந்தால் முயற்சிப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 65, திரு. ஆ. மு. முனிரத்தினம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**65—**

**சோளிங்கர் தொகுதியில் துணை மின்நிலையம் அமைத்தல்**

***3149—திரு. ஆ.மு. முனிரத்தினம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், சிறுவளையம் கிராமத்தில் துணை மின்நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஆ. மு. முனிரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். பனப்பாக்கத்திலிருந்துதான் சிறுவளையம்



கிராமத்திற்கு மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது. பனப்பாக்கத்திலே அதிக அளவிலே விசைத்தறிகள் இருப்பதன் காரணத்தால், சரிவர மின்சாரம் கிடைப்பதில்லை. இதனால் விவசாயிகளும் மற்றவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனமுவந்து மின் நிலையத்தை சிறுவளையத்திலே அமைத்துத் தரவேண்டும் என்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் சிறுவளையம் கிராமத்தில் துணை மின்நிலையம் அமைக்கக்கூடிய திட்டம் எதுவும் இல்லை. இருந்தாலும், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான மின்சாரம் செலுத்துதல் மற்றும் பகிர்மானத்திற்கான பெரும் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் பணிகள் இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்ட ஆய்வின்படி, சிறுவளையம் பகுதியில் ஒரு துணை மின்நிலையம் அமைக்கும் தேவை ஏற்பட்டால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 66, திரு. சி. கோபு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**66—**

**வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்**

***416—திரு. சி. கோபு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, திரு. ஜி.எல். வெங்கடாசலம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

67—

## மண்வளப் பாதுகாப்புத் திட்டம்

***1123—திரு. ஜி. எல். வெங்கடாசலம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில், மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 1984 வரை இலவசமாக விவசாய நிலங்களில் வரப்புகள் அமைத்தது போன்று 1984-க்குப் பின்பும் வரப்புகள் அமைத்த செலவினத்தைத் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஜி. எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978-லிருந்து 1981 ஆம் ஆண்டு வரையிலும், அதேபோல் 1985-லிருந்து 1987 ஆம் ஆண்டு வரையிலும் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வரப்புகள் அமைக்கப்பட்டது. ஆனால், 1978-லிருந்து 1981 ஆம் ஆண்டு வரையில் உள்ள செலவினத்தை அரசு தள்ளுபடி செய்துள்ளது. அதேபோல், 1985-லிருந்து 1987 ஆம் ஆண்டு வரை உள்ள அந்தச் செலவினத்தையும் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980-81 மற்றும் 1992-93 வரை செயல்படுத்தப்பட்ட பணிகளுக்கு உரிய கடன் தொகைக்கு வேளாண்மைப் பொறியியல் துறையால் தயாரிக்கப்பட்ட உரிமை மற்றும் பொறுப்பு பதிவேட்டின் அடிப்படையில் வருவாய்த் துறையினர் கடன் வசூல் செய்து வருகிறார்கள். இந்த ஆண்டுகளில் மொத்தம் ரூ. 49.06 கோடி ரூபாய் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்பட வேண்டும். ஆனால் ரூ. 53.35 லட்சம்தான் வசூல்





செய்யப்பட்டு இருக்கின்றது. இன்னும் ரூ. 48.53 கோடி வசூல் செய்ய வேண்டியிருக்கிறது. அரசு நிதி நிலைமைக் குறித்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தான் முடிவு செய்யவேண்டும். ஆனால் இவ்வளவு கடனையும் தள்ளுபடி செய்வது என்பது தற்போது சாத்தியமாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68, திரு. கு. ரவி அருணன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

68—

## குற்றாலம் அருவி நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துதல்

***337—திரு. கு. ரவி அருணன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலம் புலியருவியில் வீணாகும் தண்ணீரைத் தேக்கி விவசாயத்திற்குப் பயன்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திட்டம் ஏதும் இல்லை.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புலியருவியில் வீணாகும் தண்ணீரைத் தேக்கி வைத்தால் குடியிருப்பு, நன்னகரம், மேலகரம், சிந்தாமணி, பாட்டபத்து, ஆசாத்நகர், பட்டாணம் போன்ற மற்ற பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்திற்கு ஒரு உறுதியான பாசன வசதி கிடைக்கும். ஏற்கெனவே 1990-ஆம் ஆண்டு ரூ.17 கோடி செலவில் இதற்காக ஒரு திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு மறுபரிசீலனைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. அருணன் அவர்களுக்கு தெரியாதது அல்ல. குற்றாலத்தில் குளிக்கிற தண்ணீருக்குப் பெயர்தான் புலியருவி. பிறகு அந்தத் தண்ணீர் வீணாவது இல்லை. பல குளங்களில் நிரம்பி அதனால் அங்கே பாசனம் பெறுகிறது. அதற்குப் பிறகு அழுதகண்ணி என்ற ஆற்றிலே அது கலக்கிறது.

அழுதகண்ணி ஆற்றுக்கும் பாசனங்கள் உண்டு. அழுதகண்ணி ஆறு சிற்றாறிலே கலக்கிறது. சிற்றாறிலே மாறண்டஹள்ளியில், பல அணைக் கட்டுகளில் கலக்கிறது. அதற்குப் பிறகு வீரகேளம்புதூர் வரையில் வந்து சிற்றாறிலே தண்ணீர் வருகிறது. எங்களுக்கு வருவது இல்லை என்று திரு. ரவி அருணனுக்குக்கூட கோபம். கீழே என்றால் கங்கைகொண்டான் வரை யிலே போகவேண்டும். பிறகு அது சீவலப்பேரியிலே போய் தாமிரபரணியில் கலக்கவேண்டும். அதுவரையில் பெற இயலாத நிலை இருக்கிறது. எனவே இதிலே வீணாக தண்ணீர் போகிறது என்று சொல்லத் தேவையில்லை. புலியருவிக்கும் பாசனம் உண்டு, அழுதகண்ணி ஆறுக்கும், சிற்றாறுக்கும் பாசனம் உண்டு; தாமிரபரணிக்கும் பாசனம் உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்குப் பிறகும் துணைக் கேள்வி உண்டா?

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலம் பகுதியில் அமைச்சர் அவர்கள் கூறுவதுபோல பல அருவிகள் இருந்தும், தென்காசி மற்றும் சுற்றுப் பகுதிகளில் கோடை காலத்தில் நிலத்தடி நீர் இல்லாமல் அங்கே விவசாயத்திற்கு மட்டுமல்லாமல், குடிப்பதற்குக் கூட தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை இருந்து வருகிறது. ஆகவே அந்த நிலையைப் போக்க அந்தப் பகுதியிலே ஏதாவது ஒரு அருவியிலிருந்து வீணாகும் தண்ணீரைத் தேக்கிவைக்க அமைச்சரவர்கள் மறுபரிசீலனைச் செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் எந்த அருவியிலிருந்தும், எந்த ஓடையிலிருந்தும் தண்ணீர் வீணாகக் கலப்பதில் இந்த அரசு, குறிப்பாக முதல்வர் கலைஞர் அவர்கள் விரும்பவில்லை. நெல்லை மாவட்டத்தினுடைய நீர்ப்பாசன வரலாற்றினைப் பார்த்தால், பாபநாசம் மிகப் பழமையான அணைக்கட்டு. அதற்குப் பிறகு காமராஜர் காலத்தில் மணிமுத்தாறு கட்டப்பட்டது. இன்றைக்கு இருக்கின்ற நம்பியாறு ஆனாலும், அல்லது கொடுமுடியாறு ஆனாலும், அதற்குப் பின்னாலே வந்திருக்கிற கடனா நதி, ராமா நதி மற்றும் இந்தப் பகுதியிலே கட்டப்பட்டிருக்கின்ற அடவிநயினாறு ஆனாலும், குப்பத்து ஓடையானாலும், வடக்கு பச்சையாறு ஆனாலும், எல்லா பாசன அணைக்கட்டுகளும் முதல்வர் கலைஞர் அவர்களுடைய காலத்திலேதான் கட்டப்பட்டது என்பதை நான் தங்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சில திட்டங்கள் இருக்கின்றன. இல்லையென்று சொல்லவில்லை. எந்தத் திட்டங்களிலும், எந்த ஓடைகளிலும் அணைகள் கட்டப்போகிறவர் நம்முடைய முதல்வர்



அவர்கள்தான், அங்கே எது feasibility, possibility என்று பார்த்து அதை அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 69, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

69—

## நல்லதங்காள் அணைக்கட்டு திட்டம்

***2147—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட கொத்தையத்தில் "நல்லதங்காள் அணைக்கட்டுத் திட்டம்" அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ரூ.11.31 கோடிக்கு முதல் நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டு ஆய்வு செய்தபின் இத்திட்டம் கைவிடப்பட்டது.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த 1992-ஆம் ஆண்டு பொதுப் பணித் துறை மூலமாக ஆய்வு செய்து சுமார் ரூ.12 கோடி மதிப்பீட்டில் கொத்தையம் அருகே இந்த இடத்தில் அணைக் கட்டு கட்டுவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு, அந்தத் திட்டம் சென்ற ஆட்சியில் செயல்படுத்தப்படாமல் இருந்து வந்தது. ஆனால் தொப்பம்பட்டி ஒன்றியம் மிகப் பரந்த 39 ஊராட்சி மன்றங்களைக் கொண்ட வறட்சியான பகுதி, அங்குள்ளவர்கள் மானாவாரியான விவசாயத்தைச் செய்து வருகின்றனர். அங்குள்ள மக்கள் கிணற்றுப் பாசனத்தின் மூலமாகவும், ஆழ்குழாய்க் கிணற்று பாசனம் மூலமாகவும், விவசாயம் செய்து வருகின்றனர். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் அதே இடத்தில் அணைக்கட்டு கட்டுவதற்கு மறுபரிசீலனைச் செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93-ஆம் ஆண்டு இப்படி ஒரு திட்டத்தைத் தயாரிக்க உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல 11.31 லட்சம் ரூபாய்க்கு ஒரு மதிப்பீடு

செய்யப்பட்டது உண்மை. ஆனால், இதிலே என்ன பிரச்சினை என்று கேட்டால், இதன்மூலம் பாசனம் பெறுவது 1,600 ஏக்கர்தான். ஆனால் இந்த நீர்த்தேக்கம் அமைப்பதற்காக நாம் கையகப்படுத்த வேண்டிய பட்டா நிலம் மட்டும் 850 ஏக்கர். 850 ஏக்கர் கையகப்படுத்தி அதன் மூலம் பாசனம் செய்யவேண்டியுள்ளது 1,600 ஏக்கர். அப்போது, 1992-ல் அதனுடைய மதிப்பு சுமார் 11 கோடி ரூபாய். இன்றைக்கு, அதனுடைய மதிப்பு கிட்டத்தட்ட 25 கோடி ரூபாய்க்கு மேல், புறம்போக்கு நிலங்கள் இல்லாமல். ஆக, எந்த வகையிலே பார்த்தாலும் இது 'பெனிபிட் காஸ்ட் ரேஷியோ'வுக்கு ஒத்து வரவில்லை. அதனாலே, 850 ஏக்கர் நிலத்தை இன்று கையகப்படுத்துவது சுலபம் அல்ல, என்பது அவருக்கே தெரியும். பக்கத்தில் நீரோடை இருக்கின்ற காரணத்தினால், எல்லாம் பழத்தோப்புகள், கொய்யா மரத் தோப்புகளாக இருக்கின்றது. ஆக, ஒரு ஏக்கர் இன்றைக்கு குறைந்தது 60, 70 ஆயிரத்திற்கு மேலே போகக் கூடியது. இவ்வளவையும் கையகப்படுத்துவதற்கு சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்.

**திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே நல்லதங்காள் ஓடையின் குறுக்காக பெரியார் மாவட்டத்திலே ஒரு அணைக்கட்டு கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு என்று ஆய்வு செய்திருக்கிறார்கள். அந்த அணைக்கட்டையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டித்தருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி மன்னர் திருமலையிலிருந்து பெரியார் மாவட்டத்திற்குத் தாவி இருக்கிறது. இருந்தாலும், அந்த மாவட்டத்திலும் நல்லதங்காள் ஓடை போகிற காரணத்தினால் அம்மையார் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஒட்டன்சத்திரத்திலிருந்து தாராபுரம் போகிற வழியிலே சாலைக்கடை என்ற ஊர் இருக்கிறது. அதிலிருந்து 4 கிலோமீட்டர் உள்ளே போனால் பொன்னிவாடி என்ற கிராமம் வரும். அங்கேதான் இந்த அணைக் கட்டுவதற்கு, நாங்கள் ஒரு திட்டத்தைப் பரிசீலனைச் செய்தோம். மூலனூர், ஆலம்பாளையம், நல்லாம்பாளையம் போன்ற பல பகுதிகள் பாசனம் பெறுவதற்கு அங்கே வசதி உண்டு. கிட்டத்தட்ட 17, 18 கோடி ரூபாய் செலவில் செய்திருக்கிறோம். இருந்தாலும், 5 ஆயிரம் ஏக்கர்





பாசனம் பெறுவதற்கு வசதி உண்டு. அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தத் திட்டத்திற்கு இசைவு தந்திருக்கிறார். நில வருவாய் ஆணையாளர்கூட அதை அரசு முடிவு செய்யட்டும் என்று அனுப்பி இருக்கிறார். எது எப்படி இருந்தாலும், இந்தத் திட்டத்திலே ஒரு சிறு பிரச்சினை என்னவென்றால், நல்லதங்காள் ஓடை அமராவதியினுடைய துணை நதி. அமராவதியோ காவிரியினுடைய துணை நதி. இதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. இருந்தாலும், அப்படி கட்டுகிற நிலை ஏற்பட்டால், இது ஈஸ்வரன் கோவில் அணைக்கட்டு கட்டுவதற்கு சாத்தியக்கூறு இருக்கிறது என்று கூறி விடை பெறுகின்றேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் விடை கொடுக்க முடியாது. விடையளிக்கிறேன் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, விடையளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.பி. சிங்காரவேலு.

**திரு. வி. பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆழியாறு அணைத் திட்டத்தில், நல்லாறு, நீராறு, ஆனைமலையாறுத் திட்டங்களை நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லாறு, ஆனைமலையாறுத் திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு இந்த அரசு உத்தேசித்திருப்பது உண்மைதான். அதுகுறித்து, கேரள மாநில அரசோடு நாங்கள் இப்போது பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 70, திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**70—**

**தூத்துக்குடி—வாகைக்குளம் விமான நிலையம் செயல்படுத்துதல்**

***1539- திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 சனவரி 29

திருவைகுண்டம் தொகுதியிலுள்ள தூத்துக்குடி—வாகைக்குளம் விமான நிலையம் மீண்டும் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மீண்டும் விமானப் போக்குவரத்து துவங்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். டேவிட் செல்வின்.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தனியார் விமானம் ஒன்று வாரத்தில் இரண்டு நாட்கள் கொச்சின் வழியாகச் சென்னைக்கு இயங்கி வருகிறது. வாகைக் குளத்தில் காலை 10 மணிக்குப் புறப்பட்டு சென்னைக்கு நண்பகல் நேரத்தில் வந்து சேருகிறது. இந்த நேரத்தை மாற்றி, காலை 8 மணி அளவில் சென்னை விமானநிலையம் வந்து சேருமாறு இந்த நேரத்தை மாற்றியமைக்க சம்பந்தப்பட்ட துறையிடம் பேசி அரசு அதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.இ.பி.சி. தனியார் விமானத்தின் மூலமாக அந்தப் போக்குவரத்து நடைபெறுவதற்கு இந்த அரசு அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. விமானத் துறை அதிகாரிகளும், அது குறித்து தொடர்பு கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 71, திரு. சுப. தங்கவேலன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**71—**

**மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக சிறு பணிமனை அமைத்தல்**

***2543- திரு. சுப. தங்கவேலன்:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடியில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு சிறு பணிமனை (Mini Depot) அமைத்து அப்பகுதி மக்களுக்குப் பேருந்து வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



1997 சனவரி 29]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாயல்குடி என்கின்ற ஊர் ஒரு காலத்தில் சாலைக்கோடி என்று தான் இருந்தது. ஏராளமான சாலைகள் இணைக்கின்ற இந்த ஊர், வளர்ந்து வருகின்ற பெரிய ஊராக இருக்கிறது. தூத்துக்குடி, இராமநாதபுரம், பிரதான சாலையிலுள்ள இந்த கிராமத்திற்கு மொத்தத்திலே அனைத்துப் பேருந்துகளுடைய கிளைகளும் 40 கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கின்ற காரணத்தினால் நகரப் பேருந்துகள் இயக்க முடியவில்லை. அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் பயன் அடைகின்ற வகையில் புதிய கிளைகளைத் துவக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் விரைந்து முடிவு எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய கிளை உருவாக்க வேண்டுமானால், பக்கத்திலே 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு வேறு கிளைகள் இருக்கக் கூடாது. ஆனால் இந்த முதுகுளத்தூர் 22.07 கிலோ மீட்டரிலும், கமுதி 29.03 கிலோ மீட்டரிலும், பக்கத்திலே கிளைகள் இருக்கின்றன. குறைந்தபட்சம் 25 பேருந்துகளாவது தங்க வேண்டிய அவசியமும் இருக்கிறது. அந்தப் பேருந்துகளின் எண்ணிக்கையும் அங்கே அதிகம் இல்லை. ஆகவே பேருந்துகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கப்படுகின்றபோது, போக்கு வரத்துத் துறையினுடைய நிதிநிலையையும் கருத்தில் கொண்டு இதற்கான முயற்சிகளை இந்தத் துறை மேற்கொள்ளும்.

முற்பகல் 9-55

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதில் 3 முறைகள் கடைபிடிக்கப்படுகிறது. சாயல்குடி பேரூராட்சியாக இருப்பதால் கமுதி, முதுகுளத்தூர் பகுதியிலிருந்து வருகின்ற பேருந்துகளைப் பெயர் பலகையை மாற்றி சாயல்குடியிலிருந்து 35 கிலோ மீட்டர் ஓட்டுவதற்கு ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்தில் உள்ள நிதிநிலையைப் பொறுத்து உறுப்பின ருடைய கருத்துக்களை இந்த அரசு பரிசீலிக்கும்.

[1997 சனவரி 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 72, டாக்டர் இ. எஸ். எஸ். இராமன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

**72—**

**வடவெல்லைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம்**

***1588- டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி உள்ளிட்ட பகுதிகளைத் தமிழகத்தின் வடவெல்லையில் சேர்ப்பதற்காகப் போராடி தங்கள் கோரிக்கையில் வெற்றி பெறாத, சுமார் 150 வடவெல்லைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியமும், பிற சலுகைகளும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி உள்ளிட்ட பகுதிகளைத் தமிழகத்தின் வடவெல்லையில் சேர்ப்பதற்காக நடைபெற்றப் போராட்டங்களில் சிறை சென்ற தியாகிகளான எல்லைக் காவலர்களுக்கு, மொழிக் காவலர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 73, திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**73—**

**சிறைச்சாலைகளை நவீனப்படுத்துதல்**

***2355 திரு. இ. புகழேந்தி :**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) சிறைச்சாலைகளை நவீனப்படுத்த திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.



1997 சனவரி 29]

(ஆ) தமிழக சிறைச்சாலைகளை நவீனமாக்கும் திட்டத்தை மாநில, மைய அரசுகள் இணைந்து 1987 முதல் செயல்படுத்தி வருகின்றன. முதல் கட்டமாக நவீனமாக்கும் திட்டத்தின்கீழ் ரூ.653.47 இலட்சம் செலவு செய்யப்பட்டது. இரண்டாவது கட்டமாக 480 இலட்சம் ரூபாய் நவீனமாக்குவதற்கு செலவழிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைக்குத் தேவையான பினாயில், கட்டுத் துணி, சோப் மற்றும் அரசுக்குத் தேவையான உறைகள், புக் பைண்டிங், தச்சுப் பட்டறை, நெசவுப் பட்டறை, சாயப் பட்டறை, துணி தைத்தல், அலுமினிய தொழிற்பிரிவு, காலணி தயாரித்தல் ஆகிய தொழிற்கூடங்கள் சிறைச் சாலைகளிலே ஏற்கெனவே இருக்கின்றன. அவைகளை நவீனப்படுத்துகின்ற முறையிலும்—சமையல் கூடங்கள் அதைப்போல பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய இயலாத நிலையில் இருக்கின்ற சூழ்நிலையில் அவைகளையும் நவீனப்படுத்துகின்ற நிலையை அரசு எடுக்குமா என்பதோடு கடலூர் மத்திய சிறைச்சாலை பனிஷ்மெண்ட் சிறைச்சாலையாக - தண்டனை சிறைக்கூடமாக இருந்தது. இப்போது சாதாரண சிறைச்சாலையாக மாற்றப்பட்டு 600-க்கு மேற்பட்ட கைதிகள் கடலூர் மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கும் இந்த நவீன வசதிகள் உருவாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் முக்கியமான சிறைச்சாலைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றின் மதில் சுவர்கள் எல்லாம் உயர்த்தப்படுகின்றன. உள்ளே பாதுகாப்புச் சுவர்கள் எல்லாம் கட்டப் படுகின்றது. மேலும் பல பாதுகாப்பு நடவடிக்கைகள் எல்லாம் நல்ல முறையில் தீவிரமாக நடத்தப்பட்டிருக்கிறது. கடலூர் மத்திய சிறைச் சாலையைப் பொறுத்தவரையில் நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் அங்கே பாதுகாப்புக்காக வலைகள் பொருத்தப்பட்டு இருக்கின்றன. மெட்டல் டிடெக்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. எக்ஸ்புளோசிவ் டிடெக்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜெராக்ஸ் மெஷின் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் மற்ற வசதிகள் எல்லாம் கொடுப்பதற்கு அரசிடம் திட்டம் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 74, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**74—**

**கூட்டுறவு நூற்பாலை நிறுவுதல்**

***4823- திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதியில், ஒரு கூட்டுறவு நூற்பாலை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதி. எக்ஸ்-கிரிமினல் ட்ரைப்ஸ் என்று சொல்வார்கள். வெள்ளையர் காலத்திலே ரேகைச் சட்டத்திலே ஆட்பட்ட ஒரு பின்தங்கிய வகுப்பினர் வாழ்கின்ற தொகுதி. அதிலே ஏறக்குறைய கலைஞர் அவர்கள் ஆட்சியில் 1972 ஆவது ஆண்டிலே அங்கு ஒரு நூற்பாலையை அமைக்க வேண்டும் என்று இடங்கள் எல்லாம் பார்வையிடப்பட்டு அது பின்னர் ஆட்சி மாற்றத்தின் காரணமாக நின்றுவிட்டது. எனவே அந்தப் பகுதியில், அந்த மூலப் பொருள்கள் பருத்தி உற்பத்தி செய்கின்ற இடமாகவும் அது இருக்கின்ற காரணத்தினாலே மீண்டும் அரசு மறுபரிசீலனை செய்து அந்த பிற்படுத்தப்பட்ட தொகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற வகையிலே நூற்பாலை அமைத்துத் தருமா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரன் அழகுமுத்து மாவட்டத்தில் ஆண்டிப்பட்டியிலே ஒரு ஆலையும், மதுரை மாவட்டத்திலே மேலூரிலே ஒரு ஆலையும் செயல்பட்டு வருகின்றது. இருக்கின்ற ஆலைகளே பெரும் நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவைகளை முறைப்படுத்தியபின்



வேண்டுமானால் புதிய ஆலை துவங்குவது பற்றிய கொள்கை முடிவை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. என். வல்லரசு.

**திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளையர் ஆட்சிக் காலத்திலிருந்து தொடர்ந்து ஆளுங்கட்சியை எதிர்த்து வந்த ஒரு தொகுதி உசிலம்பட்டி தொகுதி. பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் ஆகியோருடைய ஆட்சியைத் தவிர, வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் வெள்ளையரை எதிர்த்து ரேகைச் சட்டத்திற்கு அந்தத் தொகுதி மக்கள் உள்ளாக்கப்பட்டார்கள். அடுத்து 1952-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரை நடந்த காங்கிரஸ் ஆட்சியில் தொடர்ந்து அந்த ஆட்சியை எதிர்த்து வந்தார்கள். எம்.ஜி.ஆர் ஆட்சியை எதிர்த்து வந்தார்கள். அதனால் எந்த ஒரு தொழிற்சாலையும் எங்களுடைய தொகுதிக்கு வழங்கப்படவில்லை என்பதால், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் இதை பெற்று விட வேண்டுமென்று எங்களுடைய உசிலம்பட்டி தொகுதி மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கே 25 வருட காலமாக சட்டமன்ற உறுப்பினராக இருந்த எங்களுடைய தலைவர் அமரர் திரு. பி. கே. மூக்கையா தேவர் அவர்கள் தொடர்ந்து நூற்பாலை வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். எனவே, டாக்டர் கலைஞர் ஆட்சியிலும் எங்களால் பெறமுடியவில்லை என்றால் வேறு எந்த ஆட்சியில்தான் எங்களால் பெற முடியும்.? எனவே, கருணை உள்ளத்தோடு டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நூற்பாலையை எங்களுக்குத் தரவேண்டும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறுபரிசீலனைச் செய்து அந்த ஏழை மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அந்த நூற்பாலையை வழங்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுமானால் வேறு தொழிற்சாலைகள் அமைப்பதற்கான சாத்தியகூறுகளைப் பற்றி ஆராயலாம். கூட்டுறவு நூற்பாலை வேண்டுமென்று ஒரு முடிவு எடுக்கப்படுமானால் இந்த 17 நூற்பாலைகளோடு 18-வது நூற்பாலையான புதுக்கோட்டை நூற்பாலையும் சேர்த்து, மொத்தத்தையும் முறைப்படுத்தி விட்டு, மறுபரிசீலனைச் செய்து, வேண்டுமானால் முதற்கட்டமாக அப்படி ஒரு முடிவு எடுக்கப்படுமானால்

அதை உசிலம்பட்டிக்கு அளிக்கவேண்டும் என்கின்ற ஏற்பாட்டைச் செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 75, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**75—**

**மரம் நடும் திட்டம்**

***1612- டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மரம் வளர்ப்பு கலையில் நன்கு தேர்ச்சி பெற்ற வனத் துறையிடமே மரம் நடும் திட்டத்தை ஒப்படைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதுவரை இதுபோன்ற கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்கள் மரம் வளர்ப்பதற்கு நிதி உதவி கோரி அரசிடம் விண்ணப்பித்தால் அரசு அவர்களுடைய வேண்டுகோளுக்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை மூலமே ஆயிரக்கணக்கான அதிகாரிகள் பயிற்சி பெற்று இருப்பதால் இதுபற்றி பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன வளத்தை மிகவும் சிறப்பான முறையில் கொண்டு வருவதற்காக மக்களை அதில் ஈடுபடுத்துவதற்கும், மரத்தின் மேற்பரப்புகளை மக்கள் அனுபவித்துக் கொள்ளவும் மக்களைத் திரட்டி இந்த வன வளத்தை உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதா என அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மார்ச் மாதம் முதல் O.E.C.F. என்ற ஜப்பான் நாட்டு நிதி உதவியுடன் 424 கோடி ரூபாய்க்கு ஒரு மாபெரும் மெகா திட்டத்தை, இதுவரை இல்லாத அளவுக்கு மிகப்பெரிய திட்டத்தை, வனங்களை வளர்ப்பதற்காக இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. இதிலே கிராம மக்களின் பிரதிநிதிகள் இடம் பெற்று வனங்களை வளர்ப்பதில் அவர்களும் பங்குபெறலாம். இதன்மூலம், இந்த வனத் துறையில் லஞ்சங்கள் ஒழிக்கப்படும் என்ற நிலைமை – Transparency – ஏற்படுத்த முறைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : டாக்டர் ஆ. ஞானசேகரன்

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் எத்தனை நர்சரி மையங்கள் தமிழகத்தில் இருக்கின்றன? நர்சரி மையங்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினா எண் 76, திரு. ஆர். மகேந்திரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**76—**

**பட்டு நூற்பாலையை விரிவுபடுத்துதல்**

***576—திரு. ஆர். மகேந்திரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதியில் அக்கராகரம் கிராமத்தில் இருக்கும் பட்டு நூற்பாலை விரிவுபடுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை. நாட்ராம்பள்ளித் தொகுதியில் அக்கராகரம் கிராமத்தில் இருக்கும் பட்டு நூற்பாலையை விரிவுபடுத்துவதற்கான திட்டமோ, செயற்குறிப்போ எதுவும் இல்லை.

முற்பகல் 10-05

**திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளித் தொகுதியில் அதிக அளவில் பட்டு உற்பத்திச் செய்கிறார்கள். அங்கு செய்கின்ற அந்த உற்பத்தியை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் சென்று அங்கு விற்கின்ற அவல நிலை ஏற்படுகிறது. அங்கு பட்டு நூற்பாலை இருந்தும் அங்கிருக்கிற மக்கள் அந்த ஆலைக்கு கொண்டு வந்து தருவதற்கு மறுக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனைச் செய்து அந்த ஆலையை விரிவுபடுத்த ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல, நவீன முறையிலே ஆரம்பிக்கப்பட்டு, 1989-இலேயிருந்து 1995 வரை அதை இயக்கியதிலே கிட்டத்தட்ட 16 இலட்சத்து 60 ஆயிரத்து 847 ரூபாய் 54 காசு நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. நமது அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் இந்த ஆலையிலே ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ஊழியரும் எந்த அளவிற்கு நெய்ய வேண்டுமென்று உற்பத்தித் திறன் அத்தனையும் நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கின்ற காரணத்தால் கடந்த ஆறு மாத காலத்திலே கிட்டத்தட்ட 32 ஆயிரத்து 908 ரூபாய் 65 காசு இலாபம் ஈட்டப்பட்டிருக்கிறது. ஆக, இந்த நஷ்டமெல்லாம் சரி செய்யப்பட்டதற்குப் பின்னால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினா எண். 77, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**77—**

## திருவண்ணாமலையில் அரசு பொருட்காட்சி அமைத்தல்

***1878-திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், திருவண்ணா மலையில் அரசு பொருட்காட்சி அமைக்கும் திட்டம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், திருவண்ணாமலையில் அரசின் சார்பாகப் பொருட்காட்சி நடத்தும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை ஒரு மாவட்டத்தினுடைய தலைநகர் மட்டுமல்ல; அங்கே தீபத் திருவிழா மிகச் சிறப்பாக ஆண்டுதோறும் நடைபெறுகிறது. அப்பொழுது அரசின் சார்பில் ஒரு சிறிய அளவிலே பொருட்காட்சிகூட நடத்துகிறார்கள். ஏற்கெனவே நகராட்சிகளெல்லாம் இலாபகரமாகப் பொருட்காட்சியை அங்கே நடத்தி இருக்கின்றன. அந்த வகையில் அரசு முயற்சி மேற்கொண்டாவது, வருங்காலத்திலே சிறப்பான முறையில் அரசாங்கத்தினுடைய பொருட்காட்சியை நடத்துவதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாட்டில் நடைபெற்ற 91 பொருட்காட்சிகளில் 11 இடங்களில் 55 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால், பொருட்காட்சி ஒரு பொருள் உள்ள வகையில், சிறப்பான வகையில் அமைய வேண்டும் என்ற முதலமைச்சருடைய ஆலோசனையின் பேரில் தற்போது, ஏற்கெனவே நடைபெறுகிற பொருட்காட்சிகள் சிலவற்றை நிறுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. கார்த்திகை தீபம் போன்ற சிறப்பான விழாக்கள் நடைபெறுகின்ற காலங்களில் ஆங்காங்கே அரசின் அனுமதியைப் பெற்றுத் தனியார் பொருட்காட்சி நடத்துகிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துகளை எதிர்காலத்தில் அரசு பரிசீலனையில் கொள்ளும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நஷ்டம் ஏற்பட்டது என்று சொன்னால், அதற்கு என்ன காரணம் என்பதை நாடு அறியும். அதையெல்லாம் நீங்கள் கருத்திற் கொண்டு, இப்பொழுது இந்த அரசு இலாபகரமாக நடத்தக்கூடிய திறமை உள்ள அரசு என்பதை நாங்கள் அறிந்திருக்கின்றோம். அந்த வகையில், எதிர்காலத்திலே திருவண்ணாமலையிலே சிறப்பான முறையில் நடத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன், அதே நேரத்திலே, நடைபெறுகின்ற பொருட்காட்சிகளிலே ஏற்கெனவே இருந்த அரசு

[1997 சனவரி 29

அப்பொழுது இருந்த முதல்வரையே எல்லாயிடங்களிலேயும், உள்ளே சென்றால் முதல்வருடைய கட் அவுட் தவிர வேறு எதையும் பார்க்க முடியாத ஒரு சூழ்நிலையில் அன்றையதினம் ஒரு வெறுப்பு அடைகின்ற நிலைமையிலே பொருட்காட்சிகள் எல்லாம் அமைக்கப்பட்டன. இப்பொழுது அமைக்கப்படுகின்ற பொருட்காட்சிகளில் அரசுக்குத் தலைமை ஏற்றிருப்பவர்கள் யார் என்பதேகூட தெரிவதில்லை. தெரிகின்ற அளவிற்கு ஒன்றிரண்டு கட் அவுட்டுகளையாவது வைக்கக் கூடாதா? அதேபோன்று, அறவே அரசினுடைய தலைவரைக்கூடக் தெரிவிக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை அரசு மாற்றுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கலைஞருடைய அரசு பொறுப்பேற்றவுடன் பொருட்காட்சி நடத்துவதற்கான அறிவுரைகளையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எங்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அதை மாவட்டத் தலைநகரங்களில் பொருட்காட்சி நடத்துகிறவர்கள் இப்படித்தான் நடத்த வேண்டுமென்ற சில வரைமுறைகளைச் சொல்லியிருக்கிறோம். அதன் அடிப்படையில், அரசுத்துறை அரங்குகளில் புகைப்படங்கள் பெருமளவில் இடம் பெறுவதைத் தவிர்த்து மக்களுக்குப் புரிகிற வகையில் திட்டங்கள், மாதிரி வடிவங்கள் இயங்கும் மாதிரி வடிவங்கள் இடம் பெற வேண்டும். அரசுத் திட்டங்கள் மூலம் மக்கள் பயன்பெற தொடர்பு கொள்ளும் வழிமுறை போன்றவை கருத்துப் படங்களாய்ச் சித்தரிக்கப்பட வேண்டும். வீடியோ படங்கள், பொம்மலாட்டம் போன்ற விருப்பமான முறைகளும் பயன்படுத்தப்பட வேண்டும். குறைந்த செலவில் அச்சிடப்பட்ட படங்கள் நிறைந்த சிறு கையேடுகள் இலவசமாக வழங்கப்பட வேண்டும். பொருட்காட்சியில் அமையும் அரசுத் துறை அரங்குகளிலும், பொருட்காட்சி வளாகத்திலும் கட் அவுட், விருப்பம் மீறிய விளம்பரங்கள். ஆடம்பர அலங்காரங்கள் போன்றவை இடம் பெறாமல் தவிர்க்கப்பட வேண்டும் என்ற ஆலோசனையின் பேரில்தான் இப்பொழுது பொருட்காட்சிகளெல்லாம் நடைபெற்று வருகின்றன. அதன் அடிப்படையில், கழக அரசு பொறுப்பேற்ற பிறகு நடைபெற்ற 3 பொருட்காட்சிகளும் இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, புதிதாகப் பொறுப்பேற்றிருக்கிற இந்த அரசு கலைஞருடைய ஆலோசனையின் பேரில் சிறப்பாகச் செயல்படுகிற காரணத்தாலும், கட் அவுட் போன்ற விரும்பத்தகாத, அளவிற்கு மீறிய ஆடம்பரச் செயல்களை அறவே ஒழித்த காரணத்தாலும்தான் இலாபத்தைப் பெறுகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம்.



1997 சனவரி 29]

முற்பகல் 10-10

அங்கே பொருட்காட்சி நடத்துகிறபோது ஓரிரு கட் அவுட்கூட வைக்கக் கூடாதா என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய கலைஞருடைய அரசைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட ஒரு ஆட்சி நடைபெற்றதில்லை என்று சொல்கின்ற அளவிற்கு ஒரு முன்மாதிரி அரசாக இருக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அவர்கள் அறிவுரை வழங்கிய காரணத்தால் அந்த அடிப்படையிலே செயல்படுகிறோம். தற்போது குடியரசு தின விழா அன்று நடைபெற்ற அலங்கார ஊர்திகளில் குறிப்பாக கருப்பு சிவப்பு எழுத்துக்களோ, தலைவர் கலைஞருடைய படமோ இடம்பெறாதிருந்ததை எல்லாப் பத்திரிகைகளும் பாராட்டியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கலைஞருடைய அறிவுரையோடு இந்த அரசு எதிர்காலத்திலும் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 78, திரு. செங்கை சிவம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**78—**

## சீரணி அரங்கத்தை நவீனப்படுத்துதல்

***3019—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை கடற்கரையிலுள்ள சீரணி அரங்கத்தை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீரணி அரங்கத்தை ரூபாய் 2½ இலட்சம் செலவில் செம்மைப் படுத்துவதற்கு அரசு பரிசீலனைச் செய்து கொண்டிருக்கிறது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, கடற்கரையிலேயுள்ள சீரணி அரங்கம் கட்டிய காலத்திலிருந்து ஏதாவது அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறதா? இப்போதுதான் முதல் முறையாக அபிவிருத்திக்கான திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளதா? இதற்கு

வாடகை வசூல் செய்யப்பட்டிருக்கிறதா? இதன்மூலம் அரசுக்கு வந்த வருமானம் எவ்வளவு என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கடற்கரையில் அமைந்துள்ள சீரணி அரங்கம் அடிக்கடி உப்பு கலந்த கடற்காற்றால் பாதிக்கப்படுவதால் பழுது பார்க்க வேண்டிய கட்டாய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. 1989ஆம் ஆண்டு கலைஞருடைய அரசு பொறுப்பேற்றபோது 95 ஆயிரம் ரூபாய் செலவில் அது புதுப்பிக்கப்பட்டது. மீண்டும் 1995-ல் 67,239 ரூபாய் செலவில் அது நவீனப்படுத்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அடிக்கடி பழுதுபடுகிற காரணத்தால் மேலும் அதைச் செம்மைப்படுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால், 2½ இலட்சம் ரூபாயில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த சீரணி அரங்கத்திற்கு ஒரு நிகழ்ச்சிக்கு ரூ. 2,000 என்கிற அளவுக்கு வசூலித்துதான் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. அதன் அடிப்படையில் 1989-90-லிருந்து இந்த ஆண்டு முடிய கிட்டத்தட்ட 4,45,300 ரூபாய் அளவிற்குதான் வருமானம் வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா கடற்கரையை அழகுபடுத்துகின்ற முனைப்பான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. பாராட்டுகிறோம். ஆக்கிரமிப்புகள் எல்லாம் அகற்றப்பட்டுள்ளன. அதே நேரத்தில் அண்ணா சமாதியை சில காலமாகவே நாம் நவீனப்படுத்தவில்லையோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. எனவே, அண்ணா சமாதியை மேலும் நவீனப்படுத்துவதற்கு, விரிவு படுத்துவதற்கு, அழகுபடுத்துவதற்கு, இது கடற்கரையை நவீனப்படுத்துகின்ற நம்முடைய முயற்சியின் ஒரு பகுதி என்ற அடிப்படையில், அருள்கூர்ந்து, அரசு, அண்ணா சமாதியை மேலும் நவீனப்படுத்தி, அழகுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தலைவர் கலைஞர் அவர்கள், குறிப்பிட்டதைப் போல பழுதுபட்டு கிடக்கின்ற தமிழகத்தை சீர்படுத்துகின்ற நிகழ்ச்சிகளில், பேரறிஞர் அண்ணா சமாதியை செம்மைப்படுத்துவதற்கான திட்ட மதிப்பீடுகளெல்லாம் தயாரிக்கப்பட்டு நானும் நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் முதலமைச்சரிடம் அதற்குரிய வரைபடங்களையெல்லாம் காட்டி ஆலோசனைப் பெற்றதற்குப் பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 1½ கோடி ரூபாயில் அண்ணா சமாதியை செம்மைப்படுத்துவதற்காக, அழகுபடுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணிகளை பேரறிஞர் அண்ணாவினுடைய பிறந்த நாளான செப்டம்பர் 15-க்குள் முடிப்பதற்கு நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண், 80, திரு. அ. அசோகன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**80—**

## ஆதிதிராவிடர் வீடுகளுக்கு மின்விளக்கு வசதி

***4456—திரு. அ. அசோகன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் தொகுதியில் அனைத்து ஆதிதிராவிடர் வீடுகளுக்கும் ஒரு மின் விளக்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவாரூர் தொகுதியிலுள்ள திருவாரூர், கொரடாச்சேரி, கீழ்வேளூர் ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும் மின் விளக்குக்காக விண்ணப்பித்து, ஆயிரத்திற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் மீது கடந்த 2 ஆண்டுகளாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் உள்ளது. இந்த விண்ணப்பங்கள் மீது கவனம் செலுத்தி விண்ணப்பித்துள்ள அனைத்து ஆதிதிராவிடர்களின் வீடுகளுக்கும் விரைவில் மின் வசதி கிடைக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1997 சனவரி 29

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் தொகுதிகு மொத்தம் 10,814 விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதுநாள் வரையிலும் 4,956 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு மின் இணைப்புக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. மீதமுள்ள 5,858-க்கு விரைவில் கொடுப்பதற்காக உதவிப் பொறியாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர் கோருகின்ற எண்ணிக்கையும் விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உ. திசைவீரன்.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூரில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் உள்ள காலனி வீடுகளுக்கு இன்னமும் 'வீட்டிற்கு ஒரு விளக்கு' திட்டம் அமல்படுத்தப்படவில்லை. எனது தொகுதியிலேகூட, எனது சொந்தக் கிராமத்திலே-பாம்பூரிலே-நான் வெற்றி பெற்றவுடன், உங்கள் ஊருக்கு முதன்முதலாக இந்த மின்விளக்குத் திட்டம் அமல்படுத்தப்படும் என்று சொன்னார்கள். இதுநாள் வரையிலே நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, அனைத்துக் கோட்டப் பொறியாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டு மிக விரைவிலே இந்த மின் விளக்குத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயுள்ள அனைத்து ஆதிதிராவிடர் குடிசை வீடுகளுக்கும் மின் இணைப்பு வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 1996-ஆம் ஆண்டு வரை இரண்டு இலட்சம் வீடுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டது. மேலும், பரமக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினருடைய வேண்டுகோளையும் இந்த அரசு தீவிரமாகக் கவனித்து, பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிஜனங்களுக்கு, ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும்போது ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக நாம் இனாமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோம். அப்படி இனாமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்போது, அவர்களுக்கு மின் விளக்கு வசதி செய்து கொடுப்பதிலே சற்று காலதாமதம் மாத்திரமல்ல, அது நிராகரிக்கப்படுவதாகவும் பல இடங்களிலேயிருந்து புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதை மாற்றி ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் மூலமாக எங்கெங்கெல்லாம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றனவோ, அங்கெல்லாம் அவர்களுக்கு உடனடியாக மின்விளக்கு அளிப்பதற்கு ஆவன செய்வதோடு, அவர்கள் வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டும் என்றால் அவர்கள் கட்டவேண்டிய பணம் எவ்வளவு என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1997 சனவரி 29]

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குறைகளைச் சுட்டிக்காட்டினால் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**79—**

**திருக்கழுக்குன்றம் தேரைப் புதுப்பித்தல்**

***200-திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம், திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் தீயினால் சேதமடைந்த தேரை மீண்டும் புதியதாக மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். தேரை மாற்றி அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்**
**(இரண்டாம் பட்டியல்)**

**1—**

**குற்றப்பிரிவு ஆய்வாளர் பணியிடம்**

**வினா 359—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 சனவரி 29

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு உதவி ஆய்வாளர் பணியிடம் எப்போது நிரப்பப்படும்?

(ஆ) எப்போது கூடுதல் காவலர்கள் நியமிக்கப்படுவார்கள்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) சத்துவாச்சாரி காவல் நிலையத்தைப் பொறுத்தவரையில் தனியாகக் குற்றப்பிரிவு உதவி ஆய்வாளர் பணியிடம் வழங்கப்படவில்லை. எனவே இவ்வினா எழவில்லை.

(ஆ) இக்காவல் நிலையத்திற்கு, ஒரு உதவி ஆய்வாளர், இரண்டு, தலைமைக் காவலர் மற்றும் 13 காவலர்கள் (நிலை 1 மற்றும் 2) ஆக 16 மொத்தப் பணியாளர்கள் வழங்கப்பட்டிருப்பினும், 6-2-1995 முதல் இக்காவல் நிலையம் வட்ட ஆய்வாளர் தலைமையில் இயங்கும் காவல் நிலையமாக நிலை உயர்த்தப்பட்டு ஒரு வட்ட ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர், இரண்டு தலைமைக் காவலர் மற்றும் 18 காவலர்கள் (நிலை 1 மற்றும் 2) ஆக 22 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகின்றது. இந்நிலையில், கூடுதல் காவலர்களை நியமிக்கும் அவசியம் எழவில்லை.

2—

**காவலர்களுக்குக் குடியிருப்பு கட்டுதல்**

**வினா 3106—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி கவித்தலம், அய்யம்பேட்டை, சுவாமிமலை ஆகிய காவல் நிலையக் காவலர்களுக்குக் குடியிருப்பு கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இதைப்பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

3—

**தைத்திருநாள் விளையாட்டுப் போட்டிகள்**

**வினா 2876—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 சனவரி 29]

(அ) அரசு நடத்தும் தைத்திருநாள் விளையாட்டுப் போட்டிகளில் பெண்கள் பங்கு கொள்ளும் 'டென்னிகாய்ட்' விளையாட்டையும் சேர்க்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) அரசு நடத்தும் தைத்திருநாள் விளையாட்டுப் போட்டிகளில் பெண்கள் பங்கு கொள்ளும் 'டென்னிகாய்ட்' விளையாட்டையும் சேர்க்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

4—

**ஒட்டப்பிடாரம் தொகுதியில் பெண்கள் கலைக் கல்லூரி**

**வினா 3504—டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் தொகுதியில், பெண்கள் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

5—

**பெரம்பலூரில் பெண்கள் கலைக் கல்லூரி**

**வினா 3511—டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம், பெரம்பலூரில் பெண்கள் கலைக் கல்லூரி ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1997 சனவரி 29

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : செயற்குறிப்பெதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**6—**

**மேட்டுப்பாளையத்தில் கலைக் கல்லூரி அமைத்தல்**

**வினா 3554—திரு. பா. அருண்குமார்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதியில் ஒரு கலைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**7—**

**குடியாத்தம் தொகுதியில் அரசினர் மகளிர் கல்லூரி**

**வினா 3630—திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில் அரசினர் மகளிர் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.



1997 சனவரி 29]

**8—**

**ஆரம்பப்பள்ளி அமைத்தல்.**

**வினா 3640—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், சுஞ்சுள்நத்தம், கிராமம் பட்டகாரணிகொட்டாயில் ஆரம்பப்பள்ளி அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**9—**

**முதுகலைப் பட்ட வகுப்புகள் துவங்குதல்.**

**வினா 3808—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென் ஆற்காடு-வள்ளலார் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஏ. கோவிந்தசாமி அரசினர் கலைக் கல்லூரியில் தமிழ் வழிமுறை வேதியியல், இளங்கலை பட்ட வகுப்பு, வரலாறு, பொருளாதாரம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுக்கு முதுகலை பட்ட வகுப்புகள் துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

செயற்குறிப்பெதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**10—**

**திண்டிவனத்தில் அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி**

**வினா 4013—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகரில் அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி தொடங்க அரசு முன்வருமா?

[1997 சனவரி 29

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) அத்தகைய செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**11—**

**அரசினர் கல்லூரி அமைத்தல்.**

**வினா 4039—திரு. டி. சி. விஜயன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவொற்றியூர் நகரில் அரசினர் கல்லூரி அமைக்க ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**12—**

**மின்வாரிய அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.**

**வினா 2137—திரு. அ. வெங்கடாசலம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விழுப்புரம் நகரம், மின்வாரியம், மத்திய அலுவலகம், உதவி செயற்பொறியாளர் அலுவலகம் மற்றும் நகர இளமின் பொறியாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டிடத்தில் இயங்குவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடம் கட்டித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மின் விநியோக வட்டத்திற்கான மத்திய அலுவலகம் தற்போது வாரியத்தின் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மேலும் இவ்வலுவலகம் இயங்குவதற்குப் போதிய வசதி தற்போதுள்ள கட்டிடத்திலே இருக்கிறது. மேற்கொண்டும் விரிவுபடுத்துவதற்கோ, புதிய கட்டிடம் கட்டுவதற்கோ ஏற்பாடுகள் ஏதும் இல்லை. உதவி செயற்பொறியாளர், நகரம் மற்றும் உதவி செயற்பொறியாளர், கிராம அலுவலகங்கள் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மேற்கண்ட அலுவலகங்களுக்காக சொந்த கட்டிடம் கட்ட, வாரிய நிலம் இல்லை. எனவே, மேற்கண்ட கட்டிடங்களைக் கட்டுவதற்கான ஏற்பாடு ஏதும் நிலுவையில் இல்லை.



1997 சனவரி 29]

2. மின்சார வாரியத்தின் அநேக அலுவலகங்கள் வாடகை கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. இந்த அலுவலகங்களுக்கெல்லாம், சொந்த கட்டிடங்கள் கட்டுவதற்கு, மிகப்பெரும் அளவில் முதலீடு செய்ய வேண்டும். தற்போதைய வாரியத்தின் நிதி நிலைமை இதற்கு இடம் தராது. எனினும் மாநகரங்களில் உள்ள அலுவலகங்கள் மற்றும் மத்திய அலுவலகங்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் சொந்த கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**13—**

**பெரியார் மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனை**

**வினா 2156—திரு. நா. பெரியசாமி (பெருந்துறை):** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியார் மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனையில் எத்தனை அறுவைச் சிகிச்சை அரங்குகள் உள்ளன?

(ஆ) அவைகள் அனைத்தும் செயல்படுகின்றனவா?

(இ) இல்லை எனில், அவைகள் எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பெரியார் மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனையில் நான்கு அறுவை சிகிச்சை அரங்குகள் உள்ளன.

(ஆ) அவைகள் அனைத்தும் செயல்படுகின்றன.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1997 சனவரி 29

14—

## ஈரோடு மருத்துவமனையில் சலவை இயந்திரத்தின் செயல்பாடு

**வினா 2158—திரு. நா. பெரியசாமி (பெருந்துறை):** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெரியார் மாவட்டம், ஈரோடு தந்தை பெரியார் தலைமை மருத்துவமனையில் நோயாளிகளுக்குத் தரப்படும் துணிகளைச் சலவை செய்ய வாங்கப்பட்ட இயந்திரம் செயல்படுகிறதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*பெரியார் மாவட்டம், ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் சலவை இயந்திரத்திற்கான கட்டிடம் கட்டும் பணிகள் முடிவுற்று, இயந்திரம் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி விரைவில் முடிக்கப்பட்டு, சலவை இயந்திரம் செயல்படுத்தப்படும்.*

15—

## பெரியகுளம் அரசு மருத்துவமனை

**வினா 2321—திரு. எல். மூக்கையா:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெரியகுளம் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதியினை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*பெரியகுளம் அரசு மருத்துவமனை தற்போது 130 படுக்கைகளுடன் இயங்கி வருகின்றது. படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*



1997 சனவரி 29]

16—

## ஒரு வீடு—ஒரு விளக்கு திட்டம்

**வினா 2335—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஒரு வீடு—ஒரு விளக்குத் திட்டம் தற்போது நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*ஒரு வீடு—ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின்சார வாரியம் ஒவ்வொரு ஆண்டும் 40,000 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்க இலக்கீடு நிர்ணயித்து பதிவு வரிசை முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கி வருகிறது. இது தவிர ஆதி திராவிடர்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்கும் சிறப்புத் திட்டத்தின்கீழ் 1994-95 மற்றும் 1995-96 ஆகிய இரு ஆண்டுகளில் 2,68,227 குடிசைகளுக்கு (இலக்கீடான 1,98,000 குடிசைகளுக்கும் அதிகமாகவே) மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.*

*இந்த நிதியாண்டில் (1996-97) 31-7-1996 வரை 52,650 குடிசைகளுக்கு, அதாவது நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 40,000 குடிசைகளுக்கும் அதிகமாகவே, மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே மேலும் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்க நடப்பு ஆண்டுக்கு நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை.*

17—

## கோபிச்செட்டிப்பாளையம் பொது மருத்துவமனையில் பெண் மருத்துவர்கள்

**வினா 2383—திரு. ஜி. பி. வெங்கிடு:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோபிச்செட்டிப்பாளையம் பொது மருத்துவமனையில் போதிய பெண் மருத்துவர்கள் இல்லாததை அரசு அறியுமா?*

[1997 சனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கோபிச்செட்டிப்பாளையம் அரசு மருத்துவமனை தாலுக்கா மருத்துவ மனையாகும். இதில் அரசு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களில் உதவி மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். இதில் ஒரு பெண் மருத்துவரும் தற்போது பணிபுரிந்து வருகின்றார். பணியிடம் தற்போது காலியாக இல்லை. பணியிடம் காலியாகும் பட்சத்தில், பெண் மருத்துவர்கள் பணி நியமனம் செய்யப்படுவர்.

**18—**

## சீர்காழியில் அவசர சிகிச்சைப் பிரிவு

**வினா 2387—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி நகரைச் சுற்றி அதிக அளவில் விபத்துக்கள் பெருகி வருவதால் தாலுகா மருத்துவமனையில் அவசரச் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சீர்காழி வட்ட அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு ஏற்படுத்துவதற்கு 1997-98 ஆம் ஆண்டிற்கான பகுதி இரண்டு திட்டத்தில் முன்மொழிவு வைக்கப்பட்டு, அது மாநில திட்டக் குழுவின் பரிசீலனைக்கு விரைவில் அனுப்பப்பட உள்ளது. மாநில திட்டக் குழுவினால் அங்கீகரிக்கப்படின் சீர்காழி வட்ட அரசு மருத்துவமனையில் அவசர சிகிசைப் பிரிவு ஏற்படுத்த ஆவன செய்யப்படும்.

**19—**

## தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்குதல்

**வினா 3280—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப் பாரா—



1997 சனவரி 29]

(அ) ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியம், கீராயத்தூர் ஊராட்சி, திருக்கொள்ளிக்காடு கிராமத்தில் தொகுப்பு வீடுகளுக்கு மின்விளக்கு இணைப்பு இல்லாத நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை நிவர்த்தி செய்ய அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : 1995-96 வரை, ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியம், கீராயத்தூர் ஊராட்சி, திருக்கொள்ளிகாடு கிராமம், தொகுப்பு வீடுகளில் உள்ளவர்களிட மிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்துக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டு விட்டது.

**20—**

## குறைந்த மின் அழுத்தம்

**வினா 3281—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, சேந்தமங்கலம் பெரியகுடி கிராமத்தில் குறைந்த மின் அழுத்தம் காரணமாக மின் விளக்குகளும் மின் மோட்டார்களும் சரிவர இயங்காத நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை நிவர்த்தி செய்ய அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, சேந்தமங்கலம் பெரியகுடி கிராமத்தில் மின்

அழுத்தம் பொதுவாக சீரான நிலையில்தான் உள்ளது. இருப்பினும் மின் கட்டமைப்பின் மின் அழுத்தம் குறையும்பொழுது மட்டுமே மேற்கூறிய கிராமங்களின் மின் அழுத்தம் குறைகின்றது. இந்த நிலை தவிர்க்க இயலாதது.

**21—**

**மின் இணைப்புகள் கொடுத்தல்**

**வினா 3282—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், மருதவனம் ஊராட்சியில் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட சுமார் 30 வீடுகளுக்கு, மின்விளக்கு இல்லாத நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை நிவர்த்தி செய்ய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப் பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், மருதவனம் ஊராட்சியில் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட சுமார் 30 வீடுகளி லிருந்து, மின் இணைப்பு வேண்டி விண்ணப்பங்கள் எதுவும் இதுவரையில் பெறப்படவில்லை. விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் மின் இணைப்பு வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**22—**

**நோய்களுக்குப் புதிய மருந்துகள் கண்டுபிடித்தல்**

**வினா 3347—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சித்தா, ஆயுர்வேதா, ஹோமியோபதி மருத்துவத் துறைகளில் நோய்களுக்கு புதிய மருந்துகள் கண்டுபிடித்து அரசு என்னென்ன சாதனைகள் புரிந்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சித்தா, ஆயுர்வேதா, யுனானி ஆகிய இந்திய மருத்துவ முறைகள் நம் முன்னோர் எழுதிவைத்த மருத்துவ நூல்களை ஆதாரமாகக் கொண்டு செயல்படுகின்றன. சில மருந்துகளின் செயல்திறன் நவீன அறிவியல் முறைப்படி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு எய்ட்ஸ் மற்றும் புற்று நோய்களுக்குச் சிகிச்சையளிக்க தாம்பரத்திலும், பாளையங்கோட்டையிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பக்கவாதம், மூட்டுவாதம், தோல் நோய், காமாலை, நீரழிவுநோய், ஆஸ்துமா, இளம்பிள்ளை வாதம் மற்றும் உடலில் இரத்தமின்மையால் உண்டாகும் சோகை நோய், வயிற்று நோய் போன்ற வியாதிகளுக்கு சித்த மருத்துவ முறையில் நல்ல மருந்துகள் உள்ளன. புதிய மருந்துகள் கண்டுபிடிப்பு என்று தனியே ஒன்றும் கிடையாது.

**23—**

**கூவம் நீரோட்டத்தை சரி செய்யும் திட்டம்**

**வினா 3675—திரு. ஜி. பி. வெங்கிடு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எண்ணூர் மின் நிலையத்திலிருந்து வெளிவரும் பதினெட்டா யிரம் கியூபிக் லிட்டர் வெந்நீரை பக்கிங்காம் கால்வாய் மூலம் கூவத்தில் கலக்கச் செய்து கூவம் நீரோட்டத்தைச் சரி செய்யும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): எண்ணூர் அனல் மின் நிலையத்திலிருந்து வெளிவரும் வெந்நீரின் ஒரு பகுதியை பக்கிங்காம் கால்வாயில் விட்டு

கால்வாயை சுத்தப்படுத்த பொதுப் பணித் துறை கேட்டுக் கொண்டதற்கிணங்க, ஒரு குழாய் அமைக்கப்பட்டது. இதற்கு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அனுமதிக்காததால் இந்தக் குழாய் அடைத்து வைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாய் எண்ணூர் அனல் மின் நிலையத்திலிருந்து வெளிவரும் வெந்நீரை பக்கிங்காம் கால்வாயில் கலக்கச் செய்து, கூவம் நீரோட்டத்தை சரி செய்யும் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

**24—**

**நிலவரி செலுத்தி வருபவர்களுக்கு மின் இணைப்பு**

**வினா 3691—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், தொரப்பாடி, சத்துவாச்சாரி ஆகிய பகுதிகளில் புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டி நிலவரி செலுத்தி வருபவர்களுக்கு மின் இணைப்பு வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மின் இணைப்பு வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வேலூர், தொரப்பாடி, சத்துவாச்சாரி ஆகிய பகுதிகளில் புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டி நிலவரி செலுத்தி வருபவர்களுக்கு மின் இணைப்பு வழங்கும் செயற்குறிப்பு எதுவும் தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் தற்பொழுது இல்லை. தற்போதுள்ள வாரிய விதிகளின்படி புறம்போக்கு நிலங்களில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு உரிய வருவாய்த் துறை அதிகாரிகளிடமிருந்து மறுப்பில்லாச் சான்றிதழ் (N.O.C.) பெற்று வந்தால்தான் மின் இணைப்பு வழங்கப்படும்.

**25—**

**பெண் மருத்துவர் நியமனம்**

**வினா 3734—திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





விக்கிரமசிங்கபுரம் மருத்துவமனைக்கு மேலும் ஒரு பெண் மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

விக்கிரமசிங்கபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் மருத்துவ அலுவலர் பணிபுரிகிறார். மேலும் ஒரு பெண் மருத்துவரை நியமிக்க தற்போது வாய்ப்பு இல்லை.

**26—**

**கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு கூடுதல் வசதி**

**வினா 3912—திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் I (Grade) CT Scan வைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : CT Scan கருவி வல்லுனர்கள் இருக்கின்ற மருத்துவமனையில் தான் நிறுவ இயலும். திருநெல்வேலி மருத்துவமனையில் இது நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**27—**

**பெண் மருத்துவர்கள் பணியிடங்கள்**

**வினா 3974—திரு. ஜி. எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட்டத் தலைநகர் பாலக்கோட்டில் மருத்துவமனையில் காலியாக உள்ள பெண் மருத்துவர்கள் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பாலக்கோடு அரசு தாலுக்கா மருத்துவமனையில் ஒரு பெண் மருத்துவர் உட்பட மூன்று மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். வேறு பெண் மருத்துவர் பணியிடம் ஏதும் தற்போது காலியாக இல்லை.

28—

### மன்னார்குடி தொகுதியில் குறைந்த மின் அழுத்தம்

**வினா 4099—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, பரவாக்கோட்டை, வள்ளிக்கோட்டை, கப்பாச்சிக்கோட்டை, கண்டிதம்பேட்டை, திருப்பாலக்குடி, ஆலங்கோட்டை ஆகிய ஊராட்சி பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக வருவதால் விவசாயம் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மின்சாரம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : மன்னார்குடி தொகுதி, பரவாக்கோட்டை, வள்ளிக் கோட்டை, கப்பாச்சிக்கோட்டை, கண்டிதம்கோட்டை, திருப்பாலக்குடி, ஆலங்கோட்டை ஆகிய ஊராட்சி பகுதிகளில் மின் அழுத்தம் சரியான அளவில் உள்ளது. இருப்பினும், பேரையூர் கிராமத்திற்கு தனியாக ஒரு 11 கி.வோல்ட் மின்பாதை அமைக்கும் பணி தொடங்கப்படவுள்ளது. இப்பணி 12/96க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் வடசேரி 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தில் கூடுதலாக ஒரு 5 எம்.வி.ஏ. மின்மாற்றி அமைக்க திட்டமிடப்பட்டு இப்பணி ஏப்ரல் 1997-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



மேற்குறிப்பிட்ட இரண்டு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டவுடன் மேற்குறிப்பிட்ட இடங்களில் மின் அழுத்தம் சீரடையும்.

29—

### மாவட்டந்தோறும் மூலிகைத் தோட்டம் அமைத்தல்

**வினா 4327—திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மாவட்டந்தோறும் மூலிகைத் தோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது மாவட்டந்தோறும் மூலிகைத் தோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

30—

### பரமக்குடியில் பட்டா வழங்குதல்

**வினா 2181—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி, பாரதிநகர் கருணாநிதிபுரத்தில் பல ஆண்டுகளாக வாழ்ந்து வரும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1997 சனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இந்த மக்கள் குடியிருக்கும் நிலம், களம், ஊரணி என்று வகைபாடு செய்யப்பட்டது. தடை செய்யப்பட்ட நீர்நிலைப் புறம்போக்கு என்பதால் பட்டா வழங்க இயலாது.

**31—**

**விவசாய வருமானவரி**

**வினா 2859—திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய வருமான வரியால் அரசுக்கு ஆண்டுதோறும் கிடைக்கும் வருமானம் எவ்வளவு?

(ஆ) அதை வசூலிப்பதற்கு அரசுக்கு ஆகும் செலவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) அரசுக்கு விவசாய வருமான வரியால் ஆண்டுதோறும் கிடைக்கும் வருமானம் சுமார் ரூ. 20 கோடியாகும்.

(ஆ) விவசாய வருமான வரி வசூலிப்பதற்காக ஆகும் செலவு ஆண்டுக்கு சுமார் ரூ. 1.08 கோடியாகும்.

**32—**

**திருப்பூர் பகுதியில் குடிநீர் விநியோகம்**

**வினா 1202—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் விஜயாபுரம் குடிநீர் வழங்கும் மேல்நிலைத் தொட்டியிலிருந்து போதுமான அளவு தண்ணீர் விநியோகம் செய்யப்படவில்லை என்று புகார் ஏதும் அரசிற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



1997 சனவரி 29]

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : கோவை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகங்களில் இதுகுறித்து எந்த புகாரும் பெறப்படவில்லை. விஜயாபுரம் கிராமம், நல்லூர் கிராம, பேரூராட்சியின் பகுதியாகும். நல்லூர் கிராமப் பேரூராட்சி முழுமைக்கும் திருப்பூர் இரண்டாவது குடிநீர்த் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம், இவ்வருடத்தில் குடிநீர் வழங்க ஆயத்தப்பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

**33—**

**எடப்பாடி தொகுதியில் சாலைகளைச் செப்பனிடுதல்**

**வினா 1547—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி கிராமம், கோம்பைக்காடு பள்ளிக்கூடம் ஆண்டிப் பாளையம் சாலை வாய்க்கால் பாளையம் - பாட்டுக்காரன் வளவு, புதுக்காளையம்-செங்கான் வளவு, சமுத்திரம்-அரிசி பாளையம், கோரணம்பட்டி-பச்சப்பட்டி, சடையம்பாளையம்-தொப்பக்காடு, எட்டிக் குட்டை மேடு-தொப்பகாடு கச்சப்பள்ளி பேருந்து நிலையம் - ஒட்டத் தெரு வழக்குட்டப்பட்டி - கோரணம்பட்டி ஆகிய சாலைகளைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி கிராமம் கோம்பைக்காடு பள்ளிக்கூடம் - ஆண்டிப்பாளையம் சாலை, வாய்க்கால் பாளையம் பாட்டுக்காரன் வளவு, புதுப்பாளையம் - செங்கான் வளவு, சமுத்திரம் - அரிசிபாளையம், கோரணம்பட்டி - பச்சப்பட்டி, சடையம்பாளையம் தொப்பக்காடு, எட்டிக்குட்டை மேடு - தொப்பக்காடு கச்சப்பள்ளி பேருந்து நிலையம் -

ஒட்டத்தெரு, வாடிக்குட்டப்பட்டி - கொரணம்பட்டி ஆகிய சாலைகளைச் செப்பனிடும் வேலை நிதி நிலையைப் பொறுத்து எதிர்வரும் ஆண்டுகளில் தலசாலை மான்யம் மற்றும் மாவட்ட பரவலாக்கத் திட்டம், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற ஏதாவது ஒரு திட்டங்களில் செய்து கொடுக்க ஆராயப்படும்.

**34—**

**தார்ச் சாலைகளைச் செப்பனிடுதல்**

**வினா 1648—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை பராமரிப்பிலுள்ள தார்ச் சாலைகள் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : மேற்படி சாலைகள் பழுதடையாமல் சாதாரண நிலையில் உள்ளதால் அவற்றை செப்பனிடுவதற்கு தற்போது திட்டம் ஏதும் நிலுவையில் இல்லை.

**35—**

**முத்தால்ராவுத்தர் குளம் தூர் எடுத்தல்**

**வினா 2409—திரு. அ. வ. அப்துல் நாசர் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி பேரூராட்சியில், முத்தால்ராவுத்தர் குளம் தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?





விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) புவனகிரி பேரூராட்சியில் அமைந்துள்ள முத்தால்ராவுத்தர் குளம் பொது மக்களால் குடிநீருக்குப் பயன்படுத்தப்படாத நிலையில் கால் நடைகளால் குடிநீருக்கு பயன்படுத்தப்படுகிறது. மேலும், குளம் பல ஆண்டுகளாக தூர் வாரப்படாமல் மண் தூர்ந்து தண்ணீர் பிடிப்பு இல்லாமல் உள்ளது. அதனைச் சீர்செய்ய தேவைப்படும் நிதி வசதி பேரூராட்சியில் இல்லாமல் இருந்தது. ஆனால், 1996-97-ம் ஆண்டு மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் தூர் எடுக்க, நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**36—**

**பாதையைச் செப்பனிட்டு தார்ச்சாலைகளாக மாற்றுதல்**

**வினா 2425—திரு. இ. கணேசன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், பூலாம்பட்டி, பேரூராட்சியில் சின்னப்பாதை - மதுரைக் காளியம்மன் வரை உள்ள பாதையைச் செப்பனிட்டு தார்ச்சாலை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

1996-97-ம் ஆண்டில் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் பூலாம்பட்டி பேரூராட்சியில் 2.20 கி.மீ. சாலையை தார்ச் சாலையாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[1997 சனவரி 29

37—

## சமூக நலக் கூடங்கள் கட்டுதல்

**வினா 2688—திரு. டி. ராஜேந்தர்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பூங்கா நகர் தொகுதியிலுள்ள குடிசை மாற்று வாரிய பகுதிகளில் குறைந்த வாடகையில் சமூக நலக் கூடங்கள் கட்டித்தர அரசு முன்வருமா ?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

*தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்பு பகுதியில் சென்னை மாநகராட்சியால் சமுதாய கூடம் கட்ட இயலாது. எனினும், கேசவப் பிள்ளை குடிசை மாற்று வாரிய குடியிருப்பு பகுதியின் அருகாமையில் டிமெலஸ் சாலையில் கேசவப்பிள்ளை பூங்கா அருகில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் அந்தப் பகுதி மக்கள் பயன்படுத்தும் வகையில் மாநகராட்சியால் ரூ.8.00 லட்சம் செலவில் ஒரு சமுதாயக் கூடம் கட்டப்பட்டு வருகிறது.*

38—

## நடைபாதை வியாபாரிகள் வியாபாரம் செய்ய அனுமதி

**வினா 2740—திரு.கே. சுப்பராயன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப் பாரா—*

*(அ) மதுரை தெற்கு சித்திரை வீதி டவர் கேட் பகுதியிலுள்ள நடைபாதை சிறு வியாபாரிகள் வியாபாரம் செய்ய அனுமதி கோரி மதுரை மாநகராட்சிக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?*

*(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

*(அ) ஆம்.*



1997 சனவரி 29]

*(ஆ) உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி காமராசர் சாலையில் உள்ள வர்த்தக சபை எதிரே உள்ள கொண்டித்தொழுத் தெருவில் மாற்று இடம் வழங்க மாநகராட்சிக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லையென்றும் உறுப்பினர் களிடமிருந்து தனித்தனியாக மனுவினை பெற்று அனுப்பி வைத்தால் அனுமதி வழங்க பரிசீலிக்கப்படும் என்றும், 6-8-1996 நாளிட்ட கடிதம் வாயிலாக அருள்மிகு மீனாட்சி அம்மன் தெற்கு கோபுரவாசல் சிறு வியாபாரிகள் சங்கத்தினருக்கு மதுரை மாநகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

39—

## பொழுது போக்குப் பூங்காக்கள்

**வினா 3065—திரு. கொ.வி. நன்னன் :** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கம், புதுப்பாளையம் ஒன்றியப் பகுதிகளில் பொழுது போக்குப் பூங்காக்கள் அமைக்கப்படுமா ?*

*(ஆ) ஆம் எனில், எப்போது ?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) : வினா எழவில்லை.*

40—

## ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு

**வினா 3443—திரு. இ. கணேசன் :** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப் பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், இடங்கல் சாலை—பெருமாள் கவுண்டம் பட்டி, வேம்படிதாளம் மற்றும் இளம்பிள்ளை பகுதிகளில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு ஒரு விளக்கு குடிசை மின் இணைப்பு கோரி பெறப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை ?*

(ஆ) எத்தனை வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது ?

(இ) மின் இணைப்பு வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள வீடுகள் எத்தனை ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) இத்திட்டம் பேரூராட்சிகளுக்கு இன்னும் விரிவுபடுத்தப் படவில்லை. எனவே, விண்ணப்பங்கள் பெறப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) : இவ்வினா எழவில்லை.

**41—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா 3444—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட இடங்கல் சாலை, நகர பஞ்சாயத்தில் தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

சேலம் மாவட்டம், இடங்கல் சாலை பேரூராட்சியில் அடிப்படை வசதிகள் திட்டத்தின் கீழ் 1995-96 ஆம் ஆண்டில் 30 தெரு விளக்குகளும், பகுதி 2 திட்டத்தின்கீழ் 10 தெரு விளக்குகளும் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. 1996-97 ஆம் ஆண்டிலும் 47 தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**42—**

## தொழில்முறை விண்ணப்பங்கள்

**வினா 3445—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மாவட்டம், இடங்கல் சாலை, பெருமாள் கவுண்டம்பட்டி, வேம்படிதாளம், இளம்பிள்ளை நகரப் பஞ்சாயத்துக்களில் உள்ள தொழில்முறை விண்ணப்பங்களின் நிலுவை எவ்வளவு ?

(ஆ) தயார்நிலை பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : தொழில்முறை விண்ணப்பங்கள் ஏதும் நிலுவை இல்லை. விண்ணப்பம் கிடைக்கப்பெற்று பதிவு செய்யப்பட்ட உடன் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**43—**

## துப்புரவுப் பணியாளர்கள் நியமித்தல்

**வினா 3472—திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கினத்துக்கடவு தொகுதியில உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

ஊராட்சியின் தேவை மற்றும் நிதிநிலைக்கு ஏற்ப, ஊராட்சிகளின் ஆய்வாளராகிய மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் எண்ணிக்கைக்கு மிகாமல், துப்புரவுப் பணியாளர்களைப் பணி அமர்த்த ஊராட்சிக்கு ஏற்கெனவே அதிகாரம் உள்ளது.

**44—**

## ஊராட்சி ஒன்றியத்திற்கு நிர்வாகக் கட்டிடம்

**வினா 4293—திரு. ஆர். மகேந்திரன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு நிர்வாக அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு 1987-88-ஆம் ஆண்டு அலுவலகக் கட்டிடம் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. மேற்படி பணிக்கு இடம் தேர்வு செய்தல் காரணமாக மிக நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வந்தது. தற்போது திருப்பத்தூர் வட்டம் பரிச்சல் கிராமத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு மற்றும் வரைபடம் தயாரித்து உரிய அங்கீகாரம் பெற வேலூர் பொதுப் பணித் துறை கட்டிட கோட்ட செயற்பொறியாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**45—**

## நாட்றாம்பள்ளியில் வேளாண்மைக் கல்லூரி

**வினா 532—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், நாட்றாம்பள்ளியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத்துறை அமைச்சர் :**

இல்லை. தற்போது வருடத்திற்கு 400 வேளாண் இளநிலைப் பட்டதாரிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இருந்து பட்டம் பெற்று வெளிவருகிறார்கள். பொது நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் தற்போது அவர்களுக்கு வேலைவாய்ப்பு குறைவாகவே உள்ளன. மேலும் சுமார் 2,500 வேளாண்மைப் பட்டதாரிகள் தற்போது வேலைவாய்ப்புகள்





தேடிக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம் நாட்றாம்பள்ளி தொகுதியில், வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் அவசியம் இல்லை என அரசு கருதுகின்றது.

**46—**

## நிலக்கடலை சாகுபடி

**வினா 2910—திரு. நா. பெரியசாமி (பெருந்துறை):** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் நடப்பாண்டில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ள பரப்பளவு எவ்வளவு ?

(ஆ) சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை பயிருக்கு தேவையான 'ஜிப்சம்' வேளாண்மை கிடங்குகளின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) பெரியார் மாவட்டத்தில் நடப்பு (1996-97) ஆண்டில் இதுவரை நிலக்கடலை பயிர் செய்யப்பட்ட பரப்பு:

| | | எக்டேர் |
|---|---|---|
| இறவை | .. | 1,881 |
| மானாவாரி (ஒத்திசைவு செய்யப்படாதது) | .. | 28,183 |
| மொத்தம் | .. | **30,064** |

(ஆ) ஆம்.

(இ) பெரியார் மாவட்டம் நடப்பு ஆண்டில் ஜிப்சம் விநியோகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி அளவு ரூ.15.120 இலட்சம். ஜிப்சம் வழங்க திட்டமிடப்பட்டுள்ள பரப்பளவு 7,560 எக்டேர். நடப்பு ஆண்டில்

இதுவரை என்கோபெட் நிறுவனம் மூலம் விநியோகம் செய்யப்பட்ட ஜிப்சம் அளவு 30 மெட்ரிக் டன். எஞ்சிய 1,482 மெட்ரிக் டன் ஜிப்சம் 'டான்காப்' நிறுவனம் மூலம் விநியோகிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**47—**

### அம்பத்தூர் பூச்சிக்கொல்லி ஆலையின் முதலீடு

**வினா 3770—திரு. வி. கே. லட்சுமணன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் பூச்சிக்கொல்லி மருந்து ஆலையில் செய்யப்பட்டுள்ள முதலீடு எவ்வளவு ?

(ஆ) அந்த ஆலையில் இதுவரை ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) ரூபாய் 54.55 இலட்சம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) 1980-81 முதல் 1984-85 வரையிலும், 1986-87-ல் 1994-95 மற்றும் 1995-96 ஆம் ஆண்டுகளில் இவ்வாலையில் ஏற்பட்ட மொத்த நட்டம் ரூ. **47.47** இலட்சமாகும். 1985-86, 1987-88 முதல் 1993-94 வரையில் இவ்வாலை ரூ.229.72 இலட்சம் லாபம் ஈட்டியுள்ளது. மொத்தத்தில் 1995-96 முடிய இவ்வாலை ரூ.182.25 லட்சம் நிகர லாபமாக ஈட்டியுள்ளது.

**48—**

### ஏரிகளை ஆழப்படுத்தும் பணி

**வினா 458—திரு. ப. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், துவரங்குறிச்சி அய்யனார் ஏரி, தாமரைக்கோட்டை கொலுக்கான்சேரி ஏரி, தம்பிக் கோட்டை மேலக்காடு, அமரிக்குளம் ஏரி ஆகியவற்றை தூர் எடுத்து ஆழப்படுத்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?





விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் :**

ஆம். வினாவில் கண்ட தம்பிக்கோட்டை, மேலக்காடு அமரிக்குளம் ஏரி 1994-95 ஆம் ஆண்டும், துவரங்குறிச்சி ஐயனார் ஏரி 1995-96-ம் ஆண்டும், தாமரைக்கோட்டை கொடுக்கான்சேரி ஏரி நடப்பு நிதியாண்டிலும் மராமத்து செய்து முடிக்கப்பட்டுவிட்டது.

**49—**

### கல்லணைக் கால்வாய்களை மராமத்து செய்தல்

**வினா 461—திரு. ப. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள அனைத்து கல்லணைக் கால்வாய்களையும் தூர் எடுத்து மராமத்து செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் :**

ஆம். செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**50—**

### ரெட்டேரி அணைக்குத் தண்ணீர்

**வினா 497—திரு. ஆர். மகேந்திரன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்றாம்பள்ளி தொகுதி, வெலக்கல்நத்தம் அருகில் ரெட்டேரி அணைக்கு தண்ணீர்விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் :**

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், வெலக்கல் நத்தம் மதுராவைச் சார்ந்த ரெட்டேரி கிராமத்தில் கொட்டாற்றில் குறுக்கே கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கம் கொட்டாறு நீர்த்தேக்கம் என அழைக்கப்பெற்று வருகிறது.

[1997 சனவரி 29

கடந்த இருபது ஆண்டுகளில் இவ்வணை இரண்டு முறை மட்டும் (முறையே 1981, 1991) நிரம்பி உள்ளது. இருப்பினும் மூன்று முறை, முறையே 1981, 1988 மற்றும் 1991 ஆகிய ஆண்டுகளில் ஏரிக்கு நீர்வரத்து செய்யும்பொருட்டு தண்ணீர் திறந்து விடப்பட்டது (மழைநீர் பெருகி நீர்வரத்து அதிகமானால் மேற்படி அணையின் விதிமுறைகளின்படி வரும் ஆண்டுகளில் தண்ணீர் திறந்துவிடலாம்.)

**51—**

**ஆய்விலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள்**

**வினா 620—திரு. துரை சந்திரசேகரன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் அரசின் ஆய்விலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவை ?

(ஆ) அவைகளில் நடப்பு நிதியாண்டில் நடைமுறைப்படுத்த உள்ள நீர்ப்பாசன திட்டம் எது ?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : தஞ்சை மாவட்டத்தில் தற்போது நீர்ப்பாசனத் திட்டங்கள் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

**52—**

**குளம், குட்டைகளுக்கு தண்ணீர் நிரப்பும் திட்டம்**

**வினா 1744—திரு. நா. பெரியசாமி, (பெருந்துறை):** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை, அவினாசி வட்டங்களில் உள்ள குளம், குட்டைகளுக்கு தண்ணீர் நிரப்பும் திட்டம் ஏதேனும் தயாரிக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?



1997 சனவரி 29]

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் :**

(அ) ஆம். முன்னோடி அறிக்கை ரூ.134 கோடிக்கு தயாரிக்கப் பட்டுள்ளது.

(ஆ) பவானி ஆற்றின் வெள்ள நீரை பவானிசாகர் அணைக்கு மேற்புறத்தில் பெருந்துறை மற்றும் அவினாசி வட்டங்களில் உள்ள குளம், குட்டைகளுக்கு தண்ணீர் நிரப்பும் திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. ஆய்வுக்கு பிறகு சாத்தியக்கூறுகள் இருப்பின் திட்டம் மேற்கொள்ளப்படும்.

**53—**

**நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டம்**

**வினா 2146—திரு. அர. சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

(ஆ) இதுவரை எவ்வளவு செலவு செய்யப்பட்டது ?

(இ) இந்த திட்டம் எப்போது நிறைவேறும் ?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் :**

(அ) நங்காஞ்சியாறு திட்டத்தின் மூல மதிப்பீடு தொகை ரூ.2,277 லட்சம் ஆகும். திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ.3,980 இலட்சமாகும்.

(ஆ) இதுவரையிலான செலவு ரூ.2,111 இலட்சம்.

(இ) 1996-97-ல் திட்டம் முழுமைப்படுத்துவதாக இருந்தது. தேவையான நிதி ஒதுக்கீடு, கடன் சான்று ஆகியவை கிடைக்கப் பெறாததாலும் பணிகட்குத் தேவையான சிமெண்ட், தொழிற்சாலை களிலிருந்து பெற இயலாததாலும் தற்போது பணிகளில் தடங்கல்

[1997 சனவரி 29

ஏற்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு, கடன் சான்று ஆகியவை பெற்ற பின்னர் தேவையான சிமெண்ட் கொள்முதல் செய்து மீதமுள்ள பணிகளை விரைவில் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும். 1997-98-ம் ஆண்டிற்குள் பணிகளை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

54—

**தாமிரபரணி ஆற்றிலிருந்து விவசாயத்திற்கு நீர் விடுதல்.**

**வினா 3730—திரு. இரா. ஆவுடையப்பன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி வட்டம், மானூர் ஒன்றியம் மானூர் குளத்திற்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து மதிகெட்டான் கால்வாய் மூலம் விவசாயத்திற்கு பயன்பெறும் வகையில் நீர் எடுத்துவர அரசு உதவ முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் :**

மிகக் குறைவான பயன் செலவு விகிதம் (B.C. Ratio) காரணமாக இத்திட்டம் ஏற்கக் கூடியதாக இல்லை.

55—

**உசிலம்பட்டி தொகுதியில் தார்ச்சாலை அமைத்தல்**

**வினா 624—திரு. பி. என். வல்லரசு :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் மதுரை-தேனி சாலை பிரிவு, கே. பாறைப்பட்டி, செட்டிகுளம், பூச்சம்பட்டி, மாயன்குறும்பன்பட்டி செல்லும் நெடுஞ்சாலையை தார்ச்சாலையாகப் போட, அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?



1997 சனவரி 29]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிடப்படும் சாலையானது கீழ்க்காணும் நான்கு சாலைகள் அடங்கிய தொகுதியாகும்.

| | சாலையின் பெயர். | வகைபாடு. | நீளம். |
|---|---|---|---|
| (1) | மதுரை-தேனி சாலை முதல் திருமங்கலம் கே. பாறைப்பட்டி சாலை கி.மீ. 0/0-0/6. | நகரியச் சாலை | 0.60 கி.மீ. |
| (2) | கே. பாறைப்பட்டி-பூச்சம்பட்டி எல்லை சாலை கி.மீ. 0/0 1/0 | நகரியச் சாலை | 1.00 கி.மீ. |
| (3) | கே.பாறைப்பட்டி-பூச்சம்பட்டி சாலை கி.மீ. 0/0-2 /2. | செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியச் சாலை. | 2.00 கி.மீ. |
| (4) | பூச்சம்பட்டி-மாயக்குடிமி கி.மீ 0/0-2/2. | அரசு இதர மாவட்டச் சாலை. | 2.20 கி.மீ. |
| | | மொத்தம் | **6.00 கி.மீ.** |

மேலே வரிசை எண் 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள சாலை அரசு சாலையாகும். அச்சாலை எவ்வித பழுதும் இன்றி நல்லமுறையில் உள்ளது. மீதமுள்ள மூன்று சாலைகளும் ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகரியச் சாலைகளாகும். சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியமும், நகரியமும்தான் அவைகளை மேம்படுத்த வேண்டும்.

56—

**சாலையை விரிவுபடுத்துதல்**

**வினா 2160—திரு. கோ. தளபதி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்லுப்பட்டி-உசிலம்பட்டி சாலையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அவ்வாறான திட்டம் ஏதுமில்லை. வினாவில் குறிப்பிடப்படும் சாலையானது இரு பெரிய மாவட்ட சாலைகளின் தொடர்ச்சிப் பகுதிகள் ஆகும்.

| | | |
|---|---|---|
| (1) கல்லுப்பட்டி-சாப்டுர் சாலை கி.மீ. 0/0 முதல் 7/4 வரை. | .. | 7.40 கி.மீ. |
| (2) வத்தலக்குண்டு-பேரையூர் சாலை கி.மீ. 27/8 முதல் 90/0 வரை. | .. | 25.20 கி.மீ. |
| மொத்த தூரம் | .. | **32.60 கி.மீ.** |

முதல் சாலையின் ஆரம்பத்தில் (அதாவது கி.மீ. 0/0-ல்) கல்லுப்பட்டியும், இரண்டாவது சாலையின் மத்தியப்பகுதியான கி.மீ. 24/8-ல் உசிலம்பட்டியும் அமைந்து உள்ளன. மேலும், முதல் சாலை முடிவடையும் இடமான கி.மீ. 7/4-ம் இரண்டாவது சாலை முடிவடையும் இடமான கி.மீ. 50/0-ம் ஒரே இடத்தில் அமைந்து, பேரையூர் என்னும் ஊரில் சந்திப்பதால் இச்சாலைகளுக்குள் தொடர்ச்சி உள்ளது. இவ்விரு சாலைப் பகுதிகளிலும் சேர்த்து மொத்தம் 40 குழாய்ச் சிறு பாலங்களும் 60 உடைகள் பாலங்களும் இரு சிமெண்ட் கான்கிரீட் பாலங்களும் உள்ளன. மொத்தமுள்ள 32.60 கி.மீ. தொலைவிற்கும் தற்போதுள்ள தார்தளத்தை 3.75 மீட்டரில் இருந்து 7.00 மீட்டருக்கு அகலப்படுத்தி, அனைத்து வகைப் பாலங்களையும் அகலப்படுத்தி ஆங்காங்கே தேவையான இடங்களில் தடுப்புச் சுவர்கள் அமைத்து, சாலையை விரிவாக்கம் செய்ய தோராயமாக ரூ. 290.00 இலட்சம் தேவைப்படும்.

அரசின் நிதி நெருக்கடியின் காரணமாக அதிகத் தொகை தேவைப்படும் இப்பணியினை அண்மைக் காலங்களில் எடுத்துச் செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை.



**57—**

**சாலை அமைத்தல்**

**வினா 2196—திரு. இரா. ஆவுடையப்பன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபனாசத்திலிருந்து திருவனந்தபுரத்திற்கு 30 கி.மீ. சாலை அமைக்கப் படுமா ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் :**

தமிழ்நாடு எல்லை வரை 32 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலை அமைத்திட அதற்கு தேவையான பழைய பாலங்கள் பழுது பார்க்க பெரிய பாலங்கள் கட்ட, சாலை அமைத்து மற்றும் தார்ச் சாலை அமைக்க தோராயமாக ரூ.730 இலட்சம் தேவைப்படும். பெருந்தொகை செலவு ஆகும். இப்பணியினை செயல்படுத்த அண்மைக் காலங்களில் சாத்தியக்கூறுகள் இல்லை.

**58—**

**தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்.**

**வினா 2197—திரு. இரா. ஆவுடையப்பன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வி.கே. புரத்தில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப் பெறாமல் உள்ள பாலம் எப்போது கட்டி முடிக்கப்படும் ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் :**

பாலம் கட்டும் வேலை 1992-ல் முடிவடைந்து விட்டது. ஆனால் வி.கே. புரம் பக்கமுள்ள அணுகு சாலை அமைக்க 17.50 ஹெக்டேர் பரப்பளவுள்ள தனியாரின் நன்செய் நிலம் கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது, நில உரிமையாளர் நிலத்தை கையகப்படுத்துவதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றுள்ளார். மேற்படி தடை உத்தரவு விலக்கப்பட்ட பின்பு நிலம் கையகப்படுத்தப்பட்டு

[1997 சனவரி 29

வி.கே. புரம் பக்கமுள்ள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டு பாலம் போக்குவரத்திற்குத் திறக்கப்படும். மற்ற அணுகு சாலைப் பணிகள் முடிவடைந்துவிட்டன.

59—

## தாழ்த்தப்பட்டோருக்கு வழித்தட உரிமம்

**வினா 2233—திரு. ஆ. இராசேந்திரன் (எ) தீரன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசின் ஆணைப்படி தாழ்த்தப்பட்டோருக்குச் சாலை பேருந்து போக்குவரத்தில் வழித்தட உரிமம் அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களால் 1991-95 ஆண்டுக் காலத்தில் வழங்கப்பட்டது குறித்த மாவட்ட வாரியான புள்ளி விவரம் என்ன ?

(ஆ) மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து உரிமம் பெறுவதை எளிதாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் :**

(அ) 1992 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் (தனி விதிமுறைகள்) சட்ட (சட்ட எண் 41/92) பிரிவு 6-ன் உட்பிரிவு 4-ன்படி வரையறுக்கப்பட்ட தடங்களில் எந்தத் தனி நபருக்கும் (தாழ்த்தப்பட்டோர் உட்பட) அல்லது எந்தத் தடத்திற்கும் புதிய அனுமதிச்சீட்டு வழங்க இயலாது. இச்சட்டம், 1-7-1990 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. எனவே, 1991-95 ஆண்டுக்காலத்தில் தாழ்த்தப்பட்டோர் உட்பட எந்தத் தனிநபருக்கும் அரசு ஆணையின்படி சாலைப் பேருந்துப் போக்குவரத்தில் வழித்தட உரிமம் வழங்கப்படவில்லை. மேலும், மாவட்டங்களுக்கான பகுதித்திட்டம் 1988 ஆம் ஆண்டின் மோட்டார் வண்டிகள் சட்டப் பிரிவு 100 (2)-ன்படி ஏற்பு அளிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதால் புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு மட்டும் பேருந்து வழித்தட அனுமதிச் சீட்டு, சம்பந்தப்பட்ட மண்டல போக்குவரத்து அமைப்புகளால் வழங்கப்படுகிறது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.



1997 சனவரி 29]

60—

## கூடுதலாக நகரப்பேருந்து இயக்குதல்

**வினா 2284—திரு. ஜி. கே. மணி (பெண்ணாகரம்) :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் ஒட்டனூர் செல்லும் நகரப்பேருந்து (எண் 8) தினம் மூன்று முறை செல்வதை போக்குவரத்து அதிகம் உள்ளதால் தினம் ஆறு முறை இயக்க ஆவன செய்யப்படுமா ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் :**

நகரப்பேருந்து தடம் எண் 8 தற்போது கீழ்க்கண்ட தடங்களில் இயங்கி வருகிறது.

1. பெண்ணாகரம்-ஒட்டனூர்-4 நடைகள்.
2. பெண்ணாகரம்-மேட்டூரான் கொட்டாய்-2 நடைகள்.
3. பெண்ணாகரம்-ஊத்துப்பள்ளத்தூர்-2 நடைகள்.
4. பெண்ணாகரம்-தருமபுரி-4 நடைகள்.

இப்பேருந்தை ஒட்டனூர் கிராமத்திற்கு கூடுதல் நடைகள் இயக்கினால் ஏற்கனவே பேருந்து வசதி பெற்று வரும் மற்ற மூன்று தட பொதுமக்களும் பாதிக்கப்படுவார்கள். எனவே, தற்போதைய சூழ்நிலையில் கோரிக்கைத் தடத்தில் கூடுதல் நடைகள் இயக்க இயலவில்லை.

61—

## பெரியகுளம்—அடுக்கம் சாலை அமைத்தல்

**வினா 2320—திரு. எல். மூக்கையா :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம்-அடுக்கம் வரை சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்பொழுது துவங்கப்படும் ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள பெரியகுளம்-அடுக்கம் சாலையானது முக்கிய மாவட்டச்சாலையான அம்மய நாயக்கனூர்-பெரியகுளம் சாலையில் கி.மீ. 41/6-ல் பிரிந்து செல்லும் இதர மாவட்டச் சாலையான கிருஷ்ணம நாயக்கன் தோப்பு சாலையில் கி.மீ. 8/4-ல் பிரிந்து அடுக்கம் செல்லுகிறது. கிருஷ்ணம நாயக்கன் தோப்பு பிரிவிலிருந்து அடுக்கம் வரை உள்ள சாலையின் மொத்த நீளம் 16 கி.மீ. ஆகும். இதில் 0/0-3/0. வரை மேற்கு மலை தொடர்ச்சி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் கற்சாலையாக மேம்படுத்தப்பட்டுள்ளது. கி.மீ. 3/0-5/0 வரை மண் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வரும் தருவாயில் வனத் துறை அனுமதி கிடைக்காததால் வேலை பாதியிலேயே முடித்து இறுதியாக்கப்பட்டுவிட அரசால் தீர்மானிக்கப்பட்டு வேலை நிறுத்தப் பட்டுவிட்டது.

62—

## மூழ்கு பாலம் கட்டும் திட்டம்

**வினா 2359—திரு. டி. மணி (விளவங்கோடு) :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு வட்டம், விளாத்துறை பகுதியில் தாமிரபரணி ஆற்றைக் கடக்க முழ்குப்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





63—

## பாலத்தை அகலப்படுத்துதல்

**வினா 2574—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் பேரூராட்சி பகுதியில் பக்கிங்காம் கால்வாயில் உள்ள பாலத்தை பெரிதுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலமானது நெடுஞ்சாலைத் துறையின் இதர மாவட்ட சாலையாக பராமரிக்கப்பட்டு வரும் சோழிங்கநல்லூர் குருமியாண்டி தோப்பு சாலை கி.மீ. 1/4-ல் பக்கிங்காம் கால்வாயில் கட்டப்பட்டுள்ள பாலமாகும். இதனை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய தோராயமாக ரூ. 60.00 இலட்சம் தேவைப்படும். மிகவும் பெருந்தொகை தேவைப்படும், இப்பாலப் பணியினை தற்போது மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

64—

## ஓய்வூதியத்தை உடனடியாக வழங்க நடவடிக்கை

**வினா 4159—டாக்டர் ம. மோசஸ் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முன்னாள் அரசுப் போக்குவரத்துத் துறையில் பணியாற்றியவர்களில் ஓய்வூதியம் கிடைக்காதவர்களுக்கு உடனடியாக ஓய்வூதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசு ஓய்வூதிய விதி 43 (2)-ன் படி அரசுப் பணியில் 10 ஆண்டுக் காலமும் அதற்கு மேலும் பணி நிறைவு செய்தோருக்கு மட்டுமே

[1997 சனவரி 29

ஓய்வூதியம் (பென்ஷன்) வழங்க வழிவகை உள்ளது. ஐந்து ஆண்டுகளுக்கு மேலும் பத்தாண்டிற்குள்ளும் பணியாற்றியோருக்குப் பணிக்காலப் பணிக்கொடை மற்றும் இறப்பு ஓய்வுகால பணிக்கொடையும், ஐந்து ஆண்டுகளுக்குக் குறைவாகப் பணியாற்றியோருக்குப் பணிக்கால பணிக்கொடை மட்டுமே வழங்க இயலும். இந்த விதிகளின்படிதான் போக்குவரத்துக் கழகங்களில் அமர்த்தப்பட்ட முன்னாள் அரசு போக்குவரத்து ஊழியர்களுக்கு அரசாணை எண் 1028, போக்குவரத்துத் துறை, நாள் 23-9-1985-ன்படி பணி முடிவு நற்பயன்கள் தீர்வு செய்யப்பட்டு வருகின்றது. அரசு ஓய்வூதிய விதிகளின்படி அரசுப் பணியில் 10 ஆண்டு பணி நிறைவு செய்தோருக்கு மட்டுமே அரசு ஓய்வூதியம் வழங்க இயலும்.

65—

### அரிசி இருப்பு விவரம்

**வினா 3539—திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வறட்சி, வெள்ளம் போன்ற நெருக்கடியான கால கட்டத்திற்காக பாதுகாத்து வைக்கப்படுகிற மூடை இருப்பு அரிசி தற்போது எவ்வளவு டன் உள்ளது ?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் :**

புயல், வெள்ளம் போன்ற நெருக்கடியான காலங்களில் புயல் எச்சரிக்கை மையங்களுக்கு அருகாமையிலுள்ள நியாயவிலைக் கடைகளுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சியர்களால் கணிக்கப்பட்டுள்ள புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கும் தேவையான அரிசி முன்கூட்டியே கூட்டுறவு சங்கம் மூலமாகவும், நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாகவும் அனுப்பி வைக்கப்பட்டு இருப்பில் வைக்கப்படுகிறது.

புயல், வெள்ளம் போன்ற நெருக்கடியை சமாளிப்பதற்கு ஒவ்வொரு மாவட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் போதிய உணவுப் பொருட்கள் கையிருப்பில் எப்போதும் வைக்கப்பட்டு, இயற்கையின் சீற்றத்தின்போது தங்கு தடையின்றி வழங்கப்பட்டு வருகின்றது.



1997 சனவரி 29]

வறட்சியைப் பொறுத்தவரை இது திடீரென்று ஏற்படும் தன்மையாகாது. பருவமழை பொய்க்கும் காலங்களில் ஏற்படும் நிலைமையினை சமாளிக்க, பொது விநியோகத் திட்டத்தில் வழங்கும் அரிசியின் அலகுகளை, தேவைக்கேற்றாற்போல் கூடுதலாக அளிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்கிறது. மத்திய அரசும் இம்மாதிரி தருணங்களில், தங்களது மத்திய தொகுப்பு ஒதுக்கீட்டைக் கூடுதலாக அளிக்கும். எனவே மேற்படி விநியோகங்களுக்கென தனியாக அரிசி இருப்பு ஏதும் பராமரிக்கப்படுவதில்லை.

66—

### தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணவர் சேர்க்கை

**வினா 3886—திரு. ஜி. நிஜாமுதீன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம், நாகூர் தொழிற் பயிற்சி நிலையத்திலிருந்த 4 மோல்டர் யூனிட்டுகளில் இரண்டு கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டு மீதமுள்ள இரண்டில் தற்போது ஒன்றுக்குத்தான் மாணவர் சேர்க்கை செய்யப்பட்டுள்ளது என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம், எனில் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): நாகப்பட்டினத்திலுள்ள நாகூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திலிருந்து அச்சு வார்ப்பவர் (மோல்டர்) தொழிற் பிரிவிலிருந்து நான்கு அலகுகளில் (யூனிட்டுகள்)இரண்டு அலகுகள் 1994-ம் ஆண்டு கோயம்புத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட பின்னர் 1995 மற்றும் 1996-ம் வருட சேர்க்கையில் அத்தொழிற்பிரிவின் இரண்டு அலகுகளுக்கும் பயிற்சியாளர்கள் (மாணவர்கள்) சேர்க்கப்பட்டுள்ளனர்.

67—

### நீதிபதி பதவிகளை நிரப்புதல்

**வினா 2357—திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 சனவரி 29

(அ) மாவட்ட, வட்ட அளவில் உள்ள நீதிமன்றங்களில் நீதிபதி பதவிகள் நிரப்பப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை இடங்கள் காலியாக உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தமிழ்நாட்டில் மாவட்ட மற்றும் வட்ட அளவில் கீழ்க்கண்ட 46 நீதித் துறை அலுவலர்களுக்கான பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன.

(ஆ)

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்ட நீதிபதி பணியிடங்கள் | .. | 7 |
| 2. | சார்பு நீதிபதி பணியிடங்கள் | .. | 11 |
| 3. | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் பணியிடங்கள் | .. | 28 |

68—

### குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

**வினா 2584—திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளத்தில் குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கட்டிட வசதி இல்லாததால் உரிமையியல் நீதிமன்றக் கட்டிடத்திலேயே இயங்கிக் கொண்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தனியாகக் கட்டிடம் கட்டித்தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெரியகுளத்தில், குற்றவியல் நீதிமன்றக் கட்டிடம் கட்டப் பொருத்தமான இடம் தேர்வு செய்யப்பட்ட பின்னர், சென்னை உயர்நீதிமன்றம் அங்கு அதற்கான கட்டிடம் கட்டச் செயற்குறிப்பு அனுப்பினால், அரசு அச்செயற்குறிப்பினைப் பரிசிலனை செய்யும்.



1997 சனவரி 29]

69—

### சார் நீதிமன்றங்கள் துவங்குதல்

**வினா 3210—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 ஆம் ஆண்டில், எத்தனை சார் நீதிமன்றங்கள் துவக்கப்படுகின்றன?

(ஆ) இதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர், தென் ஆற்காடு-வள்ளலார் மாவட்டம், பண்ருட்டி, திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டம், பழனி மற்றும் காமராசர் மாவட்டம், விருதுநகர் ஆகிய 4 இடங்களில் 1996-97 ஆம் ஆண்டில் சார்பு நீதிமன்றங்களைத் துவக்க அரசு அனுமதித்துள்ளது.

(ஆ) இந்த நான்கு சார்பு நீதிமன்றங்கள் செயல்படுவதற்கு அரசுக்கு ஆண்டுக்கு ரூபாய் 43.64 இலட்சங்கள் தொடரும் இனச் செலவும், ரூபாய் 13.04 இலட்சங்கள் தொடரா இனச் செலவும் ஏற்படும்.

70—

### சிறை வார்டர்கள் பதவி

**வினா 3219—திரு. டி. மணி (விளவங்கோடு):** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சிறை வார்டர்கள் இடம் நிரப்பப்படாமல் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்போது சிறைத் துறையில் நிரப்பப்படாமல் உள்ள 69 இரண்டாம் நிலைக் காவலர்கள் பணியிடங்களும் மற்றும் மத்திய சிறை, வேலூர் மற்றும் கோவையில் 8 மணி நேரத் திட்டத்தினை அமுல்படுத்தி வெளியிடப்பட்ட அரசாணையின்படி தோற்றுவிக்கப்பட்ட

[1997 சனவரி 29

168 இரண்டாம் நிலைக் காவலர் பணியிடங்களும் நிரப்பப்பட வேண்டும். இப்பணியிடங்களை தமிழ்நாடு சீருடைப்பணி தேர்வு வாரியத்தின் மூலம் தேர்வு செய்து உடனடியாக நிரப்ப தக்க நடவடிக்கை அரசால் எடுக்கப்பட்டுள்ளது.

71—

**நீதிமன்றங்களுக்கு புதிய கட்டிடம்**

**வினா 4203—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆரணியில் குதிரை லாயத்தில் இயங்கி வரும் நீதிமன்றத்திற்கு புதிய கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆரணியில் இயங்கி வரும் நீதிமன்றத்திற்கு புதியதாக கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

72—

**வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டிடம் கட்டுதல்**

**வினா 2049—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் விக்ரபாண்டியத்தில் வேளாண்மைக் கூட்டுறவு சங்கத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கூட்டுறவு சங்கங்களுக்கு கிடங்கு கட்ட 90 சதவீதம் நிதியை மாநில அரசுக்கு கடனாக வழங்குகிறது. மாநில அரசு அதனைப் பெற்று 50 சதவீதம் கடனாகவும், 40 சதவீதம் அரசு பங்கு மூலதனமாகவும் கூட்டுறவு சங்கங்களுக்கு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.



1997 சனவரி 29]

இது தவிர கிட்டங்கிகள் கட்ட நிதி உதவி அளிக்கும் திட்டங்கள் ஏதுமில்லை. இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி கோரி விக்ரபாண்டியம் வேளாண்மை கூட்டுறவு சங்கத்திடமிருந்து முன்மொழிவுகள் ஏதும் அரசுக்கு இதுவரை கிடைக்கப்பெறவில்லை. அவ்வாறு கிடைக்கப் பெற்றால் தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

73—

**கோட்டூர் ஒன்றியத்தில் வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு கட்டிடம்**

**வினா 3463—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், மழவராயநல்லூர் ஊராட்சி, இசட் சி 87 கண்டமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கூட்டுறவு சங்கங்களுக்கு கிடங்கு கட்ட 90 சதவீதம் நிதியை மாநில அரசுக்கு கடனாக வழங்குகிறது. மாநில அரசு அதனைப் பெற்று 50 சதவீதம் கடனாகவும், 40 சதவீதம் அரசு பங்கு மூலதனமாகவும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர கிட்டங்கிகள் கட்ட உதவி அளிக்கும் வேறு திட்டங்கள் ஏதும் இல்லை. இத்திட்டத்தின்கீழ் நிதி உதவிக் கேட்டு கண்டமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து முன்மொழிவுகள் ஏதும் அரசுக்கு இதுவரை கிடைக்கப்பெறவில்லை. அவ்வாறு கிடைக்கப்பெற்றால், தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

74—

**கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் விவரம்**

**வினா 3535—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் இருக்கின்றன?

(ஆ) அவற்றில் பணியாற்றும் ஊழியர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களின் சம்பளம் மற்றும் இதர படிகளாக எவ்வளவு வழங்கப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 29 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் செயல்படுகின்றன.

(ஆ) அவற்றில் சுமார் 8,057 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

(இ) மேற்படி 29 பண்டக சாலைகளும் அவற்றின் வணிகத்திறன் மற்றும் ஈட்டும் இலாபம் ஆகியவற்றின் அடிப்படையில் 'ஏ' மற்றும் 'பி' என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஊழியர்களின் ஊதியம் 1-10-1989 முதல் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது:-

| பதவி (1) | | ஊதிய விகிதங்கள் (2) |
|---|---|---|
| பிரிவு-ஏ. | பிரிவு-பி. | ரூபாய் |
| 13 (பண்டகசாலைகள்), | (16 பண்டக சாலைகள்) | |
| 1 பொது மேலாளர் | .. | 1100-45-1550-50-2050-55-2600. |
| 2 மேலாளர் | பொது மேலாளர் | 900-40-1300-45-1750-50-2250. |
| 3 கண்காணிப்பாளர் | மேலாளர் | 800-35-1150-40-1550-45-2000. |
| 4 உதவியாளர் | கண்காணிப் பாளர் | .. 700-30- 1000-35-1350-40-1750. |
| 5 இளநிலை உதவியாளர் | உதவியாளர் .. | 600-25-850-30-1150-35-1500 |
| 6 விற்பனையாளர் | இளநிலை உதவியாளர் | 500-20-700-25-1075-30-1375 |
| 7 விற்பனை உதவியாளர் | விற்பனை யாளர் | .. 350-15-500-20-800-25-1050. |
| 8 விற்பனை உதவியாளர் | | .. 300-10-450-15-675-20-775. |





சிறப்பு சம்பள விகிதங்கள்:- 1 ரூ. 1,500-60-2,100-70-2,820-80-3,600
2 ரூ. 1,300-50-1,800-60-2,400-70-3,100

(1-10-1989-ல் ரூ.1,300-க்கு மேல் அடிப்படை சம்பளம் பெறுபவர்களுக்கு மட்டும்).

*அகவிலைப்படி:* அனைத்து மொத்த விற்பனைப் பண்டகசாலை ஊழியர்களுக்கும் 1-10-1989-ல் அடிப்படை ஊதியத்தில் 34 விழுக்காடு பின்னர் தமிழ்நாடு அரசு அதன் ஊழியர்களுக்கு அவ்வப்போது அனுமதிக்கும் விகிதத்தில் அதே தேதி முதல் வழங்கப்படுகிறது.

*வீட்டு வாடகைப்படி:* அனைத்து மொத்த விற்பனைப் பண்டகசாலை ஊழியர்களுக்கும் ஒரே சீராக அடிப்படை ஊதியத்தில் 10 விழுக்காடு வழங்கப்படுகிறது.

*நகர ஈட்டுப்படி:* சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கு அடிப்படை ஊதியத்தில் 5 விழுக்காடுகளும், மதுரை, கோவை, சேலம் மற்றும் திருச்சி மாநகராட்சி பகுதிகளுக்கு 4 விழுக்காடுகளும் வழங்கப்பட்டு வருகிறது.

3. மேற்காண் ஊதிய நிர்ணய ஒப்பந்தம் 30-9-1994-ல் முடிவடைந்ததை யொட்டி அனைத்து நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை ஊழியர்களின் ஊதிய விகிதங்களை சீரமைக்க ஒரு குழு அமைக்கப்பட்டு அக்குழுவும் தனது அறிக்கையை அரசுக்கு வழங்கியுள்ளது. அதனடிப்படையில் அரசு நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை ஊழியர்களுக்கு ரூ. 150 இடைக்கால நிவாரணமாக 1-10-1994 முதல் வழங்கப்பட்டது. தற்போது தினக் கூலி ஊழியர்களுக்கும் அவர்கள் பெறும் ஊதியத்தில் 20 விழுக்காடு ஊதிய உயர்வும் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அரசாணை எண்.146, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள் 19-8-1996) அக்குழுவின் பரிந்துரையின் பேரில் உரிய ஆணை பிறப்பிக்கப்படும்.

75—

**பகுதி நேர நியாய விலைக் கடையை முழு நேரக் கடையாக்குதல்**

**வினா 3804—திரு. கோ. சண்முகம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 சனவரி 29

வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, அம்மையப்பநகர், பகுதி நேர நியாய விலைக் கடையை முழு நேரக் கடையாக மாற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி அம்மையப்ப நகர் பகுதி நேர கடையில் தற்பொழுது 599 குடும்ப அட்டைகளே உள்ளன. தற்பொழுது இக்கடையை ஏற்று நடத்தும் தாமலேரிமுத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியும் ரூ.6.07 இலட்சம் நட்டத்தில் செயல்பட்டு வருகின்றது. ஒரு முழு நேர நியாய விலைக் கடை தன்னிச்சையாக நட்டமில்லாமல் செயல்பட குறைந்தது 800 குடும்ப அட்டைகளாவது வேண்டும். தற்பொழுது, நட்டத்தில் இயங்கும் தாமலேரிமுத்தூர் தொடக்க கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் 599 குடும்ப அட்டைகளைக் கொண்ட அம்மையப்ப நகர் பகுதிநேரக் கடையை முழுநேரக் கடையாக மாற்றி அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**76—**

**சலவைத் துறை அமைத்தல்**

**வினா 1874—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம், பெத்தாம்பாளையம் கிராமம், க.ச. 427-ல் உள்ள தேவாலியம்மன் பாறைக்குட்டை மீது சலவைத் துறை அமைக்க வேண்டி அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம், பெத்தாம்பாளையம் கிராமம், க.ச.427-ல் உள்ள தேவாலியம்மன் பாறைக்குட்டை மீது சலவைத் துறை அமைக்க வேண்டி அரசுக்கு கோரிக்கை வரவில்லை.



1997 சனவரி 29]

(ஆ) மேற்கண்ட இடத்தில் இடவசதி, தண்ணீர் வசதி, பஞ்சாயத்து நிதி நிலை அறிக்கைகள், பயனாளிகள் ஒத்துழைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடு ஆகியவை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தால் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு முன்மொழிவுகள் பெறப்படுமாயின் சலவைத் துறை கட்ட அரசினால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**77—**

**பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளுக்கு கட்டிடம் கட்டுதல்**

**வினா 2019—திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதியில் உள்ள அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு நிரந்தர கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சோழவந்தான் தொகுதியில் உள்ள அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

**78—**

**காவலர்களுக்கு பதவி உயர்வு அளித்தல்**

**வினா 2487—திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளர் சீரமைப்புத் துறையில் பணி புரியும் காவலர்களுக்கு கல்வித் தகுதி உள்ளவர்களுக்கு பதிவி உயர்வு அளிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

கள்ளர் சீரமைப்பு உள்ளிட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட நலத் துறை பள்ளி/விடுதிகளில் பணியாற்றும் கல்வித் தகுதியுடைய

[1997 சனவரி 29

சமையலர்/காவலர்களுக்கு முதுநிலை அடிப்படையில் பதவி உயர்வு வழங்குவது குறித்து அரசுக்கு கருத்துரு பெறப்பட்ட பின்பு அது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

79—

### பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைத்தல்

**வினா 2762—திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, கழுகுப்புலிக்காடு ஊராட்சியில் அரசின் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தற்சமயம் வாய்ப்பில்லை

80—

### மாணவர்களுக்கு விடுதிகள் அமைத்தல்

**வினா 2768—திரு.எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பால்தரும்கோட்டை மற்றும் கழுகுப்புலிக்காடு ஊராட்சியில் அரசினர் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகள் அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தற்சமயம் வாய்ப்பில்லை.



1997 சனவரி 29]

81—

### மாணவர் விடுதிக்கு கட்டிடம் கட்டுதல்

**வினா 2943—திரு. எஸ். வி. கிருஷ்ணன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், களக்காடு ஒன்றியம், ஏர்வாடி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவதால் சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தற்சமயம் வாய்ப்பில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

82—

### தனி நபர்கள் ஆரம்ப முதலீட்டுக் கடன் விண்ணப்பங்கள்

**வினா 3650—திரு. ஆர். ஆர். சேகரன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு தனி நபர்கள் ஆரம்ப முதலீட்டுக் கடன் பெற சேலம் மாவட்டத்தில் இருந்து எத்தனை விண்ணப்பங்கள் வந்துள்ளன?*

*(ஆ) ஓமலூர் தொகுதியில் எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன?*

*(இ) இவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு தனி நபர்கள் கடன் உதவி பெற்றிட சேலம் மாவட்டத்தில்

1-11-1973 முதல் 31-3-1996 முடிய உள்ள காலத்திற்கு 1,262 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

(ஆ) இவற்றுள் ஓமலூர் தொகுதியும் அடக்கம் ஆகும்.

(இ) தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் விதி முறைகளுக்கு உட்பட்டு ஆரம்ப முதலீட்டுக் கடன், தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படுகிறது. இதுபோன்ற, தனி நபர்கள் விண்ணப்பங்கள் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு தாட்கோ வங்கி மற்றும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் ஆகிய நிறுவனங்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பப்படுகின்றன.

**83—**

## கோழி வளர்ப்புத் தொழிலுக்குச் சலுகைகள்

**வினா 2539—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோழி வளர்ப்புத் தொழிலுக்குச் சலுகைகள் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் :**

இல்லை.

மேலும் தகுதியின் அடிப்படையில அவ்வப்போது செயல்படுத்தப்படும் திட்டங்களின்கீழ் கோழி வளர்க்கும் விவசாயிகளுக்கு திட்டத்தில் உள்ள சலுகைகள் வழங்கப்படும். அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பின்தங்கிய பகுதிகளில் கோழிக் குஞ்சு பொரிக்கும் தொழிலகங்களும் ஆரம்பிக்கப் பட்டால் அரசால் வழங்கப்படும் சிறு தொழில்களுக்கான மானியம் ஏனைய சலுகைகள் பெறத்தக்கவையாகும். பிரதமரின் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின் கீழ் பொருளாதார ரீதியாக நிலைத்திருக்கக்கூடிய மற்றும் வங்கி கடனுக்கு ஏற்பான திட்டங்களுக்கும், கோழி வளர்ப்பு (Poultry) தொழிலுக்கும் நிதி உதவி தரலாம் என்று இந்திய ரிசர்வ் வங்கியின் குறிப்பு தெரிவிக்கின்றது.





**84—**

## திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் வீட்டுவசதி வாரிய வீடுகள்

**வினா 47—திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் திருவண்ணா மலை, போளூர், ஆரணி நகரங்களில் வீட்டுவசதித் துறையின் மூலம் கட்டப்பட்ட வீடுகள் அனைத்தும் விற்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத் திலுள்ள திருவண்ணாமலையில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளில் வாரிய ஒதுக்கீட்டின் கீழுள்ள வீடுகள் அனைத்தும் விற்கப்பட்டு விட்டன.

போளூர், சிறிய மற்றும் நடுத்தர நகரத் திட்டத்தில் கட்டப்பட்ட 84 வீடுகளில் 27 வீடுகள் வாரிய ஒதுக்கீட்டின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு விட்டன. மீதமுள்ள வீடுகளுக்கு போதுமான விண்ணப்பங்கள் பெறப்படாததால் முதலில் விண்ணப்பம் செய்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

ஆரணியில் கட்டப்பட்ட வாரிய ஒதுக்கீடுகளுக்கான 396 வீடுகளில் 167 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு விட்டன. மீதமுள்ள 229 வீடுகளுக்கு போதுமான விண்ணப்பங்கள் வராத காரணத்தால் முதலில் விண்ணப்பம் செய்பவர்களுக்கு முதலில் ஒதுக்கீடு செய்வது என்கிற அடிப்படையில் வாரியத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

**85—**

## கோபிசெட்டிபாளையம் தொகுதியில் தொழிற்பேட்டை

**வினா 2583—திரு. ஜி. பி. வெங்கிடு:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோபிசெட்டிபாளையம் தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

கோபிசெட்டிபாளையம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்திட தற்போது நடப்பு நிதி ஆண்டில் (1996-97) திட்டம் எதுவும் இல்லை.

**86—**

## சாக்குப்பை தொழிற்சாலைகள்

**வினா 3235—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாக்குப்பை (Poly bags) தொழிற்சாலைகள் தமிழ் நாட்டில் எத்தனை உள்ளன?

(ஆ) இத்தொழிற்சாலை நடத்துபவர்கள் வாங்கிய கடனைவிட அதிக தொகை செலுத்தியும், SIPCOT போன்றவை பணம் கட்டச் சொல்லி நெருக்கடி தருவதை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ் நாட்டில் 410 பாலிதீன் பை தொழிற்சாலைகளும், 93 சாக்குப்பை (HDPC Woren Sack) தொழிற்சாலைகளும், NIC கணிப் பொறிக் கணக்கீட்டின்படி பதியப்பட்டுள்ளன.

(ஆ) இத்தொழிற்சாலை நடத்துபவர்கள் வாங்கிய கடனை விட அதிகத் தொகை செலுத்தியும், சிப்காட் பணம் கட்டச் சொல்லி நெருக்கடி செய்கிறது என்பது உண்மையல்ல. எந்த ஒரு நிறுவனமும் மூலதனமோ அல்லது வட்டியையோ குறித்த தவணைக் காலத்தில் திரும்பச் செலுத்தத் தவறும் பட்சத்தில் அந்தச் செலுத்தா தொகைக்கு எத்தனைக் காலம் செலுத்தப்படாமல் இருக்கிறதோ அத்தனைக் காலத்திற்கு அசலைத் தவிர வட்டியும், அபராத வட்டியும், வட்டிக்கு வட்டியும் சிப்காட் விதிகளின்படி கட்ட வேண்டும். சிப்காட் விதி முறைகளுக்கு உட்பட்டு கடனை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**87—**

## பர்கூர் மகளிர் தொழிற்பேட்டை விவரம்

**வினா 3273—திரு. இ. ஜி. சுகவனம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் மகளிர் தொழிற்பேட்டைக்கான கட்டிட வேலைகள் எந்த நிலையில் உள்ளன?

விடை.—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

16 மீ x 12 மீ அளவுள்ள தொழிற் கூடங்களில் 10 தொழிற் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 15 தொழிற்கூடங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 9 மீ x 6 மீ அளவுள்ள 20 தொழிற்கூடங்கள் அனைத்தும் நிலை மட்டம் வரை (Lintel Level) கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**88—**

## திரையரங்கம் கட்ட கடனுதவி

**வினா 3673—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிதாக திரை அரங்கம் கட்ட தனியாருக்கு அதிகபட்ச தொகையாக கடன் உதவி எவ்வளவு அரசு வழங்கும்?

(ஆ) அவ்வாறு வழங்கப்படும் கடன் தொகைக்கான வட்டி விகிதம் என்ன?

[1997 சனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு திரையரங்குக் கழகம் மூலம் தனியாருக்கு பகுதி நிலை (Semi Permanent) திரையரங்கு கட்ட நபர் ஒன்றுக்கு ரூ.1.20 இலட்சம் என்ற அளவில் 1981-82 ஆம் ஆண்டு வரை நிதியுதவி அளிக்கப்பட்டது. நிதி உதவி பெற்றவர்கள் கடனைத் திரும்பத் தராததால் மேற்கொண்டு நிதியுதவி அளிப்பது நிறுத்தி வைக்கப்பட்டு. ஏற்கெனவே கொடுத்திருந்த கடனை வசூல் செய்ய முடிவு எடுக்கப்பட்டது.

(ஆ) 1981-82 ஆம் ஆண்டு வரை 17 சதவிகித வட்டி விகிதத்தில் பகுதி நிலை திரையரங்குகள் கட்ட கடன் வழங்கப்பட்டது. 1982 ஆண்டுக்கு பிறகு கடன் தொகை எதுவும் வழங்கப்படவில்லை.

**89—**

## வேலூர் அண்ணா கலையரங்கத்தை பழுதுபார்த்தல்

**வினா 3517—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம். வேலூர் அண்ணா கலையரங்கில் இருக்கைகள் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) அரசு அறியும்.

(ஆ) வேலூர் அண்ணா கலையரங்கில பழுதடைந்துள்ள இருக்கைகளைப் பழுது பார்க்க ரூ. 39,000 நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணை 9-8-1996 அன்று வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் இப்பணி செய்து முடிக்கப்படும்.



1997 சனவரி 29]

**90—**

## ஆலய தெப்பக் குளத்தை சீர்செய்தல்

**வினா 2333—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி. வியாசர்பாடியில் பழுதடைந்துள்ள இரவீசுஸ்வர ஆலய தெப்பக் குளத்தை சீர் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

அருள்மிகு இரவீசுஸ்வர திருக்கோயிலுக்குச் சொந்தமான 158 அடி நீளமும். 148 அடி அகலமும் கொண்ட திருக்குளம் மிகவும் பாழடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் நீர் தங்கி குட்டையாக உள்ளது. இதனை சீர் செய்ய ரூ.10 இலட்சம் செலவாகும். இத்திருக்கோயிலின் நிதி நிலைமை தற்போது சீராக இல்லாததால் இக்குளத்தை சீர் செய்ய இயலாது.

**91—**

## சேலம் மாவட்டத்தில் மகளிர் சேவை இல்லம்

**வினா 4229—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில மகளிர் சேவை இல்லத்தில் எத்தனை பெண்கள் இருக்கின்றனர்?

(ஆ) அவர்களுக்கு என்னென்ன விதமான பயிற்சிகள் அளிக்கப் படுகின்றன?

(இ) அவர்களுக்கு அரசால் வழங்கப்படும் உதவிகள் யாவை?

[1997 சனவரி 29

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் சேலத்தில் இத்துறை மூலம் ஒரு சேவை இல்லம் செயல்பட்டு வருகிறது. இதில் குழந்தைகளும் பெண்களுமாக 100 பேர் தங்கி பயிலலாம். இதில் தற்பொழுது 38 பெண்கள் தங்கி கல்வி பயிலுகின்றனர்.

(ஆ) இச்சேவை இல்லத்தில் 10-ம் வகுப்பு வரை கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. இதில் தொழில்நுட்பக் கல்வி பயிற்சி அளிக்கும் வகையில் டெக்ஸ்டைல்ஸ் மற்றும் டிசைன்ஸ் (Textiles and Designs) பயிற்சி பிரிவு நடப்பு ஆண்டு முதல் துவங்கப்பட்டு பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பிரிவில் முதலாண்டு 30 பெண்கள், 2ஆம் ஆண்டில் 30 பெண்கள் ஆக மொத்தம் 60 பெண்களுக்கு பயிற்சி வழங்கலாம். தற்பொழுது நடப்புக் கல்வி ஆண்டில் 10 பெண்கள் இப்பயிற்சியில் சேர்ந்துள்ளனர். இச்சேவையில்லத்தில பெண்களுக்கு தையல் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

(இ) இச்சேவை இல்லத்தில் தங்கிப் பயில்வோருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.150 வீதம் உணவுச் செலவினமாக உதவித் தொகை வழங்கப்படுகிறது. அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.150-க்கு இலவசமாக சீருடைகள் வாங்கி வழங்கப்படுகின்றன. பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 190 வரை இலவசமாக வாங்கி வழங்கப்படுகிறது.

தையல் பயிற்சிக்கான மூலப்பொருட்கள் வாங்குவதற்காக ஒவ்வொருவருக்கும் ரூ.500 வீதம் வழங்கப்படுகிறது. 10-ம் வகுப்பு பயின்ற பெண்கள் பலநோக்கு சுகாதாரம் பயிற்சிக்காக பரிந்துரை செய்யப்படுகிறார்கள்.

**92—**

## ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைகள் வழங்குதல்

**வினா 371—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 சனவரி 29]

வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் வீட்டுமனை இல்லா ஆதி திராவிடர்களுக்கு எப்போது வீட்டுமனைகள் வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

கடந்த மூன்று ஆண்டுகளில் வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு கீழ்க்கண்டவாறு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன:

| வருடம் | வழங்கப்பட்ட வீட்டுமனைப்பட்டா. |
|---|---|
| 1993-94 | 4,232 |
| 1994-95 | 7,060 |
| 1995-96 | 20,016 |

1996-97 ஆம் நிதியாண்டில் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள நில எடுப்பு முன்மொழிவுகள் விவரம் பின்வருமாறு—

| | முன் மொழிவுகள் எண்ணிக்கை. | வீட்டு மனைகள். | பரப்பளவு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) (ஏக்கர்) |
| 1. வரப்பெற்ற முன்மொழிவுகள். | 29 | 2,345 | 86.17 |
| 2. அங்கீகரிக்கப்பட்டவை | 18 | 1,485 | 56.59 |
| 3. மேற்கொண்டு தகவல்கள் கேட்டு நிலுவையில் உள்ளவை. | 11 | 860 | 29.58 |

3. 1996-97-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடைய அனைத்து ஆதிதிராவிட நல தனி வட்டாட்சியர்களுக்கும், வேகமாக

செயல்படும்படி அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வப்போது ஆய்வு கூட்டங்கள் மாவட்ட அளவில் நடத்தி பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**93—**

## சென்னையில் ஆதிதிராவிட மாணவர்களின் விடுதிகள்

**வினா 574—திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னையில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு (கல்லூரி மற்றும் பள்ளி) எத்தனை தங்கும் விடுதிகள் உள்ளன?*

*(ஆ) பொம்பூரில் அவர்களுக்கு விடுதி கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் 6 கல்லூரி மாணவர் விடுதிகளும், 2 பள்ளி மாணவர் விடுதிகளும், 2 தொழிற்பயிற்சி மாணவர் விடுதிகளும் உள்ளன. மேலும் மாணவியருக்கென ஒரு கல்லூரி மாணவியர் விடுதியும், 3 பள்ளி மாணவியர் விடுதிகளும் ஒரு தொழில் பயிற்சி மாணவியர் விடுதியும் உள்ளன.

(ஆ) பொம்பூரில ஏற்கெனவே செயல்பட்டு வந்த ஆதிதிராவிட நல கல்லூரி மாணவர் விடுதி வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்தது. இது தற்போது வில்லிவாக்கம் பள்ளி மாணவியருக்கென கட்டப்பட்டுள்ள அரசு கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது பொம்பூரில் கல்லூரி மாணவர் விடுதி கட்டும் செயற்குறிப்பு ஆய்வில் இல்லை.

**94—**

## ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி கட்டுதல்

**வினா எண் 113—திரு.வீ. தமிழ்மணி:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*





*திருக்கழுக்குன்றத்தில் ஆதிதிராவிட மாணவிகளுக்கு விடுதிகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

ஏற்கெனவே துவங்கப்பட்டு வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு அரசு கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. திருக்கழுக்குன்றத்தில் ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி இன்னமும் துவக்கப்படாததால் விடுதிக்கான கட்டிடம் கட்டும் நிலை எழவில்லை.

**95—**

## மேட்டுப்பாளையம் வட்டத்தில் பழங்குடி மக்கள்.

**வினா 1434—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம் தாலுக்காவில் எத்தனை பழங்குடி மக்கள் எவ்வகை பிரிவைச் சேர்ந்தவர்கள் வசிக்கின்றனர்?*

*(ஆ) அவர்களின் முன்னேற்றத்திற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோவை மாவட்டம். மேட்டுப்பாளையம் வட்டத்தில் 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 6,064 பழங்குடியினர் வசிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலனவர்கள் இருளர் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பழங்குடியினரிடையே மிகவும் பின்தங்கியவர்கள். ஆகையால் பண்டைய பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்பட்டு 100 சதவீதம் மானியத்துடன் இவர்களுக்கு உரிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் ஆடுகள், கறவை மாடுகள், உழவு மாடுகள் போன்றவை வாங்கி வழங்குதல், வீடு

[1997 சனவரி 29

கட்டித் தருதல் மற்றும் இவர்கள் வாழும் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவது போன்றவை அடங்கும். நடப்பு ஆண்டில் பண்டைய பழங்குடியினர் நலத் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டத்தில் வாழுகின்ற பண்டைய பழங்குடியினருக்கு ஆடு அலகுகள் வாங்கி வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

**96—**

## பின்னலாடை தொழில் ஆரம்பித்தல்

**வினா 2292—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தொழிலில் பின்தங்கியுள்ள மாவட்டங்களில் அரசு (TAHDCO) தொழில் பேட்டைகள் மூலம் பின்னலாடை தொழில் ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள முதலிப்பாளையத்தில் 100 தொழிற்கூடங்கள் கொண்ட பின்னலாடை தொழிற்பேட்டையும், பெரியார் மாவட்டத்திலுள்ள ஈங்கூரில் 200 தொழிற்கூடங்கள் கொண்ட பின்னலாடை தொழிற்பேட்டையும் அமைக்க முடிவெடுக்கப்பட்டு, திட்டம் செயல்படவுள்ளது. தொழிலில் பின்தங்கியுள்ள மாவட்டங்களிலும் தாட்கோ, மூலம் பின்னலாடை தொழிற்பேட்டைகள் ஆரம்பிக்கும் திட்டம் தற்போது ஆய்வில் இல்லை.*

**97—**

## சுற்றுலா வழிகாட்டி பயிற்சித் திட்டம்

**வினா 1714—திரு. துரை. சந்திரசேகரன்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சுற்றுலா வழிகாட்டிகளுக்கு பயிற்சித் திட்டம் ஏதேனும் சுற்றுலாத் துறை மூலம் நடத்தப்பட்டு வருகிறதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*



1997 சனவரி 29]

*விடை—*

**மாண்புமிகு திரு. என். சுரேஷ்ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) சுற்றுலாத் துறையில் சுற்றுலா வழிகாட்டிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் தற்போது இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

**98—**

## பெண் குழந்தைகள் பராமரிப்புத் திட்டத்தின் மூலம் பயனடைந்தோர்

**வினா 3820—திருமதி ஆர். வேடம்மாள்:** *மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெண் குழந்தைகள் பராமரிப்புத் தொகை வழங்கும் திட்டத்தில் பயன் அடைந்தவர்கள் கடந்த 5 ஆண்டுகளில் எத்தனை பேர்?*

*விடை—*

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத்துறை அமைச்சர்:**

*பெண் குழந்தைகள் பராமரிப்புத் திட்டம் 1992-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1992-93-ஆம் ஆண்டு முதல் 1995-96-ஆம் ஆண்டு வரை பயனடைந்த பயனாளிகள் மற்றும் அவர்கள் பெயரில் போடப் பட்டுள்ள வைப்பு நிதித் தொகை விவரம் வருமாறு:*

| வருடம் | பயனாளிகள் | வங்கியில் பயனாளர்கள் பெயரில் வைப்பு வைத்த தொகை. (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1992-93 | 750-6886 குழந்தைகளுக்கு ரூ.5,000 வீதம். | 3.44 |
| 1993-94 | 6,136 ,, | |
| 1994-95 | 8,000 ,, | 4.00 |
| 1995-96 | 8,000 ,, | 4.00 |
| *மொத்தம்* | **22,886** | **11.44** |

[1997 சனவரி 29

99—

## வேலூர் அகழியில் மீன்பிடிக்கும் தொழிலாளர்கள்

**வினா 4257—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் அகழியில் மீன்களைப் பிடிக்கும் தொழிலாளர்களுக்குக் கடந்த ஆண்டு இரண்டு மாதமாக ஊதியம் வழங்கப்படாததை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத்துறை அமைச்சர்:**

மீன் துறையைச் சார்ந்த மீனவர்கள் ஐவரைக் கொண்டும் வேலூர் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களில் அதிகபட்சமாக 10 மீனவர்களைக் கொண்டும், பங்கு முறையில் வேலூர் கோட்டை அகழியில் மீன்பிடிப்பு நடத்தப்பட்டு வருகிறது. துறை மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்கள், அரசுக்கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. பங்கு மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களில் இருப்புச் செய்யப்பட்ட பெருரக மீன்களுக்கு 1/3 பங்கும், இருப்புச் செய்யப்படாத மீன் இனங்களில் 1/2 பங்கும், முறையே அந்தந்த தினங்களில் ஊதியமாக மீன்களாகவே பங்கு மீனவர்களுக்கு வழங்கப்பட்டு, அம்மீனவர்களின் ஒப்புதலும் பெறப்பட்டு வருகிறது. மேலும், துறை மீனவர்களுக்கான ஊதியம் அந்தந்த மாதங்களிலேயே வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, துறை மீனவர்களுக்கான ஊதியம் நிலுவையில் இல்லை.

100—

## மீன் வளர்க்கும் குட்டைகள் அமைத்தல்

**வினா 4750—திரு.சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் மீனவர்களுக்கு மீன் வளர்க்கும் குட்டைகள் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1997 சனவரி 29]

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் மீனவர்களுக்கு மீன் வளர்க்கும் குட்டைகள் அமைத்துக் கொடுப்பதற்கான திட்டம் அரசிடம் இல்லை. ஆனால், மீன் வளர்க்க ஆர்வம் உள்ளவர்களுக்கு மீன் வளர்க்கும் குட்டைகள் அமைக்க அரசு மானியம் 20 விழுக்காடு அதாவது ரூ.20,000க்கு மிகைப்படாமல் வேலூரில் அமைந்துள்ள மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் அளிக்கப்படுகிறது. பழங்குடியினராயிருப்பின் ரூ.40,000 வரை மானியம் வழங்கப்படுகிறது.

## (மூன்றாம் பட்டியல்)

1—

## நடுநிலைப் பள்ளிக்கு தலைமை ஆசிரியர் நியமனம்

**வினா 244—திரு கு. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, திப்பணம்பட்டி கிராமம், மீனாட்சிபுரத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்குத் தலைமை ஆசிரியர் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அப்பணியிடம் நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திப்பணம்பட்டி கிராமம், மீனாட்சிபுரம் ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு அப்பள்ளி தொடங்கப்பட்ட ஆண்டு முதலே (1986-87) பட்டதாரி தலைமையாசிரியர் பணியிடம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது. தற்போது அரசாணை எண் 631, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 9-9-1996-ல், அரசு, பட்டதாரி தலைமையாசிரியர் பணியிடங்களை ஒதுக்கீடு செய்துள்ளது. அப்பணியிடங்களில் ஒன்று திருநெல்வேலி மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அப்பணியிடத்தை திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பட்டதாரி தலைமையாசிரியர்

இல்லாத மூன்று நடுநிலைப் பள்ளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தகுதியுள்ள மீனாட்சிபுரம் வினைதீர்த்தநாடார்பட்டி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு ஒதுக்கீடு செய்யுமாறு தற்போது மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தலைமையாசிரியர் பணியிடம் பள்ளிக்கு வழங்கப்பட்டவுடன் முன்னுரிமை அடிப்படையில் ஒன்றிய அலகில் உள்ள தகுதிவாய்ந்த ஆசிரியர் ஒருவரை பதவி உயர்வு மூலம் நியமித்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரால் உத்தரவிடப்படும்.

**2—**

**உயர்நிலைப் பள்ளிக்கு போதிய ஆசிரியர்கள் நியமனம்**

**வினா 1871—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், குன்னத்தூர் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு போதிய ஆசிரியர்கள் நியமனம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நியமிக்கப்படுவார்கள்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இப்பள்ளிக்கு கூடுதலாக ஒரு பள்ளி உதவி ஆசிரியர் பணியிடம் தேவையுள்ளது. மொத்தமாக புதிய பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யும்போது இப்பள்ளியின் தேவையை கருத்தில் கொண்டு பணியிடம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**3—**

**பொது கிளை நூலகம் அமைத்தல்**

**வினா 2440—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி வட்டம், ஆவுடையலூரில் பொது நூலகம் கிளை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?



விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 30-1-1996 நாளிட்ட கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை அரசாணை (நிலை) எண் 66ல் 625 கிராமப்புற நூலகங்கள் திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதில் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தைச் சார்ந்த ஆவுடையாலூரும் அடங்கும். கிளை நூலகம் பணிநேரம் மற்றும் பணியமைப்பு ஆகியவையும் கிராமப்புற நூலகப் பணி நேரம் மற்றும் பணியமைப்பு ஆகியவையும் ஒரே மாதிரியானவை.

**4—**

**பகுதி நேர நூலகம் கிளை நூலகமாக மாற்றம்**

**வினா 2845—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருப்புறம்பியம் ஊராட்சி பகுதி நேர நூலகத்தைக் கிளை நூலகமாக மாற்றவும் கட்டிடம் கட்டவும் அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** தஞ்சாவூர் மாவட்டம், திருப்புறம்பியம் பகுதி நேர நூலகத்தை கிராமப்புற நூலகமாக மாற்ற அரசாணை (நிலை) எண் 66, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 30-1-1996-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கிராமப்புற நூலகம் செயல்படத் தொடங்கியவுடன் மேற்படி நூலகத்திற்கு கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**5—**

**பெண்கள் மேல்நிலைப்பள்ளி அமைத்தல்**

**வினா 3511-அ— டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம், பெரம்பலூரில் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கருத்துரு ஏதும் இதுவரை பெறப்படவில்லை.

6—

### ஆண்கள் உயர்நிலைப் பள்ளி அமைத்தல்

**வினா 3658—திரு. ஜே. எம். ஆருண் ரஷீத்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூரில் ஆண்கள் அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

7—

### கிளை நூலகத்திற்குக் கட்டிடம்

**வினா 3757— திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் கிளை நூலகத்திற்கு கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** இக்கிளை நூலகத்திற்கு கட்டடம் கட்ட காலிமனை பெற சம்பந்தப்பட்ட மாவட்ட நூலக அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். காலிமனை பெறப்பட்டதும் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8—

### நூல் நிலையங்கள் ஏற்படுத்துதல்

**வினா 4147—திரு. கே. மனோகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி கிருஷ்ணாபுரம், கிடகத்தூர் நூலுஅள்ளி, ஜருகு ஆகிய இடங்களில் நூல் நிலையங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இக்கிராமங்களில் கிளை நூலகங்கள் ஏற்படுத்த தற்சமயம் வாய்ப்பில்லை. எனினும் கிருஷ்ணாபுரம், கிடகத்தூர், நூலுஅள்ளி, ஜருகு கிராம மக்கள் தங்கள் கிராமங்களில் கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து தர முன்வந்தால், இக்கிராமங்களில் உடனடியாக பகுதி நேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்.



1. குறைந்தது 10 சென்ட் காலிமனை நூலக ஆணைக் குழு பெயரில் அன்பளிப்பாகப் பத்திரம் பதிவு செய்து தர வேண்டும்.

2. மேற்கண்ட காலிமனையில் சொந்தக் கட்டிடம் கட்டும் வரை குறைந்தது 450 சதுர அடி பரப்பளவில் வாடகையற்ற இலவசக் கட்டிடம் வழங்கப்பட வேண்டும்.

3. ரூ.2000/- மதிப்பில் நூலகத் தளவாட சாமான்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

4. நூலகம் திறப்பதற்கு முன்னர் சுமார் 200 காப்புத் தொகை உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ. 1000/- வீதம் தொகை செலுத்தி இருவர் புரவலர்களாக சேர்க்கப்பட வேண்டும்.

9—

### பொது நூலகங்கள் அமைத்தல்

**வினா 4302—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், சோலையார்பேட்டை ஒன்றியத்திலுள்ள திரியாலம் வேட்டப்பட்டு கந்திலி ஒன்றியம், குரும்பேரி ஆகிய கிராமங்களில் பொது நூலகங்கள் துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) அரசு ஆணை எண் 66, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 30-1-1996-ல் 625 ஊர்ப்புற நூலகங்கள் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம் சோலையார்பேட்டை ஒன்றியத்திலுள்ள திரியாலம், வேட்டப்பட்டு கந்திலி ஒன்றியம், குரும்பேரி ஆகிய கிராமங்களும் இதில் அடங்கும்.

(ஆ) ஊர்ப்புற நூலகம் திறப்பதற்கு அரசால் கீழ்க்கண்ட நிபந்தனைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்நிபந்தனைகளை அவ்வூர்

[1997 சனவரி 29

மக்கள் நிறைவேற்றித் தரும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிபந்தனைகள் பூர்த்தி செய்து பெறப்பட்டவுடன் அவ்வூர்களில் நூலகம் திறப்பதற்கு உடனடியாக ஆவன செய்யப்படும்.

நிபந்தனைகள் :

1. நூலகம் உடனடியாக திறக்க வாடகையற்ற இலவசக் கட்டிடம் பெறப்பட வேண்டும்.

2. பிற்காலத்தில் இந்நூலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட குறைந்தபட்சம் 5 சென்ட் காலிமனை பெறப்பட வேண்டும்.

3. குறைந்தபட்சம் ரூ. 2000/- மதிப்புள்ள தளவாடங்கள் அன்பளிப்பாக பெறப்பட வேண்டும்.

4. குறைந்தபட்சம் 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ. 1000/- வீதம் நன்கொடை தரும் குறைந்த பட்சம் 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

10—

**தொடக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல்**

**வினா 4348— திரு. வை. சிவபுண்ணியம்—** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, வடக்கு தென்கரை கிராமத்திலுள்ள தொடக்கப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. வரும் 1997-98ம் கல்வி ஆண்டில் கருத்துருக்கள் பெறப்பட்டால் தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கலாம்.

11—

**ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரவுக் காவலர் நியமனம்**

**வினா 1644—திரு.கே. சுந்தர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 சனவரி 29]

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரவுக் காவலர் நியமிக்கப்பட்டுள்ளனரா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

சில இடங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

12—

**திருப்பூரில் மின் வழங்கும் வட்டம்**

**வினா 1932—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் மின் வழங்கும் வட்டம் புதிதாக அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருப்பூர் கோட்டம் தற்பொழுது கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம் தெற்கில் அமைந்துள்ளது. இப்பகிர்மான வட்டத்தில் கோயம்புத்தூர் கோட்டம், போத்தனூர் கோட்டம், ஒண்டிபுத்தூர் கோட்டம், திருப்பூர் கோட்டம், பல்லடம் கோட்டம், சோமனூர் கோட்டம், மின் அளவி பரிசோதனை கோட்டம் ஆகிய 7 கோட்டங்கள் அடங்கியுள்ளன. மேலும், கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம் வடக்கில் மேட்டுப்பாளையம், துடியலூர், வடவள்ளி, அவினாசி, மின் அளவி பரிசோதனை கோட்டம் ஆகிய 5 கோட்டங்கள் அடங்கியுள்ளன. இவை இரண்டிலும் இருந்து திருப்பூர் கோட்டம், பல்லடம் கோட்டம், சோமனூர் கோட்டம், அவினாசி கோட்டம் ஆகிய 4 கோட்டங்களை இணைத்து, மேலும் ஒரு மின் அளவி பரிசோதனை கோட்டத்தை உருவாக்கி இத்துடன் இணைத்து, திருப்பூர் மின் பகிர்மான வட்டம் அமைக்கலாமா என ஆராயப்பட்டது. ஆனால் நிர்வாக காரணங்களை முன்னிட்டு திருப்பூரில் மின் பகிர்மான வட்டம் அமைக்கத் தேவையில்லை என முடிவெடுக்கப்பட்டுள்ளது. எனவே திருப்பூரில் மின் பகிர்மான வட்டம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

13—

### தமிழ்நாட்டிலுள்ள இறவைக் கிணறுகள்

**வினா 2105—திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள மொத்த இறவைக் கிணறுகள் எத்தனை?

(ஆ) அவைகளில் மின் இணைப்புப் பெற்றவை மற்றும் மின் இணைப்புப் பெறாதவைகள் எத்தனை?

(இ) இலவச மின்சாரத்தால் தமிழ்நாடு அரசு எதிர்கொள்ள வேண்டிய செலவுத் தொகை எவ்வளவு?

(ஈ) மீதமுள்ள கிணறுகளுக்கும் மின் இணைப்புக் கொடுத்து, இலவச மின்சாரத் திட்டத்தினையும் செயல்படுத்தினால் அரசுக்கு ஏற்படப்போகும் இழப்பு எவ்வளவு?

(உ) அதை ஈடுகட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உள்ள மொத்த இறவைக் கிணறுக்கள் 16,80,000.

(ஆ) இதுவரை மின் இணைப்புகள் 15,14,000 கிணறுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(இ) இலவச மின்சாரத்தால் மின்வாரியத்திற்கு 95-96-ஆம் ஆண்டு சுமார் ரூ.1358 கோடி செலவானது. இலவச மின்சாரத்தால் 1996-97-ஆம் ஆண்டு செலவுத் தொகை ரூ.1443.14 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஈ) மின் வாரியத்திடம் 4,73,000 விவசாய விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. இவை அனைத்திற்கும் மின் இணைப்பு வழங்கத் தேவைப்படும் மின் உற்பத்தி நிலையங்கள், மின் தொடர் கட்டமைப்பு, மின்னூட்டிகள் மற்றும் மின் மாற்றிகள் அமைத்திட ரூ. 11,880/- கோடி செலவாகும். இந்த இணைப்புகளுக்கு மின்சாரம் இலவசமாக வழங்குவதற்கு அதிகப்படியாக ரூ. 468.84 கோடி இழப்பு ஏற்படும்.





(உ) நிலுவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மின்சாரம் வழங்கத் தேவையான இந்த பெரும் தொகையினை மின்வாரியமோ, அரசோ முதலீடு செய்வது என்பது இயலாதது ஆகும். இலவச மின்சாரத்தால் ஏற்படும் செலவை ஓரளவு ஈடுகட்ட 1995-96-ஆம் ஆண்டு அரசு மின்சார வாரியத்திற்கு ரூ. 350.00 கோடி வழங்கியுள்ளது. அதுபோலவே 1996-97 ஆம் ஆண்டிற்கு அரசு மின்சார வாரியத்திற்கு ரூ. 300.00 கோடி தனது வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளது.

14—

### மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி

**வினா 2382—திரு. ஜி. பி. வெங்கிடு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோபிச்செட்டிபாளையம் பொது மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:**

கோபிச்செட்டிபாளையம் அரசு மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி வழங்க அரசின் நடவடிக்கை பரிசீலனையில் உள்ளது.

15—

### அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி

**வினா 3228—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு ஒரு அவசர ஊர்தி (ஆம்புலன்ஸ்) வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:**

எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு ஒரு அவசர ஊர்தி வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1997 சனவரி 29

16—

**மின் இணைப்புக்கான பிரிவு அலுவலகம் ஏற்படுத்துதல்**

**வினா 3692—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துவாச்சாரியில் கூடுதல் மின் இணைப்புக்கான பிரிவு அலுவலகம் மற்றும் உதவி செயற் பொறியாளர் அலுவலகம் ஆகியவற்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சத்துவாச்சாரி பிரிவு அலுவலகம் வேலூர் கோட்டம்/ நகரத்தின் கீழ் இயங்கி வருகின்றது. வேலூர் கோட்ட நகரப் பிரிவில் மொத்தம் 41,788 மின் இணைப்புகளுக்கு 6 புறநகர்ப் பிரிவு அலுவலகங்களும், 401.5 மின் மாற்றிகளுக்கு 6 ஊரகப் பிரிவு அலுவலகங்களும் புது வேலைப் பளுவின் அடிப்படையில் அனுமதிக்க இயலும். ஏற்கனவே வேலூர் கோட்ட அலுவலகத்தில் ஏழு (7) புறநகர்ப் பிரிவு அலுவலகங்களும், எட்டு (8) ஊரகப் பிரிவு அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன. ஆகவே சத்துவாச்சாரி பகுதியில் கூடுதல் பிரிவு அலுவலகம் மற்றும் உதவி செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

17—

**மருத்துவர்களுக்கு குடியிருப்பு கட்டுதல்**

**வினா 4085—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேத்தியாதோப்பு மருத்துவமனை மருத்துவர்களுக்கு குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1997 சனவரி 29]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:**

(அ) சேத்தியாதோப்பு சமுதாய நலமையத்தில் (ஆரம்ப சுகாதார நிலையத்தில்) மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்டடங்கள் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

18—

**மருத்துவர் தங்க குடியிருப்பு கட்டுதல்**

**வினா 4317—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்ஆற்காடு-வள்ளலார் மாவட்டம், ஆயங்குடி கிராம ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் தங்க குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:**

(அ) தென் ஆற்காடு மாவட்டம், ஆயங்குடி கிராம ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் குடியிருப்பு கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

19—

**பன்றி ஒழிப்பு**

**வினா 4454—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரியில் சுகாதாரக்கேட்டிற்கு காரணமான பன்றிகளை ஒழிக்க அரசு ஆவன செய்யுமா?

[1997 சனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பன்றிகள் மூலம் மூளைக்காய்ச்சல் நோய் பரவுகிறது. கிராமங்களில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் பன்றிகளை வளர்த்து அதன்மூலம் பிழைப்பு நடத்தி வருவதால் பன்றிகளை அறவே ஒழிப்பது என்பது இயலாததாகும். ஆனாலும் பன்றிகள் மூலம் மூளைக்காய்ச்சல் நோய் பரவுவதால் பன்றிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த அந்தந்த ஊராட்சிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. 23-8-1996 நாளிட்ட ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை எண் 174-ல் வெளியிடப்பட்ட ஆணைக்கிணங்க, பன்றிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தவும், நோய்களைப் பரப்பும் பன்றிகளை கண்டறிந்து அவற்றை அழிக்கவும் ஊராட்சிமன்ற நிர்வாக அலுவலர்களுக்கு தக்க அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. அதன்படி புவனகிரி பேரூராட்சி நிர்வாக அலுவலர் சுகாதாரக் கேட்டிற்குக் காரணமான பன்றிகளை ஒழிக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

20—

### சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டுதல்

**வினா 4546—திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வ.புதுப்பட்டி, பேரூராட்சி துணை சுகாதார நிலையம் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நிரந்தரக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) வ.புதுப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஊராட்சி ஒன்றிய கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.



1997 சனவரி 29]

(ஆ) கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை. வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் வ. புதுப்பட்டியில் செயல்பட்டு வரும் இவ்வாரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்ட நிலம் பெறப்படவில்லை. சிவகாசி துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அவர்கள் தேவையான நிலத்தினைப் பெறுவதற்கு தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். தேவையான நிலம் கிடைக்கப்பெற்றதும் அரசு கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

21—

### மாவட்டந்தோறும் மருந்து கிடங்குகள்

**வினா 4596— டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் மருந்து கிடங்குகளை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் எப்பொழுது நிறுவப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங்கள் அனைத்திலும் 1995 ஜனவரி முதல் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மாவட்ட மருந்து கிடங்குகள் செயற்பட்டு வருகின்றன. புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டங்களில் மருந்து கிடங்குகளை அமைப்பது குறித்து உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

(ஆ) ஏற்கெனவே தர்மபுரியில் மாவட்ட மருந்து கிடங்கு செயற்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தலைமையிடம் அல்ல என்பதால் அங்கு மாவட்ட மருந்து கிடங்கு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

[1997 சனவரி 29

22—

**அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பிரிவு மற்றும் இரத்த சேமிப்பு வங்கி அமைத்தல்**

**வினா 4606—திரு. இ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில், அவசர சிகிச்சைப்பிரிவு, இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பிரிவு மற்றும் இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்தும் திட்டம், ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. அரசின் நிதிநிலைமை மற்றும் தேவையைப் பொறுத்து இதுபற்றிப் பின்னர் பரிசீலிக்கப்படும்.*

23—

**அரசு மருத்துவமனை வாகனங்களுக்கு எரிபொருள்**

**வினா 4961— திரு கே. சுப்பராயன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரசு மருத்துவமனைகளின் வாகனங்களுக்கு எரிபொருள்* (Fuel) *வழங்க ஏதேனும் அளவுகள் வரையறுக்கப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*



1997 சனவரி 29]

*(ஆ) அரசு ஆணை 282, நாள் 15-4-1996, நிதி (உள் துறை 1) என்ற அரசு ஆணையில் கீழ்க்கண்ட அளவில் எரிபொருள் வழங்கப்படுகிறது.*

| வரிசை எண். | அதிகார எல்லை (Jurisdiction) | சீருந்து (Car), சப்பு (Jeep), சுமை ஊர்தி (Lorries) முதலியன — பெட்ரோல் /அன்லீட்டட் பெட்ரோல் (Unleaded Petrol) | டீசல் | மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் (Motor Cycle/ Scooters) — பெட்ரோல் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (லிட்டரில்) | | |
| 1. | வட்டாரம் (Block) | 80 | 55 | 20 |
| 2. | தாலூகா (Taluk) | 110 | 70 | 30 |
| 3. | கோட்டம் (Division) | 140 | 90 | 40 |
| 4. | மாவட்டம் (District) | 195 | 125 | 60 |
| 5. | மண்டலம் (Region) | 165 | 110 | — |
| 6. | மாநிலம் (State) | 165 | 110 | — |
| 7. | சென்னை மாநகரம் (City of Chennai) | 160 | 100 | 30 |

*மேற்கண்ட குறியீட்டை மிஞ்சிவிட்டால் குறிப்பிட்ட ஊர்திக்கு அரசு அளித்துள்ள காப்பு பங்கிலிருந்து* (Reserve Quota) *ஒதுக்கீடு செய்யப்படுகிறது.*

24—

**மருத்துவமனையில் வண்ணக் கலர் படுக்கைகள்**

**வினா 5109—திரு. செங்கை சிவம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரசு மருத்துவமனைகளில் வண்ணக் கலர் படுக்கைகள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அரசு மருத்துவமனைகளில் வண்ணக்கலர் படுக்கைகள் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

25—

**விவசாயத் தொழிலாளர்களுக்கு நிவாரணம்**

**வினா 938— திரு. ஜி. பழனிச்சாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை-காயிதேமில்லத் மாவட்டத்தில் விஷப்பாம்பு கடியினால் இறந்த விவசாயத் தொழிலாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணம் தற்பொழுது நிறுத்தப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) மீண்டும் அந்நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை எண் 139, வருவாய்த் துறை, நாள்: 29-1-1991)-இன் படி, 2.5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்துள்ள சிறு விவசாயிகளும் வேளாண் தொழிலாளர்களும் பாம்பு கடித்து, இறக்க நேரிட்டால், அவர்களது குடும்பங்களுக்கு விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் உரிய நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடர்ந்து அமுலில் உள்ளது. நிவாரணம் வழங்குவது நிறுத்தப்படவில்லை.

26—

**பாலம் அமைத்தல்**

**வினா 495 —திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



நாட்றாம்பள்ளி தொகுதி, திம்மாம்பேட்டை-புல்லூர் சாலையில் பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாட்றாம்பள்ளி தொகுதி, திம்மாம்பேட்டை-புல்லூர் கனக நாசியம்மன் கோயில் சாலையில் 1.22 மீட்டர் நீளம், 7.5 மீட்டர் அகலம் மற்றும் 3 மீட்டர் உயர்வுக்கு மேம் பாலம் (High Level Bridge) அமைக்க தோராய மதிப்பீடு சுமார் 35 லட்சம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியத்தில் நிதி வசதி இல்லாமையாலும் இதற்காக நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லாமையாலும் தற்போது பாலத்தைக் கட்ட இயலாது.

27—

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்.**

**வினா 1208—திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருங்குளம் கிராமப் பேரூராட்சி, சாயர்புரம் நகரப் பேரூராட்சி, மாவட்ட ஆட்சியர் வளாகம் மற்றும் 115 வழியோரக் கிராமங்களுக்கான குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெருங்குளம் கிராமப் பேரூராட்சி, சாயர்புரம் நகரப் பேரூராட்சி, மாவட்ட ஆட்சியர் வளாகம், தூத்துக்குடி மற்றும் 115 வழியோரக் கிராமங்களுக்கான குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 5.54 கோடிகளுக்கு அரசு ஆணை எண் 196, நாள் 31-7-1996-இல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மார்ச் '98-க்குள் பயனுக்குக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் ரூ. 1.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1997 சனவரி 29

28—

**மானம்பாடி கிராமத்திற்கு சாலை வசதி**

**வினா 1447—திரு. அ.வ. அப்துல் நாசர்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், கி. மானம்பாடி கிராமத்திற்கு சாலை வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) சி. மானம்பாடி கிராமம், கிள்ளை பேரூராட்சி எல்லைக்கு உட்பட்டதாகும். இப்பேரூராட்சிக்கு 1996-97 ஆம் ஆண்டில் அடிப்படை வசதிகள் செய்யும் திட்டத்தின்கீழ் சாலை வசதி செய்துதர நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

29—

**கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு**

**வினா 1685—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மத்திய அரசால் கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு?*

*(ஆ) அந்நிதியில் எந்தெந்த ஒன்றியங்களுக்கு மாநில அரசு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) 1996-97 ஆம் ஆண்டுக்கு கீழ்க்கண்ட திட்டங்களுக்கு மத்திய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:*



1997 சனவரி 29]

| | | (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் | 157.0495 |
| 2. | இந்திரா குடியிருப்புத் திட்டம் | 100.2366 |
| 3. | மில்லியன் கிணறு திட்டம் | 39.2522 |
| 4. | வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் | 50.7000 |
| 5. | ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் சிறப்புத் தொடக்கத் திட்டங்கள் | 1.6500 |
| 6. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு எதிர்பார்க் கப்படுகிறது. |
| 7. | ஊரகப் பகுதிகளில் மகளிர் சிறார் மேம்பாடு | .9072 |
| 8. | ஊரகப் பகுதிகளில் மகளிர்-குழந்தை நல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தகவல் கல்வி, தகவல் தொடர்பு திட்டப் பணிகள் | ஒதுக்கீடு எதிர்பார்க் கப்படுகிறது. |
| 9. | ஊரகப் பகுதிகளில் மகளிர்-குழந்தை நல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் குழந்தை நல பாதுகாப்பு நடவடிக்கைகள் | ஒதுக்கீடு எதிர்பார்க் கப்படுகிறது. |
| 10. | சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தில் ஊரக இளைஞர்களுக்குப் பயிற்சி | 1.9160 |
| 11. | சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தில் ஊரக இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல் | 6.1922 |
| 12. | மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டம் | 7.2600 |
| 13. | கரிவாயு கலங்கள் நிறுவுதல் | 1.6800 |
| 14. | புகையில்லா அடுப்புத் திட்டம் | 1.4625 |
| | மொத்தம் | ரூ. 368.3062 |

*(ஆ) ஒன்றியங்களுக்கு மாநில அரசால் ஒன்றிய வாரியாக நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை. ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு விதிமுறைகளில் இடம் இல்லை. வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் நிதி மத்திய அரசால் ஒன்றிய வாரியாக வழங்கப்படுகிறது.*

[1997 சனவரி 29

30—

### நகராட்சியில் கூடுதல் துப்புரவுப் பணியாளர்கள் நியமனம்

**வினா 1786—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினத்தில் மக்கள் தொகைக்கு ஏற்ப நகராட்சியில் பணிபுரிய கூடுதல் துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்களா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் நகராட்சியில் 197 துப்புரவுப் பணியாளர்கள் நிரந்தரமாகவும், 11 துப்புரவுப் பணியாளர்கள் தற்காலிகமாகவும் பணிபுரிகின்றனர். இவர்களைக் கொண்டு துப்புரவுப் பணி செம்மையாக நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள 104 நகராட்சிகளில் மிகவும் நிதி வசதிக் குறைவான 22 நகராட்சிகளில் நாகப்பட்டினம் நகராட்சியும் ஒன்று. தற்போது நாகப்பட்டினம் நகராட்சியில் குறைந்த செலவிலான நவீனக் கழிப்பிடம் கட்டும் திட்டம் கூடிய விரைவில் செயல்படுத்தப்பட இருப்பதால் மனித மலம் அகற்றும் பணிக்காக தற்போது பணியிலுள்ள 79 பணியாளர்களை மாற்றுப் பணிக்கு அனுப்பி வைக்கும் நிலை ஏற்படும். எனவே நாகப்பட்டினம் நகராட்சியில் கூடுதல் துப்புரவுப், பணியாளர்களை நியமிக்கும் அவசியம் தற்போது ஏதும் இல்லை.

31—

### தெரு விளக்கு வசதி

**வினா 1805—திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதி, வானூர் மற்றும் மரக்காணம் ஒன்றியக் கிராமத் தெரு விளக்குகள் எரியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?



1997 சனவரி 29]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தில் 56 ஊராட்சிகளில், 36 ஊராட்சிகளில் பழுதுற்ற மின் விளக்குகளைப் பழுதுநீக்கும் பணி முடிவுற்று மீதி 20 ஊராட்சிகளில் பழுதுநீக்கும் பணி நடைபெற்று வருகிறது.

வானூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 64 ஊராட்சிகளில், 51 ஊராட்சிகளில் தெருவிளக்குகள் பழுதுநீக்கும் பணி தற்போது முடிவுற்றுள் ளது. மொத்தம் 3,745 தெரு விளக்குகளில் 2,940 விளக்குகள் எரிகின்றன.

32—

### தெரு விளக்கு வசதி ஏற்படுத்துதல்

**வினா 1996— திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம், அருணாசலம் முதலியார் தெருவில் உள்ள தெரு விளக்குகள் எரியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவ்விளக்குகளை எரிய வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : விழுப்புரம் நகராட்சி அருணாசலம் முதலியார் தெருவில் 4 குழல் மின் விளக்குகள் போடப்பட்டுள்ளன. அவை நான்கும் எரிகின்றன. வருங்காலத்திலும் இத்தெருவில் அனைத்து விளக்குகளும் தொடர்ந்து எரிய ஆவன செய்யப்படும்.

33—

### கந்தர் கோட்டம் பெயர் சூட்டல்

**வினா 2694—திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூங்கா நகர் தொகுதி 49-வது வட்டத்திற்கு 'கந்தர் கோட்டம்' என்று பெயர் வைக்க, அரசு முன்வருமா?

[1997 சனவரி 29

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இதுகுறித்து கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**34—**

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா 2737—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகரில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள ஆக்கிரமிப்புகள் எப்போது அகற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகரில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள ஆக்கிரமிப்புகள் பெரும்பாலாக நெடுஞ்சாலையில் உள்ளன. அவற்றை அகற்ற அத்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேலூர் நகராட்சிக்கு சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்புகள் அவ்வப்போது கட்டம் கட்டமாக அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. வேலூர் நகரில் லாங்குபஜார் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகள் 24-3-1995-ஆம் நாளில் அப்புறப் படுத்தப்பட்டன. பின்னர் சிறு வியாபாரிகள் சங்கத்தினர் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றுள்ளனர். எனவே வழக்கு முடிந்தபின் மீண்டும் ஆக்கிரமிப்புகள் அப்புறப் படுத்தப்படும். வேலூர் நகரில் அரசினர் மருத்துவமனை சாலையிலுள்ள, வழக்கு நிலுவையிலுள்ள ஆக்கிரமிப்புகளைத் தவிர்த்து, மற்ற அனைத்தும் 6-11-1996 ஆம் தேதி அப்புறப்படுத்தப்பட்டன.

**35—**

## புதிய பேருந்து நிலையம் கட்டுதல்

**வினா 2743— திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் நகரத்தில், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் (IUDP) திட்டத்தின் கீழ், புதிய பேருந்து நிலையம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?



1997 சனவரி 29]

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்பெறும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பேருந்து நிலையம் கட்ட இட ஒதுக்கீடு செய்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) புதிய பேருந்து நிலையம் கட்டத் தேவையான இடத்தினைப் பெற்று, கருத்துரு தயாரித்து, நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றபின், பேருந்து நிலையம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**36—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா 2757—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் இடங்கணசாலை நகரப் பஞ்சாயத்து மூலமாக 40 தெரு விளக்குகளுக்கு உண்டான தொகை கட்டப்பட்டுள்ளதால் அத்தெரு விளக்குகளை உடன் அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இடங்கணசாலை பேரூராட்சியில் அடிப்படை வசதித் திட்டத்தின்கீழ் 30 தெரு விளக்குகளும், பகுதி-2 திட்டத்தின் கீழ் 10 தெரு விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

**37—**

## ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்டுதல்

**வினா 2873—திரு ஆர். தமிழ்ச் செல்வன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—

அரக்கோணம் ஒன்றியம், வளர்புரம்-கிருஷ்ணாபுரம் இடையே, தக்கோலம்-அனந்தாபுரம் இடையே ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரக்கோணம் ஒன்றியம், வளர்புரம்-கிருஷ்ணாபுரம் இடையே, தக்கோலம்-அனந்தாபுரம் இடையே ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்க ரூ. 42,00,000/- செலவாகும். இப்பணியினைச் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால் தற்போது பாலம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

**38—**

### சாக்கடைகள், குப்பைத் தொட்டிகள் பராமரிப்பு

**வினா 2927—திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருச்சிராப்பள்ளி-பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம், திருச்சி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சிந்தாமணி பூசாரித் தெரு மற்றும் எடமலைப்பட்டி புதூர் நேரு இரண்டாவது தெருவில் சாக்கடைகள் மற்றும் குப்பைத் தொட்டிகள் சரிவர பராமரிக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை சீர் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சிந்தாமணி பூசாரித் தெரு மற்றும் எடமலைப்பட்டி புதூர் நேரு இரண்டாவது தெருவில் சாக்கடையில் உள்ள மண் மற்றும் அடைப்புகள் நீக்கம் செய்யப்பட்டு, கழிவு நீர் தேக்கமின்றி செல்லவும், குப்பைத் தொட்டியிலுள்ள குப்பைகளை தினம் அகற்றியும் சுத்தமாக தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது.

**39—**

### பேருந்து நிலையம் அமைத்தல்

**வினா 3025—திரு. எஸ். வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) நாங்குநேரி தொகுதி, இட்டமொழியிலும், ஏர்வாடியிலும் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**40—**

### சிதம்பரம் நகரில் குப்பைகளை அகற்றுதல்

**வினா 3039—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்தில் தெருக்களில் குவிந்துள்ள குப்பைகளால் அப்பகுதி வாழ் மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சிதம்பரம் நகரத்தில் தேங்கிக் கிடந்த குப்பைகள் யாவும் அகற்றப்பட்டு விட்டன. அவ்வப்போது சேரும் குப்பைகளும் அகற்றப்பட்டு வருகிறது. மேலும், குப்பைகள் தேங்காவண்ணம் அவ்வப்போது அகற்றுவதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்கு சம்பந்தப் பட்டவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு குப்பைகள் அகற்றப்பட்டு வருகின்றன.

**41—**

### பன்றிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

**வினா 3040—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 சனவரி 29

(அ) சிதம்பரத்தில் அதிகமாக உள்ள பன்றிகளைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சிதம்பரம் நகரத்தில், அலைந்து திரியும் பன்றிகள் ஏற்கனவே கீழே குறிப்பிட்டுள்ள நான்கு தேதிகளில், மொத்தம் 307 பன்றிகள் கட்டு அழிக்கப்பட்டுள்ளன:

அழிக்கப்பட்ட விவரம்:

| | | |
|---|---|---|
| 28-2-1996 | .. | 32 பன்றிகள் |
| 6-3-1996 | .. | 110 பன்றிகள் |
| 13-3-1996 | .. | 120 பன்றிகள் |
| 8-4-1996 | .. | 45 பன்றிகள் |
| மொத்தம் | .. | 307 பன்றிகள் |

எஞ்சியுள்ள அலைந்து திரியும் பன்றிகளையும் அழிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

42—

### தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா 3442—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், இளம்பிள்ளை நகரில் தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



1997 சனவரி 29]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், இளம்பிள்ளை பேரூராட்சியில் தற்போது 4 பாதரச விளக்குகளும், 268, 4' குழல் விளக்குகளும் அமைக்கப்பட்டு உள்ளன. பேரூராட்சிகள் அடிப்படை வசதிகள் சிறப்புத் திட்டத்தின் கீழ் 95-96-ஆம் ஆண்டில் 15, 4' குழல் விளக்குகள் அமைக்க ரூ. 50,000/- அரசு மானியம் வழங்கப்பட்டு அதன்படி 15 குழல் விளக்குகள் அமைக்கப்பட்டன. மேலும் 1996-97-ஆம் ஆண்டில் அடிப்படை வசதிகள் சிறப்புத் திட்டத்தின் கீழ் 10 சோடியம் விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

43—

### தெரு விளக்கு வசதி

**வினா 3454—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், தட்டாங்கோவில், முத்துப்பேட்டை ஒன்றியம், இடும்பாவனம் ஊராட்சி, கீழவாடியக்காடு, தில்லைவிளாகம் ஆகிய கிராமங்களுக்கு தெரு விளக்கு வசதி செய்ய அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், மழவராயநல்லூர் ஊராட்சியைச் சேர்ந்த தட்டாங்கோவில் கிராமத்தில் 14 தெரு விளக்குகள் உள்ளன. இவற்றில் 8 குழல் விளக்குகளும், 6 சாதா பல்புகளும் போடப்பட்டு இயங்குகிறது. குறைந்த மின் அழுத்தம் காரணமாக குழல் விளக்குகள் சரியாக எரியாததால், அவற்றிற்குப் பதிலாக சாதாரண விளக்குகள் பொருத்தப்பட்டு எரிய விடப்பட்டுள்ளது. முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், இடும்பாவணம் ஊராட்சி, கீழவாடியக்காடு குடியிருப்புப் பகுதியில் 8 தெரு விளக்குகள்

[1997 சனவரி 29

உள்ளன. கீழவாடியக்காடு சர்வமான்யம் பகுதியில் 5 தெருவிளக்குகள் உள்ளன. இவைகள் அனைத்தும் நல்ல நிலையில் எரிந்து கொண்டிருக்கின்றன. தில்லைவிளாகம் ஊராட்சியில் விளக்குகள் அனைத்தும் நல்ல நிலையில் எரிந்து கொண்டிருக்கின்றன.

44—

**திருமண மண்டபம் கட்டுதல்**

**வினா 3486—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியில் ஒரு திருமண மண்டபம், கடன் அல்லது மானியத்தில் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், 1996-97-ஆம் நிதியாண்டில் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி நகராட்சியில் ஒரு திருமண மண்டபம் கடன் அல்லது மானியத்தில் கட்டும் உத்தேசம் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

45—

**பாதையை அகலப்படுத்துதல்**

**வினா 3606—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் நகரில் கடைவீதிகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால், போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், 1996-97-ல் பாதையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?



1997 சனவரி 29]

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அகற்றியபின், பாதையை அகலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போது, பிரிவு பாதை (Bye Pass) வழியாக போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

46—

**மின்கம்பங்களை மாற்றுதல்**

**வினா 3613—திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டாரம்பட்டு தொகுதியில், பீமாரப்பட்டி உள்செக்கடி, உடையார்குப்பம், கல்நாட்டு புதூர், குர்களாம்பூர் மலைக் கிராமங்களில் பழுதடைந்துள்ள மின்கம்பங்களை மாற்றி புதிதாக மின்கம்பங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதியில் பீமாரப்பட்டி உள்செக்கடி, உடையார்குப்பம், கல்நாட்டுப்புதூர், குர்களாம்பூர் ஆகிய மலைக் கிராமங்களில் பழுதடைந்துள்ள மின்கம்பங்களை மாற்றி புதியதாக மின்கம்பங்கள் அமைக்கப்பட்டுவிட்டன.

47—

**கப்பிச் சாலையைத் தார்ச்சாலையாக மாற்றுதல்**

**வினா: 3642—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், பருவதனஅள்ளி-மோட்டுப்பட்டி கொட்டாயூர் வரை ஒன்றிய கப்பிச் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற நடப்பாண்டில் ஆவன செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் ஒன்றியம், பருவதனஅள்ளி-மோட்டுப்பட்டி கொட்டாயூர் வரை 1995-96 ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ஜல்லி சாலையாக மாற்றும் வேலை நடைபெற்று வருகிறது. இவ்வேலை முடிவுற்றவுடன் தார்ச் சாலையாக மாற்றப்படும்.

48—

## சாலை அமைத்தல்

**வினா 3648—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், சுஞ்சல் நத்தம் கிராமம் பெல்லூரிலிருந்து கரியம்பட்டி முனியப்பன் கோவில் வரை சாலை அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், சுஞ்சல் நத்தம் கிராமம் பெல்லூரிலிருந்து கரியம்பட்டி முனியப்பன் கோவில் வரையிலான 2 கி.மீ. நீளமுள்ள சாலை அமைப்பதற்கு 1 கி.மீ. பட்டா நிலங்கள் நில எடுப்பு செய்யப்படவேண்டும். நில எடுப்பு செய்யாமல் சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

49—

## தார்ச்சாலைகள் அமைத்தல்

**வினா 3790— திரு சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், வேலப்பாடி மரக்கடை, கந்தப்ப முதலி தெரு, பெரியகுளம் சுப்பராய முதலி தெரு ஆகிய இடங்களில் தார்ச் சாலைகள் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பெரியகுளம் சுப்பராய முதலி தெருவிற்கு, திரும்ப தார் சாலை அமைக்க ரூ. 1.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 1996-97-ம் ஆண்டு, பாதி கடன், பாதி மானியத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட உள்ளது.

(ஆ) மரக்கடை கந்தப்ப முதலி தெருவிற்கு, திரும்ப தார்ச் சாலை அமைக்க உத்தேசமாக ரூ.1.20 இலட்சமாகும். இப்பணி இந்த நிதி ஆண்டில் நகராட்சிப் பொது நிதியிலிருந்து செய்து முடிக்கப்படும்.

50—

## ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்கிய தொகை

**வினா 4172— திரு சி. டி. தண்டபாணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1991-லிருந்து 1996 வரை ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு வழங்கிய தொகை எவ்வளவு?

(ஆ) அத்திட்டத்தினால் பயன் அடைந்தவர்கள் எவ்வளவு பேர்?

(இ) அவர்கள் எந்தெந்தப் பிரிவினைச் சேர்ந்தவர்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 1991-ஆம் ஆண்டிலிருந்து 1996 வரை ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்து கீழ்க்கண்டவாறு தொகைகள் பெறப்பட்டுள்ளன.

[1997 சனவரி 29

| | | மைய அரசின் பங்குத்தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1991-92 | ... | 126.42 |
| 1992-93 | ... | 134.15 |
| 1993-94 | ... | 172.22 |
| 1994-95 | ... | 186.54 |
| 1995-96 | ... | 268.05 |

(ஆ) மற்றும் (இ): 1991-92 ஆம் ஆண்டு முதல் 1995-96 முடிய கீழ்க்கண்டவாறு மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

உருவாக்கப்பட்ட மனித சக்தி நாட்கள் (இலட்சத்தில்)

| ஆண்டு (1) | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மூலம் (2) | தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் மூலம் (3) | இதரர் மூலம் (4) | மொத்தம் (5) |
|---|---|---|---|---|
| 1991-92 | 425.970 | 11.308 | 394.453 | 831.731 |
| 1992-93 | 378.480 | 13.620 | 375.773 | 767.873 |
| 1993-94 | 428.498 | 13.908 | 412.612 | 855.018 |
| 1994-95 | 426.857 | 27.646 | 442.862 | 897.365 |
| 1995-96 | 513.904 | 31.296 | 438.546 | 983.746 |

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒழுங்குப் பிரச்சினை

### (அ) வினாக்கள்—விடைகள் நேரம் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.. பாயின்ட் ஆப் ஆர்டர்..



1997 சனவரி 29]

**திரு. ஆர். சொக்கர்:** பாயின்ட் ஆப் ஆர்டர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆப் ஆர்டரிலேதான் திரு. தாமரைக்கனி பேசுகிறாரே? அதற்கு மேலே நீங்களும் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறீர்களா? திரு. தாமரைக்கனி பேசியதற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** வினாக்கள்-விடைகள் நேரம் ஒரு மணி நேரம் என்று இருக்க வேண்டும். அதை மாற்ற வேண்டுமென்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொக்கர், திரு. தாமரைக்கனி பேசியதற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** இது ஒரு முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. சொக்கர், பேசுங்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிந்தவரையில் வினாக்கள்-விடைகள் நேரம் என்பதற்கு முதல் ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட வேண்டும். அது குறைக்கப்படவோ அல்லது கூட்டப்படவோ, மாற்றப்படவோ வேண்டுமென்றால் பேரவையினுடைய முன்அனுமதி வேண்டும். அந்த விதிமுறை சரியான முறையில் பின்பற்றப்பட்டு இருக்கின்றதா என்பதை நான் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்பதற்கு வினாவே இல்லையென்றால் ஒரு மணி நேரம் பேசாமல் உட்கார்ந்திருப்பதா? எனவே, இது பேரவைத் தலைவருடைய உரிமை. கேள்வி நேரத்தை தொடருவதற்குத்தான் உங்களுடைய அனுமதி வேண்டும். திரு. இரா. தாமரைக்கனி.

### (ஆ) அரசு விழாவிற்குச் சட்டமன்ற உறுப்பினரை அழைத்தல் குறித்து

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியத்தில் இலந்தைக்குளம் என்ற கிராமத்தில் 17-1-1997-ஆம் தேதி, கூட்டுறவுச் சங்கத்தினுடைய நிரந்தரக் கட்டிடத் திறப்புவிழா நடந்தது. அதில் தொகுதி எம்.எல்.ஏ., என்கிற முறையில் என்னை அழைக்கவில்லை. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கட்டிடத்தைத் திறந்து வைத்திருக்கிறார்கள். அவருடைய பெயரும், யூனியன் சேர்மன் மற்றும் வைஸ்-சேர்மன் பெயர்களும் இருக்கின்றன. ஆகவே, மீண்டும் அதற்குத்

[திரு. இரா. தாமரைக்கனி] [1997 சனவரி 29

திறப்புவிழா நடத்தி, அந்தக் கட்டிடத்தினுடைய கல்வெட்டில் பெயரை மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா ? இனிமேல் தவறு நடக்காமல் இருப்பதற்கு அரசு பார்த்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழைப்பிதழிலே நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பெயர்கள் எல்லாம் போடப்பட்டிருந்தன. திறப்புவிழா அழைப்பிதழில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் பெயர் போடப்படவில்லை என்பது விழாவிற்குச் சென்ற பின்புதான் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இது போன்ற தவறுகள் நடக்கக்கூடாது என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அப்போதே அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இதுபோன்ற தவறுகள் இனிமேல் நடக்காமல் பார்த்துக் கொள்வோம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் கொடுத்தாயிற்று. பிறகு, திரும்பவும் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? மறுவிழா நடத்தமுடியாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அழைப்பிதழும் கிடையாது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறு என்று அமைச்சரே சொல்கின்றாரே..

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, கல்வெட்டிலே பெயர் போடக்கூடாது, அழைப்பிதழிலும் பெயர் போடக்கூடாது என்று சம்பந்தப்பட்ட கூட்டுறவுத் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார். இது நியாயமா?

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறாக அப்படி ஒரு குற்றச்சாட்டை நீங்கள் சொல்லக்கூடாது. அதற்கு ஆதாரம் இருந்தால் சொல்லலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆதாரம் இருப்பதால்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன ஆதாரம் உங்களிடம் இருக்கிறது? (குறுக்கீடு) அதெல்லாம் ஆதாரம் கிடையாது, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த மன்றத்தில் மாண்புமிகு



1997 சனவரி 29] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அமைச்சர்கள் பதில் சொன்னால், அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். சாதாரணமாக ஒரு உறுப்பினரேகூட தன்னிலை விளக்கம் கொடுத்தால், அதற்குப் பிறகு அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் மரபு. எனவே, அமைச்சர் சொன்னதற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதுதான் முறை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மறுபடியும் திறப்புவிழா நடத்தி கல்வெட்டில் பெயரைப் போடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறுபடியும் திறப்புவிழா நடத்த வேண்டும் என்றால், பேரவைத் தலைவர் என்ற முறையில் நான் நடவடிக்கை எடுப்பேன். நீங்கள் உட்காருங்கள், நீங்கள் வேண்டுமானால் அதை எழுதிக் கொடுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது, நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ஒரு தவறான செய்தியை சொல்லியிருக்கிறார். அது ரெக்கார்டு ஆகக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை எடுத்து விடச் சொல்கிறேன்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி கயத்தாறு ஒன்றியத்தில் மக்கள் குறை கேட்பதைத் தடுக்க முற்பட்டதாகக் கூறப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கயத்தாறு ஒன்றியத்தின் மக்கள் குறையைக் கேட்பதற்கு விடாமல் தன்னைத் தடுத்ததாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் கொண்டுவருவார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நானும் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரே கொடுத்து இருப்பதால், மற்றவர்களைக் கூப்பிட வேண்டியதில்லை. (குறுக்கீடு) அது என்னுடைய விருப்பம், திரு. தாமரைக்கனி நீங்கள் உட்காருங்கள். யார் யார்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொடுத்திருக்கிறார்கள் என்று பெயரைச் சொல்லுவது, கூப்பிடுவது என்னுடைய உரிமை. நீங்கள் உட்காருங்கள். சட்டமன்றத்தை நடத்துவதற்கு எனக்கு நீங்கள் கற்றுக் கொடுக்கக்கூடாது, உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** விதிப்படி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதிப்படி நடக்க எனக்குத் தெரியும். நீங்கள் உட்காருங்கள். டாக்டர் கிருஷ்ணசாமி பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கயத்தாறு ஒன்றியமும் கயத்தாறு நகரமும் வரலாற்றிலே புகழ் பெற்றவை. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட மண் அந்த மண், அந்த மண்ணிலே ஜனவரி மாதம் 7-ஆம் தேதி 50 கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் மரியாதையும், சுதந்திரமும், சமத்துவமும் தூக்கிலிடப்பட்ட செய்தியைத்தான் நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஒரு சட்டமன்ற உறுப்பினர் மட்டுமல்ல, 50 கோடி தாழ்த்தப்பட்ட மக்களுடைய எண்ணங்களை பிரதிபலிக்கக் கூடியனவாக இருந்தும், தேவேந்திரகுல சமுதாயத்தினுடைய தலைவனாக இருக்கிறேன் என்று தெரிந்தும்கூட, ஒட்டப்பிடாரம் தொகுதிக்கு உட்பட்ட கயத்தாறு ஒன்றியத்தின் உள்ளே வந்து மனுக்கள் பெறக்கூடாது என்று ஒன்றியக் கவுன்சில் தீர்மானம் நிறைவேற்றி — அதையும் நிறைவேற்றிய நாள், ஒரு கறுப்பு நாள் — ஏறக்குறைய 3 வாரங்கள் முடிந்து விட்டன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எல்லா அதிகாரங்களும் இருக்கின்றன. ஒரு சட்டமன்ற உறுப்பினருடைய உரிமை பறிபோனது மாத்திரம் அல்ல, 235 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இதே நிலை என்ற அடிப்படையிலே தாழ்த்தப்பட்ட மக்களுடைய உரிமையும் பறிக்கப்பட்டு இருக்கிறது என்ற நிலையிலே, இந்த நேரத்திலே அந்த ஜனநாயக விரோத தீர்மானத்தை நிறைவேற்றிய ஒன்றிய சேர்மனை அழைத்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி தண்டனை கொடுத்திருந்தால் நான் மட்டும் அல்ல, வெளியிலே கொந்தளித்துக் கொண்டிருக்கிற, ஏங்கிக் கொண்டிருக்கிற வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிற எண்ணற்ற தாழ்த்தப்பட்ட மக்களும் சந்தோஷப்பட்டிருப்பார்கள். ஆனால் இன்றுவரை அப்படிப்பட்ட ஒரு தண்டனை அளிக்கப்படவில்லை. அவர் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்படவில்லை என்பது ஒரு வேதனைக்குரிய விஷயம். அந்த நிகழ்ச்சியைப் பற்றி நான் சில விஷயங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வழக்கமாக சட்டமன்ற உறுப்பினர்கள்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்கு,

**திரு. பி. என். வல்லரசு :** பாயிண்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வல்லரசு உட்காருங்கள். டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேரவைத் தலைவரைச் சந்தித்து இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்தது, அதற்கு விளக்கம் தேவை, நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டிருந்தால், அந்த விளக்கங்களையெல்லாம் பெற்று அதற்குப் பின் நடவடிக்கை எடுத்திருப்பேன். நீங்கள் நேரடியாக மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றுதான் என்னிடம் சொன்னீர்களே ஒழிய, இதுவரை பேரவைத் தலைவர் என்ற முறையில் என்னிடம் எந்தப் புகாரும் கொடுக்கவில்லை என்பது இந்தப் பதிவேட்டில் ஏறவேண்டும் என்பதற்காக இதைச் சொல்கிறேன். நீங்கள் தொடர்ந்து பேசலாம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி :** கயத்தாறு ஒன்றியத்தில் மனு நீதி நாள் நடத்தவேண்டுமென்று 15 நாட்களுக்கு முன்பே பத்திரிகையிலே செய்தி கொடுத்து, முறையாக அறிவிப்பு கொடுக்கச் சொல்லி, அந்த ஆணையரிடத்திலே தகவல் கொடுத்து இருந்தேன். அந்த ஒன்றியத்தினுடைய சேர்மன் ஒரு ஆதிக்கவாதி. அந்தப் பகுதியிலேயுள்ள ஒடுக்கப்பட்ட மக்களை, தாழ்த்தப்பட்ட மக்களை, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களை, அடக்கி, ஒடுக்கி வைத்திருக்கக் கூடியவர். கறுப்புச் சட்டங்களை, இந்தியன் பீனல் கோட் சட்டங்களை, தன்னுடைய ஆதிக்க சட்டங்களை மட்டும் நடைமுறைப்படுத்தி வரக்கூடியவர். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் தனக்குச் சமமாக உட்கார்ந்து விடக்கூடாது என்ற நோக்கத்தோடு இப்படி தடுத்திருக்கிறார். இது மிகவும் வேதனைக்குரிய விஷயம். எனவே, அந்த எண்ணத்தினை நீங்கள் தடுக்க வேண்டும்.

முற்பகல் 10-25

இந்தத் தீர்மானத்தினை நிறைவேற்றிய அந்தச் சேர்மன் அவர்கள், தீர்மானத்தினை நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல், பத்திரிகைகளிலே இந்த மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், தேவேந்திரகுல மக்கள், அங்கே ஒன்றியத்திற்குள்ளே வரக்கூடாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். இது ஏதோ தன்னிச்சையாக நடந்தது அல்ல. இது திட்டமிடப்பட்டு, நீண்ட நெடுநாட்களாக செய்ய வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்ததை அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

கடந்த காலத்திலே கொடியன்குளத்திலே ஒரு சம்பவம் நடந்தது. அதோடு இந்த நாட்டிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது என்று நினைத்துக்கொண்டிருந்தோம். அதற்காகத்தான், அப்படியெல்லாம் கொடுமை புரிந்த அந்த ஆட்சியை அகற்ற வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு ஏறக்குறைய ஒரு ஆண்டுக் காலம் தாழ்த்தப்பட்ட மக்களிடத்தில் பிரச்சாரம் செய்து அந்த ஆட்சியை அகற்றி, இந்த ஆட்சியைக் கொண்டு வந்தோம். ஆனால் மீண்டும் இந்த கயத்தாறு, கடையநல்லூர் நிகழ்ச்சி நடந்துவிட்டதே என்று நாங்கள் வேதனைப்படுகிறோம், வருத்தப்படுகிறோம். இனிமேலாவது இந்த கயத்தாறு, கடையநல்லூர் நிகழ்ச்சிகள் நடக்கக்கூடாது என்ற ஆதங்கத்திலேதான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் இதனைச் சமர்ப்பிக்கின்றேன்.

எனக்காக அல்ல, இன்னும்-சுதந்திரமும், ஜனநாயகமும், சம உரிமையும் அடைந்துள்ள இந்த நிலையிலும்—எட்டாத் தூரத்திலுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். இனிமேல் தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் இதுபோன்ற நிகழ்ச்சி நடைபெறாமல் இருக்க வேண்டுமென்றால், என் மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானம் உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும். தீண்டாமைக் குற்றம் புரிந்த கயத்தாறு ஒன்றியச் சேர்மன் மீது தீண்டாமைக் குற்றம் செய்ததற்காக, 1989-ஆம் ஆண்டு கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டும். வேண்டுமென்றால் நான் பேரவைத் தலைவருக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் இரண்டு நாட்கள் அவை நடைபெறும். அவரை இங்கே அழைத்து விசாரணை செய்ய வேண்டும்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றுவிட்டன. என் மீது 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒன்றிய அலுவலகத்திற்குச் சென்று மனு கொடுக்க வேண்டுமென்றுதான் நான் சொன்னேன்: ஆனால் என்ன காரணமோ, அமைதியாக குரல் எழுப்பிய என் மீதே 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. என்னை அடைப்பதற்கு பாளையங்கோட்டைச் சிறையிலே இடம் இல்லை என்று மதுரைக்கு மாற்றி என்னை அவமானப்படுத்தினார்கள். எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டிருக்கின்றேன். அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. இதனைத் தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று விட்டன. மக்கள் மறியலிலே ஈடுபட்டார்கள். அவர்கள் மீதே தடியடிப் பிரயோகம் நடத்தினார்கள். துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள், நூற்றுக்கு





மேற்பட்டவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு—கடையநல்லூரிலே மட்டும் 2,000 பேர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. எனவே, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளெல்லாம் நடந்திருக்கின்றன.

நான் கேட்டுக்கொள்வது, நான் கயத்தாறு ஒன்றியத்திற்கு வரக்கூடாது என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ரத்து செய்யப்பட வேண்டும். கயத்தாறு ஒன்றியச் சேர்மன் அவர்களை இந்த மாமன்றத்தில் அழைத்து விசாரணை செய்ய வேண்டும். அவர்கள் மீது 1989 கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டும், கைது செய்ய வேண்டும்.

கடையநல்லூரிலே நடந்தத் துப்பாக்கிச் சூட்டினால் ஒரு காலை இழந்திருக்கின்ற சீதாராமன் என்ற இளைஞனுக்கு 5 லட்ச ரூபாய் நிதி உதவி செய்ய வேண்டும். காவல் துறையினர் கடையநல்லூரிலே புகுந்து வீடுகளையெல்லாம் சேதப்படுத்தியிருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய்க்கு மேல் சேதம் அடைந்திருக்கிறது. அதை முதலமைச்சர் கவனித்து அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு நிதி உதவி செய்ய வேண்டும். அங்கே குற்றம் புரிந்த காவல் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

**திரு. பி. என். வல்லரசு :** பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிடையாது. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பைக் கொண்டு வந்து, கயத்தாறு மற்றும் கடையநல்லூரில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் சுட்டிக்காட்டி, அரசு தவறு செய்துவிட்டது என்ற குற்றத்தையும் சுமத்தியுள்ளார். நான் இதற்கு மிக விரிவான ஒரு விளக்கத்தை இங்கே அளித்திட விரும்பவில்லை. காரணம், இது குறித்து மாவட்ட நீதிபதி இரா. மாணிக்கம் அவர்களைக் கொண்டு நீதி விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்த கமிஷனுடைய முடிவுகள் அல்லது அறிக்கை விரைவிலே தரப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எவ்வளவு விரைவாக அந்த அறிக்கை வரவேண்டுமோ அவ்வளவு விரைவாக வருவதற்கு நீதிபதி அவர்களும் நிச்சயமாக முன்வருவார்கள் என்ற எதிர்பார்ப்பும் இந்த அரசுக்கு இருக்கின்றது. அறிக்கை வந்தவுடன் அந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்படுகின்ற செய்திகளின் அடிப்படையில்,

பரிந்துரைகளின் அடிப்படையில் நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதற்கிடையில், இங்கே டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னதை நான் மறுத்துக் கூறுவது, ஒருவேளை நீதிவிசாரணை நடக்கும்பொழுது கிருஷ்ணசாமி அவர்கள் அங்கே வைக்கின்ற வாக்குமூலத்திற்கு எதிரானதாக ஒரு முதலமைச்சரே இத்தகைய நிலையை எடுத்திருக்கிறார் என்ற அளவில், அவருக்கு விரோதமானதாக ஆகிவிடக்கூடாது என்ற நல்லெண்ணத்திலேதான் நான் இங்கே அதைப் பற்றி விரிவாகப் பேச விரும்பவில்லை. ஆனால், எனக்கு அங்குள்ள அதிகாரிகள் அனுப்பியுள்ள அந்த அறிக்கையிலேயுள்ள சில குறிப்புகளை மாத்திரம் இங்கே படிக்க விரும்புகிறேன். அப்படிப் படிப்பதால் அனைத்தையும் நான் ஏற்றுக்கொண்டேன் என்று பொருளல்ல. இந்த அவைக்கு அதிகாரிகள் மட்டத்திலேயிருந்து என்ன தகவல்கள் தரப்பட்டன என்பது அறிவிக்கப்பட வேண்டுமென்ற ஒரு நிலையிலேதான் அதைப் படிக்கின்றேனேயல்லாமல், முழுவதையும் ஏற்றுக்கொண்டு படிப்பதாக அவையிலேயுள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கொள்ளக்கூடாது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

7-1-1997 அன்று காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை தனது தொகுதியின் வளர்ச்சிப் பணிகள் குறித்து கயத்தாறு ஊராட்சி ஒன்றியத் தலைவர் முதல் அந்த ஒன்றியத் தொகுதியிலே அடங்கும் அனைத்து ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ஆகியோருடன் விவாதிக்க எண்ணியிருப்பதாகவும், அதற்கு ஏற்பாடு செய்யுமாறும் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்திருக்கிறார். அதே நாளில் நண்பகல் 12 மணிக்கு மேல் பிற்பகல் 3 மணி வரையில் பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறவும் திட்டமிருப்பதாகத் தெரிவித்து, அதற்காக, சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளை அழைக்குமாறும் அதிலே எழுதியிருந்தார். இந்த விவரங்களை அவர் நாளேடுகளின் மூலமாகவும் விளம்பரம் செய்திருந்தார்.

30-12-1996 அன்று கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கியுள்ள 45 ஊராட்சி மன்றங்களில் 39 ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் ஒருமனதாக, காரணம் எதுவும் கூறாமல், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தைப் புறக்கணிக்கப் போவதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள். 3-1-1997 அன்று கயத்தாறு ஊராட்சி ஒன்றியக் குழுக் கூடி சட்டமன்றப் பேரவை



உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, 7-1-1997 அன்று கூட்டம் நடத்தக்கூடாது எனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இதற்கிடையே, இந்த நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெறுவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு 3-9-1996 அன்று ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமியின் உதவியாளரும், கொடியங்குளத்தைச் சேர்ந்தவருமான கணேசன் என்பவர், கிராம வளர்ச்சிப் பணி ஒப்பந்தங்களைத் தன்னிடம் தரக் கோரிட, அதன் காரணமாக கயத்தாறு வட்டார வளர்ச்சி அலுவலருக்கும், அவருக்கும் தகராறு ஏற்பட்டு, அப்பொழுது அந்த அதிகாரியை பணிகளைச் செய்யவிடாமல் கணேசன் தடுத்ததாகவும், 5-9-1996 அன்று கணேசன் மீது ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த நிகழ்ச்சியைக் காரணமாகக் காட்டி, விரும்பத்தகாத சம்பவங்கள் ஏதும் 7-1-1997 அன்றும் ஏற்பட்டுவிடுமோ என்பதற்காக ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் அனைவரும் 7-1-1997 அன்று ஒட்டுமொத்தமாக தற்செயல் விடுப்பில் சென்றுவிட்டார்கள் என்றும் அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-35

7-1-1997 அன்று, மனுநீதி நாள் நடத்த, தன்னோடு 250 பேரை, டாக்டர் கிருஷ்ணசாமி, கயத்தாறு ஒன்றிய அலுவலகத்திற்கு அழைத்து வந்தபோது, வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் கோயில்பட்டி, கோட்ட வருவாய்த் துறை அதிகாரி ஆகியோர் மட்டுமே அலுவலகத்திலே இருந்திருக்கிறார்கள்.

இதுவரையில் பார்க்கும்போது, ஒரு எம்.எல்.ஏ. மக்களைச் சந்தித்து, ஊராட்சி ஒன்றிய, ஊராட்சித் தலைவர்களுடைய உதவியோடு, அவர்களைத் துணைக்கு வைத்துக் கொண்டு, அவர்களுடைய குறைபாடுகளை, முறையீடுகளைத் தெரிந்துகொள்வதிலே உள்ள உரிமையைத் தடுக்கிற வகையிலே ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி என்ற அளவில், அவரே இங்கு எடுத்துக் காட்டியதைப் போலவும், மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தாங்கள் இங்கே எடுத்து விளக்கியதைப் போலவும், ஓர் உரிமைப் பிரச்சினையாக, இந்த அவையிலே எழுப்பப்பட்டிருக்குமேயானால், உரிமைக் குழு, தங்களுடைய உத்தரவின்படி கூட்டப்பட்டு, அந்த உரிமைக் குழுவிலே இருசாராரும் அழைக்கப்பட்டு, விளக்கம் கேட்கப்பட்டு, உரிமைக் குழு, எந்த முடிவை எடுக்கிறதோ, அந்த முடிவின்படி, அது தண்டனை என்றாலும் சரி, அல்லது எந்த முடிவை

எடுத்தாலும் சரி. அதன்படி அதை நிறைவேற்றி வைக்கின்ற பொறுப்பும், கடமையும், அந்த உணர்வும் தங்களுக்கு உண்டு என்பதை நான் மிக நன்றாக அறிவேன். அப்படி உரிமைப் பிரச்சினை எதுவும் இங்கே இதுவரையிலே தரப்படவில்லை. தங்களிடத்திலே நேரடியாக அதைப்பற்றி கூறி. விசாரிக்க வேண்டுமென்று டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் கேட்கவில்லை என்பதைத் தாங்களே இந்த அவையிலே கூறியிருக்கிறீர்கள்.

இந்த நிலை ஏற்பட்டவுடன், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களுக்கும் எனக்கும் ஒன்றும் தொலைதூரம் இல்லை; நாங்கள் ஒருவருக்கொருவர் பழகாதவர்களும் அல்லர்; இன்னும் சொல்லப்போனால், திராவிட முன்னேற்றக் கழகத்திலே, ஒரு காலத்திலே அவர் உறுப்பினராக இருந்தவர்; என்னைத் தலைவனாக ஏற்றுக் கொண்டிருந்தவர்; இன்றைக்கு அவர் தலைவராக மாறியிருக்கிறார்; மகிழ்ச்சியடைகிறேன். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே, ஒரு காலத்திலே வேட்பாளராகக்கூட நிறுத்தப்பட்டிருக்கிறார். அந்தத் தேர்தல் பிரசாரத்திற்கு நான் பல இடங்களுக்குச் சென்று. அவருக்காக தேர்தல் பிரசாரம் செய்திருக்கிறேன். எனவே. ஒரு தம்பி என்ற முறையில். உடன்பிறப்பு என்ற முறையிலேதான் அந்தக் காலத்திலே நான் அவரை நடத்தியிருக்கிறேன்; அவரும் என்னிடத்திலே பழகியிருக்கிறார். இப்போதும்கூட, அவர் இந்த அவைக்கு வந்தபிறகு. இந்த அரசுக்கு விரோதமாக எந்தச் செயலிலும் ஈடுபட்டார் என்று நான் குற்றம் சாட்டமாட்டேன். எனவே. ஒரு சுமுகமான சூழ்நிலை இருக்கிற காலகட்டத்திலே, இப்படிப்பட்ட ஒரு சம்பவம் கயத்தாறில் நடைபெற்றதும், உடனடியாக ஒரு தொலைபேசி மூலம் அவர் பேசியிருப்பாரேயானால்—எனக்கு வருகிற தொலைபேசிகளை என்னுடைய உதவியாளர்கள் எடுத்து, பிறகு செயலாளரிடத்திலே கொடுத்து, அதற்குப் பிறகு என் கைக்கு வந்து சேருமென்ற நிலை இல்லாமல் — இரவே தொலைபேசி மூலம் அவர் தொடர்பு கொண்டிருந்தால், விடியற் காலையிலே, தொடர்பு கொண்டிருந்தால், நானே தொலைபேசியை எடுத்து, என்னவென்று கேட்டு, உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க முடியும்.

அதைச் செய்யாமல், அந்த அலுவலகத்திலே, அவர்கள் பூட்டுப்போட்டது போதாது என்று மேலே இன்னொரு பூட்டுப் போட்டு, அந்தப் பூட்டுகளுக்கு மாலை அணிவித்து, ஊராட்சி ஒன்றியத் தலைவருடைய பெயர் இருந்த பெயர் பலகையை உடைத்து, சில வன்முறைக் காரியங்கள் அங்கே நடைபெற்றன. அதை, கிருஷ்ணசாமி முன்நின்று நடத்தினார் என்று நான் சொல்லமாட்டேன் ; நடந்தது. இவற்றிற்குப் பிறகு, மாவட்ட ஆட்சியரிடத்திலே சென்று, கிருஷ்ணசாமி



அவர்கள் முறையிட்டிருக்கிறார்கள். அவர்கள், இவரை உட்காரவைத்து, நீண்டநேரம் பேசியிருக்கிறார். ஆனாலும் இவர் கேட்பதாக இல்லை. அங்கே. மறியல், ஆர்ப்பாட்டம் இவையெல்லாம் நடைபெற்றிருக்கின்றன. கயத்தாறிலே, இதற்கிடையிலே, வியாபாரிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, கிருஷ்ணசாமியினுடைய ஆதரவாளர்களுள் சிலர், வியாபாரிகளை மிரட்டியதாகவும், கடைகளை மூடும்படி கட்டாயப்படுத்தியதாகவும் கண்டனம் தெரிவித்து, அவர்கள் ஓர் ஊர்வலம் நடத்தி ஒரு புகார் செய்து, அவர்கள் செய்த அப்புகாரின்மீது ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இப்படியெல்லாம் விளைவுகள் ஒன்றன்பின் ஒன்றாக, அடுக்கடுக்காக, கிளைகிளையாகக் கூடி, ஒரு காரியம் நடைபெற்று விட்டது. அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் ; 'ஜாமீன்' கோரியிருக்கிறார் என்ற செய்திகூட, எனக்கு மறுநாள் காலையிலேதான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக, நான் சொன்னது ; ஜாமீன் கோரினால், போலீஸ் தரப்பிலே அதை மறுக்காமல் உடனடியாக அவரை விடுதலை செய்து விடுங்கள் ; நான் அவரிடத்திலே பேசிக் கொள்கிறேன்" என்றுதான் நான் சொன்னேன். அவர் விடுதலை செய்யப்படுகிற செய்தி தெரிந்தும்கூட, கடையநல்லூரில் 15 பஸ்கள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. 15 பஸ்கள் கொளுத்தப்படும்போது — ஒரு பஸ் கொளுத்தப்படுகிறபோது வேடிக்கை பார்த்திருக்கலாம் ; 2 பஸ்கள் கொளுத்தப்படுகிறபோது வேடிக்கை பார்த்திருக்கலாம்; 15 பஸ்கள் அங்கே பஸ்பம் ஆகிற நேரத்திலே — போலீஸ் இலாகா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால், பிறகு போலீஸ் இலாகா என்று ஒன்று, தமிழ்நாட்டிலே இருக்கவே தேவையில்லை என்பதை நாம் எண்ணிப் பார்க்கத் தவறக் கூடாது. அங்கே நடைபெற்ற சம்பவம், தடியடிப் பிரயோகம் அல்லது துப்பாக்கிச் சூடு, இவையெல்லாவற்றையும் நியாயப்படுத்துகிறேன் என்று தயவுசெய்து யாரும் கருதக்கூடாது. இவ்வளவு விளைவுகள் வராமல், ஆரம்பத்திலேயே தடுத்திருக்க முடியும். அதுவும் சாதிக் கலவரங்கள், மதக் கலவரங்கள், அமளி, அமைதியின்மையான சூழ்நிலைகள் ஏற்படக்கூடாது என்பதிலே இந்த அவையிலே இருக்கிற எல்லா உறுப்பினர்களையும்போல, டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களுக்கும், அக்கறை உண்டு. அந்த அக்கறையின் அடிப்படையில், அவர் செயலாற்றியிருப்பாரேயானால், இவ்வளவு விபரீதங்கள் ஏற்பட்டிருக்காது. கோடிக்கணக்கான ரூபாய் அளவுக்கு பஸ்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10-40

அவர்களுக்கு நஷ்டஈடு தரவேண்டும் என்றுதான் சொன்னார். நஷ்டஈடு தருவது ஒன்றும் பெரிய காரியம் அல்ல. ஆனால் உண்மையிலேயே

[கலைஞர் மு. கருணாநிதி] [1997 சனவரி 29

என்ன நிலைமையில் அது நடைபெற்றது என்பதை அறிய வேண்டும். அதற்கு முன்பு, 50 கோடி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விரோதமாக ஒரு செயல் அங்கே நடைபெற்றுவிட்டது என்று அவர் இங்கே சொன்னது யாரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. அவர் சொன்னதை அல்ல. அப்படி நடந்திருந்தால் கயத்தாறில் பஞ்சாயத்து யூனியன் சேர்மனும் மற்றவர்களும் நடந்திருந்தால் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ஏனென்றால் அண்ணல் அம்பேத்கர் பாடுபட்ட பிறகு, தந்தை பெரியார் பாடுபட்ட பிறகு, அண்ணா பாடுபட்ட பிறகும், பெருந்தலைவர் காமராஜர் பாடுபட்ட பிறகும், தமிழகத்திலே இன்னமும் இத்தகைய சூழ்நிலை இருப்பதை அது வேரோடு கிள்ளி எறியப்பட வேண்டும் என்ற அளவிலே நாம் அனைவரும் ஒரு முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கும்போது ஒரு துளியும் சாதி வெறியோ அல்லது ஆணவமோ தலைகாட்டுவதை நாம் ஏற்பதற்கு இயலாது. எனவே கிருஷ்ணசாமி போன்ற வளரக்கூடிய வாலிபர்கள் எதிர்காலத்திலே இந்தச் சமுதாயத்திலே தங்களுக்கும் ஒரு பெரும் அங்கம் உண்டு, பங்கு உண்டு என்கிற அளவிலே வளரக்கூடியவர்கள், வளர வேண்டுமென்று நான் என்றைக்கும் விரும்புகின்றவன். நான் ஏற்கெனவே முதலமைச்சராக இருந்தபோது சட்டமன்றத்திலே எதிர்வரிசையில் இருந்த காங்கிரஸ் நண்பர்களில் சில இளைஞர்களைப் பார்த்து நான் அப்போதே சொல்லியிருக்கிறேன். நீங்கள் எல்லாம் வளருவதைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைகிறேன், எப்படியோ இளைஞர்கள் சமுதாயத்திலே என்னை எதிர்த்தாலும்கூட, இந்த ஆட்சியை எதிர்த்தாலும்கூட, அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும் இளைஞர்கள், வாலிபர்கள் வளருவதை நான் விரும்புகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். ஏனென்றால் நாட்டுக்காக, மக்களுக்காக, சமுதாயத்திற்காக என்ற அந்த முறையிலே நான் சொல்லியிருக்கிறேன். அதைத்தான் கிருஷ்ணசாமி அவர்களுக்கும் நான் சொல்ல விரும்புகிறேன். நாமாக நம்மை ஓரளவுக்கு அடக்கிக் கொண்டு நம்முடைய உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு நம்முடைய தலைமையிலே வருகின்றவர்கள் வேகமாக செயல்பட எண்ணுகிற நேரத்தில் அதை, கொதிக்கின்ற அந்த நெருப்பை தண்ணீர் ஊற்றி அணைக்கவேண்டுமே அல்லாமல் அதற்கு பெட்ரோல் ஊற்றிவிடக்கூடாது என்ற அந்த உணர்வோடு செயல்பட வேண்டும் என்பதைக் கூறி, நானும் இதைப் பற்றி அதிகமாக விளக்கமளித்து அதிலே பெட்ரோல் ஊற்றி விட விரும்பாமல் தண்ணீர் ஊற்றி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கம் கொடுக்கப்பட்டதற்குப் பிறகு நீங்கள் பேசக் கூடாது, உட்காருங்கள். டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள் என்று நான் சொன்னேன்.



1997 சனவரி 29]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே நான் வந்து உரிமைக்காக - ஒரு சட்டமன்ற உறுப்பினர் மீது திட்டமிட்டு ஏறக்குறைய 4, 5-ந்தேதியே செய்தித்தாளில் வந்திருக்கிறது. செய்தித் தாளில் வந்த பிறகு மாவட்ட ஆட்சியருக்கும் எல்லோருக்கும் தெரியும். அதாவது ஒரு செய்தித்தாளில் வந்து, சட்டமன்ற உறுப்பினர் செல்லக்கூடாது, கூட்டம் நடத்தக் கூடாது என்று தீர்மானம் வந்த பிறகு, சி.ஐ.டி. இன்டெலிஜென்ஸ் விங் மூலமாக சென்னை வரையிலும் செய்தி வந்துவிடும். முதலமைச்சர் நாலெட்ஜுக்கு அது வந்திருக்கலாம், வந்து இருக்க வேண்டும். அப்படி வந்த பிறகு, அது ஏன் இப்படி சட்டமன்ற உறுப்பினர் போகக் கூடாது என்று சொல்லியுள்ளீர்கள் என்று கேட்டு நடவடிக்கை எடுத்திருந்தால் - **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை நான் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். நீங்கள் தகாத முறையில் பேசக்கூடாது. நான் அனுமதிக்கமாட்டேன். நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இவ்வளவு தாழ்ந்துபோய் பேசிய பிறகும் அவர் இப்படி பேசுவது எந்த வகையிலும் முறையல்ல. சட்டமன்ற உறுப்பினர்கள் ** யாராக இருந்தாலும், இந்தச் சட்டமன்றத்திலே யாருக்கும் ஒரு சின்ன, ஒரு துளி, ஒரு தூசு அளவுக்கு களங்கம் ஏற்பட்டாலும் அதை இந்த அரசு பொறுத்துக் கொள்ளாது என்பதை தயவுசெய்து இந்த அவையிலே அவையின் சட்டமன்ற உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். (குறுக்கீடு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எழுந்து நிற்பது முறையல்ல., உட்காருங்கள். நான் பேசுகிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் நான் சொன்ன அந்த தீர்மானத்தைப் பற்றி டச் பண்ணவில்லை. அதனால் நான் ஊருக்குள்ளே போக முடியாது. அதற்கு என்ன ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். நான் இன்னும் பேசி முடிக்கவில்லை. பேரவையின் உறுப்பினர்கள் உரிமையைப் பொறுத்தவரையில் அந்த உரிமையைக் காக்க கடமைப்பட்டவன் நான்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உதாரணமாக இன்று காலையிலே தன்னை ஒரு விழாவிற்கு அழைக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் வந்து என்னிடம் சொன்னபோது அதைச் சட்டமன்றத்திலே நீங்கள் கேட்கலாம் என்று உறுதியளித்தேன், அனுமதியும் கொடுத்தேன். அந்த முறையில் இதுவரையில் பேரவைத் தலைவராகிய என்னிடம் நீங்கள் எந்தவித புகாரும் என்றும் கொடுத்தது கிடையாது. நீங்கள் கொடுத்திருப்பீர்களேயானால் நான் உடனடியாக அங்கேயிருந்து விளக்கத்தைப் பெற்று உரிமைக் குழுவிற்கு உங்கள் பிரச்சினையை அனுப்பி இருப்பேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல வேறு எந்த நிகழ்ச்சிக்கும் இல்லாத அளவுக்கு உடனடியாக நீதிவிசாரணை வைத்துவிட்டார்கள். ஆகவே நீதிபதி விசாரணை செய்யும்போது இதற்கு மேல் இங்கே பேசுவது முறையில்லை என்று கூறி இந்தப் பிரச்சினையை இதோடு நான் முடிக்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி :** நான் எப்படித் தொகுதிக்கு உள்ளே போவது, அதைச் சொல்லுங்கள்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதிக்குப் போவதற்கு உங்களுக்கு கஷ்டம் இருந்தால், உங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டு முதலமைச்சரிடம் ஒரு மனுவைக் கொடுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அந்தத் தீர்மானத்தை ரத்து செய்வதற்கு முதலமைச்சர் அவர்கள் ஆக்கபூர்வமான உத்தரவு போடலாம் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்காகத்தான் நீதி விசாரணை வைக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இல்லையெனில், நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வெளிநடப்புச் செய்யலாம், அது உங்கள் உரிமை.

(உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி வெளிநடப்புச் செய்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையில் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களோடு திரு. ச. அழகிரி, திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி ஆகியோரும் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள்.





## அறிவிப்பு

### 30-1-1997 அன்று இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துதல் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சுதந்திரப் போராட்டத்தில் உயிர் நீத்த சான்றோர்களின் நினைவாக 30-1-1997 வியாழக்கிழமை அன்று தியாகிகள் தினம் அனுசரிக்கப்படுவதையடுத்து தலைமைச் செயலக பிரதானக் கட்டிடத்திற்கு மேற்கே உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்று காலை 11.00 மணிக்கு தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி செய்து வைக்க உள்ளதால், மாண்புமிகு உறுப்பினர்கள் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் வகையில் நாளை பேரவை நிகழ்ச்சிக்கு இடையே காலை 10.45 மணி அளவில் அவை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் 11.15-க்குக் கூடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ச. அழகிரி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97-ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 18-வது முதல் 24-வது வரையிலான 7 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. சுப. தங்கவேலன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

**திரு. சுப. தங்கவேலன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97-ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் மூன்றாவது முதல் எட்டாவது வரையிலான 6 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு கேலிவதை செய்தலைத் தடுத்தல் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல்.

1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேலிவதை செய்தலைத் தடுத்தல் சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேலிவதை செய்தலைத் தடுத்தல் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க ... (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம்.*

*தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.*

*முற்பகல் 10-50*

## 7. அரசினர் தீர்மானம்
## விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆளுநர் உரை மீது நாளை விவாதம் முடிவடைகிற காரணத்தினால் வினா-விடை நேரத்தை ஒத்திவைக்கும் தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இப்போது முன்மொழிவார்கள்.*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: "சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை, 30-1-1997 அன்று தளர்த்தி அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*மறுப்போரே இல்லை.*

*தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.*



## 8. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொடுக்கப் பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி, இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி.*

**திரு. ஜி. கே. மணி :** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"இலங்கை அரசு, ஈழத் தமிழ் மக்கள் மீது நடத்தி வரும் முப்படைத் தாக்குதலை உடனடியாக நிறுத்திட வேண்டும் என்றும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற தமிழர் வாழும் பகுதிகளிலிருந்து இலங்கை இராணுவம் திரும்பிச் செல்ல வேண்டும் என்றும், இலங்கை அரசை மத்திய அரசு வற்புறுத்திட வேண்டுமென்பதைப் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது வழிமொழியப்பட வேண்டும்.

**திரு. ப. கோவிந்தன் :** *நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை. திரு. இ. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. பி. வெங்கடசாமி.*

**Thiru B. VENKATASAMY :** I move the following amendment to the motion of thanks to the Governor's Address :

"Add at the end, the following :

'but regret to note that no mention is made about :

1. The steps taken to clean Chennai City of all garbages heaped about at every street and the lack of clearing work in recent times.

2. The steps taken by the State Government for the early creation of the Legislative Council in Tamil Nadu.

3. Various raids conducted by the Directorate of Vigilance and anticorruption in several places in this state, ''

**Hon. Speaker :** Somebody may second it.

**திரு. பி.என். வல்லரசு:** *நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.*

அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம். திரு ப. ரங்கநாதன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாக ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். குறிப்பாக, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற, 8 மாதங்களின் இடையிலே இரண்டு முறை மழையினுடைய சீற்றத்தினால், சென்னை, சென்னையை ஒட்டியுள்ள கடலோரப் பகுதி மாவட்டங்களில் எல்லாம் மிக அதிகமான அளவில் வெள்ளம் சூழ்ந்து, மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தியது. இந்தச் சேதத்தினுடைய இழப்பு மிக அதிகம். மக்கள் இறந்ததோடு, அனைத்து இனங்களையும் சேர்த்து பார்த்தோமானால், நஷ்டம் ரூ.1000 கோடியை எட்டியதாக ஆளுநர் உரையிலே குறிப்பிட்டுள்ளீர்கள். இருப்பினும், இந்த அரசு உடனடியாக நிவாரணம் வழங்குகின்றமுகமாக, இரண்டுமுறை பெய்த மழையினால் குறிப்பாக சென்னைக்கு மட்டும், டிசம்பர் திங்களில் பெய்த மழைக்கு ரூ.25 கோடியை உடனடியாக வழங்கி, அந்த மழையினால் பாதிக்கப்பட்ட பாமரர்கள், ஏழைகள், சமுதாய அடித்தளத்திலே இருப்பவர்களுக்கெல்லாம் நிவாரண உதவியைத் தாராளமாக, கடந்த எந்த ஆட்சிக் காலத்திலேயும் வழங்காத அளவிற்கு, மழை பெய்திருந்தாலே போதும், சாலையிலே தண்ணீர் நின்றாலே போதும், வீடு விழவில்லையென்றாலும் பரவாயில்லை, குடிசைகள் தண்ணீரிலே அடித்துச் செல்லவில்லையென்றாலும் பரவாயில்லை, அனைவருக்கும் நிவாரணம் வழங்குங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் ஒரு உத்தரவு பிறப்பித்ததன் காரணமாக, மழையினால் பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்படாதவர்கள் என்று பாராமல் அனைவருக்கும் வெள்ள நிவாரணத் தொகை வழங்கப்பட்டு விட்டது. ஏதோ ஒருசில பகுதிகளில் ஒரு சிலருக்கு, அதாவது ஒரு சதவிகிதம் அல்லது இரண்டு சதவிகிதம் பேர்களுக்குக் கிடைக்கவில்லை. அதற்கும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், அப்படிக் கிடைக்காதவர்களுக்கும் நாங்கள் கிடைக்கச் செய்வதற்குண்டான வழிவகை செய்து தருகிறோம் என்று உத்தரவாதம் அளித்துள்ளார்கள். அதேபோன்று மற்ற துறைகளில் சாலைகள் போடுவதற்கும், பயிரினங்கள் அழிந்து போனதற்கும் நீங்கள் ஏறத்தாழ 345 கோடி ரூபாயை உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் ஒதுக்கியுள்ளீர்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். ஆனால், ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு என்று





குறிப்பிட்டுள்ள டாக்டர் கலைஞர் அவர்கள், அந்த ஆயிரம் கோடி ரூபாயில் மத்திய அரசாங்கம் மாநில அரசுக்கு எவ்வளவு தொகை வழங்கியது என்பதைக் குறிப்பிடவில்லை. முதல்வர் அவர்களுடைய பதிலுரையில் அதைப்பற்றிக் குறிப்பிடுவார் என்று நினைக்கின்றேன்.

முற்பகல் 10-55

இதற்குமுன் தமிழகத்திலே பெருவாரியான வாக்காளர்கள் வாக்களித்து ஒரு ஆட்சியை ஆட்சி மன்றத்திலே அமர்த்தினார்கள். ஆனால் அந்த ஆட்சி மாறிவிட்டது. '10% ஆட்சி' போய்விட்டது. ஊழல் ஆட்சி போய்விட்டது. ஒரு உண்மையான மக்களாட்சி இன்றைக்கு உங்கள் தலைமையிலே இயங்குகிறது. இந்த எட்டுமாத காலத்தில் தமிழகத்திலே கண்ணாடித் தொழிற்சாலைகள், கார் தொழிற்சாலைகள் அமைந்தது பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்கள். தமிழகத்தை. டெட்ராயிட்டுக்குச் சமமாக உயர்த்துவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். பாராட்டுகிறோம். கண்ணாடித் தொழிற்சாலைகள் வந்து விட்டன. ஆனால், மழையினுடைய கொடுமையினால் இந்த எட்டு மாதத்தில் சாலைகள் பராமரிக்கப் படவில்லை. சாலைகள் பராமரிக்கப்படவில்லை என்றால், மாநிலத்தினுடைய பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்குத் தங்குதடை இருக்குமோ என்று நாங்கள் ஐயப்படுகிறோம்.

கட்டமைப்புகள், மாநிலத்திலே இருக்கின்ற உள்கட்டமைப்புகள்- அதாவது 'இன்ஃப்ராஸ்டிரக்சர்' முழுமையாக நிறைவு பெற்றால்தான் சாலைகள் அமைப்பது, மின்சார வசதி ஏற்படுத்தித் தருவது, குடிநீர் வசதி ஏற்படுத்தித் தருவது பாதைகள் அமைப்பது, கட்டுமானப் பணிகள் செய்வது, துறைமுகங்கள் விரிவுபடுத்துவது. சிறிய பெரிய துறைமுகங்களை நவீனப்படுத்துவது இப்பேர்ப்பட்ட பணிகளிலே அரசு முனைப்பாக, இன்னும் கவனமாகச் செயல்பட்டால் நிச்சயமாக இந்த மாநிலம் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதுபோல இந்தியாவிலேயே முதல் மாநிலமாக வருவதற்கு வழி பிறக்கும். ஏனென்றால், கடந்த ஆட்சி காலத்தில் தொழில் முனைவோர், அவர்கள் அயல்நாட்டினராக இருந்தாலும் சரி, உள் நாட்டவராக இருந்தாலும் சரி, டாட்டா, பிர்லா, அம்பானி, சிங்கானியா, பஜாஜ் போன்றவர்கள் யாராக இருந்தாலும், தமிழகத்திலே தொழில் தொடங்க வேண்டுமென்றால் அரசுத் துறையைச் சார்ந்தவர்களையோ, அல்லது ஆட்சியிலே இருக்கின்ற அமைச்சர்களையோ, முதலமைச்சரையோ சந்திக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால் இந்த எட்டு மாத ஆட்சிக் காலத்தில் பல்வேறு வெளிநாட்டு முதலீட்டாளர்கள், உள்நாட்டு முதலீட்டாளர்கள், பல்வேறு தரப்பினர் முதல்வர் அவர்களைச் சந்தித்து,

நாங்கள் தமிழகத்திலே தொழில் தொடங்கத் தயாராக இருக்கின்றோம் என்று கூறி இருக்கிறார்கள். நீங்களும், 'வாருங்கள், வாருங்கள்' என்று வரவேற்கிறீர்கள். அதற்கென்றே தனியாக அமைச்சர்களையும் அனுப்பி தனியாக பொறுப்புக் கொடுக்கவில்லை என்றாலும்-யாராயினும் தொழில் தொடங்க வருகின்றார்கள் என்றால் உடனடியாக அவர்களை அழைத்து வாருங்கள் என்று அனுப்புகிறீர்கள். பாராட்டுகிறோம். ஆனால், தொழில் துவங்க வருபவர்களுக்குக் கட்டமைப்புப் பணிகள் சரியாக இல்லாத காரணத்தால் அவர்கள் தொழில் துவங்கத் தயங்குகின்ற ஒரு சூழ்நிலை இன்றைக்கு உருவாகி இருக்கிறது. அதற்கு உதாரணமாக ஒன்றைச் சொல்ல முடியும்.

நேஷனல் ஹைவேசில்-என்.எச்.5-இல் உள்ள கொசஸ்தலை ஆற்றுப்பாலம் இடிந்து 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் அந்தப் பாலத்தைக் கட்டவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

முற்பகல் 11-00

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொசஸ்தலை ஆற்றுப் பாலத்தைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *கொற்றலை ஆறு என்று கூறுங்கள்.*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலம் தேசிய நெடுஞ்சாலையிலே இருக்கிறது. முன்பு இருந்த ஆட்சிக் காலத்தில் டெண்டர் விடப்பட்டு, ஏறத்தாழ 70% க்கு மேல் டெண்டர் போடப்பட்டிருந்ததால், மீண்டும் ஒரு டெண்டர் விடப்பட்டிருக்கிறது; அதற்கு மத்திய அரசும் நிதி ஒதுக்கியிருக்கிறது. நானே இரண்டு முறை அந்தப் பாலத்தை சென்று பார்த்திருக்கிறேன்; மத்திய அமைச்சர் அவர்கள் கூட சென்று பார்த்திருக்கிறார்கள். அதிலே இருக்கிற 'பெயிலி பிரிட்ஜ்' என்று சொல்லப்படுகிற அமைப்பை உடனடியாக மாற்ற வேண்டுமென்று, பாதுகாப்புத் துறையின் மூலமாக கல்கத்தாவிலிருந்து அவை வரவழைக்கப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன். அதேபோல, அது நிரந்தரமாக செயல்படுவதற்கு, அங்குள்ள இரும்புப்



பாலத்தை எடுத்துவிட்டு, சிமெண்ட் பாலத்தை அமைப்பதற்காகவே இந்த அரசு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. பக்கத்திலே, இந்தப் பால வேலை நடக்கிறபோது, ரூபாய் 55 இலட்சம் செலவில் ஒரு பாதை அமைக்க, இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்தப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருப்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆகவே இந்த அரசு வந்ததற்குப் பிறகு துரிதமாக இந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. வெள்ளம் ஓடிக்கொண்டிருந்த காரணத்தால், அப்போது அந்தப் பணிகளைச் செய்ய முடியவில்லை; இப்போது அந்தப் பணிகள் எல்லாம் வேகமாக நடந்து கொண்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். கடந்த ஆட்சி காலத்திலே ஏற்பட்ட தொய்வினை அகற்றி இந்த அரசு வந்ததற்குப் பிறகு, விரைவாகச் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு நான் இந்தப் பணிகள் நடைபெறவில்லை என்று குறையாகச் சொல்லவில்லை. அதாவது, நிறைய தொழில் முனைவர்கள் வருகிறார்கள்; இந்த 8 மாத காலத்திலே வந்து கொண்டிருக்கிறார்கள்; ஆனால் வந்தவுடன், தொழில் தொடங்குவதற்கு சாலைகள் சரியாக இல்லை என்று அஞ்சுகிறார்கள். ஏனென்றால், அங்கே மிகப் பெரிய தொழிற்பேட்டை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய குறைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நன்கு உணர்ந்த காரணத்தால் இப்போது செப்பனிடப்படுகின்ற சாலைகளைக்கூட, தேசிய நெடுஞ்சாலையினுடைய அடிப்படையிலே சாலைகள் போட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக சிறுசிறு ஒப்பந்தக்காரர்களை வைத்து 2 கிலோ மீட்டர்கள், 5 கிலோ மீட்டர்கள் என்று போடுவதை விடுத்து, 100 கிலோ மீட்டர்கள், 200 கிலோ மீட்டர்கள் என்று சொல்லி — புரஃபெஷனலாக, தொழில் ரீதியாக ஒப்பந்தக்காரர்களாக இருக்கக் கூடியவர்களை வைத்து, போட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ள அடிப்படையில்தான், இப்போது சுமார் 2,000 கிலோ மீட்டர்கள் வரை 150 கோடி ரூபாய் செலவிலே சாலைகளைப் போடுவதற்கு ஒப்பந்தங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

நிச்சயமாக இனி வருகிற சாலைகள் எல்லாம் தேசிய நெடுஞ்சாலையினுடைய அமைப்பின் அடிப்படையிலே உருவாக்கப்படும்: உறுதியாகவும். அதே நேரத்தில் விரைவாகவும் செயல்படுத்த இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் தொழில் முனைவோர் வர அஞ்சுகிறார்கள் என்று சொன்னதுதான் பத்திரிகைகளிலே தலைப்பாக வரும். ஏனென்றால், நான் பத்திரிகைக்காரன் என்ற முறையிலே அதைச் சொல்கிறேன். ஆனால் யாரும் அஞ்சி, அதற்கான அடிப்படை வசதிகள் இல்லை, ஆகவே நாங்கள் தொழில் தொடங்கத் தயாராக இல்லை என்று எந்தத் தொழில் முனைவோரும் திரும்பிச் செல்லவில்லை என்பதை நான் இந்த அவைக் குறிப்பிலே இடம்பெறச் செய்ய வேண்டியது என்னுடைய கடமை.*

**திரு. ப. ரங்கநாதன்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியதுபோல தொழில் முனைவோர் தமிழகத்திற்கு வருவதற்கு அஞ்சுகிறார்கள் என்ற பொருள்படச் சொல்லவில்லை. தொழில் முனைவோர் நிறைய பேர் வருகிறார்கள் என்றுதான் சொல்கிறேன். அதற்கென்றே ஒரு அமைச்சர் இருக்கிறார்கள்; பல அமைச்சர்கள். யார் தொழில் தொடங்க வந்தாலும், உடனடியாக முதல்வரிடம் அழைத்து வருகிறார்கள். அதற்காகப் பாராட்டுகிறோம். நீங்கள் தொழில் முனைவோரை வரவேற்கிறீர்கள்; அதற்காகப் பாராட்டுகிறோம். ஆகவே, அந்தப் பொருள்பட நான் சொல்லவில்லை. இருந்தாலும். உள்ள கட்டமைப்புப் பணிகளை இந்த அரசு விரைவுபடுத்த வேண்டும். அதற்கு நான் பல உதாரணங்களைச் சொல்ல முடியும். உதாரணத்திற்கு, மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. சிதம்பரம் அவர்களை, சென்னை மாநகருடைய மேயர், இங்கே சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சந்தித்தார்கள். சந்திக்கின்றபோது அவர்கள் ஒரு மணி நேரம் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.*

*அவர்கள் பேசும் நேரத்தில் நிதி அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தினை அவரிடத்திலே மிக ஆணித்தரமாக எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக சென்னை நகரம் மற்றும் சென்னைப் புறநகர்ப் பகுதிகளில் சாலைகளை அகலப்படுத்துங்கள்; பாலங்களை புதிதாகக் கட்டுங்கள்; போக்குவரத்து நெரிசல் இல்லாமல் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டியது உங்களுடைய கடமை என்று சொன்னார்கள். இதற்கு எவ்வளவு நிதி வேண்டுமானாலும், நீண்டக் காலக் கடனாக நாம் உலக வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்;*



*அதற்கு ½ சதவீதம்தான் வட்டி என்றும் சொல்லியுள்ளார்கள். 30, 40 ஆண்டுகளுக்குப் பிறகுதான் அதைத் திருப்பிச் செலுத்த வேண்டும். மாண்புமிகு முதலமைச்சருக்கு இப்போது நிறைய செல்வாக்கு இருக்கிறது. அதேநேரத்தில் மத்தியிலே உங்கள் தரப்பிலேயும் 4 அமைச்சர்கள், தமிழ்மாநில காங்கிரசு தரப்பிலேயும் 4 அமைச்சர்கள், ஆக 8 அமைச்சர்கள் இருக்கிறார்கள். அதிலே குறிப்பாக இரண்டு அமைச்சர்களுக்கு சக்திவாய்ந்த துறைகள் இருக்கின்றன, தொழில் துறை, நிதித் துறை. அந்தத் தொழில் துறையிலே கடந்த நரசிம்மராவ் ஆட்சிக் காலத்திலே 'பாரின் இன்வெஸ்ட்மெண்ட் போர்டு' தனியாக அதிகாரிகள் மட்டத்திலே இருந்தது. இப்போது மாண்புமிகு முரசொலி மாறன் அவர்களுடைய கையிலேதான் அதுவும் இருக்கிறது. அவர்களுடைய பொறுப்பிலே அது இருக்கிறது. ஆக, இந்த இரண்டு அமைச்சர்களையும் நீங்கள் பயன்படுத்திக் கொண்டு — நீங்கள் சொன்னால் செய்வதற்குக் காத்துக்கொண்டு இருக்கிற அமைச்சர்கள் அவர்கள் — தமிழகத்தை மிகப் பெரிய அளவில் ஒரு தொழில் மையமாக உருவாக்கினால், தமிழகத்திலே இருக்கின்ற படித்த பட்டம் பெற்ற, வேலை வாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்து இருக்கின்ற இளைஞர்கள் சுமார் 40 இலட்சம் பேர்களுக்கும் நீங்கள் ஓரிரு ஆண்டுகளிலே வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு முடியும் என்ற காரணத்தினாலே நான் இதை வலியுறுத்துகிறேன்.*

*முற்பகல்* 11-05

*அடுத்து. சாலைகளை எல்லாம் தனியார் மயமாக்கினால்தான். சாலைகளை நல்லமுறையில் பராமரிக்க முடியும் என்பது என்னுடைய கருத்து. நீங்கள் 'ஏசியாட் பேங்க்' அல்லது உலக வங்கி மூலமாக கடனாகப் பெற்றாவது உடனடியாக இந்தச் சாலைகளைப் போட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *அடிக்கடி குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு மத்திய தொழில் துறை அமைச்சர் அவர்கள், சென்னையிலுள்ள சாலைகளைக்கூட சிமெண்ட் சாலைகளாக ஆக்க வேண்டும் என்று ஒரு குறிப்பைக் கொடுத்து, அதைச் செய்ய வேண்டுமென்று இந்தத் துறைக்கு அனுப்பி இருந்தார்கள். அதேபோல நிதி அமைச்சரும் அதைப்பற்றிக் குறிப்பிட்டு இருந்தார்கள். அந்த அடிப்படையிலே, நிதி அமைச்சருக்கு*

எந்தெந்த இலங்கைக்கு எக்கனாமிக் இம்பார்ட்டன்ட் லோன் வேண்டுமென்று சொல்லி நான்கூட நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக இரு அமைச்சர்களுக்கும் ஒரு குறிப்பைக் கொடுத்து இருக்கிறேன். நிதி அமைச்சர்கூட ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, நிதி அமைச்சரிடம் சொல்லி, இந்த நிதிகளை விரைவாக எந்த அளவுக்குப் பெற்றுத் தருகிறீர்களோ, அந்த அளவிற்கு விரைவாக நிச்சயமாக இந்தப் பணிகள் வேகப்படுத்தப்படும் என்பதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இன்றைக்கு தமிழகத்திலே பொதுப்படையாக, மிகமிக வேகமான செல்வாக்குப் படைத்த ஒரே தலைவர் டாக்டர் கலைஞர்தான். அந்த இரண்டு அமைச்சர்களுமே, அவர் சொன்னால் செய்வார்கள். அதற்குமேல் தலைவர் மூப்பனார் இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இரண்டு அமைச்சர்களும் சொன்னால் செய்வார்கள்; இரண்டு அமைச்சர்கள் அல்ல, அங்கு இருக்கிற எல்லா அமைச்சர்களும் சொன்னால் கேட்பார்கள், செய்வார்கள். ஆனால், டில்லியில் எப்போதும்போல மத்திய அரசில் கோப்புகள் நகருவதுதான் தாமதப்படுகிறது. ஒன்றை வருத்தத்தோடு சொல்ல விரும்புகிறேன். அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள், ஆயிரம் கோடிக்கு மேல சேதம் ஏற்பட்டு இருக்கிறது; நீங்கள் எவ்வளவு கேட்டீர்கள், எவ்வளவு வந்தது என்றெல்லாம் சொல்லச் சொன்னார்கள். ஒரு டோக்கன் - அடையாளமாக எதாவது அறிவியுங்கள் என்று ஒரு விழாவிலே நான் கேட்டுக்கொண்டேன். பிரதமர், நிதியமைச்சர் மாண்புமிகு சிதம்பரம் அவர்களிடத்திலே கலந்து பேசினார்கள். சிதம்பரம் அவர்கள் சொல்லக் கேட்டு 25 கோடி என்று அறிவித்தார்கள். அதுவே இன்னும் வந்து சேரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அது சிதம்பரத்தின் குற்றமும் அல்ல; பிரதமருடைய குற்றமும் அல்ல. கோப்புகள் நகரமாட்டேனென்கிறது அங்கு.

**திரு. ச. அழகிரி:** கோப்புகள் நகராதது யாருடைய குற்றம் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** கோப்பின் குற்றம்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து இலங்கைப் பிரச்சினை..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 நிமிடம் ஆகிவிட்டது. விரைவில் பேசி முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இதெல்லாம் முக்கியமான பிரச்சினை. இந்த இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், குறிப்பாக அது ஒரு மிகப் பெரிய பிரச்சினை. தலைவர், தமிழகத்தினுடைய முதல்வர் இந்தப் பிரச்சினையோடு ஒன்றி, ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு மேலாக ஒன்றி இருந்தவர்கள். ஆனால், இன்றைக்கு நிலைமை அங்கு வேறுவிதமாக இருக்கிறது. தமிழகத்திலே உள்ள ஆளும் கட்சி, எதிர்க்கட்சி மற்ற அகில இந்திய ரீதியிலே இருக்கின்ற வலது கம்யூனிஸ்ட், இடது கம்யூனிஸ்ட்—இந்திய கம்யூனிஸ்ட், ஜனதா தளம், மற்ற அனைத்து தேசிய கட்சிகளும் இலங்கைப் பிரச்சினையிலே ஒரு சுமூகமான தீர்வு காண்பதற்கு—நாங்கள் என்றைக்கும் தயாராக இருக்கிறோம்; ஆதரவு தருகிறோம் என்றுதான் இதுநாள் வரையில் வலியுறுத்தி வந்து இருக்கிறோம்.

ஆனால், கடந்த 19-11-1996 அன்றைக்கு சென்னையிலே இலங்கைப் பிரச்சினை என்ற பெயரால் ஒரு மாநாடு நடந்தது. அந்த மாநாட்டிலே பேசியவர்கள்....

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை ஏற்கெனவே உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் பேசி, முதலமைச்சர் அவர்கள் அதற்கு நீண்ட விளக்கம் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** சொல்லியிருக்கலாம். அதிலே பாயின்ட் இருக்கிறது. அந்த ஒரு பாயின்ட்டை மட்டும் சொல்கிறேன். அவர்கள் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து, மாநாடு நடத்தியதை நாம் எல்லோரும் ஆதரிக்கிறோம், வரவேற்கிறோம். ஆனால் அந்த மாநாடு நடத்தியவர்கள், ஒரு குறிப்பிட்ட போராளிகளுக்கு ஆதரவாகத்தான் தமிழகத்திலே அந்த மாநாட்டை நடத்தியுள்ளார்கள். ஒரு குறிப்பிட்ட போராளிகளுக்கு ஆதரவாக, ஆம் ஒரு குறிப்பிட்ட போராளிகளுக்கு ஆதரவாக மாநாடு நடத்தியவர்கள் இதற்கு முன்பு கனடா சென்று அந்தப் போராளிகளுடைய

ஆதரவாளர்களோடு இரகசிய உடன்பாடு செய்துகொண்டு வந்து, தமிழகத்திலே கடந்த 8 மாதங்களாக அமைதியாக நடந்துகொண்டிருக்கின்ற இந்த ஆட்சிக்கு சோதனையையும், சங்கடத்தையும் ஏற்படுத்துவதற்காக இந்த மாநாட்டை நடத்தியிருக்கிறார்கள். ஆகவே, அந்த மாநாட்டுடைய உள்நோக்கம் உண்மையிலேயே வாழ்கிற தமிழர்களுக்கு ஆதரவாக நடத்தப்பட்ட மாநாடு அல்ல. அது எல்.டி.டி.ஈ. அமைப்புக்கும் அதனுடைய தலைவராக இருக்கிற ரத்தவெறி பிடித்த பிரபாகரனுக்கும் ஆதரவாக நடத்தப்பட்ட மாநாடு. இதை முதல்வர் அவர்கள் மனதிலே கொண்டு, இப்படிப்பட்ட நபர்களைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

அந்த மாநாட்டிலே அந்தக் கட்சியினுடைய தலைவர், எல்.டி.டி.ஈ.யை ஆதரித்து, தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார்கள். நான் அதற்காகத்தான் இது முக்கியமான பிரச்சினை என்று சொன்னேன். அது மட்டுமல்ல, தீவிரவாத அமைப்பை ஆதரிப்பேன் என்றால், அந்த அமைப்பு இந்தியாவிலே தடை செய்யப்பட்டுள்ள அமைப்பு. அது மட்டுமல்ல, அந்த அமைப்பின் வரலாற்றைப் பாருங்கள். அந்த அமைப்பை முன்பு தலைமை தாங்கி நடத்தியவர் அமிர்தலிங்கம், சிறீசபாரத்தினம், உமா மகேஸ்வரன். இன்னும் பத்மனாபா, முகுந்தன், பிறகு யோகி, இப்படிப் பல்வேறு தலைவர்கள், பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள். ஆனால் இதற்கெல்லாம் மேலாக இந்த அமைப்புக்கு அரசியல் ஆலோசகராக இருந்தவர் ஆன்டன் பாலசிங்கம். அதுமட்டுமல்ல. இந்த அமைப்பை உருவாக்கிய தளபதிகளில் ஒருவர், ஏன் பிரபாகரனை விட அறிவாற்றலில் சிறந்தவர் மாத்தையா, அவருடைய நிலை என்ன? இப்படி ரத்தவெறி பிடித்த ஒரு இயக்கத்தினருக்கு, ஒரு கொலைகாரக் கும்பலுக்கு ஆதரவாக தமிழகத்திலே இருந்துவரும் இந்த ஆட்சிக்கு ஒரு சங்கடத்தை உருவாக்க வேண்டுமென்ற ஒரே எண்ணத்தோடு வேறு எங்கோ நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தை எடுத்துவந்து இங்கே மாநாடு என்ற பெயரால் தீர்மானமாக நிறைவேற்றி, இந்த அரசுக்குச் சங்கடத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இதுதான் உண்மையான நிலைமை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து உங்களைத்தான் பேச அழைக்க இருக்கிறேன். அப்போது முழுமையாகப் பதில் சொல்லிக்கொள்ளலாம், உட்காருங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** அதுமட்டுமல்ல, அடுத்த மாதம் இன்னொரு மாநாடு நடக்க இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களே, உங்களுடைய ஆட்சிக்குச் சங்கடம் ஏற்படுத்துவதற்காகவே வேறு எங்கோ இதற்கு ஒரு உருவம் கொடுத்து, ஒரு பொருள் கொடுத்து, தொடர்ந்து இப்பேற்பட்ட மாநாடுகளை நடத்துவதாக நான் எண்ணுகிறேன். அதுமட்டுமல்ல, ஒரு தடை செய்யப்பட்ட அமைப்புக்கு இங்கே ஆதரவாக மாநாடு நடத்துவது தவறு என்பது தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் கொள்கை. ஆகவே மேற்கொண்டு நீங்கள் இப்பேற்பட்ட மாநாட்டை நடத்துவதற்கு அனுமதி வழங்கக்கூடாது என்பது எங்களுடைய வேண்டுகோள்.

அடுத்து, தமிழக மீனவர்களுடைய பிரச்சினை. 1974-ஆம் ஆண்டில் இந்தியப் பேரரசுக்கும் இலங்கை அரசுக்கும், கச்சத்தீவு ஒப்பந்தம் ஒன்று உருவானது; நிறைவேற்றினார்கள். அந்த ஒப்பந்தத்தை மீறுகிற வகையில், இன்று இலங்கை அரசு, இலங்கை இராணுவத்தினர் தமிழக மீனவர்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள்; சுட்டுத் தள்ளுகிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மைய அரசிடம் எடுத்துச் சொல்லி, அங்கே 1974 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் சாத்துகளை மீறுகிறார்கள் என்பதை நீங்கள் வலியுறுத்தி சொல்லியிருப்பதாக இங்கே கவர்னர் உரையில் குறிப்பிட்டுள்ளீர்கள். மீண்டும் நீங்கள் வலியுறுத்தி அப்படி மீறுவார்களானால் மீண்டும் கச்சத் தீவை தமிழகத்திற்கு, அல்லது இந்திய தேசத்தோடு இணைப்பதற்கு நீங்கள் உங்களுடைய முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-15

அடுத்து குடும்ப அட்டைகள் விவகாரம் குடும்ப அட்டைகளைப் பொறுத்தவரையில் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு தெளிவான சிந்தனையோடு மூன்று பிரிவுகளாகப் பிரித்து இருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். காரணம், ஏழைகள், நடுத்தர வர்க்கத்தினர், உயர்நிலையில் உள்ளவர்கள் என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து இங்கே குடும்ப அட்டைகள் வழங்குவதாகக் குறிப்பிட்டு உள்ளார்கள். அதிலே சிறிது தொய்வு ஏற்பட்டிருக்கிறது. காரணம், அந்தக் குடும்ப அட்டைகள் வழங்குவதில் பல்வேறு நிலைகளில் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கே form வழங்கவில்லை என்ற பிரச்சினை இருக்கிறது.

குடும்ப அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் வேண்டுமென்று கடைகளுக்குச் சென்றால் உங்களுடைய அட்டைகளை. ரத்து செய்துள்ளார்கள் என்று அங்கே கடைகளில் பணியாற்றுகிறவர்கள் கூறுவதாகப் பொது மக்கள் சொல்கிறார்கள். ஆகவே. குடும்ப அட்டை அனைவருக்கும் கிடைக்கிற வகையிலே நீங்கள் உறுதியளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் அந்த மனுவிலே இரண்டு மனுக்கள் கொடுத்து இருக்கிறார்கள். ரொம்ப சிரமம். என்னென்னவோ டீடெய்ல்ஸ், எவ்வளவு மாத வருமானம் என்று இப்படி கேட்டு பல பிரச்சினைகள் அதில் இருக்கின்றன.

அதைக் கொஞ்சம் குறைத்து. அதைச் சுருக்கி. ஒரு மனுவாகப் பண்ணினால் கூட நன்றாக இருக்கும் என்று நாங்கள் நினைக்கிறோம். பொது மக்கள் பிரச்சினை அது. சென்னை நகரத்தினுடைய பிரச்சினை. சென்னை மாநகராட்சிக்கு நீங்கள் கூடுதலாக நிதியொதுக்கித் தர வேண்டும். கிருஷ்ணா நீர் திறப்பு விழா முடிந்து விட்டது. அது மீண்டும் நல்லமுறையில் சென்னை மாநகருக்குக் கிடைப்பதற்குண்டான பணிகளைப் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு. இந்த வாய்ப்பை நல்கிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பிலே நன்றி தெரிவித்து. கவர்னர் உரையை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இங்கே ஆளுநர் உரையின் மீதான என்னுடைய கருத்தை. பாட்டாளி மக்கள் கட்சியினுடைய 'கருத்தை. திருவள்ளுவர் ஆண்டு 2028—ஆம் ஆண்டினுடைய ஆளுநர் உரையில் முன் வைப்பதற்கு முன்னால் தமிழின உணர்வோடு. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஒருசில கருத்துக்களுக்கு மறுப்பை முதலாவதாகத் தெரிவித்து. பின்னாலே ஆளுநர் உரையின் மீதான என்னுடைய கருத்தைத் தெரிவிக்க அனுமதிக்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நான் நேற்றே தெளிவாக, அமைதியாக, பணிவன்போடு தெரிவித்தபடி மீண்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் நடத்துகிற மாநாடு குறித்த அழைப்பிதழ் இங்கே இருக்கிறது. அதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.



இது முழுக்க முழுக்க ஈழத் தமிழர் பாதுகாப்புப் பேரணி என்றுதான் நடத்தப்படுகிறது. அதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்னொரு குற்றச்சாட்டை அவர்கள் சொன்னார்கள். இங்கேயிருக்கிற ஆளுங்கட்சி. எதிர்க்கட்சிகளுக்கு எல்லாம் அழைப்பு அனுப்பாமல் ஏதோ வெளியே இருப்பவர்களுக்கு மட்டும் அழைப்பு அனுப்பியதாகச் சொன்னார்கள். அதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் உட்பட ஏறத்தாழ 57 அமைப்புகளுக்கு கடந்த ஆண்டு. அதாவது 96-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20 ஆம் நாளிலேயே நாங்கள் முதலாவது அழைப்பை அனுப்பியிருக்கிறோம். 7-1-1997-லே நினைவூட்டுக் கடிதம் அனுப்பியிருக்கிறோம். 17-1-1997-லே மூன்றாவது கடிதம் அனுப்பி இருக்கிறோம். தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.கே. மூப்பனார் அவர்களுக்கும் நாங்கள் அழைப்பு அனுப்பி வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் பல பட்டியல்கள் இருக்கின்றன. அதைப்பற்றி நான் தெரிவிக்க விரும்பவில்லை. நாங்கள் ஒட்டுமொத்த தமிழகத்தினுடைய கருத்தையும் இந்திய அரசியலில் இருப்பவர்களுடைய கருத்தையும். உலக அளவில் மனித நேயத்தோடு ஈழப் பிரச்சினையை அணுகுகிறவர்கள். இந்தப் பிரச்சினையை எப்படி பார்க்கிறார்கள் என்ற கருத்தையும் இணைத்துப் பார்த்து அந்த ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக நடத்தப்படுகிற மாநாடே தவிர. இதற்கு தயவுசெய்து யாரும் உள்நோக்கம் கற்பிக்க வேண்டாம் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தவரையிலே. 47 ஆண்டுக்காலமாக நடைபெறுகிற ஈழப் பிரச்சினைக்கு தனித் தமிழ் ஈழம்தான் தீர்வு என்பதை நாங்கள் எந்தச் சூழ்நிலையிலேயும். எந்தக் காலத்திலேயும், யாருக்காகவும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கின்ற கட்சி அல்ல. ஆனால். அதற்காக, என்னவோ நாங்கள் தடை செய்யப்பட்ட இயக்கத்திற்காக வக்காலத்து வாங்கிப் பேசுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

முற்பகல் 11-20

வரலாற்றைக் கொஞ்சம் சற்றுத் திருப்பி அவர்கள் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நாட்டினுடைய தேசப் பிதா காந்தியையே கொன்ற ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைச் சேர்ந்தவர்களை 1948-லே தடை செய்தபோது. அந்தத் தடையை 1949-லே விலக்கிக் கொள்ளவேண்டும் என்று கேட்டவர் யார் என்பதை மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் அறிந்து கொள்ளவேண்டும். காந்தியாருடைய மிக நெருங்கிய நண்பராக இருந்த ஜி.டி.பிர்லா அவர்களுடைய தலைமையிலே சென்ற குழுதான் நேருவிடம் வற்புறுத்தி அந்தத் தடையை நீக்கக் கோரியது என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அதுமட்டுமல்ல, அந்தத் தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு, தடையை நீக்கம் செய்யவேண்டும் என்று வாதாடியவர்கள், அன்றைக்கு காங்கிரஸ் கட்சியிலே அமைச்சர்களாக இருந்த வல்லபாய் பட்டேலும், அதேபோல் முக்கிய பொறுப்பிலேயிருந்த லால் பகதூர் சாஸ்திரி போன்றவர்களும் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. தடை செய்யப்பட்ட ஒரு அமைப்புக்காகப் பேசுவது கூட தவறானதல்ல; முன்னுதாரணம் உள்ளதென்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர்.....

**திரு. ஆர். சொக்கர்:** துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்......

**திரு. சி. ஞானசேகரன்:** I am on a Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 3 பேர்களும் சேர்ந்து எழுந்து நின்றால் யாரை அனுமதிப்பது. ஒருவர்தான் பேச முடியும். அதனால் முன்வரிசையிலே இருக்கிற திரு. சொக்கர், சொல்லுங்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காந்தியைக் கொன்ற கோட்சே தூக்கிலிடப்பட்டான். ராஜிவ் காந்தியைக் கொன்ற, கொலைக்குக் காரணமாக இருந்த ரத்தவெறி பிடித்த, ரத்தப் பசி கொண்ட, பிரபாகரனை சரண் அடையச் செய்து, இங்கே தூக்கிலிட வழிவகை செய்ய அவர்களுடைய இயக்கம் முன்வருமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைதத் துணைத் தலைவர் அவர்களே, இதே இலங்கையிலே இருக்கக்கூடியவரும், காங்கிரஸ் இயக்கங்களோடு தொடர்பு கொண்டவருமான ஊரகத் தொழில் துறை அமைச்சராக இருக்கிற தொண்டமான் அவர்கள் குறிப்பிட்ட ஒரு செய்தி 22-1-1997 அன்று இந்து பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதிலே தொண்டமான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற செய்தி, இங்கேயுள்ள சந்தனமர வீரப்பனையே உங்களாலே பிடிக்க பல பிரச்சினைகள் உள்ளன பிடிக்க முடியவில்லை. இந்த நேரத்தில் நாங்கள் பிரபாகரனை எப்படிப் பிடித்து ஒப்படைப்பது என்று அவர்கள் குறிப்பிட்டுக் கேட்டிருக்கிறார்கள்.



நான் இன்னொன்றையும் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அது எங்கள் வேலையுமல்ல.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றே ஒன்றை மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** நான் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** ஒன்றே ஒன்றை மட்டும் கேட்டுக்கொள்கிறேன். பிடிக்க முடியுமா, முடியாதா என்பது அவர்களுடைய கருத்து. நான் கேட்பது, பிரபாகரன் இங்கே சரண் அடையவேண்டும் என்பதன் மீது உங்களுடைய இயக்கத்தினுடைய கருத்து என்ன?

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** நாங்கள் ஏற்கனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். ராஜீவ் காந்தியினுடைய படுகொலையை கண்டித்தவர்கள் நாங்கள். அந்தப் படுகொலைக்கு யார் காரணமாக இருக்கிறார்கள் என்கிற விசாரணை முடிவுற்று அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவதிலே எங்களுக்கு இரண்டாவது கருத்து என்றைக்குமே இருந்ததில்லை என்று தெளிவாக நாங்கள் சொல்லியிருக்கிறோம். அப்படி இருக்கிறபோது, ராஜீவ் காந்தியினுடைய படுகொலையை வைத்துக் கொண்டு, அங்கே இருக்கக்கூடிய 35 லட்சம் ஈழத் தமிழர்களையும் குற்றவாளிகளாகக் கருதுவது எந்த வகையிலே நியாயம் என்றுதான் நான் மாண்புமிகு உறுப்பினரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

அதேபோல் நான் இன்னொன்றையும் இங்கே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நான் குறிப்பிட்டுச் சொன்னது, தடை செய்யப்பட்ட இயக்கத்திற்காகப் பேசுவது ஒன்றும், ஏற்கனவே இல்லாத ஒரு நடைமுறை அல்ல என்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான் நான் இந்த உதாரணங்களை எல்லாம் சொன்னேன். இன்றைக்குக்கூட, உல்பா தீவிரவாதிகளிடமும், காஷ்மீர் தீவிரவாதிகளிடமும் மத்திய அரசாங்கமானது பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது. அவற்றிற்கு இந்த நாட்டிலே தடை தடை இருந்தும்கூட, அந்த இயக்கங்கள் இந்த நாட்டிலே இயங்கியும்கூட தடை செய்யப்பட்ட அந்த இயக்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்துவது ஒன்றும் தவறு அல்ல, சுமூகமான முடிவுக்கு வருவதற்காக அதைச் செய்வது ஒன்றும் தவறு அல்ல என்றுதான் அவர்கள் பேசுகிறார்கள். ஆனால், ஈழத் தமிழர்களின் அந்தப் போராளிக் குழு இங்கே இயங்கவில்லை. தடையை இங்கே விதிப்பது தேவையற்றது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, I am on a Point of Order. எல்லாம் ரெக்கார்டு ஆகிக்கொண்டுபோகிறது....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தீரன் அவர்கள் விடுதலைப் புலிகள் இந்த நாட்டில் செய்கின்ற குற்றம் அத்துணைக்கும் வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். எங்களுடைய தலைவர் ராஜீவ் காந்தியைக் கொன்றவர்களுக்கு, இவர்கள் எல்லாம் வக்காலத்து வாங்கி, ஊர்வலம் நடத்தி, அவர்களுடைய போட்டோக்களை, அவர்களுடைய படங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு ஊர்வலம் நடத்திய கூட்டம். இங்கே ஈழ அகதிகளுக்கு நாங்கள் ஆதரவு தரத் தயாராக இருக்கிறோம். ஆனால், எல்டிடிஈ-க்கு நீங்கள் ஆதரவாகப் பேசுவது, அமைதிப் பூங்காவாக இருக்கக்கூடிய தமிழ்நாட்டைக் கெடுப்பதற்கு நீங்கள் தயாராகி, ஒரு களத்தை உருவாக்க வேண்டாம், அதற்கு வக்காலத்து வாங்கவேண்டாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுதியாக, இவர்களைவிட இந்த ஆட்சி வலுவாக, நலமாக எந்தவித குறைபாடும் இல்லாமல் தொடரவேண்டும் என்று அப்பழுக்கு இல்லாத நெஞ்சத்தோடு நினைக்கின்ற உள்ளங்களிலே நாங்கள் முதன்மையானவர்கள். அதிலே ஆளும் கட்சிக்கு சந்தேகம் இருக்காது. ஆனால் ஏதோ ஒரு உள்நோக்கத்திலே பேசுகிறவர்களுக்கு வேண்டுமானால் அதிலே ஐயங்கள் இருக்கலாமே தவிர, நாங்கள் நிச்சயமாக இந்த ஆட்சிக்கு எந்த ஒரு பிரச்சினையும் ஏற்படுத்தி தலைவலியைத் தரவேண்டுமென்று விரும்பவில்லை. எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்கள் பலமுறை பத்திரிகையாளர்களிடம் சொல்லிவிட்டார்கள். பத்திரிகைய்யைப் பற்றிக் கூடச் சொன்னார்கள்.

முற்பகல் 11-25

நான் இந்த நேரத்திலே பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன். நாங்கள் நடத்திய மாநாடு குறித்து எந்தத் தமிழர் தலைவர்களும், தமிழர்



நடத்துகிற எந்தத் தமிழ் ஏடுகளும்கூட அதைக் கண்டிக்கவில்லை. ஆனால் ஒரு சாராருக்காக நடத்தப்படுகிற சில ஏடுகள் மட்டும், ஒரு சாராருடைய நன்மைக்காக மட்டுமே இயங்கிக் கொண்டிருக்கிறவர்கள் மட்டும், அவர்கள் காழ்ப்புணர்ச்சியோடு உள்நோக்கத்தோடு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக மாநாடு நடத்துவதாகச் சொன்னார்களே தவிர, தமிழர் ஏடுகள் எதுவும் அதைக் கொச்சைப்படுத்தி, அந்த மாநாட்டைப் பற்றி எழுதவில்லை. விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான மாநாடு என்று எழுதவில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தமிழ் இன விரோதிகள்தான் அப்படிப்பட்ட செய்திகளை வெளியிட்டார்களே தவிர, தமிழர் பத்திரிகை எதுவும் அப்படிப்பட்ட செய்திகளை வெளியிடவில்லை என்பதைப் பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது என்னவென்றால், இங்கே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; ஜெயின் கமிஷன் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது; வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுதே ஒரு சிலரைக் குற்றம் சாட்டி இவர்கள் இங்கே குறிப்பிடுகிறார்கள். அதற்குப் பதிலாக நான் கூறவிரும்புவது அவர்களுடைய இயக்கத்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற ஜெயந்தி நடராஜன் அவர்களே நாடாளுமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் பேசிய பேச்சுக்குப் பதிலாகச் சொல்கிறபோது, போஃபர்ஸ் ஊழல் வழக்கிலே ராஜீவ் காந்தியை இணைத்து இதுவரையில் எதுவும் மெய்ப்பிக்கப்படவில்லை. ஆகவே ராஜீவ் காந்தியை இந்த வழக்கில் தொடர்புபடுத்தி பேசக் கூடாது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ந்ான் இந்த நேரத்திலே உங்களிடம் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வது எல்லாம் யாரோ செய்கின்ற தவறுக்காக, ஒரு குடும்பத்திலே ஒருவன் கொலை செய்துவிடுகிறான் என்று சொன்னால், அந்தக் குடும்பமே கொலைக்காரக் குடும்பம் என்று சொல்லி தூற்றுவது, பழிப்பது, ஒதுக்குவது எந்த வகையிலே நியாயம் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். இந்திரா காந்தியைக்கூட கொன்றார்கள். அதற்காக சீக்கிய இனத்தையே நாம் ஒதுக்குகிறோமா, அல்லது அழித்து விடுகிறோமா? தவறு செய்பவர்களைத் தனித்துப் பிரித்துப் பாருங்கள். ஒரு இனத்தினுடைய பிரச்சினையைப் பொதுவாக நோக்குங்கள் என்றுதான் நாங்கள் வேண்டுகோளாக வைக்கிறோமே தவிர, வேறு ஒரு செய்தியையும் நான் வற்புறுத்த விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தீரன் அவர்கள் மீண்டும் மீண்டும் அதே கருத்தைச் சொல்லி கொலைக்காரக் குடும்பத்தை நாம் ஒதுக்கிவிடுகிறோமா என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே விடுதலைப் புலிகள் இங்கே ஊடுருவி அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தைக் கெடுத்து, எங்களுடைய தலைவர் ராஜீவ் காந்தியை கொலை செய்தது மட்டுமல்ல இன்னும் ஆங்காங்கே கொலை, கொள்ளைகள் நாட்டில் நடக்கக் கூடிய திருட்டு அத்துணைக்கும் இன்று காரணமாக இருக்கக் கூடிய கூட்டம் தமிழகத்திலே வந்து நுழைய முனைகிறது என்று சொன்னால், அதுதான் எல்.டி.டி.ஈ. கூட்டம். அந்த எல்.டி.டி.ஈ. கூட்டத்திற்கு இவர்கள் வக்காலத்து வாங்குவது மட்டுமல்லாமல், இரண்டு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், அதே மாநாட்டில். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கூட தெரிவித்திருக்கிறார்கள். இவர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இல்லை என்கிறார்கள். அந்த மாநாட்டிலே பேசி குழப்பம் விளைவித்தவர்கள் இரண்டு பேரை கைது செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த மாநாட்டிலேகூட இவர்கள் இலை மறைவு, காய் மறைவாக எல்.டி.டி.ஈ. க்குத்தான் ஆதரவாக இருந்து இங்கே ஒரு களத்தை உருவாக்க முயற்சிக்கின்றார்கள் என்பது தெரிகிறது. அதற்காக இந்த மாமன்றத்தை தயவுசெய்து அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் பயன்படுத்தக் கூடாது என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புவது என்னவென்றால், நாங்கள் நடத்திய மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்திலே நிச்சயமாக தமிழ் ஈழ பிரச்சினையிலே இந்திய அரசு தலையிட்டு ஒரு சுமூகமான தீர்வைக் காணவேண்டுமென்று சொல்லி ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறோம். அதே நேரத்திலே இன்றைக்கு அப்படி நடுவராக இருந்து இந்திய அரசு செயல்படவேண்டுமேயானால் இலங்கையிலே இயங்கிக் கொண்டிருக்கிற அந்தப் போராளிக் குழுக்களின் மீதான தடையை நீக்கிவிட்ட பிறகுதான் பேசுவது நியாயமாக இருக்குமென்பதை விவரம் அறிந்தவர்கள் புரிந்துகொள்வார்கள். ஆகவே தான் அந்தத் தடையை நீக்கவேண்டுமென்று நாங்கள் கோரினோமே



தவிர, அந்தப் போராளிக் குழுக்கள் எதுவும் இந்தியாவிலே அல்லது இந்திய இறையாண்மைக்கு விரோதமாக வந்து இங்கே செயல்படுவதை, சட்டம் ஒழுங்கு கெடுவதை நாங்கள் எந்தக் காலத்திலும் ஆதரிக்கிறவர்களும் அல்ல, அதை ஏற்றுக் கொள்கிறவர்களும் அல்ல, அதைக் கண்டிக்கிறவர்கள் என்பதை நான் மீண்டும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளிலே ஏதேதோ, சில பத்திரிகைகள் உள்நோக்கத்தோடு வெளியிட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஒரு பத்திரிகையில் வந்த செய்தியை நான் படிக்கின்றேன். துக்ளக் பத்திரிகையிலிருந்து, தங்களுடைய அனுமதியோடு படிக்கின்றேன். 'ஈழ விடுதலைப் போராட்டம்' என்ற தலைப்பில் சுப. வீரபாண்டியன், உலகத்தில் ஏதாவது ஒரு பகுதியில் மலையாளிகள் யாராவது பாதிக்கப்பட்டிருந்தால் ராஜசேகரன் நாயர் அப்படி அறிக்கை விடுவாரா? தெலுங்கர்கள் யாராவது பாதிக்கப்பட்டிருந்தால் எஸ்.ஆர்.பி. பேசாதே என்று சொல்வாரா?

முற்பகல் 11-30

இவர்கள் மிரட்டுகின்றார்கள் என்பதைவிட மிரளுகின்றார்கள் என்பதுதான் உண்மை என்று சொல்லிவிட்டு, பிறகு ராஜீவ் காந்தி ஒருத்தர்தான் மனிதனா? அவர் ஒருவருக்கு மட்டும்தான் உயிரா? சொட்டு நீர் அருந்தாமல் பட்டினி கிடந்தானே திலீபன், அவன் மரணத்திற்கு யார் பொறுப்பு என்றெல்லாம் பேசியிருந்ததன் மூலமாக, தானு என்ற ஒரு பெண்ணுடைய பலவீனத்தைப் பயன்படுத்தி கொலை வெறியை தூண்டி, அந்தப் பெண்ணின் மூலமாக ராஜீவ் காந்தி அவர்களை கொலை செய்ய இந்த இந்தியாவினுடைய எதிர்பார்ப்புக்காக ஒரு இளைஞராக அவதரித்து வந்த அந்த அவதார புருஷரை - கொலை வெறியைத் தூண்டி, கொலைக்கு காரணமாக இருந்த அந்தப் பிரபாகரனுக்கு இன்னும் இவர்கள் வக்காலத்து வாங்கிப் பேசுகின்றார்கள் என்றால், அரசியல் ரீதியிலே அவர்கள் இன்று ஒருவேளை ஆதரவு கொடுத்தாலும்கூட, இந்த

ஆதரவைப் பெறுவீர்களேயென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அதுவே பெரிய அபாயமாக முடியும்; நல்ல பெயர் இருக்காது என்பதை அவர் சொன்ன கருத்துக்கு மாற்றுக் கருத்தாக இந்த அரசுக்குத் தெரிவிக்க நான் விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அந்த மாநாட்டில், இங்கே அவர்கள் படித்துக் காட்டிய இந்த வாசகங்களை, பேசிய இருவரும், இந்த அரசால் உடனடியாக கைது செய்யப்பட்டார்கள். வழக்கு அவர்கள்மீது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இன்னும் சொல்கிறேன், இது முதலிலே சாதாரண வழக்கு, மறுபடியும் தொடர்ந்து பேசுவார்களேயானால், அவர்கள் மீது தேச விரோத நடவடிக்கைகளிலே ஈடுபட்டார்கள் என்ற அளவில் நிச்சயமாக வழக்குத் தொடரப்படும். அந்த மாநாட்டிலேகூட அன்றைக்கே, பேராசிரியர் தீரன் சொல்லியிருக்கிறார், அந்த இருவர் பேசிய பேச்சை கடைசியாக பேசிய டாக்டர் அவர்கள் கண்டித்துப் பேசினார் என்று சொல்லியிருக்கிறார். இப்போதும் இந்த மாநாட்டிலே, இலங்கைத் தமிழர்கள், அவர்கள் படுகின்ற அவதிகளைத் தவிர, விடுதலைப் புலிகளுக்கு வக்காலத்து வாங்கி நாங்கள் பேச மாட்டோம் என்று அவர்கள் கூறியிருக்கின்றார்கள். டாக்டரிடத்திலே நான் பேசினேன் அவர்களும், நானும் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு பேசும்போதுகூட, நிச்சயமாக இந்த அரசுக்கு விரோதமாக, இந்த அரசை சங்கடத்திலே ஆழ்த்துகின்ற அளவுக்கு நாங்கள் எந்தத் தீர்மானமும் போடமாட்டோம், எந்தப் பேச்சும் இருக்காது என்பதை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அதையும் மீறி, அவர்களை அழைத்து, அவர்கள் யாராவது பேசுவார்களேயானால், அவர்களை கைது செய்யும்போதும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போதும், யாரும் குறுக்கிடமாட்டார்கள், குறுக்கிடக் கூடாது என்பதும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் இங்கே தெளிவாக எடுத்துச்சொல்லி இருக்கின்றார்கள். ஆனால், நேற்றைய தினமணி பத்திரிகையிலே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் தீரன் அவர்கள் பேசியதை பெட்டிச் செய்தியாகப் போட்டிருக்கிறார்கள். அதிலே, அவர் என்ன குறிப்பிட்டிருக்கிறார் என்றால்,



நாங்கள் மாநாடு நடத்துகின்றோம், எங்களையும் மீறி யாராவது போராளிகளுக்கு ஆதரவாக பேசினால், அதற்கு நாங்கள் பொறுப்பேற்க முடியாது என்று கூறியதாக அந்தப் பத்திரிகை செய்தி வந்திருக்கிறது. நம்முடைய அவைக் குறிப்பிலே அது இருக்கிறதா என்பதை தயவு செய்து பார்க்க வேண்டும்.

மேலும் ஒரு விளக்கம். உல்பா தீவிரவாதிகளோடு மத்திய அரசு பேசவில்லையா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். தடை செய்யப்பட்ட எந்த இயக்கத்தோடும் அரசாங்கம் பேசலாம், ஆனால், மாண்புமிகு உறுப்பினர் தீரன் பேசக் கூடாது என்பதுதான் எங்களுடைய கோரிக்கையே ஒழிய, அரசாங்கம் பேசுவதிலே தவறு இல்லை ஏனென்றால், எந்த அரசாங்கத்தையும் நாங்கள் சந்தேகிக்கவில்லை. அது மத்திய அரசாங்கமாக இருந்தாலும் சரி, மாநில அரசாங்கமாக இருந்தாலும் சரி, தீவிரவாத அமைப்புகளோடு அவர்கள் பேசுவது அறிவுரை கூறுவதற்காகப் பேசுகிறார்கள். ஆனால், நீங்கள் பேசுவது - அதே உரிமையை நிலைநாட்டி நாங்களும் பேசுவோம் என்று நீங்கள் சொன்னால் — நீங்கள் அறிவுரை கூற முடியாது, நீங்கள் அவர்களுடைய ஆட்களாக மாறிவிடுவீர்கள் என்ற பயத்தில்தான், அதை நாங்கள் கூடாது என்று சொல்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்துகிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறோம். நாங்கள் எந்தப் போராளிகள் இயக்கத்தோடும் பேசுவதாகச் சொல்லவில்லை. மத்திய அரசாங்கம் தலையிட வேண்டும், பேச வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறோம். எனவே, நீங்கள் சொல்லக் கூடிய உல்பா தீவிரவாத இயக்கத்தோடு எந்த மத்திய அரசாங்கம் பேசியதோ, அந்த மத்திய அரசாங்கம் இந்தப் பிரச்சினையிலும் தலையிட வேண்டுமென்று கேட்கிறோமே தவிர, நாங்களாக நேரிடையாக யாரிடமும் தொடர்பும் வைத்திருக்கவில்லை, அப்படி வைக்க வேண்டிய அவசியமும் எங்களுக்கில்லை, யாருக்கும் கைக்கூலிகளாக செயல்பட வேண்டிய கட்டாயம் ஒரு மானமுள்ள தமிழனாகப் பிறந்த எங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த எவருக்கும் இல்லை என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். ஆளுக்கு ஆள் கேட்டுக்கொண்டே இருந்தால், விவாதம் நீடித்துக்கொண்டே போகும். திரு. தீரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** எனக்கு மட்டும் வாய்ப்பு கொடுக்கமாட்டீர்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

முதலாவது அவர் பேசி முடிக்கட்டும். நேரம் ஆகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் கேட்கும்போதுதானா நேரம் ஆகிறது? அநியாயமாக இருக்கிறதே?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களை உட்காரச் சொல்லி உத்தரவிடுகிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** ஈழப் பிரச்சினையைப் பற்றி எங்களுடைய இயக்கத்தினுடைய விளக்கத்தை நான் சொல்லிவிட்டேன். மறுபடியும், மறுபடியும் நான் அதுகுறித்து கருத்துக்களைச் சொல்ல விரும்பவில்லை. திரும்பத், திரும்ப ஒரு பொய்யைப் பலமுறை சொன்னால், அது மெய்யாகிவிடும் என்று சொல்கின்ற பழமொழியைப் போல இருக்கும் என்று கருதுகிறேன். இன்றைக்கு உண்மைக்கு மாறான கருத்துக்களைச் சொல்லி உறுப்பினர்கள் வேண்டுமென்றே ஒரு உள்நோக்கத்தோடு பேசுவதாக நான் கருதுகின்றேன்.

அவர்களையும் சேர்த்துத்தான் நாங்கள் மாநாட்டிற்கு அழைத்து இருக்கிறோம். எங்களுக்கு எந்தவித உள்நோக்கமும் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள்கூட நேற்று இந்த மாநாட்டிலே கலந்துகொள்வதாக அறிவித்திருக்கிறார்கள். எங்களுடைய உறுப்பினர்கள் அதை வரவேற்றிருக்கிறார்கள். எனவே நாம் அனைவரும் சேர்ந்து போராளிகள் என்ற பிரச்சினையைத் தனியாக ஒதுக்கி வைத்துவிட்டு அந்த ஈழத் தமிழர்கள் 7 இலட்சம் பேர்கள் இன்றைக்கு அகதிகளாக உள்நாட்டிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். 5 இலட்சம் பேர்கள் அகதிகளாக வெளிநாடுகளிலே அலைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

முற்பகல் 11-35

இன்றைக்குக்கூட நான் ஒரு பத்திரிகைச் செய்தியைக் கொண்டு வந்திருக்கிறேன். அதாவது இந்த டிசம்பர் திங்கள் 14, 15லே வெளிவந்த



வீக் எண்ட் எக்ஸ்பிரஸ் என்ற அந்தப் பத்திரிகையிலே தெளிவாக குறிப்பிடப் பட்டிருக்கிறது. சிங்கள எம்.பி.-யாக இருக்கின்ற ஐக்கிய தேசிய கட்சியைச் சார்ந்த டாக்டர் ஜெயலத் ஜெயவர்தனா என்கிற ஒரு எம்.பி. அந்த வவுனியா பகுதியிலே அகதிகளாக திரிந்துகொண்டிருக்கின்ற அந்த மக்களுக்கு 7 இலட்சம் ரூபாய் பெருமானம் உள்ள மருந்தை செஞ்சிலுவை சங்கத்தோடு எடுத்துச் சென்று அவர்கள் அந்த மக்களுக்கு உதவிட முன்வந்திருக்கிறார்கள். ஆனால் அப்படி உதவ முன்வந்தவர்களையும்கூட இலங்கை இராணுவமானது தடுத்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. மன்னார் மாவட்டத்தைச் சார்ந்த ஆர்ச் பிஷப் ராயப்பு பிஷப் அவர்கள் இந்தப் பிரச்சினையை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறார். அவரும் அந்த அகதிகளுக்கு உதவுவதற்காக ஒரு கோரிக்கையினை வைத்து இருக்கிறார்கள். ஆக இப்படி பல அந்த அகதிகளுக்காக, உலகத்தினுடைய பார்வை அவர்கள்மேல் வேண்டும் என்பதற்காக அவர்களுக்காக பரிந்து பேச முன்வர வேண்டும் என்பதற்காக, பல செய்திகள் இன்றைக்கு வந்த வண்ணம் இருக்கின்றன.

இந்தியாவிலேகூட ஆப்கான் அகதிகள் 3,000 ரூபாய் மாதந்தோறும் சலுகை பெற்று இன்றைக்கு நிம்மதியாக இருந்து கொண்டிருக்கிறார்கள். வங்கதேச விடுதலை முடிந்ததற்குப் பின்னாலும் வங்கதேச அகதிகள் இன்றைக்கும் இந்தியாவில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதுபோல திபெத்திய அகதிகளும் இன்றைக்கு இங்கே உலவிக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே அந்த அகதிகளுக்கெல்லாம் காட்டப்படுகின்ற பரிவு ஈழத் தமிழ் அகதிகளுக்கும் காட்டப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய பணிவான வேண்டுகோள். அதிலும் இன்றைக்கு 120 முகாம்களிலே தமிழகத்திலே அடைபட்டிருக்கின்ற அந்த ஈழத் தமிழர்களுக்கு ஒரு நாளைக்கு ஆணுக்கு 5 ரூபாயும் குழந்தைகளுக்கு 3 ரூபாயும் என்று உதவித் தொகை வழங்கப்படுகிறது. அது அவர்களுக்குப் போதவில்லை. அவர்களுக்கு யாராவது தொண்டு நிறுவனங்கள் உதவுவதற்கு முன் வந்தாலும் அனுமதிக்கப்படுவதில்லை. ஐ.நா.வினுடைய அகதிகள் மறுவாழ்வு ஆணையமேகூட அதற்காக உதவுவதற்கு முன்வந்தாலும்கூட அதற்கும் உதவிகள் செய்ய இயலாத சில தடைகள் இருப்பதாக அவர்கள் புகார்கள் சொல்கிறார்கள். எனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த ஈழ அகதிகளுடைய பிரச்சினையிலே மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு இந்த ஈழ அகதிகளுக்கு உதவக்கூடிய நடவடிக்கைகளிலே இன்னும் கொஞ்சம் கரிசனத்தோடு, கருணையோடு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு முகாமிலே எந்தவித வழக்கும் இல்லாமலே, பல ஈழ அகதிகள் அடைபட்டிருக்கிறார்கள். அவர்கள் சொந்த நாட்டிற்குத் திரும்ப வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் போவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் துணை தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீதான என்னுடைய கருத்தை மிகச் சுருக்கமாகச் சொல்லி நான் விடைபெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கனவே நேரம் அதிகம் ஆகிவிட்டது. விரைவாக பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையினைப் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பிலே நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அரசினுடைய ஒரு கொள்கை முன்வடிவாக வந்திருக்கின்ற இந்த ஆளுநர் உரையை பல பேர்கள் இதிலே எதிர்பார்ப்புகள் அதிகமாக இருந்து ஏமாற்றம் அடைந்தோம்; சரியில்லை என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும்கூட பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பிலே ஆளுநர் உரையை வரவேற்று இது இந்த அரசினுடைய ஒரு கொள்கை முன்வடிவே தவிர முடிவு அல்ல என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒன்றைச் சொல்லுவார்கள். கட்டுத்தாலி கட்டுகின்ற போதே கைக்குழந்தை இல்லையே என்று சொல்வது எப்படி பொருத்தமற்றதோ அதைப்போலவே வரவு செலவுத் திட்ட அறிக்கை வருவதற்கு முன்னாலே ஒரு முன்வடிவாக இருக்கின்ற இந்த ஆளுநர் உரையிலே எதுவுமே இல்லை என்று சொல்வது பொருத்தம் இல்லாத ஒரு செய்தியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, ஆளுநர் உரையை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். வெள்ளச் சேதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுத்தார்கள். ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே மத்திய அரசினாலே அறிவிக்கப்பட்ட 25 கோடி ரூபாய்கூட வரவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். யானைப் பசிக்கு சோளப் பொறி போட்டது போல இருந்தாலும்கூட, அந்தப் பணமும் வரவில்லை என்கிறபோது வருத்தமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும், தயவு செய்து தமிழக அரசானது சில இடங்களிலே வெள்ள நிவாரணப் பணிகளில் உள்ள குறைபாடுகளை நீக்கிடல் வேண்டும் என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



என்னுடைய பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டத்திலே சில பிரச்சினைகள் வந்தன. அவை மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. இன்னும் கூட, அதிகாரிகளுடைய நிலைமைகள் சில இடங்களிலே மாறவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் மண்ணுளிப் பாம்பு முன்னாலே மகுடி வாசித்தது போல இன்றைக்கு சில அதிகாரிகள் மாறாத மனநிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆட்சியாளர்களே, ஆட்சி அதிகாரத்திலே இருக்கக்கூடிய அந்தப் பெருமக்கள் இடுகின்ற ஆணைகளைக்கூட சில பேர்கள் சரிவர நிறைவேற்றத் தயங்குகிறார்கள். அதிலே பல சங்கடங்கள் மக்களுக்கு வருகின்றன என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-40

இன்னும் கூட சில இடங்களில், தஞ்சாவூர் நந்தியிலிருந்து பால் கறக்கின்ற கதையைப் போல இந்த நிவாரணத் தொகையிலேயே ஒரு 10 சதவீதம் 500 ரூபாயிலேயே 50 ரூபாய் என்று கூட சிலயிடங்களில் பிடித்தம் செய்திருக்கிறார்கள். அத்தகைய புகார்களை நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தெரிவித்து இருக்கிறோம். இப்படிப்பட்ட குறைகள் இல்லாத அளவுக்கு டாக்டர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியானது நிச்சயமாக இன்றைக்கு இதற்கு வழிவகை காணவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நல்லாட்சி வந்த வேளையிலே உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன; வரவேற்கிறோம். ஆனால், அதேநேரத்திலே இன்றைக்கு குடல் வால்வு போன்ற சில பதவிகள் இருக்கின்றன. அதாவது, ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்கள், மாவட்ட கவுன்சிலர்கள் போன்ற பதவிகள் எங்களைப் பொறுத்த அளவிலே தேவையில்லை என்பது. திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றபோது இதைக்கருத்தில் கொண்டு நீங்கள் செய்திடல் வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் தேர்தலும், மாவட்டத் தலைவர்கள் தேர்தலும் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற வகையிலே வழிவகைக் கண்டால் நலமாக இருக்கும் என்பது எங்களுடைய தாழ்மையான கருத்து.

அடுத்து, ஊழலைத் தடுப்பதற்காக ஒரு குழு நீதிபதி திரு. இராமானுஜம் அவர்களுடைய தலைமையில் அமைக்கப்படவிருப்பதை வரவேற்கிறோம்.

இதிலே கடந்த ஆட்சிக் காலத்திலே நடைபெற்ற தவறுகளை நீதிமன்றத்தில் ஒரு குறளின் மூலமாக அறிவித்து இருந்தது.

"நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்"

என்ற குறளினை அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தார்கள். அந்த அளவுக்குத் தவறுகள் நடைபெறக்கூடிய ஒரு ஆட்சியாக அது இருந்தது. ஆனால், டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெறுகின்ற இந்த ஆட்சியானது

"நாடொறும் நாடி முறை செய்யும் மன்னவன் கலைஞர்" ஆட்சியாக இருக்கிற காரணத்தால் "நாடொறும் நாடு கெடும்" என்பதற்குப் பதிலாக 'நாடொறும் நாடு வளர்" என்று சொல்லக்கூடிய அளவுக்கு இன்றைக்கு நல்லாட்சி நடைபெற்றுக் கொண்டு வருவதை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே நேரத்தில், புதுக்கோட்டையின் வாயிலாக புதுத் தெம்பைப் பெற்று விடலாம் என்று சிலபேர்கள் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். செயின்ட் ஜார்ஜ் கோட்டையும் அவர்களுக்கு பெப்பே: புதுக்கோட்டையும் அவர்களுக்கு பெப்பே: என்று சொல்லக்கூடிய அளவுக்கு மக்கள் நல்ல தீர்ப்பை அளிப்பார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கச்சத் தீவைப் பற்றி ஒரே ஒரு செய்தியைச் சொல்லிவிடுகிறேன். கச்சத் தீவு நாம் தாரை வார்த்தது அல்ல: மத்திய அரசு தாரை வார்த்தது. ஏற்கனவே தென் அமெரிக்காவுக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய அர்ஜெண்டைனா நாட்டிற்கு அருகில் இருக்கக்கூடிய ஒரு தீவு மால்வினாஸ் தீவு: அதை பாக்லாண்டு தீவு என்றும் அழைப்பார்கள். அந்தத் தீவு காலனி ஆதிக்கமாகப் பிரிட்டிஷாரால் வைக்கப்பட்டு இருந்தது. அர்ஜெண்டைனா நாட்டுக்கார்ரர்கள் இங்கிலாந்தினுடைய காலனி ஆதிக்கமாக இருந்த அந்தத் தீவைப் பறித்துக்கொண்டார்கள் என்பதற்காக இங்கிலாந்தினுடைய இளைய இளவரசர் ஆண்ட்ரூஸ்வினுடைய தலைமையில் போர்க் கப்பலை அனுப்பி அந்தத் தீவையே கைப்பற்றினார்கள். எதற்காக நான் அதைச் சொல்கிறேன் என்றால், ஒரு சின்னஞ் சிறிய நாடு இந்தியாவுக்கு எதிர்ப்பாக பாதுகாப்பு கவுன்சிலிலே கூட வாக்களித்த நாடு, இலங்கை.



அப்படிப்பட்ட ஒரு நாட்டைக் கண்டு பயந்து நம்முடைய மீனவத் தோழர்கள் இன்றைக்கு உப்புக் கடலிலே மீன் பிடிக்கச் செல்கிறபோது ரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க நாம் முயன்று பார்க்கவேண்டும். அண்மையிலேகூட முருகேசன் என்பவரும் இன்னும் ஒரு நபரும் இலங்கை கடற்படையால் சுட்டுக்கொல்லப் பட்டிருக்கிறார்கள். ஆக, கடலோர மீனவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமானால் இந்தக் கச்சத் தீவு மீட்கப்படவேண்டும். பலபேர்கள் இந்தச் சட்டமன்றத்திலே கடந்த ஆட்சிக் காலத்திலே கச்சத் தீவை மீட்போம் என்று சொன்னார்கள். ஆனால், அது நடைபெறவில்லை. ஆனால், நாங்கள் முழு நம்பிக்கையோடு சொல்கிறோம். கலைஞர் அவர்களுடைய தலைமையில் நடைபெறுகிற ஆட்சியானது அந்தக் கச்சத் தீவை மீட்டுத் தீரும். அதற்காக நிச்சயமாக இந்தச் சட்டமன்றத்திலே ஏதேனும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பவேண்டும். தீன் பிகார் தீவை வங்கதேசத்திற்கு வாடகைக்குத் தருவதற்கே மத்திய அரசு மேற்கு வங்க அரசினுடைய அனுமதியைக் கோரியதைப் போல இன்றைக்கு நமக்கான உரிமைகளைப் பெறுவதற்கு மத்திய அரசு நம்மை கலந்தாலோசித்து மீண்டும் கச்சத் தீவை நமக்குத் தருவதற்கு ஆவன செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.—

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Clarification. கச்சத் தீவை இலங்கைக்கு யாரும் தாரை வார்த்து விடவில்லை. அன்றைக்கு இருந்த அரசியல், பொருளாதார சூழ்நிலையைக் கருதி அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கச்சத் தீவை இலங்கைக்கு அளித்தார்கள். மாநில அரசோடு பேசி அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்களோடு பேசி மாநில, மத்திய அரசாங்கங்கள் சில ஷரத்துக்களை அதிலே ஏற்படுத்தி இருவரும் ஒத்துக்கொண்டுதான் அன்றைக்கு கச்சத் தீவு கொடுக்கப்பட்டதே ஒழிய அது தாரை வார்க்கப்படவில்லை. அதிலே பிரச்சினைகள் இருக்குமானால் மீண்டும் மத்திய அரசும், மாநில அரசும் பேசும். ஏதோ ஜெயலலிதா 'கச்சத் தீவை நான் போர் தொடுத்து மீட்டு வருவேன்' என்று சொன்னதைப் போல இன்றைக்கு திரு. தீரன் பேசுகிறார். அது தேவையில்லாத விஷயம். கச்சத் தீவில் நம்முடைய உரிமைகள் மீறப்படுமானால் மத்திய, மாநில அரசுகள் நிச்சயமாக அதைப் பார்த்துக் கொண்டு இருக்க மாட்டார்கள். அதற்கான முயற்சிகளைச் செய்வார்கள் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அப்படி நடைபெற்ற ஒருசில சம்பவங்களை உதாரணத்திற்காகச் சுட்டிக்காட்டினேனே தவிர ஏதோ ஆவேசமாக பேசிவிட்டு யாரையாவது உசுப்பிடவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. இன்றைக்கு அங்கு நமது மீனவர்களுக்கு மீன் பிடிக்க உரிமையில்லை.

முற்பகல் 11-45

இதுவரையிலே கடந்த 13 ஆண்டுகாலமாக 185 மீனவர்களுக்கு மேல் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய மீன்பிடி வலைகளை உலர்த்துவதற்கு அங்கே அனுமதிக்கப்படவில்லை. அங்குள்ள புனித அந்தோணியார் கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்துவதற்குக்கூட உரிமை மறுக்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையிலே நாம் இனிமேலும் அமைதியாக இருந்தால் அது சரியாக இருக்காது என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (மணியடிக்கப்பட்டது) ஒரு வரியிலே முடித்து விடுகிறேன்.

இன்று கல்வித் துறையை இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. உயர் கல்வித் துறை என்றும் பள்ளிக் கல்வித் துறை என்றும் தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது இந்த நேரத்திலே அரசினுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். தொடக்கக் கல்வியிலே தமிழ் வழியிலேதான் பயிற்று மொழியாக வேண்டுமென்று கோரியும், 1956 ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டத்தை அனைத்துத் துறைகளிலேயும் அமல்படுத்த வேண்டுமென்பதற்காகவும் இன்றைக்கு தமிழறிஞர்கள் வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே தலைநகர்த் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக, 46 அமைப்புக்களுக்கு மேலானவர்கள் பட்டினிப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அருள்கூர்ந்து, தயவு செய்து அரசு அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை— ஏனென்றால் தமிழின்பால் பற்றுள்ள இந்த அரசானது தாயுள்ளத்தோடு அந்தக் கோரிக்கைகளைப் பரிசீலித்து உடனடி நடவடிக்கை எடுக்குமென்று நான் நம்புகிறேன்.

சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையிலே இன்றைக்குக்கூட ஒரு சோகச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. இன்றைக்கு என்னதான் அந்தக் கைக்கூலிக் காரர்கள்.. (மணியடிக்கப்பட்டது) ஒரு வரியிலே முடித்து விடுகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு வரியிலே பேசி முடியுங்கள். 30 நிமிஷம் ஆகிவிட்டது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இன்றைக்கு அகில இந்திய ஜிஹாத் கமிட்டியினுடைய தலைவரும், மிகச்சிறந்த மனிதநேயப் பற்றாளரும், சிறுபான்மை இன மக்கள் மட்டுமல்லாமல் பலருக்கும் உதவிகரமாக இருந்த டாக்டர் அல்ஹாஜ் பழநிபாபா அவர்கள் சில மதவெறிக் கும்பல்களாலே கொல்லப்பட்டிருக்கிறார்கள். வன்மையாக இதைக் கண்டிக்கிறோம். அதேபோல அண்மையிலேகூட இந்த சென்னைப் பகுதிகளிலே ஒரு அறக்கட்டளை நடத்துகிற ஒரு மேனிலைப் பள்ளியினுடைய தாளாளராக இருந்த சிவா என்பவர் கொல்லப்பட்டிருக்கிறார். ஆகவே, கூலிக்காரக் கொலைப் படையினுடைய அட்டூழியமானது முற்றிலும் களைந்தெறியப்பட வேண்டும். கலைஞர் அவர்கள் அதிலே சிறப்புக் கவனம் செலுத்தி, தவறு இழைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டு, பொதுவாக எங்களைப் பொறுத்த அளவிலே, 'சம்பாப் பயிருக்கான நாத்து, இதைச் சகலரும் மனதார வாழ்த்து' என்று சொல்லக்கூடிய அளவிற்கு, வர இருக்கின்ற வரவு-செலவுத் திட்டத்தினுடைய வசந்தமாக, அந்த வசந்தத்தினுடைய குயிலோசையாக இந்த ஆளுநர் உரையானது திகழ்ந்திருக்கிறது என்று பாராட்டி, வரவேற்று அமர்கின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. முபாரக் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, அதனுடைய எதிர்காலத் திட்டங்களை, கொள்கைகளை முதல் கவர்னர் உரையிலே வெளியிட்டு, அதனைத் தொடர்ந்து அவர் அளித்த வரவு-செலவுத் திட்டத்திலேயும் செயல்படுத்திக் காட்டியிருக்கின்றார்கள்.

எல்லா மக்களுக்கும் தேவையான குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை அளித்தல், வேலவாய்ப்பு வசதிகள் உருவாக்குதல், வறுமை ஒழித்தல்,

மாநிலத்தை விரைவாகத் தொழில் மயமாக்குதல், அடிப்படைக் கட்டமைப்பு என்று சொல்லக்கூடிய infrastructure வசதிகளை மேம்படுத்துதல், ஊழல் அற்ற. ஒழுங்கீனம் அற்ற ஆட்சியை அமைத்தல் என்ற இந்த அடிப்படைத் திட்டங்களோடுதான் கடந்த வரவு-செலவுத் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மாமன்றத்திலே அளித்தார்கள். அந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி 18-7-1996 அன்று ஹிந்து பத்திரிகையிலே தலையங்கம் எழுதியவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

``The net effect of the Budgetary concessions proposed to promote industrial growth in the State will entail a revenue loss of Rs.306 crores. The reduction of the tax on capital goods for power generation in the State for Government approved power generation projects from 12% to 3% is seen as an incentive for industry."

என்று.

முற்பகல் 11-50.

முன்னாள் நிதித் துறைச் செயலாளராக இருந்த திரு. எஸ். வெங்கிடராமணன் அவர்கள் குறிப்பிடுகிறபோது,

`The latest Budget represents this Government's initial forays in the task of speeding up growth of Tamil Nadu, its emphasis on social development, encouragement of industrial investment in infrastructure and agriculture is fully in keeping with the Chief Minister's vision; above all a growth oriented Budget needs more resources. A pragmatics approach to foreign investment informs the speech and the Chief Minister has visualised using various avenues including multi-lateral and public financial institutions.'

என்று அவர்கள் நம்முடைய முதல்வர் அவர்களுடைய வரவு செலவுத் திட்டத்திற்குப் பாராட்டுத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்த அடிப்படையிலேதான் வரப்போகிற 9-வது ஐந்தாண்டு திட்டத்திலே நம்முடைய முதல்வர் அவர்கள் நம்முடைய மாநில திட்டங்களை மத்திய அரசுக்கு அறிவித்திருக்கின்றார்கள். மத்திய அரசு அதனையெல்லாம் ஏற்றுக்கொண்டு உதவி செய்ய முன்வருமேயானால் வருகிற ஐந்து ஆண்டுகளில் நம்முடைய தமிழகத்தை பொன் கொழிக்கும் பூமியாக அமைக்கின்ற வகையில் அமையும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





எதிர்க்கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் சில குறைபாடுகளை எடுத்துக் கூறினார்கள். அது தவறு என்று நான் சொல்லவில்லை. ஆங்காங்கே காணப்படுகின்ற குறைபாடுகளை எடுத்துச் சொல்லுவதுதான் எதிர்க்கட்சிகளுடைய கடமை. அப்படி எடுத்துச் சொன்னால்தான் ஆளும் கட்சிக்கும் அது சரியான வழிகாட்டுதலாக இருக்கும் என்பதை ஏற்றுக்கொள்ளக்கூடியவன் நான். அதே நேரத்திலே கடந்த 6 மாதங்களில் இந்த அரசு செய்திருக்கின்ற சாதனைகள் ஆங்காங்கே ஆளுநர் உரையிலே கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருந்தால் நான் மகிழ்ச்சியடைந்திருப்பேன். தலைவர் கலைஞர் அவர்கள் இந்த 6 மாத காலத்தில் கிராமப்புற வீடுகளுக்கு வீட்டடி மனை வரியை ரத்து செய்திருக்கின்றார்கள். ஏறத்தாழ 34 இலட்சம் ரூபாய் அவர்களுக்கு பாக்கி இருந்ததை ரத்து செய்திருக்கின்றார்கள்.

ஏழைப் பெண்கள் திருமணத்திற்காக 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவி அளிக்கிறார். அதிலேயும், ஏற்கெனவே இருந்த அரசு திருமண மண்டபங்களில் திருமணம் நடந்தால் அவர்களுக்கு அந்த உதவி இல்லையென்று அறிவித்திருந்தது. அதை மாற்றி தலைவர் கலைஞர், திருமண மண்டபங்களிலே சில ஏழை வீட்டுத் திருமணங்கள் நடைபெறுகின்றன, இலவசமாக திருமண மண்டபம் எடுக்கிறார்கள், அவர்களுக்கும் அந்த நிதியுதவி உண்டு என்று சட்டத்தைத் திருத்தி அரசாணை பிறப்பித்து அந்த உதவியை செய்திருக்கின்றார்கள்.

கர்ப்பிணிப் பெண்களுக்கு 500 ரூபாய் வழங்குகின்ற திட்டத்தைச் செயல்படுத்தியிருக்கின்றார். குடும்பத் தலைவர் இறந்தால் 7,500 ரூபாய் உதவி வழங்குகின்ற அந்த திட்டத்தைச் செயல்படுத்தியிருக்கின்றார். விபத்தில் இறந்தவர்களுக்கு, ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் சிறுவர்களாக இருந்தாலும் பெரியவர்களாக இருந்தாலும், 15 ஆயிரம் ரூபாய் அரசாங்கம் நிதியுதவி வழங்கும் என்ற திட்டத்தைச் செயல்படுத்தியிருக்கின்றார். பிளஸ் 2 வரையிலே படிக்கின்ற மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்குகின்ற திட்டத்தை இதே மாமன்றத்திலே நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நம்முடைய தலைவர் அறிவித்திருக்கின்றார். ஏறத்தாழ 306 கோடி ரூபாய் வரையில் வரிச் சலுகை அளித்திருக்கின்றார். மதுவிலக்கு பிரச்சாரத்திற்கு பெண்களை நியமிப்பதற்கு திட்டமிட்டு இன்றைக்கு அந்தத் திட்டதைச் செயல்படுத்தியிருக்கின்றார். ஊழலைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க இராமானுஜம் குழு

நியமிக்கப்பட்டிருக்கிறது. மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பான புகார்களை விசாரிக்க மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. புதிய தொழிற்சாலைகளுக்கான ஒப்பந்தங்கள் பல போடப்பட்டிருக்கின்றன. நான்கு தனியார் நிறுவனத்துடன் மின்சாரம் வாங்குவதற்கான ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் 20 இடங்களில் குறுகிய கால மின்சார உற்பத்தித் திட்டங்களை தனியார்த் துறையிலே அமைப்பதற்காக ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன, ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. உள்ளாட்சித் தேர்தல் நடத்தி முடிக்கப் பட்டிருக்கிறது. கூட்டுறவுத் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றன. உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றன. ரேஷன் கடைகளில் அத்தியாவசிய பண்டங்கள் வழங்குவதில் முறைகேடுகள் தவிர்க்கப்பட்டு, புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

வெள்ள நிவாரணப் பணிகளை உடனுக்குடன் தொடங்கி நம்முடைய அரசு செயல்படுத்தியிருக்கிறது. வெள்ள நிவாரண நிதிக்காக நம்முடைய முதல்வர் அவர்கள் நிதி கேட்டு, அந்த நிதி ஏராளமாக பொது மக்களாலும், தொழில் அதிபர்களாலும் வழங்கப்பட்டு ஒரு பெரும் நிதியை முதல்வர் சேர்த்துக் காட்டியிருக்கிறார்கள்.

அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு சம்பளக் குழு பரிந்துரைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும் என்பதை நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அரசு ஊழியர் இறந்தால் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-55

அதைவிட இன்னொன்று, புதுமையான திட்டம், எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டம், ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இறந்துவிட்டால்கூட அவரது குடும்பத்தாருக்கு 25,000 ரூபாய் சன்மானம், உதவி வழங்கப்படும் என்று திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள். இந்த ஆறு மாத காலத்திற்குள்ளாக 17,000 ஆசிரியர்கள், 12,000 ஆரம்பப் பள்ளியாசிரியர்கள், 5,000 உயர்நிலைப் பள்ளியாசிரியர்கள் இந்த ஆட்சியிலே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பெரிய மற்றும் சிறியநீர்ப்பாசனத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக **under the Tamil Nadu Water Resources Consolidation Project**-திட்டத்தின் கீழ் 807 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, இப்போது இருக்கக்கூடிய திட்டங்களைச் சீர் செய்வதற்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.



ஊழல் செய்தவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. 18 கோடி ரூபாய் செலவில் 300 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கு இந்த அரசு ஆணை பிறப்பித்து, கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்கு உரிய காலத்தில் இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. இன்னும் பலவற்றை நான் விட்டிருக்கிறேன். இத்தனைத் திட்டங்களை நான் அடுக்கிச் சொல்லியிருக்கிறேன்; ஏறத்தாழ 25, 26 திட்டங்களைச் சொல்லியிருக்கின்றேன். இந்தத் திட்டங்கள் அனைத்தையும் ஆறு மாத காலத்திற்குள்ளேதான் நம்முடைய ஆட்சி நிறைவேற்றியிருக்கின்றது. அவைதான் ஆளுநர் அவர்கள் உரையிலே ஆங்காங்கே சுட்டிக்காட்டித் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த உரை மிகச் சிறந்த உரை, இந்த நாட்டுக்கு, இந்த அரசு செய்திருக்கிற சாதனைகளை விளக்கித் தந்திருக்கிற உரை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

வெள்ள நிவாரணத்திற்காக மத்திய அரசு உரிய வகையிலே உதவிட வில்லை என்பதை நான் இங்கே மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வேறு மாநிலங்களுக்கு எல்லாம் பல காலகட்டங்களில் மத்திய அரசு வாரி வழங்கியிருக்கிறது. ஏன், நம்முடைய மாநிலத்திற்கேகூட, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்போது முதலமைச்சராக இருந்தபோது ஒரு முறை கடும் வறட்சி ஏற்பட்டது, அதற்காக முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் பல கோடி ரூபாய்களை வாரி வழங்கினார்கள். ஆனால் இப்போது ஏற்பட்டிருக்கிற இந்த வெள்ளச் சேதத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, இன்னும் மத்திய அரசு நிதியுதவியைத் தரவில்லை என்பதை நான் மிகுந்த வேதனையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கடந்த பல ஆண்டுகளில் மத்திய அரசு வேலைவாய்ப்பிற்காகப் பல திட்டங்களைப் போட்டது உண்மை. கடந்த சில ஆண்டுகளாக வேலைவாய்ப்பிற்காக எந்தத் திட்டமும் மத்திய சர்க்காரால் உருவாக்கப்படவில்லை; அது உருவாக்கப்பட வேண்டும். அதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டு, மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [1997 சனவரி 29

அடுத்து, நம்முடைய மாநிலத்திற்கு மத்திய நிதியிலிருந்து முதலீடு குறைந்து கொண்டு வருவதற்கு ஒரு ஆதாரத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் சார்பில் தமிழ்நாட்டில், Joint Sector-ல் 1989-90-ல் 7.96 சதவீதம் முதலீடு இருந்தது ஆனால், இந்த முதலீடு 1994-95-ல் 0.36 சதவீதமாகக் குறைந்து போய்விட்டது என்பதைச் சுட்டிக்காட்டி, ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் சார்பில் தமிழகத்திற்கு அதிக முதலீடு பெறுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்ற கொள்கையை நாம் தொடர்ந்து முழங்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால், காலப்போக்கில் மத்திய அரசானது மாநில அரசுக்கு இருக்கக்கூடிய உரிமைகள் பலவற்றை எடுத்துக்கொண்டு வருகிறது என்பதற்கு ஓரேயொரு எடுத்துக்காட்டை நான் சொல்ல விரும்புகிறேன். உள்ளாட்சிகள் சம்பந்தப்பட்ட தேர்தல்களை நடத்துவதற்கு மத்திய அரசு பாராளுமன்றத்திலே சட்டம் கொண்டு வந்தது. அதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கத்திலேயே தடுத்து நிறுத்த முயற்சி எடுத்தார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களாக அப்போது இருந்த நாங்கள் நாடாளுமன்றத்தில் திருத்தத் தீர்மானம் கூடக் கொண்டு வந்தோம். இது மாநில அரசுக்கு உரிய அதிகாரம், நீங்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்த வேண்டும் என்பதை Mandatory-யாக ஒரு கட்டாயமாக ஆக்குங்கள்; அதை மட்டும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுங்கள், அதை எப்படி நடத்துவது, நேரடித் தேர்தலா, மறைமுகத் தேர்தலா, மூன்று அடுக்குத் திட்டமா, இரண்டு அடுக்குத் திட்டமா என்பதை அந்தந்த மாநில அரசுகளுக்கு விட்டுவிடுங்கள், எங்களுடைய தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தலைவர் காமராஜர் அவர்கள் மூன்று அடுக்குத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள், அதிலே, இரண்டு அடுக்குகளுக்குத்தான் தேர்தல்; மூன்றாவது அடுக்கு என்று சொல்லுகின்ற மாவட்ட அளவிற்குத் தேர்தல் கிடையாது, அந்தத் திட்டம் எங்களுடைய மாநிலத்திற்குப் பொருந்துகிறது, ஆகவே, ஒரு மாநிலத்திற்கு மாநிலம் இந்தத் திட்டம் வேறுபடலாம், ஆகையினாலே, காமராசருடைய திட்டத்தை ஆதரிக்கின்ற என்னுடைய மாநில அரசுக்கு இந்த அதிகாரத்தை வழங்கிவிடுங்கள், இங்கே அதை வகுத்துக்கொள்கிறோம், என்று திருத்தத் தீர்மானத்தைக்கூட என்னுடைய பெயரிலே கொடுத்தேன்.



1997 சனவரி 29] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

நண்பகல் 12-00

ஆனால் எல்லாக் கட்சிகளுமே சேர்ந்து என்னுடைய திருத்தத் தீர்மானத்தை தோற்கடித்தார்கள். ஆகவே, இப்போது இந்த உள்ளாட்சி சம்பந்தப்பட்ட அதிகாரத்தை கொஞ்சம் கொஞ்சமாக மைய சர்க்கார் எடுத்துக் கொண்டு விட்டது என்ற குற்றச்சாட்டை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. எனவே, இப்போது பாராளுமன்றத்திலே நிறைவேற்றி இருக்கிற சட்டமுன்வடிவு சட்டமாகிவிட்டது. அந்தத் சட்டத்தைத் தொடர்ந்து மாநில அரசு இந்தத் தேர்தலை நடத்துவதற்கு முன்பு, சில திருத்தங்களைக் கொண்டு வர இயலாத சூழ்நிலை இருந்தாலும்கூட, இனி வருகிற காலத்தில், இந்தத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று எல்லா உறுப்பினர்களும் தெரிவித்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, மறைமுகமான தேர்தல் என்ற அடிப்படையிலேகூட, இப்போது உள்ளாட்சி மன்றத் தலைவர்களுக்கும், ஒன்றியத்துக்கும் தொடர்பு கிடையாது; ஒன்றியத்திற்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும் தொடர்பு கிடையாது, ஆகவே, ஊராட்சி மன்றத் தலைவர்களே, ஒன்றியத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதும் மறைமுகமான தேர்தலில்தான், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் எல்லாம் மாவட்டத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதும் மறைமுகத் தேர்தலில்தான் (Indirect Election). ஆகவே இப்படிப்பட்ட ஒரு சட்டத் திருத்தத்தை நம்முடைய மாமன்றத்திலே கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்துறையைப் பொறுத்தவரையில் ஒருசில ஆலோசனைகளை, அல்ல, என்னுடைய கருத்துக்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதை நான் வரவேற்கிறேன். அந்தக் குழு மாதம் ஒருமுறை கண்டிப்பாக தொழில்முனைவோரைச் சந்திப்பதற்கு ஒரு நாள் குறித்து அவர்களைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தொழில் முனைவோர் இந்தக் குழுவையோ, அல்லது முதலமைச்சரையோ பார்க்க முடியவில்லை என்ற ஏக்கம் அவர்களுக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காக இந்தக் கருத்தை நான் தெரிவிக்கிறேன்.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதி-Industrially Backward-என்பது நம்முடைய ஆட்சி காலத்தில் வட்டவாரியாக `Taluk Basis' அறிவிக்கப் பட்டிருந்தது. ஆனால் கடந்த ஆட்சியில் அவசர அவசரமாக, தேர்தலுக்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பு வட்ட அடிப்படையில் 'Taluk Basis' என்று

இருந்ததை மாற்றிவிட்டு, ஒன்றிய அடிப்படையில் என்று அறிவித்து விட்டார்கள். வேண்டுமென்றே சில பேருக்கு உதவி செய்வதற்காக, சில தொகுதிகளில் அவர்களுடைய ஆட்களை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்பதற்காகச் செய்யப்பட்ட மாற்றம் அது. குறிப்பாக, என்னுடைய தொகுதியில், Sivagangai Taluk-Backward பின்தங்கிய பகுதி என்று இருந்தது. அந்த ஆட்சியிலே செய்த மாற்றத்தின் காரணமாக, சிவகங்கை நகரம் பிற்பட்ட பகுதி என்றும், சிவகங்கை ஒன்றியமும், காளையார்கோவில் ஒன்றியமும், பார்வர்டு ஏரியா முன்னேற்றமான பகுதிகள் என்றும் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இதனாலே அந்த ஒன்றியத்துக்கோ, பகுதிக்கோ, அந்தத் தாலுகாவுக்கோ எந்த லாபமும் ஏற்பட முடியாது. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இது குறித்து நான் கடிதம் எழுதியிருக்கிறேன். ஆகவே, சிவகங்கை தாலுகா முழுவதையும் பின்தங்கிய பகுதி என்று அறிவித்தால்தான் மிக மிக பிற்படுத்தப்பட்டிருக்கிற காளையார்கோவில் ஒன்றியமும், சிவகங்கை ஒன்றியமும் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் அடைய வாய்ப்பு ஏற்படும். இதை செய்துதர வேண்டும். அதை விட பொதுவான கொள்கை, தாலுகா அடிப்படையில், வட்டார அடிப்படையில் இந்தப் பின்தங்கிய பகுதிகள் அறிவிக்கப்பட வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, கிராபைட் பற்றி நான் சொல்லியாக வேண்டும். அது என்னுடைய உயிர்ப் பிரச்சினையாக இருக்கிறது. பாராளுமன்றத்தில் நான் பேசும்போதுகூட சொன்னேன் இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட வில்லையென்றால், சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன் என்று ஆனால், துரதிர்ஷ்டவசமாக நான் உயிரோடு இருக்கிறேன். அந்தத் தொழிற்சாலை வந்து கொண்டிருக்கிறது. எனவே, அந்த அளவில் நான் உயிரோடு இருக்கிறேன். நம்முடைய முதலைமைச்சர் அவர்கள் இந்தத் தொழிற்சாலையை பெரிய அளவில் கொண்டுவரவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு 'தமிழ்நாடு கிராபைட் கார்ப்பரேஷன்' என்று அறிவித்திருக் கிறார்கள். ஆனால், அது இன்னும் செயல்பட ஆரம்பிக்கவில்லை என்பதைத் தெரிவிப்பதோடு, இன்னும் 'டாமின்' நிறுவனமே அந்த கிராபைட்டை கையில் வைத்திருந்து, அந்த நிறுவனம் இப்போது அங்கிருக்கக்கூடிய Purification Plant—சுத்திகரிப்பு தொழிற்சாலையை 'டாமின்' நிறுவனமே வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புவதாக அறிகிறேன். இந்தத் தமிழ்நாடு கிராபைட் கார்ப்பரேஷனோடு மைனிங்-கும் இருக்கவேண்டும். அந்த சுத்திகரிப்பு தொழிற்சாலையும் கார்ப்பரேஷனுக்கு இருந்தால்தான் அதைத் தொடர்ந்து Streamline-ஆக வரக்கூடிய மாற்றுத் தொழிலை அந்த கிராபைட் கார்ப்பரேஷன்



துவக்குவதற்கு இன்னும் பல ஆண்டுக் காலம் ஆகும். ஆகவே, அந்த மைனிங் உரிமையையும், அதைப்போல சுத்திகரிப்பு தொழிற்சாலை அமைக்கப்பட்டிருக்கிறதே அதையும் அந்த நிறுவனத்திற்கே ஒப்படைக்க வேண்டும்.

இன்னொன்று, இதிலே நிறைய ஊழல்கள் நடந்திருக்கின்றன. எல் அண்டு டீ நிறுவனத்திற்கு கான்டிராக்ட் கொடுக்கப்பட்டது. 1994-ஆம் ஆண்டுக்குள் அவர்கள் முடித்து, அதை ஒப்படைக்க வேண்டும். இப்போது 1997 வந்து விட்டது. இன்னும் அதை ஒப்படைக்கவில்லை. ஒரு நாளைக்கு 28 டன் உற்பத்தி இருக்க வேண்டும். இன்று வரையில் 2 டன் கூட உற்பத்தி வரவில்லை. ஆகவே, அந்தக் காண்டிராக்ட்டிலே ஒரு தவறு நடந்திருக்கிறது, ஊழல் நடந்திருக்கிறது. அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** நம்முடைய மாண்புமிகு கைத்தறி துறை அமைச்சர் அவர்கள் கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் நட்டத்திலே நடைபெற்று வருகின்றன என்றும், அவற்றை மறுபடியும் உயிர்ப்பிக்க முடியாது என்றும் ஒரு கருத்தை அடிக்கடி தெரிவிக்கின்றார்கள். எங்களுடைய பகுதியிலே தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் பொறுப்பிலே இருக்கக்கூடிய சோமசுந்தரம் நூற்பாலை பழுதடைந்து கிடைக்கின்றது. இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளையெல்லாம் உயிர்ப்பிப்பதற்கு ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா 200 கோடி ரூபாய் வரையிலும் கடன் தருவதற்குத் தயாராக இருப்பதாகவும், அந்த 200 கோடி ரூபாயையும் பாண்டுகளாகவே அவர்கள் வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும், அதற்கு தமிழ்நாடு அரசு கேரண்டி மட்டும் கொடுத்தால் போதும் என்று சொல்வதாகவும் எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. அது சரியோ, தவறோ எனக்குத் தெரியாது. இதையும் விசாரித்து, அப்படியிருக்குமானால் அந்த உதவியை நமது அரசு பெறலாம், இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளை உயிர்ப்பிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக மீனவர்கள் பிரச்சினையில் ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும், உரையை முடித்துக்கொள்ளுங்கள். நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) சரி, ஒரு வரியில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கச்சத் தீவு பிரச்சினையைப் பற்றி மிகத் தெளிவாக இந்த மன்றத்திலேயும் தெரிவித்து இருக்கின்றார்கள், வெளியிலேயும் தெரிவித்திருக்கின்றார்கள். கச்சத் தீவிற்கு நம்முடைய மீனவர்கள் செல்வதற்கும், மீன் பிடிப்பதற்கும், அங்கே விழாக்களை நடத்துவதற்கும் 1974-ல் வழங்கப்பட்ட உரிமை மீண்டும் மத்திய சர்க்காரால் வழங்கப்பட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக சேது சமுத்திரத் திட்டத்தினை நிறைவேற்றினால் இந்தப் பிரச்சினை முழுமையாகத் தீர்ந்து விடுமென்ற காரணத்தால், இந்த சேது சமுத்திரத் திட்டத்தினை— அது பேரறிஞர் அண்ணா அவர்கள் விரும்பிய திட்டம்; எழுச்சி நாள் நடத்தி அவர்கள் கேட்டுக்கொண்ட கோரிக்கைகளிலே இது ஒன்றுதான் நிறைவேறாமல் இருக்கின்றது; நெய்வேலி வந்துவிட்டது. சேலம் வந்துவிட்டது ; தூத்துக்குடி துறைமுகம் வந்துவிட்டது; இந்தச் சேது சமுத்திரத் திட்டம் மட்டும் இன்னும் வரவில்லை. அந்தத் திட்டத்தினை நிறைவேற்றினால் இந்தியாவுக்கு பாதுகாப்பு; இலங்கைக்குப் பாதுகாப்பு; மீனவர்களுக்கும் பாதுகாப்பு. இந்தியாவுக்கும் செழிப்பு ; தமிழகத்திற்கும் செழிப்பு ; என்னுடைய முகவை மாவட்டமும் செழிப்படையும் என்ற காரணத்தினால் இந்த சேது சமுத்திரத் திட்டத்தினை நிறைவேற்றிட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களுடைய அரசைப் பயன்படுத்தி, செல்வாக்கைப் பயன்படுத்தி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தினை முழுமனதோடு வரவேற்று, ஆதரித்து விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. என். வல்லரசு.

**திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 8 மாத கால கலைஞருடைய ஆட்சி, ஒரு நீதியான, நேர்மையான, ஊழலற்ற ஆட்சி என்ற செய்தி தமிழகத்தின் குக்கிராமங்களில் வாழ்கின்ற மக்களுக்கு மட்டுமல்ல, புதுக்கோட்டை தொகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கும் சென்றடைந்திருக்கின்றது என்பதை நான் தெரிசிதைக்கொள்வதில் கிழ்ச்சியடைகின்றேன். அந்த அளவுக்கு கவர்னர் உரையானது தமிழக மக்களுடைய, அனைத்து தரப்பு மக்களுடைய, மிகுந்த நம்பிக்கையைப் பெற்றுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று, ஒரு மாநில அரசு, இந்த மாநில மக்களுடைய அடிப்படைத் தேவைகளைத் திட்டமிட்டு நிறைவேற்றி வருகிறது என்றால், அது தமிழக



முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள அரசுதான் என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில் ஒரு குறிப்பிட்ட கால அளவு நிர்ணயம் செய்து, கி.பி. 2000-க்குள் தமிழ் நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் அத்தனை பேர்களுக்கும் இலவச தொடக்கக் கல்வித் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

'கல்லாமையை இல்லாமை ஆக்குவோம்,' என்ற அறிவிப்பினை இந்தக் கவர்னர் உரையிலே, கொள்கைக் குறிப்பிலே படிக்கின்றபோது பெருமைப் படுகின்ற ஒரு நிலை ஏற்படுகிறது. கல்வித் துறை எளிமையாக்கப்பட வேண்டுமென்பதற்காக பள்ளிக் கல்வித்துறை, உயர் கல்வித்துறை என்று இரண்டாக மாற்றி, இன்று கல்வித் துறையே பெருமைப்படுகிறது என்றால், அது மிகையாகாது. கல்வித் துறையை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான்தான், சட்டமன்றத்திலே 1989-90-லே வைத்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-10

அதேபோன்று, அடிப்படை வசதியான மருத்துவ வசதி அனைவருக்கும் கி.பி. 2000-ஆம் ஆண்டிற்குள் செய்துதரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு அரசும் திட்டமிட்டு, சவால் விட்டு, இப்படி 2000-ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் மருத்துவ வசதி, குடிநீர் வசதி செய்து தரப்படும் என்று அறிவிக்கவில்லை. ஆனால், கலைஞர் அவர்களுடைய ஆட்சிதான், இப்படி திட்டமிட்டு, தமிழக மக்களுடைய அடிப்படைத் தேவையான கல்வி, மருத்துவம், குடிநீர் போன்றவவற்றைக் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் நிறைவேற்றித் தருவோம் என்ற ஒரு மிகப் பெரிய சவாலை ஏற்றிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால், நான் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடத்தில் ஒரு கோரிக்கை வைக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற விவசாயிகள் உங்களைக் கேட்கிறார்கள், 'நீங்கள் 2000-ஆம் ஆண்டிற்குள் பல்வேறு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருவதாக அறிவிப்புத் தந்திருக்கிறீர்கள்; ஆனால், தமிழ்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற விவசாயிகளாகிய எங்களுக்கு கி.பி. 2000-ஆம் ஆண்டிற்குள் அனைத்து மோட்டார் பம்பு செட்டுகளுக்கும் மின்சார இணைப்பை வழங்க வேண்டும்' என்று கேட்டு அது குறித்த அறிவிப்பினை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடமிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. பி. என். வல்லரசு] [1997 சனவரி 29

கடந்த கவர்னர் உரையிலே உள்ளாட்சித் தேர்தல், கூட்டுறவுத் தேர்தல் ஆகியவை நடத்தப்படும் என்று சொல்லப்பட்டு, அதற்கேற்ப இந்த கவர்னர் உரைக்கு முன்னதாகவே, அந்தச் சாதனையை கலைஞர் அவர்களுடைய அரசு நிறைவேற்றியிருக்கிறது. உள்ளாட்சி மன்றத் தேர்தல், கூட்டுறவுச் சங்கத் தேர்தல் ஆகியவை நடத்தப்பட்டு, அங்கே மக்களுடைய பிரதிநிதிகள், மக்களுடைய அடிப்படை வசதிகளைச் செய்து தருகின்ற அளவிற்கு ஒரு நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. உள்ளாட்சி நிர்வாகங்களுக்கு அதிகப்படியான அதிகாரம் வழங்க முற்பட்டிருக்கிறீர்கள். ஆனால், இன்றைய தினம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன பொறுப்பு; என்ன அதிகாரம் இந்த உள்ளாட்சி நிர்வாகங்களிலே இருக்கின்றது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உட்பட்டுதான் ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவை இருக்கின்றன. அதனால், மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டியவராக சட்டமன்ற உறுப்பினர் இருக்கின்றார். அங்கே பல்வேறு நலத்திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லையென்றால், அங்கே இருக்கின்ற ஊராட்சி ஒன்றியப்பெருந்தலைவர், 10, 12 ஒன்றியத் தலைவர்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத காரணத்தினால் ஒன்றியத்திலே இருக்கின்ற பெருந்தலைவர்கள் அத்தனை பேரும், ஒன்றியக் கவுன்சிலர் என்று சொல்லப்படுகின்ற 10, 12 பேரைத் திருப்திப்படுத்தினால் போதும் என்கிற நிலைமை இருக்கின்ற காரணத்தினால், மக்களுக்குப் பதில் சொல்கின்ற உரிமை, கடமை அவர்களுக்கு இல்லை. எனவே, ஒன்றியப் பெருந்தலைவர்கள் நடத்துகின்ற கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினரும் உட்காரலாம், அமரலாம் என்ற நிலையோடு, அதிலே எடுக்கின்ற நடவடிக்கைகள், மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கின்ற அளவிற்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Voting Power அவர்களுக்குத் தரப்படவேண்டும், அதுமட்டுமல்ல, திட்டங்களைப் பகிர்கின்றபோது சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஆலோசனையைப் பெறவேண்டும். எங்களுக்குத்தான் மக்களுக்கு உள்ள கஷ்டங்கள் தெரியும். மக்களுக்கு எந்தெந்த வகையில், என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பது எங்களுக்குத்தான் தெரியும். எந்தெந்த வகையில் மக்கள் எங்கெங்கு கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எங்களுக்குத்தான் தெரியும். 12, 13 ஊராட்சி ஒன்றியக் கவுன்சிலர்களைத் திருப்திப்படுத்துகின்ற நிலை அவர்களுக்கு இருக்கின்ற காரணத்தினால், மக்கள் பிரச்சினைகளில் அவர்களால் அக்கறை செலுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிய அதிகாரங்களை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1997 சனவரி 29] [திரு. பி. என். வல்லரசு]

அடுத்தபடியாக, பொது விநியோகம். பொது விநியோகத்திலே இன்றைய தினம் முதலமைச்சர் கலைஞர் அரசு சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரையும், இரண்டு அமைச்சர்களையும் அனுப்பி, ஆய்வு மற்றும் ஆலோசனைக் கருத்தரங்கங்கள் நடத்தி, சீரான முறையிலே பொது விநியோகம் நடத்தப்பட வேண்டுமென்று கலைஞர் அரசு முற்பட்டாலும் கூட, அடிப்படையிலே பொது விநியோகத்திலே குறைபாடுகள் இருக்கின்றன. மக்கள் கத்துகிறார்கள்; கதறுகிறார்கள். எனவே, பொது விநியோகத்திற்கென்று தனியாக ஒரு அமைச்சரை நியமித்தால் கூட, நான் அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் எந்தக் குறையும் ஏற்படப் போவதில்லை, இந்த ஒரேயொரு குறைபாட்டைத் தவிர, ஏழையெளிய மக்கள், பொது விநியோகம் சரிவர நடைபெறாத காரணத்தினால், கத்துகிறார்கள், கதறுகிறார்கள். நீங்கள் அணைகளைக் கட்டலாம், பாலங்கள் போடலாம். சாலைகள் போடலாம். ஆனால், அன்றாட வயிற்றுப் பிரச்சினையைச் சந்திக்கின்ற ஏழையெளிய மக்கள், பொது விநியோகம் சரியாக இருந்தால்தான் நம்மைப் பாராட்டுவார்கள். எனவே, பொது விநியோகத்திற்கு எனத் தனியாக ஒரு அமைச்சரை நியமிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம், காவல் துறையில், இந்த 8 மாத காலத்தில் ஒரு தனி மாற்றத்தைக் காண முடிகிறது. "ரவுடியிசம்" தமிழ்நாட்டிலே ஒழிக்கப்பட்டு வருகிறது. இன்று தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சிறுசிறு நிகழ்ச்சிகள் நடந்தாலும்கூட, சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட்டு, பொது அமைதி நிலைநாட்டப் பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, ஊழலை ஒழிக்கின்ற முயற்சியில் இந்த அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளை நான் பாராட்டுகிறேன். இலஞ்ச ஒழிப்புத் துறையும், காவல் துறையும் இன்றையதினம் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களுடைய வீட்டிலிருந்து 26 கிலோ தங்கம், 100 கிலோவிற்கு மேற்பட்ட வெள்ளி, வைர நகைகள், 10 ஆயிரம் பட்டுச் சேலைகள் போன்றவற்றைக் கைப்பற்றியிருப்பதைத் தமிழ்நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள்.

ஆனால் அதேசமயத்தில், உரிய காலத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், இலஞ்ச ஒழிப்புத் துறை, உரிய நேரத்தில், முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வீட்டிலே பரிசோதனை செய்திருந்தால், இன்னும் சில ஆயிரம் கோடிகளை மீட்டு இருக்கலாமே என்கின்ற ஆதங்கம் தமிழ்நாட்டு மக்களுக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12-15

விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கு ஒரு உயர்மட்ட கமிட்டி அமைக்க வேண்டுமென்று சென்ற கவர்னர் உரையிலேயேதான் கூறினேன். இன்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். விலைவாசியைக் குறைக்க ஓர் உயர்மட்டக் குழுவும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் முன்னேற்றத்திற்கு ஓர் உயர்மட்டக் குழுவும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுடைய வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன். வணிகர்களுக்கு அதிகமாக இந்த அரசு சலுகை செய்திருக்கிறது என்ற ஏக்கப் பெருமூச்சு விவசாயிகளிடத்திலே இருக்கிற காரணத்தினால், விவசாயிகளினுடைய வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய உசிலம்பட்டித் தொகுதியில், 58 கிராமக் கால்வாய்த் திட்டத்தை முதலமைச்சர் கலைஞரான நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த 58 கிராமக் கால்வாய்த் திட்டத்திற்கு இன்னும் அடிக்கல் நாட்டுவிழா நடக்காத காரணத்தினால், அந்தத் தொகுதி மக்கள் இன்னும் சந்தேகப்படுகிற ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. 34 கோடி ரூபாயிலே ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நீர்ப்பாசனத் திட்டத்தை வழங்கி இருக்கிறீர்கள். அதற்குரிய அடிக்கல் நாட்டுவிழாவை, வரலாற்று நாயகராகிய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் நாட்ட வேண்டும் என்று அந்தத் தொகுதி மக்கள்—உசிலம்பட்டித் தொகுதி மக்கள்—விரும்புகிற காரணத்தினால், மிக விரைவில் இந்த 58 கிராமக் கால்வாய்த் திட்டம் தொடங்க, பணம் அனுமதிக்கப்பட்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில், முதலமைச்சர் அவர்கள், அடிக்கல் நாட்டுவிழாவிற்கு மிகவிரைவிலே வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



தொழிற்சாலைகள் இல்லாத உசிலம்பட்டித் தொகுதியை, மிகவும் பிற்பட்ட தொகுதியாக நீங்கள்தான் அறிவித்தீர்கள். ஆனால், கடந்த ஆட்சியில், ஜெயலலிதா ஆட்சியில், அன்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. தா. கிருட்டிணன் அவர்கள் சொன்னதைப்போல, என்னுடைய தொகுதியையும் மாற்றியமைத்து விட்டார்கள். மிகவும் பிற்பட்ட தொகுதி என்று கலைஞர் அறிவித்ததை, ஜெயலலிதா அரசு மாற்றியமைத்துவிட்டது. எனவே, உசிலம்பட்டித் தொகுதியை, மிகவும் பிற்பட்ட தொகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே எங்கள் கட்சியின் சார்பில், எனக்கு முன்னர் பேசிய தோழர்கள், இந்த கவர்னர் உரையில் ஒருசில பகுதிகளைப் பற்றிய விவரங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பிறிதொரு பகுதியைப் பற்றிய விஷயங்களை இப்போது நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நீண்டகால அரசியல் கனவாக, முழக்கமாக இருந்து வருவது, வளமான தமிழகம் என்பதுதான். ஒரு வளமான தமிழகம் என்பது, மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாக, நோக்கமாக இருந்துவருகிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அந்த வளமான தமிழகத்தை உருவாக்குவதற்குரிய சிலபல சமூக, பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்ற ஒரு நிலையில், ஒரு மாநில அரசு, கவர்னர் உரையிலேயும், பட்ஜெட்டிலேயும் சில கடமைகளைச் செய்யும். அந்த அடிப்படையிலே, இங்கே முன்வைக்கப்பட்டிருக்கிற இந்த கவர்னர் உரையில், வளமான தமிழகத்தை உருவாக்குவதற்குரிய சில அடிப்படைகளை உருவாக்கியிருக்கிறதா என்பதைத்தான் நாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், பொறுப்பேற்றிருக்கக்கூடிய இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம், தன்னுடைய 8 மாதகால ஆட்சியில் முன்வைத்திருக்கிற இரண்டாவது கவர்னர் உரையாகும் இது. ஓர் அரசாங்கத்தினுடைய முழுமையான நடவடிக்கைகளைப் பற்றிப் பரிசீலிப்பது என்பது, எட்டு மாதகால நடவடிக்கைகளில், ஒரு ஆழ்ந்த பரிசீலனையை செய்துவிடுவது என்பது அவ்வளவு எளிதான ஒன்று அல்ல. அதேநேரத்தில், இந்த 8 மாத காலத்தில், நெடுங்காலமாகத் தேங்கி கிடந்த பல்வேறு பிரச்சினைகளைத்

[திரு. கே. சுப்பராயன்] [1997 சனவரி 29

தீர்த்து விடுவார்கள் என்று எதிர்பார்ப்பதும், பொருளற்றதாக, பொருத்தமற்றதாக இருக்கும். 8 மாத கால நடவடிக்கைகளில், என்னென்ன நிகழ்த்த வேண்டுமோ, அவ்வளவு நிகழ்த்தப் பட்டிருக்கிறதா என்ற கண்ணோட்டத்திலிருந்துதான் நான் இந்தப் பிரச்சினையை அணுக விரும்புகிறேன். எனவே, இங்கே முன்வைக்கப்பட்டிருக்கிற இந்த கவர்னர் உரை என்பதில், உப்பே இல்லை என்றோ அல்லது உப்பே கவர்னர் உரை என்றோ நான் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால், இந்த 8 மாதகால நடவடிக்கைகளில், நீண்டகால அரசியல் பொருளாதார நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான சமூக அடிப்படைகள் தோற்றுவிக்கப் பட்டிருக்கின்றனவா என்பதை மட்டுமே நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால், தமிழகத்தினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு என்னென்ன அடிப்படை கட்டுமானங்கள் தேவை என்பது பற்றிய விவரங்கள் இதுவரையில் பரிசீலிக்கப்படவே இல்லை.

நான் இந்த கவர்னர் உரையிலே பார்க்க விரும்புவது — கடந்த நீண்டகாலமாக, தமிழ்நாட்டில் சமூக வளர்ச்சிக்குரிய பயன்படுத்த முடியாத-வாய்ப்புக்கள் என்ன, அந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்வதற்குரிய தடைகள் என்ன என்பது பற்றிய பரிசீலனைகளே இல்லை என்பதுதான் இதுவரையிலே இருந்து வந்திருப்பதாகும்—ஆனால், நான் இந்த 8 மாதகால அனுபவத்தில் என்ன பார்க்கிறேன் என்றால், தமிழ்நாட்டை ஒரு வளமான தமிழ்நாடாக உருவாக்குவதற்கான வாய்ப்புகள் என்ன, அந்த வளர்ச்சிக்குரிய தடைகள் என்ன என்பதைக் கவனிப்பதற்குரிய அரசாங்கமாக, இந்த அரசாங்கம் இருக்கிறது என்பதைத்தான் நான் எடுத்த எடுப்பிலே பார்க்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12-20

எனவே, 8 மாத காலத்தில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டது என்று சொல்லிவிட முடியாது. ஆனால், இந்த 8 மாத காலத்தில் அத்தகைய முன்னேற்றங்களை உருவாக்குவதற்குரிய காலடி எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது என்பது ஒரு நல்ல அம்சம் என்கிற முறையில் அந்த நல்ல அம்சத்தைச் சுட்டிக்காட்டிப் பாராட்ட விரும்புகிறேன். அதேநேரத்தில் எப்போதுமே அவரவர்களுக்கு தங்கள் முதுகு தெரியாது. பிறர்தான் அவர்களுடைய முதுகைப் பார்க்க வேண்டிவரும். ஆளுகிற கட்சிக்கு அவர்களுடைய தவறுகளைப் பார்ப்பதற்குரிய வாய்ப்பு உளவியல் ரீதியாகவே குறைவு என்பதால் பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்கிற முறையில் அந்தப் பொறுப்பான காரியத்தை எதிர்தரப்பிலே



1997 சனவரி 29] [திரு. கே. சுப்பராயன்]

செய்யவேண்டிய தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் எங்களுக்கு இருக்கிற காரணத்தினால் நீங்கள் பார்க்கத் தவறிய சில விஷயங்களை சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையிலே நான் சில குறிப்பான விமர்சனங்களை முன்வைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக, தமிழ்நாட்டில் மிக முக்கியமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒரு விஷயம் - மத்தியிலே இருக்கின்ற ஐக்கிய முன்னணி அரசுகூட கிராமப்புறத்திற்குத்தான் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது. கிராமப்புற வளர்ச்சிக்கு ஐக்கிய முன்னணியின் சி.எம்.பி.-யிலேகூட கிராமப்புற வளர்ச்சியிலே மிகுந்த அக்கறை செலுத்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கு 9-வது 5 ஆண்டுத் திட்டத்தினுடைய அணுகுமுறையிலேகூட கிராமிய முன்னேற்றத்திற்கும் கிராமப்புற வளர்ச்சிக்கும் முக்கியத்துவம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே தமிழ்நாட்டில் கிராமிய வளர்ச்சி குறித்து மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது ஒரு விஷயம் ஆகும். இந்த விஷயத்தில் நான் குறிப்பாகச் சுட்டிக்காட்டுகிற ஒரு விஷயம் என்னவென்றால் தென்னக நதிகளைக் கட்டாயம் இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1960-ஆம் ஆண்டிலே முன்வைக்கப்பட்ட மிகச் சிறந்த ஒரு திட்டம்தான் கங்கை-காவிரியை இணைக்க வேண்டும் என்கிற திட்டம். புகழ்மிக்க நீர்வளப் பொறியாளரான கே.எல். ராவ் அவர்களால் முன்வைக்கப்பட்ட திட்டம் அது. ஆனால் அந்தத் திட்டம் துரதிர்ஷ்டவசமாக இந்தியாவில் நிறைவேற்றப்படவில்லை. அதற்குரிய அக்கறை செலுத்தப்படவில்லை. தேசிய அளவில் அது ஒரு துரதிர்ஷ்டம்தான். ஆனாலும் காரியார்த்தமான ஒரு திட்டம் என்கிற முறையில் ஓரிசாவினுடைய மகாநதியிலேயிருந்து நம்முடைய தமிழகத்தினுடைய பொருணை நதி வரை இணைக்கப்பட வேண்டும் என்று சொல்லுகிறேன். தென்னாட்டின் எல்லா நதிகளையும் கால்வாய்கள் மூலம் இணைப்பதன் மூலம் தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா ஆகிய 3 மாநிலங்களுடைய கிராமிய வளர்ச்சி, கிராமப்புற பொருளாதார வளர்ச்சி உண்மையிலேயே வலுவடையும். அத்தகைய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய செல்வாக்கு நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு. ஏன் இதைக் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், நான் முன்னரே குறிப்பிட்டேன், வளமான தமிழகத்தை உருவாக்குவதற்குரிய திட்ட அடிப்படைகளை நீங்கள் தோற்றுவிக்க வேண்டுமென்றுதான் நான் மாநில முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அதற்கு சில சிலுவைகளைச் சுமக்க வேண்டிவரும். நம்முடைய மாநில

முதலமைச்சர் அவர்கள் சிலுவை சுமப்பதில் ஒன்றும் புதியவர் அல்ல. யாரோ செய்த பாவங்களுக்காக நிறைய சிலுவைகளை அவர் சுமந்திருக்கிறார். அதனால் அவர் இன்றைய தமிழ்நாட்டின் தேவைகளுக்குரிய அடிப்படைகளைத் தோற்றுவிப்பதற்காக சிலபல நெருக்கடிகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் உரிமையோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கும் எப்படி பல நூற்றாண்டுகள் கடந்த பின்னரும்கூட, கல்லணையைப் பற்றி புகழ் பேசப்படுகிறதோ அதைப்போல ஒரு வளமான தமிழகத்திற்கான அடிப்படை கலைஞர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது என்று இருக்கட்டும் என்பதற்காக நான் குறிப்பிட விரும்புகிறேன். அத்தகைய அடிப்படைகளை உருவாக்குவதற்குரிய நீண்ட அனுபவம் உங்களுக்கு உண்டு. உங்கள் அனுபவம் பன்முகத்தன்மை கொண்டது, உங்கள் அனுபவம் ஏற்ற இறக்கங்களைக் கொண்டது. ஆகவே நீங்கள் காலத்தால் செதுக்கப்பட்ட தேர்ந்த சிற்பி என்பதால் தமிழ்நாட்டின் தேவைகளை செதுக்கி நிறைவேற்றுவதற்குரிய அரசியல் உறுதி உங்களுக்கு இருக்கிறது. நீண்ட அனுபவம் உங்களுக்கு இருக்கிறது. உங்கள் காலத்தில் இந்த நிலையைப்பெற தமிழ்நாடு தவறிவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் மிகுந்த அக்கறையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

இவற்றில் நீங்கள் அக்கறை செலுத்த வேண்டும். முழு அக்கறை செலுத்தி உங்கள் செல்வாக்கைச் செலுத்தி தென்னக நதிகளை இணைப்பதன் மூலம் காலம் காலமாக நீங்கள் பேசப்படுவீர்கள் என்பது மட்டுமல்ல, அந்தத் திட்டம் காலம் காலமாகத் தேங்கிக் கிடந்த தமிழகத்தின் பிரச்சினைகள் தீர வழி வகுக்கும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்வதோடு, இன்னொரு மிக முக்கியமான விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது தொழில் துறை வளர்ச்சியில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. நான் தொழில் நகரத்தில் இருந்து வந்த பிரதிநிதி என்ற முறையில் தொழில் துறை வளர்ச்சியில் பல பகுதிகளில் நம்முடைய தமிழகம் முன்னேற வேண்டுமென்பதில் இதுவரையிலும் இருந்த தேக்கம் உடைக்கப்பட்டிருக்கிறது. தேக்கம் உடைக்கப்பட்டு தொழில் துறை வளர்ச்சிக்குரிய அக்கறை செலுத்தப்படுவது தெளிவாகத் தெரிகிறது. இந்த அக்கறை நீண்டு தொடர வேண்டும். தொழில் துறையில் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் பல பிரச்சினைகள் இருக்கின்றன.



நான் திருப்பூர் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு அலுவல்களுக்கிடையில், 'மென்டல் வொரிஸ்'-க்கு இடையில் களைத்து உட்கார்ந்து இருக்கின்றபோது பிரச்சினைகளைச் சொல்லக்கூடாது. சொல்ல முடியாது. எனவே பனியன் தொழில் பற்றி இப்போது குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-25

இன்றைக்கு இந்தியாவினுடைய 70 சதவீதம் பனியன் தேவையை பூர்த்தி செய்கிற அளவுக்கு திருப்பூர் பனியன் உற்பத்தி இருந்தது. இன்றைக்கு வெறும் 15 சதவீதம் தான் உள்நாட்டு தேவைக்குப் பயன்படுத்தப்படுகிறது. பனியன் உற்பத்தியில் தமிழ்நாட்டில் திருப்பூர்தான் மேற்கு வங்கத்தின் பிரதான போட்டியாளர். இந்தியாவிலே இரண்டு மையங்கள் இருக்கின்றன. ஒன்று திருப்பூர், மற்றொன்று மேற்கு வங்கத்தின் கல்கத்தா. கல்கத்தாதான் திருப்பூருக்கு பிரதான போட்டியாளர். அந்தப் பிரதான போட்டியாளரான கல்கத்தா, திருப்பூர் பிடித்திருந்த மார்க்கெட்டை சிறுகச் சிறுகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் அவர்கள் மூலப் பொருளான நூலுக்கு வரி விதிப்பதில்லை. அங்கே பனியனுக்கு உள்நாட்டு விற்பனைக்கு வரியில்லை, வெளி மாநில விற்பனைக்கும் வரியில்லை. ஆனால் தமிழ்நாட்டில் உள்நாட்டு விற்பனைக்கும் டி.என்.ஜி.எஸ்.டி. உண்டு, வெளி மாநில விற்பனைக்கும் சி.எஸ்.டி. உண்டு. இந்த இரண்டு வரிவிதிப்புகளும் இல்லாத அந்த உற்பத்தியாளரோடு தமிழ்நாட்டின் உற்பத்தியாளர் போட்டியிடுவதில் பின்தங்குவதால் தொழில் பாதிக்கப்படுகிறது. அந்தத் தொழில் பாதிக்கப்படுவது குறித்து கலைஞர் அவர்களிடம் நான் என்னுடைய முழு வலிமையைக் கொண்டு கேட்க விரும்புவது, தயவுசெய்து நீங்கள் வரும் பட்ஜெட்டில் கருணை காட்டுங்கள். நீங்கள் கருணை காட்டவில்லை என்றால் திருப்பூர் உண்மையிலேயே பிழைக்காது. தென் மாவட்டங்களில் பல பேருக்கு வேலைவாய்ப்பு அளிப்பது திருப்பூராகும். திருப்பூரில் 3 லட்சம் பேர் பனியன் தொழிலில் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். அப்படி 3 லட்சம் பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கின்ற அந்தத் தொழிலுக்கு சலுகை அளித்தால் இழப்பு கொஞ்சம்தான் வரும். பிறர்போல் இந்த மாநில அரசுக்கு இழப்பை ஏற்படுத்தி நெருக்கடியை உருவாக்குகின்ற கோரிக்கைகளை முன் வைக்கவில்லை. நான் முன்வைக்கின்ற இந்தக் கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றுவதன் மூலம் திருப்பூர் தொழில் வளர்ச்சி அடையும் என்பதை மட்டுமே நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். தயவுசெய்து நீங்கள் காகிதத்தில் எழுதுவதைக்காட்டிலும் நெஞ்சில் எழுதிக் கொள்வது

நல்லது என்று நான் கருதுகின்றேன். நெஞ்சில் எழுதி இதற்கு ஒரு தீர்வு காணவேண்டுமென்றும் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு மிக முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் முதலிலே சொன்னது ஒரு பகுதி. அந்தப் பகுதியோடு இன்னொரு மிக முக்கியமான பகுதியை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

திட்டக் கமிஷனை எடுத்துக்கொண்டால், மத்தியில் மதுதண்டவதே அவர்கள் தலைமையில் ஒரு நல்ல திட்டக் கமிஷன் இருக்கிறது. அதைப்போல, மத்திய திட்டக் குழுவிற்கு இணையான முறையில் மாநிலத்திலேயும் ஒரு நல்ல திட்டக் குழு உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டக் குழுவில், எப்படிக் கருவில் சேயின் நாபிக்கொடி தாயோடு இணைந்து இருக்கிறதோ அதைப்போல எல்லா மாவட்டங்களும் திட்டக் குழுவோடு இணைக்கப்பட வேண்டும் என்பதை நான் அழுத்தமாக வலியுறுத்த விரும்புகிறேன். மாவட்ட வாரியாக, மாவட்டங்களின் இயற்கை வளம் என்ன, மாவட்ட வளர்ச்சிக்கு என்ன தேவை என்று மாவட்டங்களின் வளர்ச்சிக்குத் தேவையானவற்றை மதிப்பீடு செய்ய வேண்டும். மாவட்ட வளர்ச்சியின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உரிய முறையில் திட்டமிடுதல் வேண்டும். திட்டமிடுகின்ற முறை 'மேல் இருந்து கீழ்' என்பதற்குப் பதிலாக கீழிருந்து மேலே வருகிறது என்பதைத் தமிழ்நாட்டில் தங்கள் காலத்தில் தொடங்கி வைக்கப்படவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

மேலும், அந்தந்த மாவட்டங்களில் என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன. மாவட்ட வளர்ச்சிக்கு எது தடையாக இருக்கிறது என்பதைக் கண்டறிவதற்காக மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒன்றை உருவாக்க வேண்டும். மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் தேசியக் கட்சிகள் மட்டுமல்ல, மாநிலக் கட்சிகளும், குறிப்பாக தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் அனைத்துப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய, சட்டமன்ற நாடாளுமன்ற மற்றைய மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய நிரந்தர வளர்ச்சிக் குழுவாக மாவட்ட வளர்ச்சிக் குழு ஒன்றை குறைந்தபட்ச அதிகாரமாவது கொண்ட குழு ஒன்றை உருவாக்க வேண்டும். அந்தக் குழு இரட்டைக் கடமைகளைச் செய்ய வேண்டும். ஒன்று, மாவட்ட வளர்ச்சிக்கான தேவைகள் என்ன என்பதை அது மதிப்பீடு செய்ய வேண்டும். மற்றொன்று வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதைக் கண்காணிக்கின்ற கவுன்சிலாகவும் விளங்கவேண்டும். இந்த அடிப்படையில் மாவட்ட வளர்ச்சிக் குழுக்களை உருவாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, பிறிதொரு பக்கத்தைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற ஒரு சிக்கலான விஷயத்தைப் பற்றி சுதந்திரம் பெற்ற 50-வது ஆண்டிலும், குடியரசு பெற்ற 47-ஆம் ஆண்டிலும் நான் குறிப்பிட விரும்புகிறேன். நமக்கென்று சட்டம் இருக்கிறது. அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகளில் ஒன்று சங்கம் சேர்கின்ற உரிமை. நான் இந்த விஷயத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் செயல்பாட்டில் மிகுந்த நம்பிக்கை வைத்துத்தான் இந்தப் பிரச்சினையை முன் வைக்கிறேன். ஏனென்றால் அரசியல் சாசன ரீதியாக சங்கம் சேர்கிற உரிமை தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிட்ட துறையில் பறிக்கப்பட்டிருக்கிறது. அதுதான், தனியார் மோட்டார் தொழிலாளர்கள் மற்றும் தனியார்த் துறைப் பேருந்துத் தொழிலாளர்களின் உரிமைகள் முற்றிலும் பறிக்கப்பட்டு விட்டன. சங்கத்தில் சேர்ந்ததால், ஈரோட்டில், சத்தியமங்கலத்தில், கரூரில், திருப்பூரில், பழனியில் வேறு பல பகுதிகளில் சங்கம் சேர்ந்த ஒரே 'குற்றத்திற்காக' அவர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டுத் தெருவில் நிற்கிறார்கள். இது அரசியல் சட்டம் violation அல்லவா? அரசியல் சாசன ரீதியான உரிமையை அனுபவிக்க வாய்ப்பு தமிழ்நாட்டில் இல்லையென்ற நிலையை செய்துள்ளார்கள். அப்படி இறக்கி விடப்பட்டவர்கள் உடனடியாக வேலைக்கு எடுக்கப்பட வேண்டும்.

பிற்பகல் 12-30

நான் தொழிலாளர் துறை மீது குறிப்பிட்டுக் குறை சொல்லவில்லை. இயல்பாகவே, தொழிலாளர் துறை என்பது பாதிக்கப்பட்ட, தொழிலாளி களைப்பு அடைந்து சோர்ந்து இறுதியில் முதலாளிகளின் கால்களிலேயே சரண் அடைந்து விடுகின்ற அளவிற்கு சலிப்பு ஏற்படுத்துகிற, களைப்பு ஏற்படுத்துகிற காலதாமதமான செயல்பாடு கொண்டது என்பதால், நீங்கள் இந்த விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். தனியார்த் துறையில் மாநில அரசின் 'மினிமம் வேஜஸ் நோட்டிபிகேஷன்படி' சம்பளம் வழங்கப் படுவதில்லை. அரசுப் போக்குவரத்துக் கழகச் சம்பளமல்ல, குறைந்தப் பட்ச கூலிச் சட்டத்தின்கீழ் மாநில அரசு அறிவித்த சம்பளம், பஞ்சப்படி கூடக் கொடுக்கவில்லை என்றால், இது என்ன நியாயம்? உச்ச நீதிமன்றம் சமீபத்தில் தீர்ப்பு அளித்தது. "மினிமம் வேஜஸ் ஆக்ட்படி" மாநில அரசின் நோட்டிபிகேஷன்படி சம்பளம் கொடுக்காத தொழில்சாலைகள் மூடப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் ஆணையிட்டிருக்கிறது. அதனால், தமிழ்நாட்டில் மினிமம் வேஜஸ் ஆக்ட் அமல்படுத்தப்படுவதில்லை. சங்கம் சேர்ந்ததால் நிறுத்தப்பட்டு விட்டார்கள். நான் இந்த விவரத்தை விரிவான மகஜராக

முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன். அதன் மீது உரிய நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு அளியுங்கள், (மணியடிக்கப்பெற்றது) காப்பாற்றுங்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்று, மிக முக்கியமானது. மூன்று நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, தொழிலாளர் நலனுக்கான சட்டங்களை அமல்படுத்துவதிலே மிக உறுதியாகவும், தெளிவாகவும் இருக்கிறோம். எங்கெல்லாம் சங்கம் வைக்கக்கூடிய உரிமை இல்லையோ, அந்த உரிமையை நிலைநாட்டுகின்ற விதத்திலே, குறிப்பிட்டுப் புகார் கொடுக்கிறபோது நடவடிக்கை எடுத்து வருகிறோம். 'மினிமம் வேஜஸ் ஆக்ட்' ஐ பொறுத்தமட்டிலே கறாராக நடவடிக்கை எடுக்கிறோம். அப்படி எங்கெல்லாம் அது நடைமுறைப்படுத்தப் படவில்லையோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட விரும்புவது அந்தக் குறைந்தபட்ச சட்ட ரீதியான உரிமைகளை அமலாக்குவதற்குரிய நடவடிக்கை எடுக்க, நான் முதலமைச்சர் அவர்களுக்கு விரிவான மகஜர் கொடுத்திருக்கிறேன். அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆகவே, அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு சங்கம் சேர்ந்த தொழிலாளர்கள் மீது, திருப்பூரிலும் 506 என்ற ஒரு செக்ஷனில் ஒரு வழக்கு போட்டிருக்கிறார்கள். கண்டக்டர், டிரைவர் இவர்கள் ரன்னிங் ஸ்டாஃப் அதாவது வண்டியில் போகிற ரன்னிங் ஸ்டாஃப், வண்டியைக் கடத்திக் கொண்டு போனதாக வழக்கு போடுகிறார்களே, நான் போய் கடத்தினால் வேறு ஒரு நபர் கடத்திக் கொண்டு போனதாகக் கருதலாம். அதுவேறு. ஆனால் அந்த வழித்தடத்தில் ஓட்டுகிற பஸ்களின் கண்டக்டர் டிரைவர்கள் மீது இப்படி குற்றச்சாட்டு கொடுத்து வழக்குப் போட்டு, ஹைகோர்ட்டிலே அவர்கள் ஜாமீன் கேட்டு, அந்தத் தொழிலாளர்கள் ரூ. 15,000 இழக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு எவ்வளவு பணச்செலவு, மன உளைச்சல் என்று எண்ணிப் பாருங்கள்.



இப்படியெல்லாம் தவறாக வழக்குப் போடுகிறார்கள். அது போல, ஈரோட்டில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய தலையீடு பற்றி ஒன்றே ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். இந்தியத் தொழில் தகராறு சட்டத்தின்படி, முன் அறிவிப்பு நோட்டீஸ் கொடுத்து சட்ட ரீதியிலான உரிமைகளை நிறைவேற்றாத இடத்தில் வேலை நிறுத்தம் செய்கிற உரிமை ஐ.டி. ஆக்ட்-படி, தொழிற்சங்கத்திற்கும், தொழிலாளிகளுக்கும் உண்டு. ஆனால், ஈரோட்டில் அதே மாதிரி இரண்டு கம்பெனிகளில் வேலை நிறுத்தம் செய்தவுடன், வேலை நிறுத்தத்தை நீங்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும், பஸ்சை டேக் ஓவர் செய்வோம் என்று ஆணையிடுகிறார்கள் என்றால், தமிழ்நாட்டில் ஐ.டி. ஆக்ட் உண்டா இல்லையா என்ற கேள்விகளைக் கிளப்புகிறார்கள். ஐ.டி. ஆக்ட்க்கு எதிராக எப்படி, கலெக்டர் தலையிட முடியும் ? எஸ்.பி. தலையிட முடியும் ? கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மோட்டார் தொழிலாளர்களின் மீது போட்ட வழக்கு விவரத்தை நான் மறுபடியும் கொடுக்கிறேன். அவற்றை வாபஸ் வாங்குவதற்குரிய உத்திரவினைத் தாங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இறக்கிவிடப்பட்ட தொழிலாளர் அனைவருக்கும் வேலை கிடைக்கவும், மினிமம் வேஜஸ் சட்டப்படி சம்பளம் அமலாக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, கூட்டுறவுத் துறை பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அது கலைஞர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்குமா என்று எனக்கு தெரியவில்லை. ஆட்சிகளிலேயே அதாவது 1952-லிருந்து தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஆட்சிகளிலேயே ஒரு ஜனவிரோத ஆட்சி என்று பொது ஜனங்களால் குற்றஞ்சாட்டப்பட்ட ஒரே ஆட்சி, அ.இ.அ.தி.மு.க. ஆட்சி. அந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் கூட கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகிற தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையில், எல்லாச் சங்கங்களையும் அழைத்துப் பேசி அவர்கள் சம்பள ஒப்பந்தம் பற்றிப் பேசினார்கள். ஆனால், நம்முடைய இந்த ஆட்சியில் அந்த நிலையில்லாமலே, எந்தச் சங்கங்களையும் அழைக்காமலேயே ஒரு நிலையை மேற்கொண்டிருப்பது அவ்வளவு பொருத்தமா என்று எனக்குத் தெரியவில்லை. அத்தகைய நிலை தவிர்க்கப்பட வேண்டுமென்று வேண்டிக்கொள்வதோடு சிவில் சப்ளைஸ்-ல் சம்பளம் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால், அந்தச் சம்பளத்தை இப்போது கொடுக்க முடியாது என்கிற நடைமுறை யதார்த்தத்தை நான் உணர்ந்துள்ளேன்.

[திரு. கே. சுப்பராயன்] [1997 சனவரி 29

அதே நேரேத்தில் குறைந்தபட்சம் அடிப்படைச் சம்பளத்தில் 300 ரூபாயாவது உயர்த்தித் தருவதற்கு நீங்கள் உத்தரவிட்டால்தான் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால், இன்றைய மத்திய அமைச்சர் திரு. சோமு அவர்களும், எல்.பி.எப். தலைவர்களும் கூட அன்றைக்கு அதற்கு ஆதரவாகப் பேசியிருக்கிறார்கள் பழைய அந்த விவரங்களை நான் குறிப்பிட விரும்பவில்லை. ஆகவே, இந்தப் பிரச்சினையில் உரிய முறையில், தாங்கள் பதிலளித்து ஆக்கப்பூர்வமான ஒரு நிலையை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதைக் கேட்டுக்கொள்வதோடு, ஒரேயொரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

மாதவரம் தொழிலாளர் பிரச்சினை, நான் நீண்டகாலமாகப் போராடிய ஒரு பிரச்சினை. அதற்கு நான் வார்த்தைகளால் நன்றி சொல்ல முடியாது. உண்மையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் தலைமையேற்றிருக்கிற கலைஞர் அவர்களின் மன உறுதியைத் தவிர வேறு எதுவானாலும் அதற்குத் தீர்வு அளித்திருக்க முடியாது என்பதை மிகுந்த மகிழ்ச்சிப் பெருக்கோடு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொழிலாளர்கள் அனைவருக்கும் நீங்கள் வேலை அளித்து காப்பாற்றினீர்கள். என்ன விளைவு ஏற்படும் என்பதைப்பற்றி நீங்கள் கிஞ்சித்தும் கவலை கொள்ளாமல், இதே அவையில் ஒற்றை வரியில் 'அவர்களுக்கு வேலை கொடுக்கப்படும்' என்று நீங்கள் அறிவித்த அந்த மனத் துணிச்சலைப் பாராட்டி நாங்கள் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவது, அந்தத் தொழிலாளிகள் சார்பாக உங்கள் முன் விண்ணப்பித்துக் கொள்வது ஒன்றுதான். அவர்கள் கேட்டுக்கொள்வது, அது அநியாயமான வேலை நீக்கம் என்பதால், அதற்கு நீங்கள் பேக் வேஜஸ் கொடுக்க வேண்டாம். சம்பள இழப்பை ஈடுகட்ட வேண்டாம், ஆனால் சர்வீஸ் தொடர்ச்சியை மட்டும் கொடுங்கள். கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன். கொடுங்கள், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. இரா. பொன்னார்டு.

**திரு. இரா. பொன்னார்டு:** அன்பார்ந்த ......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேற்றே முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. இரா. பொன்னார்டு** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று போராடிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய



1997 சனவரி 29] [திரு. இரா. பொன்னார்டு]

உணர்வுகளை உள்ளத்தில் அடக்கி செயலாற்றிக் கொண்டிருக்கிற நம்முடைய தானைத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், பெண்ணாகவும், சிறுபான்மைச் சமுதாயத்தைச் சார்ந்த, இஸ்லாமியத்தைச் சார்ந்தவருமாக இருந்து தமிழகத்திற்கு ஆளுநராக வந்திருக்கின்ற அவர்களுடைய வருகையை மிகச் சிறப்பு வாய்ந்ததாகக் கருதுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே மாமன்றத்தில் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது, பெண் உரிமைக்கு முன்னுரிமையும், பிற்படுத்தப்பட்ட சிறுபான்மைச் சமுதாயத்தினருக்கு சலுகைகளும் வழங்கப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் ஆளுநராக வந்திருக்கின்ற அந்த வருகையை நான் மகிழ்ச்சியோடு பாராட்டி, சமத்துவம், சமதர்மம் நிலைப்பதற்கு அவருடைய வருகை உறுதுணையாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசுகின்ற வாய்ப்புளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே' என்பது சான்றோருடைய வாக்கு. இந்த மாமன்றத்தில் முன்னாள் முதலமைச்சராக இருந்து ஆட்சி நடத்தியவர் இந்த நாட்டினுடைய கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம், நாட்டின் வளர்ச்சி, சமூகத் திட்டங்கள் இவற்றையெல்லாம் அழித்து ஒழித்துவிட்ட நிலையில், நம்முடைய தானைத் தலைவர், தமிழினத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கின்ற இந்த நேரத்தில், 'எந்தப் பெண்ணால் நாட்டினுடைய கலாச்சாரம் அழிக்கப்பட்டதோ அதிலிருந்து விடுபட்டு, டாக்டர் கலைஞர் அவர்கள் தீட்டுகின்ற நல்ல திட்டங்களை, செயல்பாடுகளை அதற்குரிய நேரத்தில் ஒப்புதல், ஆதரவு தருகின்ற வகையில் ஒரு சிறப்புமிக்க நீதிபதியாக இருந்த நிலையில் இன்று ஆளுநராக வந்திருக்கின்ற ஆளுநரை நான் வரவேற்கிறேன்.

'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்' என்பது நம்முடைய முதியோர் வாக்கு. ஆந்திர மாநிலத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டபோது, அதைக்கேள்விப்பட்ட நம்முடைய தலைவர் அவர்கள் கண்ணீர் வடித்தார்கள். சில நாட்களுக்குள் இயற்கையின் சீற்றம் இங்கே வந்து, ஆந்திர மாநிலத்தினுடைய கண்ணீரைத் துடைத்த கலைஞர் அவர்களுடைய கண்ணில் கண்ணீரை வரவழைத்து, அவர்கள்

[திரு. இரா. பெர்னார்டு] [1997 சனவரி 29

ஏக்கப்பட்டபோது, தமிழகத்தில் சிலர் கலைஞருடைய ஆட்சிக்கு இது வீழ்ச்சி என்பது கருதினார்கள், சிலர் சாபம் என்றும் விதி என்றும் கூறினார்கள். அந்த விதியைத் தன்னுடைய மதிநுட்பத்தால் வென்றுகாட்டி, மத்திய அரசினுடைய குழுவை விரைவாக வரவழைத்து நாட்டுக்கு ஏற்பட்ட அழிவை எடுத்துச் சொல்லி - ஒரு மாபெரும் போர் வீரனாக, தளபதியாக இந்தியத் துணைக் கண்டத்தின் வழிகாட்டியாக இருக்கும் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்த முயற்சியை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆந்திர மாநிலத்திற்கு நிதி வழங்கிவிட்ட அடுத்த கணமே தமிழகத்திற்கு நிதி கேட்கின்ற ஒரு பெரிய சூழ்நிலை உருவாகியது. மத்திய அரசிடம் கேட்டபோது, உரிய நேரத்தில், நிதி வராத நிலையிலும், பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்து 16 கோடி ரூபாய் வரை நிதியினை வசூலித்து நாட்டுக்கு நன்மை செய்ய வந்திருக்கிற கலைஞருடைய முயற்சியைப் பெரிதும் பாராட்டுகிறேன். தேர்தல் வாக்குறுதிப்படி, உள்ளாட்சித் தேர்தலையும், கூட்டுறவுச் சங்கத் தேர்தலையும் நடத்தி முடித்துவிட்டு, பால்வள கூட்டுறவு சங்க தேர்தலையும் நடத்த முடிவு செய்திருப்பதை மிகுதியாகப் பாராட்டுகிறேன்.

பிற்பகல் 12-40

சென்னை மாநகரை, அழகு நகரமாக ஆக்க வேண்டும், உலக அரங்கில் சிறந்த நகரமாக ஆக்க வேண்டுமென்ற தீர்மானத்தை மாநில அரசு எடுத்திருக்கிறது. அதைத் தொடர்ந்து, இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தளபதி ஸ்டாலின் அவர்கள் மேயராக வந்திருக்கின்ற காலகட்டத்தில், தேவையான நிதியுதவிகள் வழங்கி, இந்த மாநகரைச் சிறப்புச் செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

'ஒரு தவறு செய்தால் அதைத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்' என்ற கருத்தையும், அதற்கு வாயசைத்தவரையும் மறந்துவிட்டு, ஊழல் செய்தவர்களை உலகுக்கு அடையாளம் காட்டுகின்ற வகையில் சிறந்த நடவடிக்கை எடுத்திருக்கிற இந்த அரசையும், முதல்வரையும் நான் பாராட்டுவதோடு, எதிர்காலத்தில் அரசியல்வாதிகள் இந்தத் தவறைச் செய்யாதிருக்க வேண்டுமென்ற உணர்வை வலியுறுத்தியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாநிலம் முழுவதும் மேம்பாட்டுக்கு சமநீதி, மதச்சார்பின்மை இவற்றைப் பெற்றிட, சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற எடுத்திருக்கும் முடிவை—அதற்கு மனித உரிமை ஆணையம் அமைத்திருப்பதை—நான் பாராட்டுகின்றேன்.



1997 சனவரி 29] [திரு. இரா. பெர்னார்டு]

கல்வித் துறையில், கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு இந்த நூற்றாண்டில் அனைவரும் தொடக்கக் கல்வி பெற்றாக வேண்டுமென்ற ஒரு நிலையை, முடிவை எடுத்திருப்பது என்பது பாராட்டுக்குரியது. ஆசிரியர்கள் இனி எங்களுக்கு வாழ்வில்லை. படித்து பட்டம் பெற்று நாங்கள் பயிற்சி பெற்று மூப்புப் பெற்றுவிட்ட காரணத்தால் எங்களுக்குப் பாதுகாப்பில்லை என்ற ஒரு நிலையில்—அரோகரா சிவ சிவா என்று கைலாசத்திற்கு எட்டி பலன் இல்லை, அரசுக்கு எட்ட வேண்டும் என்ற கருத்தை எண்ணி—உரிய நேரத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதும் கல்வித் துறையினுடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய ஒத்துழைப்போடு 13,000 பேருக்கு - ஆசிரியர்களுக்கு - வேலைவாய்ப்பு வழங்கி அவர்களுடைய உள்ளங்களிலும், இல்லங்களிலும் மகிழ்ச்சி ஏற்றியதை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

காட்டு வளமும், நாட்டு வளமும் தேச நலனுக்கு உகந்தது என்பதை உணர்ந்து, காட்டு வளத்தை வீட்டு நலத்திற்கு கொண்டு சென்றதை உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்து, கருவூலத்தில் சேர்த்த பெருமையை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. சந்தனக் கடத்தலைத் தடுத்து, 47 கோடி ரூபாய் அளவுக்கு இந்த அரசின் கருவூலத்திற்குக் கொண்டு வந்து, ஆக்கத் திட்டத்திற்கு ஊக்கமளித்த அந்த அமைச்சர் பெருமகனாரையும் மிகுதியாகப் பாராட்டுகிறேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். இதை உணர்ந்து கிராமப்புற பகுதிகளில் 24 மணி நேரமும் மருத்துவமனைகள் இயங்கும் என்று அறிவித்திருப்பது ஏழை எளிய மக்கள் மீது டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டிருக்கிற உணர்வை வெளிப்படுத்துகிறது என்பதற்கு பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நானும் ஒரு மீனவன் என்ற முறையில், பல்வேறு உறுப்பினர்கள் பிரச்சினைகளைப் பற்றி பேசியிருந்தாலும் மீனவர்கள் பற்றி பேசவேண்டியவனாக இருக்கிறேன். வருகின்ற நடப்பாண்டில் 4,000 வீடுகள் ஏழை எளிய மீனவர்களுக்கு கட்டுவதற்கு அரசு முடிவு எடுத்திருக்கிறது. அதைக் கொஞ்சம் பெரிய மனது வைத்து, சற்று அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும், குறைந்தபட்சம் 6,000 வீடுகளாவது கட்டிக் கொடுத்தால் நலமாக இருக்குமென்றும், மீனவர்கள் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன். மீனவ நண்பன் என்று யார் யாரோ பேசிய காலகட்டத்தில், மீனவர்களுடைய நலனுக்கு உழைத்தவர்கள் யார் என்பதை அடையாளம் கண்டு, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் நினைவு

வீட்டுவசதி திட்டத்தின் மூலம் அவருடைய பெருமையைக் காக்கின்ற வகையில் மணி மண்டபம் அமைப்பதற்கு மீனவ மக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள். கச்சத் தீவை மீட்போம் என்று யாரோ எங்கேயோ சொல்லிவிட்டு, பிறகு குரலை மாற்றிவிட்டார்கள். இது குறித்து பல்வேறு உறுப்பினர் பேசிவிட்ட கச்சத் தீவை மீண்டும் பெற வேண்டும் என்பது மீனவ மக்களுடைய ஒட்டுமொத்தக் கருத்து. அதில் சட்டப் பிரச்சினைகள், வேறு விவகாரங்கள் இருக்குமேயானால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறைந்தபட்சம், அந்தத் தீவை இலங்கைக்கும், இந்தியாவிற்கும் பொதுத் தீவாகவாவது ஆக்கி, மீனவர்களுடைய உயிரையும், உடைமையையும் காத்திட வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடுக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : எஸ். எஸ். திரு. முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில் :** மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, 11-வது சட்டப் பேரவையினுடைய இரண்டாவது மேதகு ஆளுநர் கடந்த 22-1-1997-ல் ஆற்றிய உரைக்கு நன்றி செலுத்தும் முகத்தான், இவ்வுரையைப் பாராட்டித் துவக்கி வைத்து மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டப்பேரவையினுடைய உறுப்பினர் சகோதரர் முபாரக் அவர்களுடைய உரைக்கு உறுதுணையாக வரவேற்று, நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய லீக்கின் சார்பாக நல்வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் கூறி வரவேற்று எனது உரையைத் துவக்குகின்றேன்.

டந்த 8 மாத கால கழக அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நல்லாட்சிக்கு சிறப்புச் சேர்க்கின்ற வகையிலே தமிழகத்தினுடைய தன்மானத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தன்னுடைய தேர்தல் வாக்குறுதியில் எடுத்து வைத்ததற்கு இணங்க உள்ளாட்சித் தேர்தலையும் கூட்டுறவுத் தேர்தலையும் முறையாக நடத்தி முடித்து, தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி இன்றையதினம் தமிழகத்திலே ஊராட்சி, பேரூராட்சிகளினுடைய தேர்தல்கள் முறையாக நடத்தி முடிக்கப்பட்டு இருக்கின்ற ஒரு நல்ல செய்தியினை மக்கள் பாராட்டுகின்றார்கள், வாழ்த்துகின்றார்கள். அந்த அடிப்படையிலே செய்வதைச் சொல்வோம், சொன்னதைச் செய்வோம் என்ற வாக்குறுதியை இன்று செய்து காட்டிக் கொண்டிருக்கிறது இந்த அரசு.



கழக அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால், ஏழை எளிய மக்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, வியாபாரிகளுக்கு அரசு செய்ய வேண்டிய நல்ல கடமைகளை செய்து கொண்டிருப்பதை மக்கள் வாழ்த்துகின்றார்கள், பாராட்டுகின்றார்கள். யாரோ ஒருசிலர் இங்கு இருக்கின்றவர்கள், இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால் என்ன செய்து இருக்கிறது என்று இங்கே வினாக்களை எழுப்பிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். வியாபாரிகளுக்கு வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் நிறைய வரிச் சலுகைகளை அளித்து இருக்கின்றார்கள். ரெடி-மேட் உற்பத்தியாளர்களுக்கு வரிச் சலுகை கொடுத்து இருக்கிறார்கள். கயிறு திரித்தல், நார் உற்பத்தி செய்தல் ஆகியவற்றிற்கு வரிச் சலுகை அளித்து இருக்கிறார்கள். வெள்ளி கொலுசு தயாரிப்பவர்களுக்கு வரிச் சலுகை வழங்கி இருக்கின்றார்கள். இப்படி, வணிகப் பெருமக்களுக்கு வரிச் சலுகை அளித்ததோடு மட்டுமல்லாமல், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இலவச மின்சாரத்தையும் வழங்கி இருக்கிறார்கள். தமிழகத்திலே அரசினுடைய இடையறாத முயற்சியினால், நல்லாட்சியினால் சமுதாயத்தில் நல்லிணக்கம் ஏற்பட்டு இருக்கிறது. நல்ல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு இருக்கின்றன. உணவுத் துறையிலே சீர்திருத்த, ஒரு ஹை லெவல் கமிட்டி - உயர்மட்டக் குழு இன்றைய தினம் அமைக்கப்பட்டு, ஏழை எளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், நசுக்கப்பட்டமக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், பாமரமக்கள் எல்லோருக்கும் உணவுத் திட்டத்தை நல்ல முறையிலே செயல்படுத்திடச் செய்யும் முறையிலே, அவர்களுக்காக ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கி, 3 வண்ணங்களிலே ஏழை எளிய மக்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்குவதற்கு முறையான ஒரு திட்டத்தை மேற்கொண்டு இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாது, இன்று தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆட்சியிலே யார் தவறு செய்தாலும், தவறுகளை சுட்டிக்காட்டுகின்றபோது விசாரிக்கின்ற வகையிலே மரியாதைக்குரிய நம்முடைய ஆர். வரதராஜுலு அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, ஊழல் தடுப்பு உயர்நிலைக் குழுவாக ஏற்பாடு செய்து, லோக்பால் போன்று பொதுமக்களின் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, தமிழகத்திலே நல்லாட்சி நடத்துகின்றவர்களிடம் குறைகளை சுட்டிக்காட்டுவதற்காக ஒரு உயர்மட்டக் குழுவை இங்கே அமைத்து, 28-2-1997 வரை உங்களுடைய குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்லுங்கள்; ஏற்கெனவே நடைபெற்ற

குறைகள், குற்றங்கள், ஊழல்கள் இருக்குமாயின் அவைகளைத் திருத்திக் கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற முறையிலே ஒரு உயர்மட்டக் குழுவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இப்படி எந்த ஆட்சியிலும், எந்த அமைச்சரவையிலும் இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்து இருக்கிறார்கள் என்றால், இது பாராட்டக்கூடியது, வரவேற்கக்கூடியது என்பதை இந்த நேரத்திலே என் சார்பாகவும், என்னுடைய கட்சியின் சார்பாகவும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

அதேபோன்று இன்றையதினம் விலைவாசிகள் ஏறிக்கொண்டு இருக்கின்றதே தவிர, இறங்குமுகம் இல்லை என்று சொல்லிக் கொள்பவர்களுக்கு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன். புரட்சிகரமான நல்ல திட்டங்களை, இங்கே தொழிற்சாலைகளை உருவாக்கிக் கொடுக்கின்ற முயற்சியினை மேற்கொண்டு, தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்து இருக்கிறார்கள். உதாரணமாக, கார் தொழிற்சாலையை ஒப்பிட்டுப் பாருங்கள். அம்பாசிடர் கார், டாட்டா சுமோ, மாருதி போன்ற நிறுவனங்கள் உற்பத்தி செய்யக்கூடிய கார்களின் விலைகள் எல்லாம் இன்றைய தினம் வீழ்ச்சி அடைந்து இருக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். இன்றையதினம் அதிக உற்பத்தி செய்வதன் காரணமாக விலைகள் குறையவில்லையா? ஆக உற்பத்தியின் அடிப்படையில், உணவுப் பொருட்களின் விலைகளையும் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். தற்காலிக சூழ்நிலையில், காலத்திற்கு ஏற்ற நிலையிலே சில நேரங்களில் அவற்றின் விலைகள் கூடும்.

பிற்பகல் 12-50

சில நேரங்களில் உற்பத்தியாகின்ற பொருட்கள், அந்தந்த நேரங்களை அனுசரித்து, அது அரிசி விலையாகட்டும், காய்கறி, புளி விலையாகட்டும், காலாகாலத்தில் பருவமழை பெய்யும்போது அதனுடைய விலைகள் குறைந்துவிடக்கூடிய சூழ்நிலை எல்லாம் இருக்கிறது. தமிழகத்திலே நல்லாட்சி செய்துகொண்டிருக்கிற கலைஞருடைய ஆட்சியைப் பாராட்டாமல் யாரும் இல்லை. யாரோ ஒருசிலர் வசைப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு நினைவுக்கு வருகிறது, தமிழகத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும் மரியாதைக்குரிய மூப்பனார் அவர்களும் ஆட்சி செய்கின்ற சூழ்நிலையில், கிங் மேக்கர்கள் என்று சொல்லப்படுகிறார்கள் கே என்ற வார்த்தை கிங் என்பதையும், எம் என்ற வார்த்தை மேக்கர் என்பதையும் குறிக்கிறது என்று சொல்வார்கள். கே



என்பது கலைஞர் அவர்களையும், எம் என்பது மூப்பனார் அவர்களையும் குறிக்கிறது என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கே. என்ற கிங் என்னும் வார்த்தை கலைஞர் அவர்களையும், எம் - அதாவது மேக்கர் என்ற வார்த்தை மூப்பனார் அவர்களையும் சேர்த்து இன்றையதினம் நல்லதொரு ஆட்சியை இங்கே அமைக்கவைத்திருப்பதை யாரோ ஒரு சிலர் திசை திருப்ப முயற்சி செய்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த வார்த்தைகளையே திருப்பிப் போட்டால், எம் என்ற எழுத்தும் கே என்ற எழுத்தும் சேர்ந்தால், எம். கருணாநிதி அதாவது மு. கருணாநிதி என்று வருகிறது. இதுவே தமிழக மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி நல்லாட்சியை நடத்திக் கொண்டிருக்கிற இந்த அரசுக்கு உறுதுணையாக நம்முடைய மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் நான் சார்ந்துள்ள இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் கூறி, என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக சில வேண்டுகோள்களை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மரியாதைக்குரிய தமிழக முதல்வர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். தேர்தல் நேரத்தில் கேட்டுக் கொண்டதற்கிணங்க மரியாதைக்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்ததற்காக எங்கள் கட்சியின் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லிக்கொண்டு, இந்தத் திட்டத்தைத் துவக்கி வைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த 1989-91 ஆம் ஆண்டிலே கால்கோள் விழாவை நடத்தி வைத்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும், நம்முடைய அமை[illegible]ர் நேரு அவர்களும், உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் அதற்கு வருகை தந்து கால்கோள் விழா நடத்தினார்கள். ஆனால் அந்தத் திட்டம் முடக்கப்பட்டதன் காரணமாக இன்றையதினம் அதை மீண்டும் கேட்டுப் பெற்று, அது மீண்டும் பொலிவுடன் எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அத்திட்டத்தை நீங்கள் வந்து துவக்கித் தாவேண்டுமென்று என் தொ[illegible] மக்கள் சார்பாக பணிவன்போடு உங்களிடத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், தேர்தல் நேரத்திலே வாக்குறுதி கொடுத்ததுபோல், தடா கைதிகளை எல்லாம் விடுதலை செய்திருக்கிறீர்கள். அதற்காக நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அப்படியிருந்தும், சில நேரங்களில் சில அசம்பாவிதங்கள் நடந்து விடுகின்றன. நேற்றையதினம் எங்களுடைய சமுதாயத்தைச் சேர்ந்த பழனிபாபா வன்முறையாளர்களால் கொல்லப்பட்டிருக்கிறார். அதுபோன்ற வன்முறைச் சம்பவங்கள் தமிழகத்தில் பரவாமல் இருப்பதற்கு தமிழக முதல்வர் அவர்கள் முறையான நடவடிக்கை எடுத்து, வன்முறையாளர்களை உரிய நேரத்தில் கண்டுபிடித்து தக்க தண்டனையை அவர்களுக்கு வழங்கவேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்:** என்னுடைய தொகுதியிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்ற திட்டங்கள் ஏராளம். அவற்றை நீங்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய தொகுதி 586 கிராமங்களையும், 3 ஊராட்சி ஒன்றியங்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. இத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி பற்றாக்குறையாக இருக்கிறது. இரண்டு பேரூராட்சிகள் நிதிநிலை பற்றாக்குறை நிலையில் இருக்கின்றன. ஆகவே அதற்கு தாங்கள் தாராளமாக நிதியை வழங்கவேண்டுமென்று உங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் 300 ஆரம்ப சுகாதார நிலையங்கள் வழங்க இருக்கின்ற இந்த நேரத்திலே, தாந்தோணி ஒன்றியம் மூக்கணாங்குறிச்சி பஞ்சாயத்திலே விஜயபுரத்துக்கு 83 சென்ட் நிலம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அங்கே ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், பவித்திரம் ஊராட்சி விசுவநாதபுரம் குறிச்சியிலேயும், வி. தண்ணீர்ப்பந்தல் என்ற ஊரிலும், எரவனூர் தென்னிலையிலே ஒரு நிலையமும், கோடந்தூர் என்ற ஊரிலே ஒரு நிலையமும் அமைத்துத்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். சின்னதாராபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் 1-1-1997 முதல் 24 மணி நேரமும் இயங்கக் கூடிய அளவில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் போதுமான டாக்டர்கள் அங்கே இல்லாத பற்றாக்குறை இருக்கிறது. அங்கே உள்ள படுக்கைகள், கட்டில்கள் பழுதடைந்திருக்கின்றன. அவற்றைப் புதுப்பித்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டு, நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு.



பிற்பகல் 12-55

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாடாளுமன்றத்திலே, நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராக இருந்தாலும் சரி, மாநிலங்களவை உறுப்பினராக இருந்தாலும் சரி, இவர்களுக்கெல்லாம் தொகுதி வளர்ச்சிக்கு என்று ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் வழங்கப்படுகிறது. அந்த ஒரு கோடி ரூபாய்க்கு எந்த மாவட்டத்திற்கு அவர்கள் விருப்பம் தெரிவிக்கிறார்களோ அந்த மாவட்டத்திலே, அந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அந்த ஒரு கோடி ரூபாய்க்கான அந்த தொகுதிக்கு உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகளுக்கான திட்டங்களைத் தரலாம் என்றும், அந்த வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த மாவட்டத்திலே நிறைவேற்றுவார் என்றும் அறிவுறுத்தப்பட்டு அந்த அடிப்படையிலே வழங்கப்படுகிறது. அதைப்போல சட்டமன்றத்திலேயும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் குறைந்தபட்சம் ஒரு ஆண்டுக்கு 50 லட்சம் ரூபாய் என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்து அந்தந்த தொகுதியில் அந்த 50 லட்சம் ரூபாய்க்கான வளர்ச்சிப் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே அவர்கள் திட்டங்களைத் தரலாம். அந்தத் திட்டங்கள்—அடிப்படை திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அனுமதியளித்து உத்தரவிட்டு நடைமுறைப்படுத்த இந்த அரசு தமிழக அரசு முன் வர வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இப்போது எம்.எல்.ஏ.க்களை பொறுத்தவரையில் வெறும் போஸ்ட்மேன் மாதிரி தான். பொது மக்கள் தருகிற மனுக்களை அவர்கள் வாங்கிக் கொணடு அமைச்சர்களிடத்தில் கொடுக்கலாம். அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கொடுக்கலாம். அவ்வளவுதான். திரும்பி போகிறபோது சில நேரங்களில் 6 முறை, 7 முறை தேர்ந்தெடுக்கப்படும் தொகுதிகளில் முதல் தடவை சொன்ன கோரிக்கைகளை கூட 7-வது முறை போகிறபோது—முதல் தடவையிலே இங்கே ஒரு பள்ளி கட்ட வேண்டுமென்று, ரோடு போட வேண்டுமென்று கேட்டோம், அது இன்னமும் செய்யவில்லையே என்று கேட்கிற நிலைகூட சில இடங்களில் ஏற்படுகிறது. இப்படி சில வசதிகளை செய்ய இந்த உரிமைகள் வழங்கப்படுமானால் அவற்றை சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைவேற்றவும், தொகுதியிலே உள்ள மக்களுக்கு சிறந்த முறையில் பணியாற்றவும் வாய்ப்பு இருக்கும். இது ஆளுநர் உரை, பட்ஜெட்டில்

பேசினால் பலனில்லை. முன்னாலே இந்த உரையிலே பேசுகிறபோது சொன்னால் பட்ஜெட்டிலே வருகிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய சார்பிலே மட்டுமல்ல, எல்லா சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலும், இந்த வேண்டுகோளை நான் இந்த அரசுக்கு எடுத்து வைக்கிறேன்.

ஆளுநர் உரையில் தேர்தல் நடைபெற்று முடிந்திருப்பது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இதிலே முதலிலே இந்த ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர்கள் ஒன்றியக் குழு உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படுகிற முறையை கண்டிப்பாக மாற்றியமைக்கிற விதத்தில் சட்டதிருத்தம் கொண்டு வர மாநில அரசு முற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிந்த தேர்தலில் நகராட்சித் தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார், டவுன் பஞ்சாயத்து தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார், மாநகராட்சி தலைவர் நேரடியாகத் தேர்தெடுக்கப்படுகிறார். ஒன்றியத் தலைவர்கள் மட்டும் ஒன்றியக் குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறபோது அதிலே பணபலம், அதிகார பலம், மற்றும் தவறான வழிகளிலே உறவு முறை, நட்பு முறை, இப்படியெல்லாம் பொதுமக்களுடைய விருப்பத்திற்கு மாறாக சிலபேர் ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. எனவே, கண்டிப்பாக ஒன்றியப் பெருந்தலைவர்களையும் மக்கள் நேரடியாகத் தேர்தெடுக்கிற சூழ்நிலையும், அதைப்போல மாவட்ட பஞ்சாயத்து தலைவர்களை கூட மக்கள் நேரடியாக - ஏனென்றால் அவைகள் சென்னை மாநகராட்சியைவிட குறைவான வாக்குகள் உடையவையாகதான் இருக்கும் எல்லா மாவட்டத்திலும் பார்த்தால். எனவே, மாநகராட்சியினுடைய தலைவர்கள் எப்படியெல்லாம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அதைப்போல மாவட்ட பஞ்சாயத்து தலைவர்களும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற விதத்திலே சட்ட திருத்தங்களைக் கொண்டு வர அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் இப்போது மாநகராட்சி கூட்டத்திலே கலந்து கொள்ளலாம், நகராட்சி கூட்டத்திலே கலந்து கொள்ளலாம், டவுன் பஞ்சாயத்து கூட்டத்திலே கலந்து கொள்ளலாம். ஆனால் ஒன்றியக் கூட்டத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள முடியாது. அவர்களுக்கு வாக்குரிமை இருக்கிறதோ இல்லையோ, ஆனால் ஒன்றியக் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்கிற உரிமையாவது அவர்களுக்கு வழங்கப்படவேண்டும். இது



குறித்து தேர்தலுக்கு முன்னாலே சட்டமுன்வடிவு கொண்டு வந்த போது உரையாற்றுகிறபோது நான் சொன்னேன். அதற்கு முதலமைச்சர் அவர்கள் இப்போது தேர்தல் நடந்து முடியட்டும், அதற்குப் பின்னால் நான் இதுகுறித்து அதிகாரிகளோடு கலந்துபேசி அறிவிக்கிறேன் என்று சொன்னதை இந்த நேரத்தில் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே எப்படி மற்றவற்றில் எல்லாம் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள வாய்ப்பு இருக்கிறதோ, அதைப்போல, அதிகாரம் இருக்கிறதோ, அதைப்போல, இந்தப் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலிலேயும், ஒன்றியக் குழு கூட்டத்திலேயும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வதற்கு வாய்ப்புகள் தரப்பட வேண்டுமென்றும், அதற்கான ஆணை வெளியிடப்பட வேண்டுமென்றும் நான் தமிழக அரசை வற்புத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

அதேபோல் கூட்டுறவுத் துறைக்கான தேர்தல்கள் நடந்தும் நடக்காமலும் பாதியிலே நிற்கின்றன. இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை ஏற்கெனவே இருந்த உறுப்பினர்கள் பல பேர்கள் பல இடங்களிலே தவறான முறையிலே நீக்கப்பட்டும், புதிதாக பல இடங்களிலே சேர்க்கப்பட்டும் அவர்கள் எல்லாம் நீதிமன்றத்திற்குச் சென்று சில இடங்களிலே தடையாணை பெற்றும், இந்தத் தேர்தல்கள் தடைப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு, காஞ்சிபுரம் என்று எடுத்துக் கொண்டால், நெசவாளர்கள் அதிகமாக இருக்கிற பகுதிகளிலே எல்லாம், ஏற்கெனவே இருந்த உறுப்பினர்கள் - தவறாக சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் அல்ல. உண்மையிலேயே நெசவாளர்களாக இருக்கிற, கூட்டுறவு நெசவாளர்கள் எல்லாம் நீக்கப்பட்டு, புதிதாக சில பேர்கள் அங்கே சேர்க்கப்பட்ட காரணத்தாலே, அவர்கள் எல்லாம் வழக்கு மன்றத்திற்குச் சென்று, காஞ்சிபுரம் பகுதியிலே உள்ள பல சங்கங்களிலே எல்லாம் தடை உத்தரவு பெற்றிருக்கிறார்கள்; ஸ்டே வாங்கியிருக்கிறார்கள்.

அதேபோல் திருநெல்வேலி பகுதியில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களைப் பொறுத்தவரையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பிலே பல பேர்கள், அதிகமாக வெற்றி பெற்றுவந்துவிட்டார்கள் என்ற காரணத்தாலே, அந்தத் தேர்தல்கள் எல்லாம் தள்ளி வைக்கப்பட்டன என்ற உணர்வு அந்த மாவட்டத்திலே இருக்கிறது. ஏன் என்றால், திடீரென்று தலைவர் தேர்தல் இல்லாமலே உறுப்பினர்கள் தேர்தலோடு ரத்து செய்யப்பட்டுவிட்டன. அதற்கு

அரசாங்கமே நீதிமன்றத்திற்குச் சென்று, பணியாளர்கள் போதாத காரணத்தாலே, தேர்தலைத் தள்ளி வைக்க வேண்டும் என்று மனு போட்டு, கால அவகாசம் பெற்றுக் கொண்டு, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் வரவேண்டும் என்ற முறையிலே, அந்தத் தேர்தல்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பல பேர்கள் வெற்றி பெற்றுவிட்ட காரணத்தாலே, அதைத் தடுக்கிற விதத்திலே அந்தக் கூட்டுறவுத் தேர்தல்கள் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 14 ஆயிரம் தொடக்கச் சங்கங்களுக்கு தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. 600 சங்கங்களுக்கு மட்டும்தான்,-அதிலும் அரசாங்கத்தின் சார்பாக ஏறக்குறைய 160 சங்கங்கள் சட்டம்-ஒழுங்கு பிரச்சினைக்காக அவைகள் தடை செய்யப்பட்டு, 300-க்கும் மேற்பட்ட சங்கங்களுக்கு மட்டும்தான் சென்னை உயர்நீதிமன்றத்திலே தடை விதிக்கப்பட்டு, ஏறக்குறைய வெறும் 600 சங்கங்கள்தான்—14 ஆயிரம் சங்கங்களிலே 600 சங்கங்களுக்கு மட்டும்தான் தேர்தல் நடைபெறாமல் இருந்து, அந்த 600 சங்கங்களுக்கும் இப்போது உள்ள தடை ஆணை நீக்கப்பட்டு, தேர்தல் முறையாக நடத்தவேண்டும் என்று நம்முடைய சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய உத்தரவுக்கு இணங்க, அதற்கான தேர்தல் வேலைகள் எல்லாம் துவங்கப்பட்டு இருக்கின்றன.

பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்தலை உயர்நீதிமன்றம் உறுதி செய்து, புதிதாக அரசு சார்பாக இணைக்கப்பட்டுள்ள விதிகளை உயர்நீதிமன்றமே ஏற்றுக் கொண்டு, அரசினுடைய விதிமுறைகளுக்கு ஏற்ப தேர்தல் நடத்தவேண்டும் என்று அறிவிக்கப்பட்டு அதற்கான தேர்தல்களும் முறையாக இப்போது அறிவிக்கப்பட்டு வருகின்ற ஓரிரு மாதத்தில் தேர்தல் நடக்க இருக்கிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** ஆக, கூட்டுறவுத் தேர்தல்கள் முறையாக நடத்தப்படவேண்டும் என்பதைத்தான் நானும் இங்கே சுட்டிக் காட்டினேன். அதையே மீண்டும் வலியுறுத்துகிறேன்.



சமீபத்திலே ஏற்பட்ட மிகப் பெரிய புயலால், வெள்ளத்தால் தமிழ்நாடு முழுவதும் மிகப் பெரிய அளவிலே பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அதற்கான விவரங்களை எல்லாம் ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். ஆளுநர் உரையிலே சுமார் 1,000 கோடி ரூபாய்க்கு பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பல்வேறு நேரங்களில் பத்திரிகை பேட்டிகளிலேயும் குறிப்பிட்டுள்ளார்கள். அதைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது, மூன்றே வாரங்களில் அமைச்சர்கள் எல்லாம் சென்று அந்தப் பணிகளை எல்லாம் முழுமையாக முடித்துவிட்டோம் என்றெல்லாம், உடனடி நிவாரண உதவிகள் மிக விரைவாக வழங்கப்பட்டுவிட்டன, மிகப் பெரும்பாலான உடனடி நிவாரண நடவடிக்கைகள், வெள்ள பாதிப்பு ஏற்பட்ட 12 நாட்களுக்குள்ளாகவே முடிக்கப்பட்டுவிட்டன என்றெல்லாம் இங்கே பெருமையாகச் சொல்லப்பட்டிருந்தாலும் அது உண்மையல்ல என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்றால், பணமே இல்லை, அப்படியிருக்கும்போது, எப்படி பெரும்பான்மையான பணிகளை நீங்கள் முடித்திருக்க முடியும்; அதுவும் 12 நாட்களுக்குள்ளாக, அதிலும் 1,000 கோடி ரூபாய் அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதிலே ஏறக்குறைய முதல் கட்டமாக 195 கோடி ரூபாயை இந்த அரசு அதாவது மாநில அரசு ஏற்கெனவே அனுமதித்துள்ளது, மேலும் 150 கோடி மதிப்பீட்டில் சாலையைப் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 150 கோடி அடுத்த கட்டமாக ஒதுக்கப்பட்டு இருப்பது என்பது வெள்ள நிவாரணப் பணிகளுக்காக, பிரத்யேகமாக ஒதுக்கப்பட்டுள்ளதா, அல்லது ஏற்கெனவே இருக்கிற இலாக்கா மூலமாக இந்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்திலேயிருந்து இந்தச் செலவு செய்யப்படுகிறதா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரூ. 150 கோடி வெள்ள நிவாரணத்திலே, பாதிக்கப்பட்ட சாலைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** அப்படிப் பார்த்தால்கூட ஏறக்குறைய ரூ.250 கோடி, ரூ.300 கோடிக்குள்ளாகத்தான் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

இதுபோன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகிறபோது மாநில அரசு மட்டும் முழுமையாக அனைத்தையும் தாங்கிக் கொள்ளமுடியாது என்பதையும் நான் ஒத்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

மத்திய அரசு—ஆந்திராவிலே புயல் ஏற்பட்டபோது பிரதமர் அங்கே வந்தார், சுற்றிப் பார்த்தார். ஆந்திராவிற்குப் போனார். நம்முடைய மாநிலத்திற்கு பிரதமர் வரவில்லை. என்ன காரணமோ எனக்குத் தெரியாது. வந்திருக்கலாம். வராதது மட்டுமல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல ஹோசூரில் நடைபெற்ற ஒரு விழாவிலே நிதியமைச்சரை வைத்துக்கொண்டு உடனடியாக நிவாரணம் வழங்குங்கள் என்று கேட்டபோது ரூ.25 கோடியை அங்கேயே அறிவித்தார். அந்த ரூ.25 கோடியை அறிவித்தும்கூட ஒரு மாதத்திற்கு மேலாகிறது. அந்தப் பணம்கூட, ரூ.25 கோடி கூட இன்னமும் வழங்கப்படவில்லை என்று இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆளுநர் உரையைப் படிக்கின்றபோதுகூட என்னாலே புரிந்துகொள்ள முடிந்தது. அப்படி வந்திருந்தால் இவ்வளவு வந்திருக்கிறது என்று போட்டிருப்பார்கள். எனவே மத்திய அரசாங்கத்திலிருந்து ஒரு பெரும் தொகையை எதிர்பார்க்கிறோம் என்று நீங்கள் குறிப்பிட்டதிலிருந்தே இதுவரை ஒரு கோடி ரூபாய் கூட வந்து சேரவில்லை என்பதையும் என்னாலே புரிந்துகொள்ள முடிந்தது. எனவே இதற்குக் கோப்புகள் நகரவில்லை என்று சொல்லி, கோப்புகளை மட்டும் குறை சொல்லி, அஃறினைப் பொருள்களை நாம் குற்றம் சொல்லிப் பிரயோசனமில்லை. எனவே நிச்சயமாக மெத்தனப் போக்கோடு மத்திய அரசு நடந்து கொண்டிருக்கிறது அல்லது மாற்றான் தாய் மனப்பான்மையோடு நடந்து கொண்டிருக்கிறது என்று நிச்சயமாக குற்றம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசு மற்ற மாநிலங்களுக்கெல்லாம்—ஆந்திராவிற்கு ஏறக்குறைய ரூ.400 கோடிக்கு மேல் வழங்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். அதுவும் உடனடியாக 2,3 தவணைகளில் ரூ.100 கோடி, ரூ.150 கோடி என்று சொல்லி, 1,000 கோடி இல்லை, சுமார் 700 கோடி கேட்டிருந்தும்கூட, இன்னும் ஒரு கோடி ரூபாய் கூட மத்திய அரசு ஒதுக்கவில்லை என்று சொல்வது, அதுவும் பிரதமர் அறிவித்த பணம் கூட இன்னும் வந்து சேரவில்லை என்று சொல்வது மிகுந்த வருத்தத்திற்குரியது, உண்மையிலேயே கண்டனத்திற்குரியதாகும். எனவே மத்திய அரசிலே நம்முடைய அமைச்சர்கள் ஏறக்குறைய 8 பேர் - 4 பேர் கேபினெட் அமைச்சர், 4



பேர் ஸ்டேட் அமைச்சர்களாக இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே யிருந்து இடம் பெற்றிருக்கிற மத்திய அமைச்சர்கள் எல்லாம் சேர்ந்தது தான் அமைச்சரவை. மத்திய அரசிடமிருந்து உடனடியாக இந்த நிவாரணத் தொகையைப் பெறுவதிலே இவர்கள் எல்லாம் கவனம் செலுத்தவேண்டும். இதிலே போதுமான கவனத்தைச் செலுத்தாது இருப்பது வருத்தத்திற்குரியது, கண்டனத்திற்குரியது.

அது போன்று அரிசி விலை. அரிசி விலை உயர்வாக இருந்தாலும் சரி, அத்தியாவசியப் பண்டங்களுடைய விலை உயர்வாக இருந்தாலும் சரி—மத்திய அரசு தன்னுடைய பங்குக்கு பெட்ரோல் விலை, டீசல் விலை, சமையல் வாயு விலை ஆகியவற்றினுடைய விலையை உயர்த்திக் கொண்டிருக்கிறது—இது தவிர மாநில அளவிலே விலைவாசி மிகக் கடுமையாக உயர்ந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இங்கே இதைச் சுட்டிக்காட்டினார்கள். குறிப்பாக அரிசி விலையைப் பொறுத்தவரையில், இந்த ஆட்சி வருகின்ற போது, 1996 மே மாதத்திலே ஏறக்குறைய 75 கிலோ கொண்ட ஒரு மூட்டை அரிசியே பொன்னி உயர் ரகம் அதிகபட்ச விலை ரூ.1050-ஆக இருந்தது, இப்போது 1997 ஜனவரி மாத நிலவரப்படி ரூ.1,400-க்கு உயர்ந்திருக்கிறது. விலை உயர்வு ரூ.350/-. ஏறக்குறைய உயர்வு 33 சதவீதம். அது போல் சாதாரண ரகம் ஏறக்குறைய ரூ.900, ரூ.950-ஆக இருந்தது ரூ.1,250/-ஆக உயர்ந்திருக்கிறது. உயர்வு ஏறக்குறைய 31 சதவீதம். அதுபோல் ஐ.ஆர்.50, ஐ.ஆர்.20 போன்ற எல்லா அரிசியினுடைய விலையும் ஏறக்குறைய ரூ.650, ரூ.700-ஆக இருந்தது, இப்போது ஏறக்குறைய ரூ.1,000-ஐ தொடுகிற நிலை வந்து ஏறக்குறைய 20 சதவீதம் உயர்ந்திருக்கிறது என்பதை நான் உங்களுக்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிலே இதுவரை கடந்தகால வரலாற்றினை நீங்கள் பார்த்தால், தமிழகத்திலே ஒரு கிலோ அரிசி என்பது அதிகமாக விற்பனையாவது இப்போதுதான். ஏறக்குறைய ரூ.20, ரூ.21 ஒரு கிலோவிற்கு என்கிற நிலைக்கு இன்றைக்கு அரிசி விலை உயர்ந்திருக்கிறது. அத்தியாவசியப் பண்டங்களினுடைய விலைவாசி உயர்ந்திருக்கிறது. இதிலே ரேஷன் கார்டுகள் வழங்கப்படுகிற போது மூன்று விதமான கார்டுகள் வழங்கப்பட இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். வளமை என்றால் பச்சை, வறுமை என்றால் சிவப்பு, இரண்டிற்கும் இடையிலே மஞ்சள் என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே ஏறக்குறைய 1.20 கோடி கார்டுகள் பெற்றிருக்கிற மக்கள்—குடும்பங்கள் வாழ்கின்றனர். இதிலே வறுமைக் கோட்டிற்கும் கீழே என்று நீங்கள் கணக்கெடுத்து, இப்போது சிவப்பு அட்டை வைத்திருப்பவர்களுக்குத்தான் அரிசி என்று நீங்கள் உத்தரவு

போடுகிறபோது அதிலே என்னுடைய கணக்குப்படி பார்த்தால், ஏறக்குறைய 20 லட்சம், 25 லட்சம்கூட அதிலே பலனடைய மாட்டார்கள். சாதாரணமாக அரசு ஊழியர்களாக இருப்பவர்கள், அரசு ஊழியர்கள் என்றால் பெரிய அதிகாரிகள் அல்ல, சாதாரண வாட்ச்மேன், பியூனிலிருந்து ஆரம்பித்து நடுத்தர வர்க்கத்தை, இந்த வருமான வரம்பு, உச்ச வரம்பு, வறுமைக் கோட்டிற்குக் கீழ் என்று நீங்கள் ஒதுக்குகிறபோது, ஏறக்குறைய 20, 25 இலட்சம் பேர்தான் இந்த சிகப்பு அட்டை மூலம் அரிசி வழங்கப்படுகிற நிலையை அடைவார்கள். ஏறக்குறைய 1 கோடி பேருக்கு இதனாலே மிகுந்த பாதிப்பு ஏற்படும். நடுத்தர மக்கள், ஏழையெளிய மக்கள், அரசு ஊழியர்கள், சாதாரண அன்றாடம் அரிசியை பெருமளவிலே வாங்கிக் கொண்டு இருப்பவர்கள் மிகப்பெரிய பாதிப்புக்கு ஆளாவார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுபற்றி கேட்கிறபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விலைவாசி உயர்வைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார், இது மாநில அரசினுடைய கையிலே ஒன்றும் இல்லை, மத்திய அரசாங்கத்தினிடத்திலேதான் பெரும் பங்கு இருக்கிறது என்று பத்திரிகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை நான் பார்த்தேன். மத்திய அரசாங்கம் என்பது ஏதோ 42 பேரை கையிலே வைத்திருக்கிற திரு. தேவ கௌடா மட்டுமல்ல. மத்திய அரசு என்பது, நீங்களும் இருக்கிற, திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் மாநில காங்கிரஸ், இது போன்ற பல்வேறு கட்சிகளையெல்லாம் உள்ளடக்கியதுதான். எனவே, மத்திய அரசுக்கு பெரும் பங்கு இருக்கிறது என்று சொன்னால், அதிலே உங்களுக்கும் தன்னாலேயே பங்கு வந்து சேருகிறது. மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்தாலும், அதனாலே ஏற்படுகிற சாதக பாதகங்கள் அத்தனையிலேயும், அந்த மத்திய அரசிலே பங்கேற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதனுடைய கூட்டணி கட்சிகளுக்கும், அதனால் ஏற்படுகிற பாதகங்கள் நிச்சயமாக வந்தே சேரும், வந்து சேருகின்றன. எனவே, மத்திய அரசுதான் இதற்குப் பொறுப்பு என்று சொல்லி தட்டிக் கழித்துவிட முடியாது, என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிற்பகல் 1-10

சென்னை நகரத்திலே பேருந்து வசதிகள் எண்ணிக்கையிலே மிகவும் குறைக்கப்பட்டிருக்கின்றன. எங்கே பார்த்தாலும் போகிற வழியிலே பார்த்தால், முதலமைச்சர் அவர்கள்கூட பார்த்திருக்க முடியும், போக்குவரத்துத் துறை அமைச்சர்கூட பார்த்திருக்க முடியும், என்னவென்றால், ஆங்காங்கே 10 பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தால், அந்த



இடத்திலெல்லாம் இரண்டு பஸ்கள் ரிப்பேர் ஆக நின்று கொண்டிருக்கின்றன. அதனாலே, பொதுமக்கள், நீண்ட கியூவிலே நின்று கொண்டிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அதிலே, கவனத்தை செலுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, பிளாட்பாரக் கடைகளையெல்லாம் அகற்றுகிறபோது, சென்னையை அழகுபடுத்த வேண்டுமென்பதற்காக, என்குரோச்மென்ட் அகற்றப்படுகிறது. அதிலேகூட கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், அதற்கெல்லாம் மாற்று வசதிகளை செய்து கொடுத்துவிட்டு, அவற்றையெல்லாம் அப்புறப்படுத்த வேண்டும். ஏனென்றால், பல்லாயிரக் கணக்கிலே அதனால் பாதிப்பு ஏற்பட்டு, பல பேர் அதிலே உண்ணாவிரதம், போராட்டம் என்றெல்லாம் கொடி பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். இதை நம்பியே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் வயிற்றிலே அடிக்கப்பட்டு, வறுமையிலே வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவற்றுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்து விட்டு, இந்த நடவடிக்கைகளிலே இறங்க வேண்டுமென்று நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சி தேர்தல்களைப் பொறுத்தவரை, நான் ஏற்கெனவே சொல்லிய மாதிரி, அதிலே இந்த அதிகாரங்கள், 5 ஆயிரத்திலே வெற்றி பெற்ற ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மாவட்டக் குழு உறுப்பினர்களுக்கு இன்னும் என்ன அதிகாரங்கள் என்றே அவர்களுக்குத் தெரியவில்லை. இவர்கள் எல்லாம் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், இந்த தடவை ஏதோ வெற்றி பெற்று வந்து விட்டோம். இனி என்ன சொல்லி வோட்டு கேட்பது, எப்படி வெற்றி பெறுவது என்றே எங்களுக்குத் தெரியவில்லை என்கிறார்கள். பஞ்சாயத்து போர்டுக்குப் போனால், பிரசிடெண்ட் இங்கே வராதே என்று சொல்கிறார். பஞ்சாயத்து போர்டைப் பொறுத்தவரை, நான் தலைவர், எனக்குத்தான் முழுமையான அதிகாரம் இருக்கிறது என்று சொல்கிறார். அங்கே, அந்த 5 ஆயிரத்திலே வெற்றி பெற்ற ஒன்றியக் குழு உறுப்பினர்களை அனுமதிப்பதில்லை. இங்கே, இந்த ஒன்றியக்குழுவிற்கு வந்தால், இங்கே டீ, பிஸ்கெட் தரப்படுகிறதே தவிர வேறு ஒன்றும், எந்தவிதமான உரிமைகளும் அவர்களுக்கும் இல்லை. எனவே ஒன்றியத்திலே 10,15 ஒன்றியக் குழுக்கள் தான் இருக்கின்றன. ஏனென்றால், சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சொன்னதுகூட அவர்களுக்கும் பொருந்தும். அந்த ஒன்றியத்திலே இருக்கிற பொது நிதியிலிருந்து ஒரு குறிப்பிட்டத் தொகைக்கு அவர்களுக்கு ஏதாவது திட்டங்கள் தரலாம். ரோடு போடுகிறதோ, குடிதண்ணீர் கொடுக்கிறதோ, ஏதாவது ஒன்றிரண்டு திட்டங்களை அவர்களுக்குத் தரலாம், அந்த ஒன்றியக் குழுவிற்கு அதிகாரம்

பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த மாவட்ட குழுவிற்கு மத்திய அரசு நிதி - இப்போது 2 இலட்சம், 5 இலட்சம், 10 இலட்சம் என்று இந்த மாவட்டத்திற்கு வருகின்ற தொகையிலேயிருந்து, அதற்கான திட்டங்களை அவர்களுக்குத் தரலாம் என்று மாவட்ட குழுக்கள் பரிந்துரை செய்து, அதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதுபோல, இந்த ஒன்றியக் குழுக்களுக்கும், வழங்கப்பட வேண்டும். தெரிந்தோ, தெரியாமலோ, இந்த ஒன்றியக் குழுக்கள் தேவையில்லை, அது வேறு. பஞ்சாயத்து போர்டு பிரசிடென்ட் தன்னாலேயே ஒன்றியக் குழுவிலே உறுப்பினராக வருவார்கள், முன்பு இருந்த திட்டப்படி. இந்த 5 ஆயிரம் இடத்திலே அது தேவையேயில்லை. ஆனால், இருக்கிற வரை ஏதாவது அதிகாரங்கள் அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அது போல, காவிரி நதி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரை, சென்னையிலேகூட 5 முறை பேச்சுவார்த்தை நடந்திருக்கின்றது. பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென்று உச்சநீதிமன்றம் சொன்னதுகூட, இந்த போகத்திற்கு, இந்த சாகுபடிக்கு எப்படி தண்ணீரை பகிர்ந்து கொள்வது என்பது குறித்துதான். ஆனால், தொடர்ந்து 5 முறை பேச்சுவார்த்தை நடத்தியது - இங்கேகூட முதன்முறையாக முன்பு மாண்புமிகு முதலமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தியதற்குப் பின்னாலே பேரவைத் தலைவரிடமிருந்து ஆரம்பித்து எல்லாக் கட்சி உறுப்பினர்கள் சார்பிலேயும் அதற்கு பாராட்டுகள் எல்லாம் இங்கே வழங்கப்பட்டன. 5 முறை பேச்சுவார்த்தை நடக்கிறபோதும், எப்படி நம்பிக்கை விவசாயிகளுக்கு ஊட்டப்பட்டது என்று சொன்னால், ஏதோ எல்லாமே முடிந்துவிட்டது என்பதைப் போல இன்னும் கையெழுத்து மட்டும்தான் பாக்கி, அதற்கான ஒப்பந்தங்கள், ஷரத்துக்கள் எல்லாம் தயாராகிவிட்டன போன்ற செய்திகள் பத்திரிகையிலே வந்து கொண்டிருந்தன. கடைசியிலே பார்த்தால் ஏதோ புஸ்வாணம் மாதிரி, ஐந்து முறை பேசி முடித்ததற்குப் பின்னாலே ஒன்றுமே நடக்கவில்லை என்று சொல்லி, ஆளுக்கு ஒரு காரணம் சொல்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் சதவிகிதக் கணக்கிலே பகிர்ந்துகொள்வதிலேதான் தகராறு என்று அவர்கள் சொல்கிறார்கள். முதலமைச்சர் சொல்கிறார். பொதுப்பணித் துறை அமைச்சர் கர்நாடகத்திலே சொல்கிறார். இங்கே இருக்கிற பொதுப்பணித் துறை அமைச்சர் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். சதவிகிதம் பற்றி பேசவேயில்லை. பேச்சுவார்த்தையிலே அது இடம் பெறவேயில்லை



என்று சொல்கிறார். எனவே இப்படி ஏறக்குறைய 6 மாத காலம் நடுவர் மன்றத்திற்கு தலைவர் போடுவதற்கே இன்றைக்கு இருக்கிற பிரதமர் அவகாசம் எடுத்துக்கொண்டார். நேற்றைக்குக்கூட முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது காலதாமதமாக நடுவர் மன்றத்திற்கு தலைவர் நியமிக்க வேண்டும் என்று பிரதமர் எழுதியிருக்கிறார் என்று அவர்களுடைய உரையிலே இடம் பெற்றிருந்தது. எனவே, உச்சநீதிமன்றத்திற்கு காலியான நடுவர் மன்றத் தலைவருடைய பதவியை நிரப்புவதற்கு கூட உடனடியாக எழுத வேண்டும் என்ற உணர்வு பிரதமருக்கு இல்லை. இப்படிப்பட்ட பிரதமரிடத்திலே நாம் எல்லாம் - அவர் இந்தியா முழுவதற்கும் பிரதமர் தான் என்று சொன்னாலும்கூட அவருக்கு மாநில உணர்வுகள் தான் அதிகமாக மேலோங்கியிருக்கின்றன என்பதைத்தான் மத்திய அரசினுடைய நடவடிக்கையிலிருந்து பிரதமருடைய நடவடிக்கையிலிருந்து நாம் நிச்சயமாகக் காண முடிகிறது.

ஏறக்குறைய 1975-லே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே 24, 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்த காலத்தில், அவர்களுடைய துணையோடுதான் இந்திராகாந்தி அம்மையார் ஆட்சி நடத்த வேண்டிய ஒரு காலகட்டம் இருந்தது. அப்போது இந்திராகாந்தி அம்மையார் கொடுத்த வாக்குறுதியை நம்பி அன்றைக்கு வழக்கு திரும்பப் பெறப் பட்டது.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடு இல்லாமல் 22 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, இடையிலே குறுக்கீடு இருந்தது. அது மாதிரி இப்போதும் ஏறக்குறைய அதுபோன்ற வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. உங்களுடைய தயவு இல்லாமல் மத்தியிலே ஆட்சி இருக்க முடியாது. கூட்டணி அரசாங்கம், எனவே, இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு காண நடுவர் மன்றத்தின் மூலமாக நாம் தீர்வினை பெறுவதற்கான அந்த நிலையை நாம் இப்போது பெறவில்லை என்று சொன்னால் பிறகு எப்போதுதான் பெறப்போகிறோம். எனவே இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு மத்தியில் இருக்கிற பிரதமரை வற்புறுத்தி மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். அதிலே தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் திரு. அழகிரி அவர்களேகூட நேற்று சொல்கிறபோது, இந்த ஆட்சிக்கு கொடுக்கிற ஆதரவை திரும்பப் பெறவில்லை என்றாலும் பிரதமருக்குக் கொடுக்கிற ஆதரவையாவது நாம் திரும்பப் பெறுவது

குறித்து யோசிக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னதை நான் அப்படியே வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநாவுக்கரசு அவர்களிடத்திலே நான் தெரிந்துகொள்ள விரும்புவது ஒன்று.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, எனக்கு நேரமாகிறது. அதுபோல இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே கூட நான் சுருக்கமாக ஒன்றிரண்டு பிரச்சினைகளை மட்டும் சொல்லி முடிக்கிறேன். ஓரிரு வரிகளிலே முடித்து விடுகிறேன். இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே தேர்தல்கால வாக்குறுதி ஒன்று, தி.மு.க.வின் சார்பிலே இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஆனால் இப்போது அந்த அதிபரே இங்கு வருகிறார். 4 நாட்கள் தங்கியிருக்கிறார். பிரதமரைச் சந்திக்கிறார். எல்லா அதிகாரிகளையும் கூட சந்திக்கிறார். ஆனால் இங்கே இருக்கிற தமிழகத்தினுடைய முதலமைச்சருக்கு அழைப்பு இல்லை; தெரியாது, அவர் வந்து போனதற்குப் பின்னாலே பத்திரிகையிலே முதலமைச்சர் சொல்கிறார். பிரதமர் வந்ததும் தெரியாது; எனக்குப் போனதும் தெரியாது. அது குறித்து மத்திய அரசு சொல்லவில்லை; என்னை அழைக்கவும் இல்லை என்று சொல்லக்கூடிய நிலைதான் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் உங்களுடைய உறவு என்ன? உண்மையிலேயே உறவு உறவாகத்தான் இருக்கிறதா? அல்லது வேறு ஏதாவது விரிசல் உள்ளே இருக்கிறதா? எனக்குத் தெரியவில்லை. உறவு இருந்தாலும் சரி, விரிசல் இருந்தாலும் சரி அதுபற்றி பிரச்சினை இல்லை. ஆனால் வந்திருக்கிறபோதே தமிழக முதலமைச்சருக்கும் சொல்லியிருந்தால் நீங்களும் போய் இருக்கலாம். பல்வேறு விதமான பிரச்சினைகளை பேசித் தீர்த்து இருக்க முடியும். முதலமைச்சர் என்ன சொல்லியிருக்கிறார் என்று சொன்னால்—பத்திரிகையிலே பார்க்கிறபோது மத்தியில் குஜரால் போய் பேசுகிறார்; இலங்கையிலே போய் பேசிவிட்டு வந்ததற்குப் பின்னாலே சொல்கிறார் இலங்கைப் பிரச்சினையிலே இந்தியா தலையிடாது, அது வெளிநாட்டுப் பிரச்சினை என்று. இதற்கு இலங்கைக்குப் போயிருக்க வேண்டியதே இல்லை. இங்கிருந்தே சொல்லியிருக்கலாம். அங்கு போய்விட்டு வந்து சொல்கிறார். அதையேதான் முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார் என்று சொன்னால் - அதற்குப் பின்னாலே மத்திய அரசினுடைய நிலைதான் எங்களுடைய நிலையும் என்று நீங்களும் சொல்கிறீர்கள். அகதிகள் இங்கேதான் வருகிறார்கள். தமிழக அரசுக்குத்தான் உணவு, உடை மற்றும் அனைத்தும் வசதிகளையும் செய்துத் தர வேண்டிய பொறுப்பு, அதற்கான செலவு ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பு



இருக்கிறது. எனவே மத்திய அரசு எடுக்கிற நிலையை இங்கே இருக்கிற தமிழக அரசு நிச்சயமாக எடுக்கமுடியாது. எனவே இலங்கைத் தமிழர் பிரச்சினையிலேயும் உரிய நடவடிக்கை தமிழக அரசு எடுக்கவில்லை; எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் அவசியப்படுகிறது. மத்திய அரசு எடுக்கிற நிலைதான் மாநில அரசு நிலை என்று குறிப்பிட்டது அகதிகள் பிரச்சினைக்காக அல்ல; மீனவர்கள் பிரச்சினைகளுக்காக அல்ல. அங்கே நடைபெறுகின்ற அந்தப் போராட்டத்தில் மத்திய அரசு என்ன நிலை எடுத்திருக்கிறதோ அதே நிலைதான் மாநில அரசு நிலை என்று குறிப்பிட்டு இருக்கிறோம். அகதிகளை வாழ வைப்பது அவர்களுக்கு இன்னும் அதிக உதவிகளைச் செய்வது, வசதிகளைத் தருவது, அதைப்போல மீனவர்கள் சுட்டுக்கொல்லப்படுவதை தடுப்பது, அவர்களுடைய படகுகள் எல்லாம் கடத்தப்படுவதைத் தடுப்பது போன்ற இந்தக் காரியங்களில் மத்திய அரசிடத்தில் நாம் வாதாட, வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அதிலே எந்தவிதமான முரண்பாடும் கிடையாது. இலங்கைப் பிரச்சினையில் அங்கே ஈழத்தில் நடைபெறுகிற அந்தப் போராட்டத்தைக் குறித்து மத்திய அரசு எந்த நிலை எடுக்கிறதோ அதே நிலைதான் மாநில அரசு நிலை என்ற பொருளில்தான் குறிப்பிட்டிருக்கிறேன். கேள்வி அப்படி. நிருபர்களுடைய கேள்வி அப்படி; என்னுடைய பதிலும் அவ்வாறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இன்னும் இரண்டு நிமிடத்தில் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல இங்கிருக்கிற மீனவர்களைப் பொறுத்தவரையில்கூட சிங்கள கப்பற் படையினர், இராணுவத்தினர் அடிக்கடி கடத்திச் செல்வது, படகுகளை, வலைகளை நாசப்படுத்துவது. இரண்டு நாளைக்கு முன்னாலேகூட ஒரு செய்தி பத்திரிகையிலே வந்தது, இங்கிருந்து கடத்திச் சென்றவர்களைக் கொண்டுபோய் சிறைச்சாலையிலே அடைத்திருக் கிறார்கள். எங்களைப் பற்றி எல்லாம் பேசி உடனடியாக நாங்கள் எல்லாம் விடுதலைப் பெறுவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று சொல்லி அவர்கள் முதலமைச்சரிலிருந்து, பிரதமரிலிருந்து, எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் கடிதங்களை அனுப்பியிருப்பதாகப் பத்திரிகைகளில் எல்லாம் செய்திகள் வந்திருக்கின்றன. எனவே, இப்படித் தொடர்ச்சியாக செய்து கொண்டிருக்கிறார்கள். ஒன்று இரண்டு முறை அல்ல. தொடர்ச்சியாக செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே இவற்றில் மாநில அரசு மத்திய அரசைக் கட்டாயமாக வற்புறுத்தி, பேச்சு வார்த்தை நடத்தி இதுபோன்ற

படுகொலைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கேயிருக்கிற அவர்கள் தங்களுடைய தொழிலாக மீன் பிடிக்கிற தொழிலைத் தான் நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கடலோரப் பகுதிகளில் வாழ்கிற மீனவப் பெருமக்களுக்குரிய பாதுகாப்பைப் பெற்றுத் தருவதற்கு, இந்தப் படுகொலைகள் எல்லாம் தடுக்கப்படுவதற்கு தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

அதேபோன்று நெசவாளர் பெருமக்கள் பல்வேறு இடங்களில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். நேற்று கூட மதுரையில் ஊர்வலம் போயிருக்கிறார்கள். அந்த ரிபேட்டுக்கு உச்ச வரம்பு வைக்கப்பட்டிருக்கிறது. அந்த உச்ச வரம்பை நீக்கவேண்டும் என்பது அவர்களுடைய வேண்டுகோள். எனவே அதையும் மனதிலே கொண்டு இலட்சக்கணக்கில் இன்று நெசவுத் தொழிலை நம்பி வாழ்கிற நெசவாளர் பெருமக்களுடைய பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சட்டம் ஒழுங்கு பிரச்சினை என்று சொன்னால் நான் வரிசையாகச் சொல்லலாம். நேற்றைக்கு கூட பழனிபாபா படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். சிவா படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இப்படி வரிசையாக நீங்கள் பார்த்தால் தினம் தினம் இந்த படுகொலைகள், ஆதாயத்திற்காக நடக்கிற கொலைகள், கொள்ளைகள் இவைகள் எல்லாம் எண்ணிக்கையில் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. இவற்றையெல்லாம் இந்த அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்து முன்னணியைச் சார்ந்த அந்தச் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூட இங்கே சொல்லிக்கொண்டிருந்தார்கள். தினம் தினம் வெள்ளிக்கிழமை தோறும் பார்த்தால் எங்களுடைய ஆட்கள் கொல்லப்படுகிறார்கள் என்பது அவர்களுடைய குற்றச்சாட்டு. அவர் பெரிய பட்டியலை வைத்திருக்கிறார். இந்தப் பக்கம் பழனிபாபா, இப்படி அது ஜாதியின் பெயரால் நடந்தாலும் சரி; மதத்தின் பெயரால் நடந்தாலும் சரி, ஆதாயத்திற்காக நடக்கிற கொலையாக இருந்தாலும் சரி, இவைகளை எல்லாம் தடுக்கவேண்டும். 'சடன் புரவோகேஷன்' என்று நடந்தால் கூட பரவாயில்லை. திட்டமிட்டு 5 கார்களில் போவது; 10 கார்களில் போவது, முகமூடி அணிந்து கொண்டு போவது, சாமியார் மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு போவது இப்படி எல்லாம் போய் படுகொலைகள்



நடக்கிற போது இவற்றையெல்லாம் முன்கூட்டியே கண்டுபிடித்து தடுக்கிற அந்தப் பணியில் உள்ள உளவுத் துறையைச் சார்ந்தவர்கள், காவல் துறையைச் சார்ந்தவர்கள் கண்டிப்பாக உறுதியோடு செயல்படவேண்டு மென்று நான் இந்த நேரத்தில் தமிழக அரசையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒன்றியச் செயலாளர் ஒருவர் மீது தர்மபுரி மாவட்டத்தில் அதுவும் ஒரு எம்.எல்.ஏ. அந்தத் தொகுதியினுடைய எம்.எல்.ஏ புகார் கொடுத்திருக்கிறார். ஏதோ பொதுக் கூட்டத்தில் பேசுகிறபோது ஜாதியைச் சொல்லி திட்டினார் என்று சொல்லி ஒரு புகார். அதனாலே அவர் மீது தீண்டாமைச் சட்டத்தின் கீழ் ஒரு வழக்குப் போட்டு கைது செய்திருக்கிறார்கள். இது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களைப் பழி வாங்குகிற செயலாகும். இதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுக் கூட்டத்திலே பேசினால் கூட பொதுத் துறையின் மூலமாகத்தான் நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர பொதுக் கூட்டத்தின் பேச்சை வைத்துக் கொண்டு, சட்டமன்ற உறுப்பினரே புகார் கொடுக்க, அந்தப் புகாரை வைத்துக்கொண்டு ஒன்றியச் செயலாளரைக் கைது செய்வது, வழக்குப் போடுவது என்பது இதற்கு முன்னால் சட்டப்படியும் முடியாது. சட்டப்படியும் செய்ய முடியாது, பொதுக் கூட்டத்தில் பேசியதை வைத்துக்கொண்டு. எனவே, இப்படி பலயிடங்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொண்டர்கள் பழி வாங்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதையும் இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், கழகத்தினுடைய பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையிலே அவருக்கு என்.எஸ்.ஜி. பாதுகாப்பு மீண்டும் திருப்பித் தரப்பட்டிருக்கிறது. அதிலே அப்படி திருப்பித்தரப்பட்டதற்குப் பின்னாலேயும் இன்னும் தமிழக அரசு வாகனங்களைத் தரவில்லை. அவர்களுக்குரியபடி தரவில்லை, என்று எல்லாம் சொல்லி இன்னும் என்.எஸ்.ஜி. ஆட்கள் அங்கே வந்து சேரவில்லை.

இரண்டாவது, அவர்களிடத்திலே 3 பேர் இன்ஸ்பெக்டர்கள் இருந்தார்கள். அவர்களும் திரும்பிப் பெறப்பட்டு விட்டார்கள். அவர்களுக்குப் பதிலாக வேறு நபர்கள் நியமிக்கப்பட்டார்கள். அதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இவர்கள் புதியவர்கள், பழைய ஆட்கள்

2 பேரைத் திருப்பிக் கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார். அதில் ஒன்றும் கஷ்டம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதற்கு டி.ஜி.பி. ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். 5 வருடம், 3 வருடம், 4 வருடம் என்று போட்டு ஒரு குறிப்பிட்ட ஆண்டுக்களுக்கு மேல் வேலை பார்த்தால் இவர்களுக்கு மெண்டல் பிரஷர் வந்து விடுகிறது, ஆகனி வந்து விடுகிறது, மன உளைச்சல் ஏற்படுகிறது என்று எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியான காரணம் அல்ல, 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே கூட பலபேர் உதவியாளர்களாகப் பணியாற்றியிருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்திலே இன்றைய முதலமைச்சர் அவர்களிடத்திலே கூட சில பேர் தொடர்ச்சியாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதில் ஒன்றும் மன உளைச்சல் வந்து விடாது. எனவே, அதிலே ஒன்று, இரண்டு பேரை திருப்பித் தருவதிலே எந்தக் கஷ்டமும் இல்லை. அதனால் இவர் திருப்பி அனுப்ப, இப்போது அவர்களுக்கு எந்தவிதமான செக்யூரிட்டி ஆபீஸரும் கிடையாது. இப்போது தேர்தலுக்கு, பிப்ரவரி 3,4,5 தேதிகளில் தேர்தலுக்காக, புதுக்கோட்டையில் சுற்றுப் பயணம் போவதற்கு இருக்கிறார். எனவே என்.எஸ்.ஜி., அதற்கு சம்பந்தப்பட்ட அந்த மத்திய அமைச்சரை, உள்துறை அமைச்சரைப் போய் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் போய் பார்த்திருக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் நாங்கள் உத்தரவு போட்டு விட்டோம், மாநில அரசாங்கம்தான் இவற்றையெல்லாம் தரவேண்டும், எனவே, மாநில அரசாங்கம் தருகிறதா; இல்லையா என்று மாநில அரசைக் கேளுங்கள் என்று சொல்லி உள் துறை அமைச்சரும், அங்கே இருக்கிற அதிகாரிகளுக்கு சொல்லியிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு வேண்டிய வாகனங்கள்.. (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அரை மணி நேரம் ஆகிவிட்டது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான உத்தரவைப் போடவேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதிலே இந்த அரசு எந்தவிதமான மெத்தனத்தையும் காட்டக்கூடாது. உரிய பாதுகாப்பை நிச்சயமாகத் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஒன்றே ஒன்று.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.எஸ்.ஜி.-யைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டார்கள். நாளையதினம் பதிலில்



விளக்கமாகச் சொல்கிறேன். ஆனால் தேர்தல் பிரச்சாரத்திற்கு செல்வி ஜெயலலிதா செல்கிற நேரத்தில் அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு இந்த அரசின் சார்பில் அளிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** ஏற்கெனவே, சென்ற கூட்டத் தொடரிலே அறந்தாங்கி தொகுதியிலே ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை துவங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் - கூட்டுறவு அல்ல; தனியார் துறை அறிவிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அது கூட்டுறவுத் துறையாக இருந்தாலும் சரி, தனியார் துறையாக இருந்தாலும் சரி, அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. வர வேணடும், அவ்வளவுதான். எனவே, இந்த ஆண்டு அதற்கான பணியைத் தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது என்னுடைய நீண்ட நாள் கோரிக்கை. மீண்டும் வற்புறுத்துகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அறந்தாங்கி தொகுதியில் சர்க்கரை ஆலை வர வேண்டுமென்று மத்திய அரசுக்கு சிபாரிசு செய்து மாநில அரசு ஏற்கெனவே அனுப்பியாகிவிட்டது. இன்னும் உணவுத் துறையிலேயிருந்து அதற்கு கிளியரன்ஸ் வரவில்லை, அவ்வளவுதான்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** ஆகவேதான் இதுவும் அந்த 25 கோடி ரூபாய் கோப்பு மாதிரி பெரிதாக நகராமல் உடனடியாகத் தலையிட்டு அதைப் பெற்று இந்த ஆண்டே துவக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னொன்று, அறந்தாங்கியிலே இருந்தக் கூட்டுறவு நூற்பாலை ஒன்று நான்கைந்து ஆண்டுகளாக மூடிக் கிடக்கிறது. தொழிலாளிகள் இன்றைக்குப் போராட்டம் அறிவித்திருக்கிறார்கள். சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் என்று புதுக்கோட்டையிலே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முன்னாலே அறிவித்திருக்கிறார்கள். எனவே, அந்தக் கூட்டுறவு நூற்பாலையையும், அதுமட்டுமல்ல, அதுபோல இன்னும் மூடிக்கிடக்கின்ற மற்ற கூட்டுறவு நூற்பாலைகளையும் திறப்பதற்கு உடனடியாக அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, நான் ஒன்றே ஒன்றைக் கூறி முடிக்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பழி வாங்குகின்ற விதத்திலே முன்னாள் முதலமைச்சரிலிருந்து, அமைச்சரிலிருந்து எல்லோர் மேலேயும் வழக்குகள் போடப்படுகின்றன; அவர்கள் சிறைக்குள்ளே

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1997 சனவரி 29

அடைக்கப்படுகிறார்கள். இங்கேகூட வல்லரசு பேசும்பொழுது சொன்னார் முன்னாலேயே ரெய்ட் பண்ணியிருந்தால் ஆயிரக்கணக்கான கோடி கிடைத்திருக்கும் என்றெல்லாம் ஏதோ அவருடைய கற்பனையைச் சொன்னார். அதற்கு என்னுடைய கண்டனத்தை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன் ரெய்ட் பண்ணுகிறபொழுது 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய்தான் கிடைத்தது. 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய்தான் எடுத்திருக்கிறீர்கள். அவ்வளவுதான் இருந்தது. 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய்தான் டைரக்டர் ஆஃப் விஜிலன்ஸ் அன்ட் ஆண்டி கரப்ஷன், முன்னாள் முதலமைச்சர் வீட்டிலேயிருந்து எடுத்தது. எனவே, அதற்குப் பின்னாலே இன்னும் நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால் சிலவற்றையெல்லாம் நான் சொல்லலாம். கழகத் தோழர்கள் மீது அதையொட்டிப் பொய் வழக்கு, என் மேலேயெல்லாம் கேஸ், நாங்கள் உள்ளே வந்து தெரிந்து கொண்டு உள்ளே போய் இருந்தோம், வெளியே வருகிறபொழுது - அதுகுறித்து நான் போலீஸ் மானியக் கோரிக்கையிலே பேசுகிறேன். சும்மா வெளியே வந்து நின்று கொண்டிருந்தோம், நீங்களும் சேர்ந்து ஏறுங்கள் என்று எங்களையும் சேர்த்து ஏற்றிக்கொண்டு போய் விட்டார்கள். என்ன வழக்கு என்று சொன்னால், அரசு அதிகாரிகளைத் தடுத்தோம் என்று சொல்லி. எனவே இப்படியெல்லாம் எங்கள் மீது கூட பொய் வழக்கு போடுகிறபொழுது, கழகத் தோழர்கள் பலபேர் மீதும் பொய் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. எனவே, நீங்கள் இப்பொழுது கழகத்தினுடைய பொதுச் செயலாளர்-முன்னாள் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மீது, அவரை அவமானப்படுத்த வேண்டும், பழி வாங்க வேண்டும் என்பதற்காக அவருடைய வீடு எல்லாம், படமெல்லாம் பிடித்துக் காட்டியது; இதெல்லாம் பொதுமக்கள் மத்தியிலே என்ன பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை இந்தப் புதுக்கோட்டை தேர்தலிலே நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். இந்தப் புதுக்கோட்டை தேர்தலிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக வெற்றி பெறும். இங்கே வல்லரசு சொன்னார், நாங்கள்தான் வெற்றி பெறுவோம் என்று சொன்னார்.

விலைவாசி உயர்வு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்கிற விதத்திலே சர்வ தலைவர்கள் துவங்கி, அமைச்சர்களிலேயிருந்து துவங்கி, அவர்களையெல்லாம் நீங்கள் சங்கடப்படுத்தி, அவமானப்படுத்தி, நீங்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் பொதுமக்களால் அங்கீகரிக்கப்படவில்லை, ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதை வருகிற அந்தப் புதுக்கோட்டை தேர்தல், சட்டமன்ற இடைத் தேர்தல் நிச்சயமாகக் காட்டப் போகிறது என்பதை நான் உங்களுக்குச் சொல்லி, ஆளுநர் உரையிலே உரையாற்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.



1997 சனவரி 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** தலைவரவர்களே, (குறுக்கீடு) இன்னும் கொஞ்ச நேரம்தானே, எனக்கு ஒரு பத்து நிமிஷம்கூடக் கொடுக்க மாட்டீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைக்குக காலையிலே உங்கள் உரையை ஆரம்பியுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** ரொம்ப நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-1-1997) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 1.28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

67. 1995-96-ஆம் ஆண்டிற்கான கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

68. 1995-96-ஆம் ஆண்டிற்கான நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

69. 1995-96-ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

70. 1995-96-ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956, 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

[1997 சனவரி 29

71. 1995-96-ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

72. 1995-96-ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்துக் கழக அறிவுரைப் பணிக்குழுவின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

73. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

18. பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள், 1996-97 (பதினெட்டு முதல் இருபத்தி நான்கு வரை).

19. பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள், 1996-97 (மூன்று முதல் எட்டு வரை).

20. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (இரண்டாம் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

21. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (மூன்றாம் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

222604